355

# தமிழ்நாடு
## சட்டமன்றப் பேரவை நடவடிக்கைக்
## செயலக வெளியீடு

மார்ச் 25, 1999 தொகுதி 67
எண் 4.

D
V2l1,31'p60
P00·6.1
221092

வெளியீடு 01-02-2000 Issued 01-02-2000

# தமிழ்நாடு
# சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்
# செயலக வெளியீடு

# TAMIL NADU
# LEGISLATIVE ASSEMBLY DEBATES
# OFFICIAL REPORT

**வியாழக்கிழமை, மார்ச் 25, 1999 - தொகுதி 67 - எண் 1**

**Thursday, 25th March, 1999—Volume 67 - No. 1**

*சட்டமன்றப் பேரவைச் செயலகம், சென்னை - 600 009*

**Legislative Assembly Secretariat, Fort St. George, Chennai - 600 009**

விலை ரூ. 3.00] [Price Rs. 3.00

25-03-1999

## உள்ளடக்கம்


| | பக்கங்கள் |
|---|---|
| தமிழ்நாடு அரசின் ஆளுநரும் அமைச்சரவையும் | iii-vi |
| Personnel of the Government of Tamil Nadu | vii-x |
| தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் முக்கிய அலுவலர்கள் பட்டியல் | xiii-xiv |
| தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை உறுப்பினர்கள் பட்டியல் (அகர வரிசைப்படி) | xv-xxv |
| *1.* **வினாக்கள்-விடைகள்--** | |
| உடுக்குறியிட்ட வினாக்கள் | 1-38 |
| *2.* **தகவல் கோரல்--** | |
| (அ) பாண்டியாறு - புன்னம்புழா மின் திட்டப் பணிகளுக்கு கேரள அரசு அளித்த அனுமதியை நிறுத்தி வைப்பது தொடர்பாக கேரள உயர்நீதிமன்றம் அளித்துள்ள தீர்ப்பு | 39-40 |
| (ஆ) பேரவையில் 22-3-1999 அன்று நடைபெற்ற நிகழ்வுகள் தொடர்பாக உறுப்பினர் திரு. தாமரைக்கனிக்கு 15 நாட்கள் சிறைத் தண்டனை என பேரவை நிறைவேற்றிய தீர்மானத்தை நிறுத்தி வைத்து உயர்நீதிமன்றம் ஆணை | 119-121 |
| *3.* **அறிவிப்பு--** | |
| உறுப்பினர் திரு. பி.ஆர். சுந்தரம் கைது | 41 |

பக்கங்கள்

4. உரிமை மீறல் பிரச்சினை--

(அ) முன்னாள் முதல்வர் செல்வி ஜெ. ஜெயலலிதா 22-3-1999 அன்று பேரவையில் நடைபெற்ற நிகழ்வுகள் குறித்து வெளியிட்ட அறிக்கை — 41-50

(ஆ) சட்டத் துறை அமைச்சர் பேரவையில் தன்னைத் தாக்கியதாக திரு. சொ. கருப்பசாமி தெரிவித்துள்ள கருத்து — 50-58

(இ) மாநிலங்களவை உறுப்பினர் திரு. மார்க்கபந்து அளித்துள்ள பத்திரிகைச் செய்தி — 58

5. சிறப்புக் கவன ஈர்ப்பு--

முன்னாள் முதல்வரின் Auditor இராஜசேகரன் தாக்கப்பட்டிருப்பது — 58-102

6. வரவு-செலவுத் திட்டம், 1999-2000, பொது விவாதம் - தொடர்ச்சி--

திரு. ரா. ஈஸ்வரன் — 102-108

திரு. இ.ஜி. சுகவனம் — 108-114

டாக்டர் க. கிருஷ்ணசாமி — 115-118

7. அரசினர் தீர்மானம்--

விதி 32-ஐத் தளர்த்துதல் — 119

8. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்-- — 122


221092



## தமிழ்நாடு அரசின் ஆளுநரும் அமைச்சரவையும்

### ஆளுநர்--நீதிபதி செல்வி மீ. பாத்திமா பீவி

### அமைச்சரவையின் உறுப்பினர்கள்

1. முதலமைச்சர் : **மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி :** பொது, பொது நிருவாகம், இந்திய ஆட்சிப் பணி, மாவட்ட வருவாய் அதிகாரிகள், உள் துறை, நிதி, திட்டம், தொழில்கள், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை, சிறுபான்மையினர் நலன், கடவுச் சீட்டு மற்றும் வணிக வரிகள்.

2. கல்வி அமைச்சர் : **மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன் :** தொழிற்கல்வி உள்ளிட்ட கல்வி, சட்டமன்றம், தேர்தல்கள், மின்னணுவியல், அறிவியல் மற்றும் தொழில் நுட்பவியல், விளையாட்டு மற்றும் இளைஞர் பணிப்படை மற்றும் முன்னாள் இராணுவத்தினர்.

3. மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் : **மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மக்கள் நல்வாழ்வு, மருத்துவக் கல்வி மற்றும் குடும்ப நலம் மற்றும் மின்சாரம்.

4. வருவாய்த் துறை அமைச்சர் : **மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன் :** வருவாய், வருவாய் வாரியம், மாவட்ட வருவாய் நிருவாகம் மற்றும் மாவட்டத் துணை ஆட்சியாளர்கள்.

5. ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் : **மாண்புமிகு திரு. கோ.சி. மணி :** நகராட்சி நிருவாகம், ஊரக வளர்ச்சி, ஊராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்கள் மற்றும் ஊரகக் கடன்கள், நகர்ப்புற மற்றும் ஊரகக் குடிநீர் வழங்கல்.

6. வேளாண்மைத் துறை அமைச்சர் : மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம் :
வேளாண்மை, வேளாண்மைப் பொறியியல், வேளாண் பணிக் கூட்டுறவுச் சங்கங்கள், தோட்டக்கலை, கரும்புத் தீர்வை மற்றும் கரும்புப் பயிர் மேம்பாடு.

7. பொதுப்பணித் துறை அமைச்சர் : மாண்புமிகு திரு. துரைமுருகன் :
பொதுப்பணிகள், சிறு பாசனம் உள்ளிட்ட பாசனத் திட்டம் மற்றும் செயற் திட்டப் பணிகள்.

8. போக்குவரத்துத் துறை அமைச்சர் : மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி :
போக்குவரத்து, நாட்டுடைமை யாக்கப்பட்ட போக்குவரத்து, இயக்கூர்திகள் சட்டம் மற்றும் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம்.

9. நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் : மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன் :
நெடுஞ்சாலைகள் மற்றும் துறைமுகங்கள்.

10. தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் : மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகன் :
தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை.

11. உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் : மாண்புமிகு திரு. கா.நா. நேரு :
உணவு, விலைக் கட்டுப்பாடு மற்றும் குடிமைப் பொருட்கள் வழங்கல், பொது விநியோக முறை, கூட்டுறவு மற்றும் புள்ளிவிவரங்கள்.

12. பால்வளத் துறை அமைச்சர் : மாண்புமிகு திரு. க. சுந்தரம் :
பால், பால்பண்ணை வளர்ச்சி, குடிசை மாற்றுத் திட்டம் மற்றும் இடவசதிக் கட்டுப்பாடு.



13. தொழிலாளர் நலத் துறை அமைச்சர் : மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான் :
தொழிலாளர் நலன், மக்கள் தொகை, வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சி, இரும்பு மற்றும் எஃகுக் கட்டுப்பாடு, பத்திரிகை அச்சுக் காகிதக் கட்டுப்பாடு மற்றும் இசுலாமிய அறக்கட்டளை (வக்ஃப்).

14. சட்டத் துறை அமைச்சர் : மாண்புமிகு திரு. ஆலடி அருணா :
சட்டம், நீதிமன்றங்கள், சிறைச் சாலைகள், எடைகள் மற்றும் அளவைகள் குறித்த சட்டம், கம்பெனிகள் பதிவு, கடன் வழங்கல் பற்றிய சட்டமியற்றல் உட்பட கடன் நிவாரணம் மற்றும் சீட்டு நிதி பற்றிய சட்டம் இயற்றுதல்.

15. கைத்தறித் துறை அமைச்சர் : மாண்புமிகு திரு. என். கே. கே. பெரியசாமி :
கைத்தறி, துணித் தொழில்.

16. பிற்படுத்தப் பட்டோர் நலத் துறை அமைச்சர் : மாண்புமிகு திரு. எம். ஆர். கே. பன்னீர்செல்வம் :
பிற்படுத்தப்பட்டோர் நலன், மிகப் பிற்படுத்தப்பட்டோர் நலன் மற்றும் சீர் மரபினர் நலன், வெளிநாடு வாழ் இந்தியர்கள், அகதிகள் மற்றும் வெளியேற்றப்பட்டோர்.

17. வனத் துறை அமைச்சர் : மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி :
வனம், சின்கோனா மற்றும் சுற்றுச்சூழல் மாசுக் கட்டுப்பாடு.

18. வீட்டு வசதித் துறை அமைச்சர் : மாண்புமிகு திரு. கு. பிச்சாண்டி :
வீட்டு வசதி, ஊரக வீட்டு வசதி, நகர அமைப்புத் திட்டமிடல் மற்றும் நகர்ப்பகுதி வளர்ச்சி.

19. ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர் : **மாண்புமிகு திரு. இ. பெரியசாமி :**
*கிராமக் குடிசைத் தொழில்கள் உள்ளிட்ட ஊரகத் தொழில்கள், பதிவுத் துறை, முத்திரைத் தாள் சட்டம் மற்றும் சத்துணவு.*

20. செய்தி, விளம்பரம் மற்றும் அச்சுத் துறை அமைச்சர் : **மாண்புமிகு திரு. வ. முல்லைவேந்தன் :**
*செய்தி மற்றும் விளம்பரம், திரைப்படத் தொழில் நுட்பவியல் மற்றும் திரைப்படச் சட்டம், எழுதுபொருள் மற்றும் அச்சுத் துறை மற்றும் அரசு அச்சகம்.*

21. கால்நடைப் பராமரிப்புத் துறை அமைச்சர் : **மாண்புமிகு புலவர் பூ.ம. செங்குட்டுவன் :**
*கால்நடைப் பராமரிப்பு*

22. சமூக நலத் துறை அமைச்சர் : **மாண்புமிகு திருமதி எஸ்.பி. சற்குண பாண்டியன் :**
*மகளிர் மற்றும் குழந்தைகள் நலன் உட்பட சமூக நலன், இரவலர் காப்பு இல்லம், அனாதை இல்லங்கள், குற்றவாளிகள் சீர்திருத்த நிருவாகம் மற்றும் ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சிப் பணிகள் திட்டம்.*

23. ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் : **மாண்புமிகு திரு. சமயநல்லூர் எஸ். செல்வராசு :**
*ஆதிதிராவிடர் நலன், மலைவாழ் பழங்குடியினர் மற்றும் கொத்தடிமைத் தொழிலாளர்.*

24. சுற்றுலாத் துறை அமைச்சர் : **மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராசன் :**
*சுற்றுலா மற்றும் சுற்றுலா வளர்ச்சிக் கழகம்.*

25. கதர்த் துறை அமைச்சர் : **மாண்புமிகு திரு. அந்தியூர் ப. செல்வராசு :**
*கதர் வாரியம், பூமிதானம் மற்றும் கிராமதானம்.*

26. மீன் வளத் துறை அமைச்சர் : **மாண்புமிகு திருமதி எஸ். ஜெனிபர் சந்திரன் :**
*மீன் வளம் மற்றும் மீன் வளர்ச்சிக் கழகம்.*



## PERSONNEL OF THE GOVERNMENT OF TAMIL NADU

### GOVERNOR—Justice Selvi M. FATHIMA BEEVI

### MEMBERS OF THE COUNCIL OF MINISTERS

1. **Chief Minister** .. **The Hon. Kalaignar M. Karunanidhi :**
Public, General Administration, Indian Administrative Service, District Revenue Officers, Home, Finance, Planning, Industries, Prohibition and Excise, Minorities Welfare, Passports and Commercial Taxes.

2. **Minister for Education** .. **The Hon. Prof. K. Anbazhagan :**
Education including Technical Education, Legislature, Elections, Electronics, Science and Technology, Sports and Youth Service Corps and Ex-Servicemen.

3. **Minister for Health and Electricity** .. **The Hon. Thiru Arcot N. Veerasamy :**
Health, Medical Education and Family Welfare and Electricity.

4. **Minister for Revenue** .. **The Hon. Thiru Nanjil K. Manoharan :**
Revenue, Board of Revenue, District Revenue Establishment and Deputy Collectors.

5. **Minister for Rural Development and Local Administration** .. **The Hon. Thiru Ko.Si. Mani :**
Municipal Administration, Community Development, Panchayats, Panchayat Unions and Rural Indebtedness and Urban and Rural Water Supply.

6. **Minister for Agriculture** .. **The Hon. Thiru Veerapandi S. Arumugam:**
Agriculture, Agricultural Engineering, Agro Service Co-operatives, Horticulture, Sugarcane Cess and Sugarcane Development.

7. **Minister for Public Works** .. **The Hon. Thiru Duraimurugan:**
Public Works, Irrigation including Minor Irrigation and Programme Works.

8. **Minister for Transport** .. **The Hon. Dr. K. Ponmudi:**
Transport, Nationalised Transport, Motor Vehicles Act and Chennai Metropolitan Development Authority.

9. **Minister for Highways** .. **The Hon. Thiru Pasumpon Tha. Kiruttinan :**
Highways and Ports.

10. **Minister for Tamil Official Language, Tamil Culture and Hindu Religious and Charitable Endowments** .. **The Hon. Dr. M. Thamizhkudimagan:**
Tamil Official Language, Tamil Culture and Hindu Religious and Charitable Endowments.

11. **Minister for Food, Public Distribution System and Co-operation** .. **The Hon. Thiru K. N. Nehru:**
Food, Price Control and Civil Supplies, Public Distribution System, Co-operation and Statistics.

12. **Minister for Milk** .. **The Hon. Thiru K. Sundaram:**
Milk and Dairy Development, Slum Clearance and Accommodation Control.



13. **Minister for Labour** .. **The Hon. Thiru A. Rahman Khan:**
Labour, Census, Employment and Training, Iron and Steel Control, Newsprint Control and Wakf.

14. **Minister for Law** .. **The Hon. Thiru Aladi Aruna:**
Law, Courts, Prisons, Legislation on Weights and Measures, Registration of Companies, Debt Relief including Legislation on Money Lending and Legislation on Chits.

15. **Minister for Handlooms** .. **The Hon. Thiru N. K. K. Periasamy:**
Handlooms, Textiles.

16. **Minister for Backward Classes** .. **The Hon. Thiru M. R. K. Panneer-selvam:**
Backward Classes, Most Backward Classes and Denotified Communities, Indians Overseas, Refugees and Evacuees.

17. **Minister for Forest** .. **The Hon. Thiru Pongalur N. Palanisamy:**
Forest, Cinchona, and Environmental Pollution Control.

18. **Minister for Housing** .. **The Hon. Thiru K. Pitchandi:**
Housing, Rural Housing Development, Town Planning and Urban Development.

19. **Minister for Rural Industries and Registration** .. **The Hon. Thiru I. Periasamy:**
Rural Industries including Village and Cottage Industries, Registration and Stamp Act and Nutritious Meals.

| | | |
|---|---|---|
| 20. **Minister for Information, Publicity and and Printing** | .. | **The Hon. Thiru V. Mullaivendan:** Information and Publicity, Film Technology and Cinematography Act, Stationery and Printing and Government Press. |
| 21. **Minister for Animal Husbandry** | .. | **The Hon. Pulavar P. M. Senguttuvan:** Animal Husbandry. |
| 22. **Minister for Social Welfare** | .. | **The Hon. Tmt. S. P. Sarkunapandian:** Social Welfare including Women's and Children's Welfare, Beggars Home, Orphanages and Correctional Administration and Integrated Child Development Services Scheme. |
| 23. **Minister for Adi-Dravidar and Tribal Welfare** | .. | **The Hon. Thiru Samayanallur S. Selvarasu:** Adi-Dravidar Welfare, Hill Tribes and Bonded Labour. |
| 24. **Minister for Tourism** | .. | **The Hon. Thiru N. Suresh Rajan:** Tourism and Tourism Development Corporation. |
| 25. **Minister for Khadi** | .. | **The Hon. Thiru Andhiyur P. Selvarasu:** Khadi Board, Bhoodan and Gramdan. |
| 26. **Minister for Fisheries** | .. | **The Hon. Tmt. S. Jenefer Chandran:** Fisheries and Fisheries Development Corporation. |



# தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

*பேரவைத் தலைவர்*

மாண்புமிகு திரு. பி.டி.ஆர். பழனிவேல் ராஜன்

*பேரவைத் துணைத் தலைவர்*

மாண்புமிகு திரு. பரிதி இளம்வழுதி

*மாறறுத் தலைவர்கள் பட்டியல்*

திரு. சி.டி. தண்டபாணி

டாக்டர் காஞ்சனா கமலநாதன்

திரு. பெ. ஆசையன்

டாக்டர் ஆ. ஞானசேகரன்

டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்

திரு. வை. சிவபுண்ணியம்

*செயலாளர்*

திரு. டி. சாலமன் ஜெயபால்

## தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் முக்கிய அலுவலர்கள் பட்டியல்

| | | | |
|---|---|---|---|
| 1. | திரு. வெ. இராசாராமன், பி.எஸ்சி., பி.எல். | .. | கூடுதல் செயலாளர் |
| 2. | திரு. செ.ஏ. துரைபாண்டியன், பி.ஏ., பி.எல். | .. | இணைச் செயலாளர் (பதிப்பாளர்) |
| 3. | திருமதி பானுமதி அனந்தராஜன், பி.எஸ்சி., பி.ஜி.எல். | .. | இணைச் செயலாளர் |
| 4. | திரு. கா.ப. இராஜன், டி.ஆர்.எஸ்., பி.ஜி.எல்., | .. | இணைச் செயலாளர் |
| 5. | திரு. இரா. வெங்கடேசன், எம்.ஏ., எல்.எல்.பி. | .. | இணைச் செயலாளர் (பதிப்பாளர்) |
| 6. | திரு. கி. சாயிநாதன், பி.ஏ., பி.ஜி.எல். | . | துணைச் செயலாளர் |
| 7. | திருமதி வீ.நா. உமா, பி.ஏ. | .. | குழு அலுவலர் |
| 8. | திருமதி பவானி சுப்பையா, பி.ஏ., பி.ஜி.எல். | .. | துணைச் செயலாளர் |
| 9. | திரு. சா. கணேசன், பி.ஏ., பி.ஜி.எல். | .. | துணைச் செயலாளர் |
| 10. | திரு. தி. திருமாவளவன், பி.எஸ்சி., பி.எல். | .. | துணைச் செயலாளர் |
| 11. | திரு. வெ. இராமகிருஷ்ணன், எம்.ஏ., பி.எல். | .. | பேரவைத் தலைவரின் சிறப்புத் தனிச் செயலர் |
| 12. | திரு. மு. ஆறுமுகப்பெருமாள், எம்.ஏ., பி.லிட். | .. | துணைச் செயலாளர் (பதிப்பாளர்) |
| 13. | திரு. சு. ராஜகுரு | .. | குழு அலுவலர் |
| 14. | திரு. சௌரி அய்யாத்துரை | .. | பேரவைத் தலைவரின் சிறப்பு நேர்முக உதவியாளர் |
| 15. | திரு. க. சம்பத்ராஜன், பி.ஏ., பி.ஜி.எல். | .. | துணைச் செயலாளர் |
| 16. | திரு. கோ. ஸ்ரீராமன், பி.காம். | .. | துணைச் செயலாளர் (பதிப்பாளர்) |
| 17. | திரு. எம். ஜோபாய், பி.காம்., பி.ஜி.எல். | .. | துணைச் செயலாளர் |

18. திரு. இரா. முருகானந்தம், பி.எஸ்சி., பி.எல். .. துணைச் செயலாளர்
19. திரு. இல. மாரியப்பன், பி.ஏ. .. துணைச் செயலாளர் (பதிப்பாளர்)
20. திரு. கோ. ஞானப்பிரகாசம், எம்.ஏ., பி.எல். .. சார்புச் செயலாளர்
21. திரு. ஜி. அனீஸ் அகமத், எம்.ஏ., பி.ஜி.எல். .. சார்புச் செயலாளர்
22. திரு. மா. செல்வராஜ், பி.எஸ்சி., பி.எல். .. சார்புச் செயலாளர்
23. திரு. வெ.சி. சுப்பிரமணியன், எம்.ஏ., பி.எல். .. சார்புச் செயலாளர்
24. திரு. சு. பாலச்சந்தர், பி.ஏ., பி.எல். .. சார்புச் செயலாளர்
25. திருமதி என். துளசிபாய், பி.ஏ. .. சார்புச் செயலாளர்
26. திரு. கோ. ரவீந்திரன், எம்.ஏ., பி.ஜி.எல். .. சார்புச் செயலாளர்
27. திரு. ஊ.கு. சுப்பிரமணியன், எம்.ஏ. .. சார்புச் செயலாளர்
28. திரு. டி. கோவிந்தராஜு, எம்.ஏ., பி.எல். .. சார்புச் செயலாளர்
29. திரு. ஏ.எம்.பி. ஜமாலுதீன், எம்.எஸ்சி., பி.எல். .. சார்புச் செயலாளர்
30. திரு. ம. பிலிப், எம்.ஏ., பி.ஜி.எல். .. தலைமை நிருபர்
31. திருமதி சீ. கனகவல்லி, டி.சி.பி. .. தலைமை நிருபர்
32. திரு. வெ. வெங்கடேசன், எம்.ஏ. .. தலைமை நிருபர்
33. திரு. ச. பாலகிருஷ்ணன், பி.எஸ்சி., பி.எல். .. சார்புச் செயலாளர்
34. திருமதி இரா. அமிர்தவல்லி, எம்.ஏ., பி.எல். .. சார்புச் செயலாளர்
35. திருமதி கி. இந்திரா, பி.ஏ., பி.ஜி.எல். .. சார்புச் செயலாளர்
36. திரு. நா. நடராஜன், பி.ஏ. .. தலைமை நிருபர்
37. திருமதி என். மீனாட்சி, எம்.ஏ., பி.ஜி.எல். .. சார்புச் செயலாளர்
38. திரு. மு. பொன்னுரங்கம், எம்.ஏ., பி.எல். .. தலைமை நிருபர்
39. திரு. தி. உமாபதி, பி.ஏ. .. தலைமை நிருபர்



## தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை
## உறுப்பினர்கள் பட்டியல் (அகர வரிசைப்படி)

### பெயர்களும் தொகுதிகளும்

1. அசோகன், திரு. அ. .. திருவாரூர் (செ.வ.)
2. அந்தியூர் ப. செல்வராசு, திரு. .. அந்தியூர் (செ.வ.)
3. அபுல்ஹசன், திரு. எம். எம். எஸ். .. மயிலாடுதுறை
4. அப்துல் நாசர், திரு. அ.வ. .. புவனகிரி
5. அப்துல் லத்தீப், திரு. ம. .. வாணியம்பாடி
6. அப்பாவு, திரு. மு. .. ராதாபுரம்
7. அமரமூர்த்தி, திரு. டி. .. அரியலூர்
8. அய்யலுசாமி, திரு. லி. .. கோவில்பட்டி
9. அருண்குமார், திரு. பா. .. மேட்டுப்பாளையம்
10. அழகராஜா, திரு. என். ஆர். .. தேனி
11. அழகிரி, திரு. ச. .. சிதம்பரம்
12. அழகுவேலு, திரு. ச. .. கண்டமங்கலம் (செ.வ.)
13. அன்பழகன், திரு. வ. .. செய்யார்
14. அன்பழகன், பேராசிரியர் க. .. துறைமுகம்
15. அன்பில் பொய்யாமொழி, திரு. .. திருச்சிராப்பள்ளி-2
16. ஆசையன், திரு. பெ. .. ஆண்டிப்பட்டி
17. ஆண்டமுத்து, திரு. வெ. அ. .. பவானிசாகர்
18. ஆண்டி அம்பலம், திரு. எம். .. நத்தம்
19. ஆரூண் ரஷீத், திரு. ஜே.எம். .. வில்லிவாக்கம்
20. ஆலடி அருணா, திரு. .. ஆலங்குளம்

21. ஆவுடையப்பன், திரு. இரா. .. அம்பாசமுத்திரம்

22. ஆறுமுகம், திரு. தி.ப. .. திருச்செங்கோடு

23. ஆற்காடு நா. வீராசாமி, திரு. .. அண்ணா நகர்

24. ஆனந்தன், திரு. பால. .. வந்தவாசி (செ.வ.)

25. இரகுமான்கான், திரு. அ. .. இராமநாதபுரம்

26. இராசமாணிக்கம், திரு. க.வெ.வீ. .. மேலூர்

27. இராசமாணிக்கம், திரு. பி. .. ஒரத்தநாடு

28. இராசன், திரு. வி. பி. .. இராஜபாளையம் (செ.வ.)

29. இராசேந்திரன் என்கிற தீரன், திரு. ஆ. .. ஆண்டிமடம்

30. இராமசாமி, டாக்டர் வை. .. பண்ருட்டி

31. இராமசாமி, திரு. கே. ஆர். .. திருவாடனை

32. இராமச்சந்திரன், திரு. ஓ. ஆர். .. கம்பம்

33. இராமச்சந்திரன், திரு. சி.இரா. .. தொண்டாமுத்தூர்

34. இராமச்சந்திரன், திரு. மா. .. திருவோணம்

35. இராமலிங்கம், திரு. ஏ .. காட்டுமன்னார்கோவில் (செ.வ.)

36. இராமலிங்கம், திரு. செ. .. திருவிடைமருதூர்

37. இராமன், டாக்டர் இ. எஸ். எஸ். .. பள்ளிப்பட்டு

38. இராமஜெயம், திரு. ந.பூ. .. மயிலாப்பூர்

39. இராஜரெட்டி, திரு. ச. .. தளி

40. இராஜேந்தர், திரு. டி. .. பூங்கா நகர்

41. இளங்கோ, திரு. கோ. .. அவினாசி (செ.வ.)

42. ஈஸ்வரன், திரு. ரா. .. வாசுதேவநல்லூர் (செ.வ.)



43. உதயசூரியன், திரு. தா. .. சங்கராபுரம்

44. உபயதுல்லா, திரு. எஸ்.என்.எம். .. தஞ்சாவூர்

45. கணேசன், திரு. ஐ. .. எடப்பாடி

46. கணேசன், திரு. கே. சி. .. ஜெயங்கொண்டம்

47. கருணாநிதி, கலைஞர் மு. .. சேப்பாக்கம்

48. கருப்பசாமி, திரு. சொ. .. சங்கரநயினார்கோவில் (செ.வ.)

49. கருப்பண்ண உடையார், திரு. ந. .. பாபநாசம்

50. கருப்புசாமி, திரு. டி. .. உப்பிலியாபுரம் (ஆ.வா.)

51. கன்னையன், திரு. க. .. தொட்டியம்

52. காஞ்சனா கமலநாதன், டாக்டர் .. கிருஷ்ணகிரி

53. காந்தி, திரு. ஆர். .. இராணிப்பேட்டை

54. கிருஷ்ணசாமி, டாக்டர் க. .. ஒட்டப்பிடாரம் (செ.வ.)

55. கிருஷ்ணன், திரு. எஸ். வி. .. நாங்குநேரி

56. கிருஷ்ணன், திரு. சீ. வெ. .. வேடசந்தூர்

57. குண்டன், திரு. டி. .. உதகமண்டலம்

58. குத்தாலம் பி. கல்யாணம், திரு. .. குத்தாலம்

59. குமாரதாஸ், டாக்டர் தே. .. கிள்ளியூர்

60. கும்மிடிப்பூண்டி கி. வேணு, திரு. .. கும்மிடிப்பூண்டி

61. குழந்தை தமிழரசன், திரு. .. விருத்தாசலம்

62. கோதண்டம், திரு. ஏ. .. ஸ்ரீபெரும்புதூர் (செ.வ.)

63. கோபால், திரு. பா. .. மேட்டூர்

64. கோபு, திரு. சி. .. அணைக்கட்டு

65. கோமதி சீனிவாசன், திருமதி .. வலங்கைமான் (செ.வ.)

66. கோவிந்தன், திரு. ப. .. தாரமங்கலம்
67. கோவிந்தன், திரு. வெ. .. பேரணாம்பட்டு (செ.வ.)
68. சக்ரபாணி, திரு. ஆர். .. ஒட்டன்சத்திரம்
69. சண்முகம், திரு. கோ. .. திருப்பத்தூர்
70. சண்முகம், திரு. சி. .. ஆலந்தூர்
71. சண்முகம், திரு. ம. .. கிணத்துக்கடவு
72. சந்தானம், திரு. லா. .. சோழவந்தான்
73. சந்திரசேகரன், திரு. சி. .. சேந்தமங்கலம் (ஆ.வா.)
74. சந்திரசேகரன், திரு. துரை. .. திருவையாறு
75. சமயநல்லூர் எஸ். செல்வராசு, திரு. .. சமயநல்லூர் (செ.வ.)
76. சம்பத், திரு. ஏ.ஜி. .. முகையூர்
77. சரஸ்வதி, திருமதி ஆர். .. தாராபுரம் (செ.வ.)
78. சற்குணபாண்டியன், திருமதி எஸ்.பி. .. டாக்டர் இராதாகிருஷ்ணன் நகர்
79. சாமிநாதன், திரு. மு.பெ. .. வெள்ளக்கோவில்
80. சிங்காரவேலு, திரு. வி.பி. .. வால்பாறை (செ.வ.)
81. சிவபுண்ணியம், திரு. வை. .. மன்னார்குடி
82. சிவராமன், திரு. ஆர். .. திருப்பத்தூர்
83. சிவராஜ், திரு. சு. .. ரிஷிவந்தியம்
84. சிவலிங்கம், திரு. எஸ்..ஆர். .. பனமரத்துப்பட்டி
85. சிவானந்தம், திரு. ஆர். .. ஆரணி
86. சிவாஜி, திரு. இ.ஏ.பி. .. திருத்தணி
87. சின்னய்யா, திரு. வெ. .. திருமயம்



88. சீனிவாசன், திரு. ஏ.ஆர்.ஆர். .. விருதுநகர்
89. சுகவனம், திரு. இ.ஜி. .. பர்கூர்
90. சுடலைமுத்து, திரு. அ. .. போடிநாயக்கனூர்
91. சுதர்சனம், திரு. டி. .. பூந்தமல்லி
92. சுந்தரம், திரு. க. .. பொன்னேரி (செ.வ.)
93. சுந்தரம், திரு. ந. .. காரைக்குடி
94. சுந்தரம், திரு. பி.ஆர். .. இராசிபுரம்
95. சுந்தர், திரு. கே. .. உத்திரமேரூர்
96. சுப்பராயன், திரு. கே. .. திருப்பூர்
97. சுப்பிரமணி என்கிற சி.சு. மணி, திரு. சி. .. திருவள்ளூர்
98. சுப்பிரமணி, திரு. பி.என். .. ஆற்காடு
99. சுப்பிரமணியன், திரு. அ.லெ. .. திருநெல்வேலி
100. சுப்புலட்சுமி செகதீசன், திருமதி .. மொடக்குறிச்சி
101. சுரேஷ் ராசன், திரு. என். .. கன்னியாகுமரி
102. செங்குட்டுவன், புலவர் பூ.ம. .. மருங்காபுரி
103. செங்கை சிவம், திரு. .. பெரம்பூர் (செ.வ.)
104. செல்லக்குமார், டாக்டர் அ. .. தியாகராய நகர்
105. செல்வம், திரு. ரெ. .. குளித்தலை
106. செல்வராஜ் என்கிற கவிதைப்பித்தன், திரு. .. கொளத்தூர் (செ.வ.)
107. செல்வராஜ், திரு. து. .. உடுமலைப்பேட்டை
108. சேகரன், திரு. ஆர்.ஆர். .. ஓமலூர்
109. சேதுநாதன், திரு. ரா. .. திண்டிவனம்

110. சைதை கா. கிட்டு, திரு. .. சைதாப்பேட்டை
111. சொக்கர், திரு. ஆர். .. சிவகாசி
112. சொக்கலிங்கம், திரு. ஜி. .. திருப்போரூர் (செ.வ.)
113. ஞானசேகரன், டாக்டர் ஆ. .. மேல்மலையனூர்
114. ஞானசேகரன், திரு. சி. .. வேலூர்
115. டேவிட் செல்வின், திரு. எஸ். .. ஸ்ரீவைகுண்டம்
116. தங்கமணி, திரு. கே. .. மானாமதுரை (செ.வ.)
117. தங்கம் தென்னரசு, திரு. .. அருப்புக்கோட்டை
118. தங்கவேலன், திரு. சுப. .. கடலாடி
119. தங்கவேல், திரு. அ. ல. .. சேலம்-2
120. தண்டபாணி, திரு. சி. டி. .. கோயம்புத்தூர் மேற்கு
121. தமிழ்க்குடிமகன், முனைவர் மு. .. இளையான்குடி
122. தமிழ்ச்செல்வன், திரு. ஆர். .. அரக்கோணம் (செ.வ.)
123. தமிழ்மணி, திரு. வீ. .. செங்கல்பட்டு
124. தளபதி, திரு. கோ. .. சேடப்பட்டி
125. தனபாலன், திரு. கே. ஆர். ஜி. .. சேலம்-1
126. தனபால், திரு. வி. ஜி. .. குடியாத்தம்
127. தாமரைக்கனி, திரு. இரா. .. ஸ்ரீவில்லிபுத்தூர்
128. திசைவீரன், திரு. உ. .. பரமக்குடி (செ.வ.)
129. திருஞானசம்பந்தம், திரு. எஸ்.வி. .. பேராவூரணி
130. திருநாவுக்கரசு, திரு. எஸ். .. அறந்தாங்கி
131. திருவேங்கடம், திரு. பெ. சு. .. கலசப்பாக்கம்
132. துரைசாமி, திரு. பா. .. வரகூர் (செ.வ.)
133. துரை, திரு. கே. .. திருவெறும்பூர்



134. துரைமுருகன், திரு. .. காட்பாடி
135. தெய்வநாயகம், திரு. எ. .. மதுரை மத்தி
136. தேவராஜன், டாக்டர் மு. .. பெரம்பலூர் (செ.வ.)
137. நடராசன், திரு. ஆ. .. பேரூர்
138. நடராஜன், திரு. த. .. செஞ்சி
139. நயினா முகமது, திரு. கோ. .. கடையநல்லூர்
140. நன்னன், திரு. கொ. வீ. .. செங்கம் (செ.வ.)
141. நாகரத்தினம், திரு. ச. .. கிருஷ்ணராயபுரம் (செ.வ.)
142. நாஞ்சில் கி. மனோகரன், திரு. .. திருவல்லிக்கேணி
143. நிஜாமுதீன், திரு. ஜி. .. நாகப்பட்டினம்
144. நெல்லிக்குப்பம் அ. மணி, திரு. .. நெல்லிக்குப்பம்
145. நேரு, திரு. கா.நா. .. லால்குடி
146. பசும்பொன் தா. கிருட்டிணன், திரு. .. சிவகங்கை
147. பத்மா, டாக்டர் .. நன்னிலம் (செ.வ.)
148. பரணிகுமார், திரு. பா. .. திருச்சிராப்பள்ளி-1
149. பரிதி இளம்வழுதி, திரு. .. எழும்பூர் (செ.வ.)
150. பழனிசாமி, திரு. ஜி. .. திருத்துறைப்பூண்டி (செ.வ.)
151. பழனிவேல் ராஜன், திரு. பி.டி. ஆர். .. மதுரை மேற்கு
152. பன்னீர்செல்வம், திரு. எம். ஆர். கே. .. குறிஞ்சிப்பாடி
153. பன்னீர்செல்வம், திரு. மு. .. சீர்காழி (செ.வ.)
154. பாண்டுரங்கன், திரு. ந. .. பெரணமல்லூர்
155. பாலகிருஷ்ணன், திரு. சோ. .. முதுகுளத்தூர்
156. பாலசுப்பிரமணியன், திரு. எஸ்.என். .. பவானி

| | | |
|---|---|---|
| 157. பாலசுப்பிரமணியன், திரு. ப. | .. | பட்டுக்கோட்டை |
| 158. பிச்சாண்டி, திரு. கு. | .. | திருவண்ணாமலை |
| 159. புகழேந்தி, திரு. இ. | .. | கடலூர் |
| 160. புரட்சிமணி, திரு. ச. | .. | மங்களூர் (செ.வ.) |
| 161. பூவேந்தன், திரு. த. | .. | பழனி (செ.வ.) |
| 162. பெரியசாமி, திரு. இ. | .. | ஆத்தூர் |
| 163. பெரியசாமி, திரு. என். | .. | தூத்துக்குடி |
| 164. பெரியசாமி, திரு. என்.கே.கே. | .. | ஈரோடு |
| 165. பெரியசாமி, திரு. நா. | .. | பெருந்துறை |
| 166. பெருமாள், திரு. வி. | .. | ஏற்காடு (ஆ.வா.) |
| 167. பெர்னார்டு, திரு. இரா. | .. | குளச்சல் |
| 168. பொங்கலூர் நா. பழனிசாமி, திரு. | .. | சிங்காநல்லூர் |
| 169. பொன்முடி, டாக்டர் க. | .. | விழுப்புரம் |
| 170. பொன்முடி, திரு. எஸ்.எஸ். | .. | பல்லடம் |
| 171. பொன்னம்மாள், திருமதி ஏ.எஸ். | .. | நிலக்கோட்டை (செ.வ.) |
| 172. மகேந்திரன், திரு. இரா. | .. | நாட்ராம்பள்ளி |
| 173. மணிக்கண்ணன், திரு. ஆ.செ. | .. | திருநாவலூர் |
| 174. மணி, டாக்டர் அ. | .. | உளுந்தூர்பேட்டை (செ.வ.) |
| 175. மணி, திரு. கோ.சி. | .. | கும்பகோணம் |
| 176. மணி, திரு. டி. | .. | விளவங்கோடு |
| 177. மணி, திரு. ஜி.கே. | .. | பெண்ணாகரம் |
| 178. மணி நாடார், திரு. எஸ்.எஸ். | .. | சாத்தான்குளம் |
| 179. மணிமாறன், திரு. இரா. | .. | திண்டுக்கல் |
| 180. மணிவர்மா, திரு. க. | .. | தண்டராம்பட்டு |
| 181. மதிவாணன், திரு. இரா. | .. | இராயபுரம் |
| 182. மதிவாணன், திரு. செ. | .. | அச்சரப்பாக்கம் (செ.வ.) |
| 183. மனோகரன், திரு. கு. | .. | தர்மபுரி |
| 184. மாயவன், திரு. தி.ப. | .. | ஸ்ரீரங்கம் |
| 185. மாரி அய்யா, திரு. பே. | .. | புதுக்கோட்டை |
| 186. மாரிமுத்து, திரு. அ. | .. | வானூர் (செ.வ.) |
| 187. முகம்மது இஸ்மாயில், திரு. எஸ். எஸ். | .. | அரவக்குறிச்சி |
| 188. முகம்மது கோதர் மைதீன், திரு. | .. | பாளையங்கோட்டை |
| 189. முத்து, திரு. வி. | .. | சங்கரி (செ.வ.) |
| 190. முத்துராமலிங்கம், திரு. ம. | .. | திருமங்கலம் |
| 191. முபாரக், திரு. பா.மு. | .. | கூடலூர் |
| 192. முருகேசன், திரு. பொ. | .. | காஞ்சிபுரம் |
| 193. முல்லைவேந்தன், திரு. வ. | .. | மொரப்பூர் |
| 194. முனிரத்தினம், திரு. ஆ.மு. | .. | சோளிங்கர் |
| 195. மூக்கப்பன், திரு. இரா. | .. | சின்னசேலம் |
| 196. மூக்கையா, திரு. எல். | .. | பெரியகுளம் |
| 197. மோகனதாசன், திரு. கோ. | .. | பூம்புகார் |
| 198. மோகன் கந்தசாமி, திரு. ப. | .. | பொங்கலூர் |
| 199. மோசஸ், டாக்டர் எம். | .. | நாகர்கோவில் |
| 200. ரங்கநாதன், திரு. எம். | .. | குன்னூர் (செ.வ.) |
| 201. ரங்கநாதன், திரு. ப. | .. | புரசைவாக்கம் |

| | | |
|---|---|---|
| 202. ரவி அருணன், திரு. கே. | .. | தென்காசி |
| 203. ரவிசங்கர், திரு. கு. | .. | விளாத்திகுளம் |
| 204. ராசேந்திரன், திரு. ஏ. | .. | போளூர் |
| 205. ராணி, செல்வி க. | .. | தலைவாசல் (செ.வ.) |
| 206. ராமசாமி, திரு. ஏ.எம். | .. | ஆத்தூர் |
| 207. ராமச்சந்திரன், திரு. செ. | .. | திருப்பரங்குன்றம் |
| 208. ராஜு, திரு. எஸ். | .. | பொள்ளாச்சி |
| 209. ராஜேந்திரன், திரு. எஸ்.கே. | .. | சத்தியமங்கலம் |
| 210. ராஜ்குமார் மன்றாடியார், திரு. என்.எஸ். | .. | காங்கேயம் |
| 211. லட்சுமணன், திரு. வி.கே. | .. | கோயம்புத்தூர் கிழக்கு |
| 212. வல்லரசு, திரு. பி. என். | .. | உசிலம்பட்டி |
| 213. வாசுகி முருகேசன், திருமதி | .. | கரூர் |
| 214. விஜயகுமார், திரு. கே.எம். | .. | சாத்தூர் |
| 215. விஜயன், திரு. டி.சி. | .. | திருவொற்றியூர் |
| 216. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், திரு. | .. | வீரபாண்டி |
| 217. வீரப்பன், திரு. கே.கே. | .. | கபிலைமலை |
| 218. வெங்கடசாமி, திரு. பி. | .. | ஓசூர் |
| 219. வெங்கடாசலம், திரு. அ. | .. | ஆலங்குடி |
| 220. வெங்கடாசலம், திரு. ஜி.எல். | .. | பாலக்கோடு |
| 221. வெங்கடேசன், திரு. ச.க. | .. | மதுராந்தகம் |
| 222. வெங்கடேசன், திரு. பி.வி.எஸ். | .. | காவேரிப்பட்டினம் |
| 223. வெங்கிடு, திரு. ஜி. பி. | .. | கோபிச்செட்டிப் பாளையம் |



| | | |
|---|---|---|
| 224. வேடம்மாள், திருமதி ஏ.ஆர். | .. | அரூர் (செ.வ.) |
| 225. வேதரத்தினம், திரு. எஸ்.கே. | .. | வேதாரண்யம் |
| 226. வேலாயுதன், திரு. சி. | .. | பத்மநாபபுரம் |
| 227. வேலுசாமி, திரு. வ. | .. | மதுரை கிழக்கு |
| 228. வேல்சாமி, திரு. க. | .. | நாமக்கல் (செ.வ.) |
| 229. வேல்துரை, திரு. பா. | .. | சேரன்மகாதேவி |
| 230. வைதியலிங்கம், திரு. மீ.அ. | .. | தாம்பரம் |
| 231. ஜெனிபர் சந்திரன், திருமதி எஸ். | .. | திருச்செந்தூர் |
| 232. ஜோதிகண்ணன், திரு. மு.ந. | .. | முசிறி |
| 233. ஸ்டாலின், திரு. மு.க. | .. | ஆயிரம் விளக்கு |
| 234. ஆன் டி' மான்டி, திருமதி | .. | நியமனம் |
| 235. வெற்றிடம் | .. | திருவட்டாறு |

**பேரவை நடவடிக்கைகளில் பங்குகொள்ள உரிமை பெற்றவர்**

திரு. கே.வி. வெங்கடபதி .. அரசு தலைமை வழக்கறிஞர்

# தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

**பங்குனி 11, வெகுதான்ய - திருவள்ளுவர் ஆண்டு 2030**

**1999 மார்ச் 25, வியாழக்கிழமை**

மாண்புமிகு பேரவைத் தலைவர் **திரு. பி.டி.ஆர். பழனிவேல் ராஜன்** அவர்கள் தலைமையில் காலை 9-30 மணியளவில் பேரவை கூடியது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:**

"சொற்கோட்டம் இல்லது செப்பம் ஒருதலையா
உட்கோட்டம் இன்மை பெறின்"

நேர்மையும், நெஞ்சுறுதியும் ஒருவருக்கு இருந்தால், அவரது சொல்லில் நீதியும், நியாயமும் இருக்கும். அதற்குப் பெயர்தான் நடுவுநிலைமை.

## 1. வினாக்கள்—விடைகள்

### உடுக்குறியிட்ட வினாக்கள்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 181, திரு. அ.வ. அப்துல் நாசர், மாண்புமிகு கல்வி அமைச்சர்.

**181—**

### கிளை நூலகம் தொடங்குதல்

***5087—திரு. அ.வ. அப்துல் நாசர்:**

மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புவனகிரி தொகுதி, பரங்கிப்பேட்டை அகரத்தில் மீண்டும் அரசு கிளை நூலகம் தொடங்க ஆவன செய்யப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது தொடங்கப்படும்?

[1999 மார்ச் 25

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) பரங்கிப்பேட்டை அகரத்தில், கிளை நூலகமொன்று 1971 முதல் 1988 முடிய இயங்கி வந்தது. கிளை நூலகம் இயங்கி வந்த கட்டடம் பழுதுற்று, இடிந்து, ஆபத்து விளைவிக்கும் நிலையில் இருந்ததாலும், மூன்றாண்டுகாலம் பெருமுயற்சி செய்தும் மாற்றுக் கட்டடம் கிடைக்கப் பெறாததாலும், இந்நூலகம் பி. முட்லூருக்கு மாற்றப்பட்டு அங்கு செயல்பட்டு வருகிறது. எனவே, தற்சமயம் இவ்வூரில் கிளை நூலகம் அமைப்பதற்கான சாத்தியக்கூறுகள் இல்லை.

(ஆ) நூலகம் இயங்க நல்ல கட்டடம் கிடைக்கப் பெற்றால் கிளை நூலகம் தொடங்க ஆவன செய்யப்படும்.

**திரு. அ.வ. அப்துல் நாசர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்தக் கிளை நூலகம் அமைப்பதற்கு அங்கே இருக்கிற பொதுமக்கள் இடம் அளிக்கவும் தயாராக இருக்கிறார்கள். அதுமட்டுமல்லாது, என்னுடைய தொகுதியில் மஞ்சக்குழி கிராமத்தில் கிளை நூலகம் நல்ல கட்டடத்தில் நல்ல முறையில் இயங்கிவருகிறது என்றாலும் அந்த நூலகத்தில் இருக்கிற நூல்களைப் பாதுகாக்கின்ற வகையில் அங்கே Rack-களோ மற்ற சாதனங்களோ இல்லை. எனவே அதற்கு அரசு ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த நூலகத்திற்கு வேறு கட்டடம் வழங்குவதற்கு முன்வந்து ஒரு கடிதம் இயக்குநருக்கு அனுப்பப்படுமானால் அந்தக் கட்டடத்தைப் பார்த்து, பயன்படுத்தக்கூடிய நல்ல சூழ்நிலை இருக்கும் என்று கருதப்பட்டால், உடனடியாக ஏற்றுக்கொள்ளப்பட்டு, அங்கே கிளை நூலகம் தொடங்கப்படும். மற்றொரு நூலகத்தைப் பற்றிக் குறிப்பிட்டார்கள்; எழுதி அனுப்பினால் அதுபற்றியும் இயக்குநர் கவனிப்பார்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 182. டாக்டர் ஆ. ஞானசேகரன், மாண்புமிகு கல்வி அமைச்சர்.



1999 மார்ச் 25]

**182—**

### நூலகத்திற்குக் கட்டடம்

***5897—டாக்டர் ஆ. ஞானசேகரன்:**

மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

விழுப்புரம் மாவட்டம், மேல்மலையனூர் தொகுதி, சத்தியமங்கலத்தில் உள்ள நூலகத்திற்கு நிரந்தரக் கட்டட வசதி செய்துதர அரசு ஆவன செய்யுமா?

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

விழுப்புரம் மாவட்டம், மேல்மலையனூர் தொகுதி, சத்தியமங்கலத்தில் உள்ள நூலகத்திற்குக் கட்டடம் கட்ட காலிமனை பெறப்பட்டுள்ளது. இருப்பினும் கட்டடம் கட்டுவதற்கு இம்மாவட்ட நூலக ஆணைக் குழுவில் தற்போது போதிய நிதி வசதி இல்லை. எனவே, நூலக வரி வசூலில் மேம்பாடடைந்து இம்மாவட்ட நூலக ஆணைக் குழுவின் நிதிநிலை சீரானதும், நூலகத்திற்கான கட்டடம் கட்டுவது குறித்து கருதப்படும்.

**டாக்டர் ஆ. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு மிக்க நன்றி, நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர், முத்தமிழ் வித்தகர் அவர்கள் எழுதிய நூல்களான சங்க இலக்கியம், குறளோவியம், தென்பாண்டிச் சிங்கம், பொன்னர்-சங்கர், பாயும் புலி பண்டார வன்னியன் போன்ற நூல்களை, தமிழ்நாட்டில் உள்ள அத்தனை நூலகங்களிலும் வாங்கி, வாசகர்கள் எளிதாகப் படிப்பதற்கு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய முதலமைச்சர் கலைஞர் அவர்களுடைய நூல்களையோ அல்லது அதுபோன்ற சிறந்த எழுத்தாளர்களுடைய நூல்களையோ வாங்கப் பெறுவது முறையாக நடைபெற்று வருகிறது. ஆனால் ஒவ்வொரு மாவட்டத்திலுமுள்ள அனைத்து கிளை நூலகங்களிலேயும், விலையுயர்ந்த எல்லா

நூல்களையும் வாங்கி வைப்பதற்கான தனி நிதி எதுவும் இல்லை. அந்தந்த மாவட்ட நூலக ஆணைக் குழுவுக்காக வசூலிக்கப்படுகின்ற மொத்தத் தொகை அந்தந்த மாவட்ட நூலகங்களுக்குப் பெருமளவு விகிதாச்சார அடிப்படையில் பங்கிட்டு வழங்கப்படுகிறது. எனவே பொருளாதார வசதி குறைவு காரணமாக பல நூலகங்களில் இந்த நூல்கள் இடம் பெறாத ஒரு நிலைமை இருக்கலாம். பொருளாதார வசதி மிகுதிப்படுகிறபோது அப்படிப்பட்ட நல்ல நூல்கள், நூலகங்களில் இடம் பெறுவதற்கு முயற்சிக்கப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. குழந்தை தமிழரசன்.

முற்பகல் 9-35

**திரு. குழந்தை தமிழரசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த ஆண்டு இந்த மன்றத்தில், கடலூர் மாவட்டம், மங்கலம்பேட்டையில் நூலகம் எழுப்புவதற்கு இடத்தைக் கொடுத்தால் கட்டடம் கட்டித்தர ஏற்பாடு செய்யப்படுமா என்று கேட்டேன். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அதற்குரிய பரிந்துரையைச் செய்து, இப்போது அந்த இடத்தை மாவட்ட நூலகத்திற்கு மாற்றிக் கொடுத்துள்ளோம். அதற்கான ஆணை அரசின் சார்பில் பிறப்பிக்கப்பட்டுள்ளது. எனவே, விரைந்து நூலகக் கட்டடம் கட்டுவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நூலக இயக்குநர் மாநிலம் முழுவதற்கும் செயல்பட்டாலும்கூட, ஒவ்வொரு மாவட்டத்திற்கும் அந்த மாவட்டத்தினுடைய நூலக நிதியாக வசூலிக்கப்படுகின்ற நிதியைத்தான், விகிதாச்சார அடிப்படையிலே பங்கிட்டு, நூல்கள் வாங்குவதற்கும், நூலகக் கட்டடம் கட்டுவதற்கும் வழங்கப்படுகிறது. அவ்வப்போதுள்ள நிதி நிலைக்கேற்ப கட்டடம் கட்டுகின்ற முன்னுரிமை கருதப்படுகிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 183, திரு. பி.வி.எஸ். வெங்கடேசன், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்.



**183—**

## பள்ளிகளில் குழந்தைகளுக்குத் தடுப்பூசி

***9089—திரு. பி.வி.எஸ். வெங்கடேசன்:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பொதுச் சுகாதாரத் துறை மூலம் முன்பு இருந்ததைப்போல் பள்ளிகளில் டைபாய்டு நோய் வராமல் தடுக்க தடுப்பூசி போட அரசு நடவடிக்கை எடுக்குமா?

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

பள்ளிக்கூடங்களில் டைபாய்டு தடுப்பூசித் திட்டம் நவம்பர் 1979 முதல் நடைமுறைப்படுத்தப்பட்டது. டைபாய்டு தடுப்பூசியில் (Vaccine) மிகக் குறைந்த அளவு எதிர்ப்பு சக்தி (Immuniogenicity) மட்டுமே உருவாகும் நிலை உள்ளது. எனவே, டைபாய்டு தடுப்பூசித் திட்டம் சிறந்த பயன் அளிக்காது என்பதால், மேற்படித் திட்டம் 1988-89-லிருந்து கைவிடப்பட்டு விட்டது.

**திரு. பி.வி.எஸ். வெங்கடேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முன்பெல்லாம் பள்ளி மாணவர்களுக்குத் தடுப்பூசி போட்டதன் பயனாக ஓரளவு நோய் கட்டுப்படுத்தப்பட்டது. இடையிலே அது நிறுத்தப்பட்டு விட்டது. என்னதான் நாம் கல்விச் செல்வம் கொடுத்தாலும், 'நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம் என்ற பழமொழிக்கேற்ப, மீண்டும் டைபாய்டு காய்ச்சல் வராது இருப்பதற்காக, அந்த நோய்த் தடுப்பூசி மருந்தினை மாணவர்களுக்குச் செலுத்த ஏற்பாடு செய்யவேண்டும். அதேநேரத்தில், பள்ளி மாணவர்களுக்கு, வாரத்திற்கொருமுறையாவது, பள்ளிக்கூடங்களுக்கு அந்தப் பகுதியிலே இருக்கின்ற சுகாதார ஆய்வாளர்களை அனுப்பிவைத்து, முக்கால் மணி நேரம் அல்லது ஒரு மணி நேரம் அவர்களுக்குக் கல்வி போதிக்கின்ற வகையில் ஏற்பாடு செய்தால், இப்படிப்பட்ட நோய் வந்தால், இந்த முறையில் தடுப்பு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று போதித்தால், அதன் காரணமாக, எந்த நோய் வந்தாலும் அதைத் தடுத்துக் கொள்வதற்கு அவர்களுக்கு ஒரு வாய்ப்பு கிடைக்கும் என்று

நான் கருதுகிறேன். ஆகவே, இதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பரிசீலனை செய்வார்களா என்று நான் தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் தடுப்பூசித் திட்டம் பயன் தராது என்பதை நாம் முடிவு செய்யவில்லை. World Health Organisation தான் முடிவு செய்திருக்கிறது. அதன் அடிப்படையிலேதான் அந்தத் திட்டம் நிறுத்தப்பட்டது. மாண்புமிகு உறுப்பினர் சொல்வதைப்போல மாணவர்களுக்கு நல்ல மருத்துவ வசதி செய்துதர வேண்டுமென்ற அடிப்படையிலேதான் முதல்வரவர்கள் நம்முடைய வரவு-செலவுத் திட்டத்திலே கூட வாழ்வொளித் திட்டத்தை அறிவித்திருக்கிறார்கள். அதுமட்டுமல்ல, மாணவர்களுக்கு நோய் இருக்கிறதா என்பதைக் கண்டறிய, நம்முடைய முதலமைச்சர் அவர்கள் ஆணையிட்டபடி, ஒவ்வோர் ஆண்டும், தமிழகத்திலே 85 இலட்சம் மாணவர்களைப் பரிசோதனை செய்து, ஏறக்குறைய 20 சதவீதம் மாணவர்களுக்கு நோய் இருக்கிறது என்பதைக் கண்டறிந்து, அவர்களுக்கு மாவட்ட மருத்துவமனைகளிலும், தாலுகா மருத்துவமனைகளிலும் சிகிச்சை அளித்துக் கொண்டிருக்கிறோம், அதுமட்டுமல்லாமல், குழந்தைகள் பிறக்கின்ற நேரத்திலே அவர்களுக்கு நோய் வராமல் தடுப்பதற்காக சில நடவடிக்கைகளை இந்த அரசு எடுத்துவருகிறது. குழந்தை பிறந்த 6 வாரங்கள் கழித்து First dose D.P.T. மற்றும் Polio drops கொடுக்கிறோம். 10 வாரங்கள் கழிந்து, Second dose D.P.T. மற்றும் Polio drops கொடுக்கிறோம். 14 வாரங்கள் கழித்து Third dose D.P.T. மற்றும் Polio drops கொடுக்கிறோம். 9 மாதங்கள் கழித்து Measles தட்டம்மை ஊசியும் Fourth dose D.P.T. and Polio drops கொடுக்கிறோம். இப்போது இந்தப் பணியிலே 11 ஆயிரம் பேர் ஈடுபடுத்தப்பட்டு, முறையாக இந்தப் பணிகள் கிராமப் பகுதியிலேயும், நகரப் பகுதியிலேயும் செய்து வரப்படுகின்றன.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி.கே. மணி.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த நாட்டினுடைய எதிர்காலத்தை உருவாக்கக்கூடியவர்கள் பள்ளிக் குழந்தைகள். கிராமப்புறங்களில் இருக்கக்கூடிய குழந்தைகள் எல்லாம், அவர்களுடைய உடலில் தொற்றிக் கொண்டிருக்கக்கூடிய நோய் என்னவென்று தெரியாத நிலையில் பள்ளிகளுக்குச் சென்று கொண்டிருக்கிறார்கள். கடந்த காலங்களிலே மூன்று



மாதத்திற்கொருமுறையோ அல்லது ஆண்டுக்கு ஒரு முறை என்ற அளவிலோ, பள்ளிகளுக்கு மருத்துவர்கள் சென்று பரிசோதனை செய்து வந்தார்கள். இப்போது, நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள் வாழ்வொளித் திட்டத்தை அறிவித்ததற்கு மனதாரப் பாராட்டுகிறோம், அதை வரவேற்கிறோம். இருந்தாலும்கூட, ஆண்டுதோறும் ஒரு பள்ளி தவறாமல் மருத்துவர்கள் சென்று, மாணவர்களின் வயதுக்கேற்ப அவர்களுடைய எடை இருக்கிறதா என்பதையும், அவர்களுடைய உடம்பில் என்ன நோய் தொற்றிக்கொண்டிருக்கிறது என்பதையும் கண்டறிந்து முறையாக சிகிச்சை அளிப்பதற்கு நம்முடைய அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜி.கே. மணி அவர்கள் குறிப்பிட்டதைப்போல, ஒவ்வொரு பள்ளிக்கும் நம்முடைய மருத்துவர்களும், மக்கள் நல்வாழ்வுத் துறை ஊழியர்களும் சென்று, மாணவர்கள் ஒவ்வொருவருக்கும் தனிப் பதிவேடு போட்டு, ஒவ்வொரு மாணவரின் உடலையும் பரிசோதித்து, அந்த மாணவருக்கு என்ன நோய் இருக்கிறது என்று கண்டறிந்து அவற்றையெல்லாம் பதிவு செய்கிறார்கள், சிகிச்சையையும் அளிக்கிறார்கள். சில பெற்றோர்கள் அதிலே குறிப்பிடப்பட்டுள்ள நோய் என்ன என்பதைப் பார்த்து நாங்கள் தனியாரிடத்திலே மருத்துவம் செய்து கொள்கிறோம் என்றும் சொல்கிறார்கள். ஏழையெளியவர்கள் அரசாங்க மருத்துவமனைகளிலே சிகிச்சை பெற்று வருகிறார்கள்.

முற்பகல் 9-40

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஆர். சொக்கர்.

**திரு. ஆர். சொக்கர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொது மருத்துவமனைகளையெல்லாம் தொழில் நிறுவனங்கள் தத்து எடுத்துக்கொள்ள வேண்டுமென்று முதலமைச்சர் அவர்கள் வேண்டுகோள் விடுத்ததற்கிணங்க பல தொழில் நிறுவனங்கள் இப்போது மருத்துவமனைகளை தத்து எடுத்துக்கொண்டிருக்கின்றன. அதன்மூலம் மருத்துவமனைகளுக்கு நிரம்ப வசதிகள் இப்போது கிடைத்து வருகின்றன. அதே அடிப்படையில் தொழில் நிறுவனங்களையும், Rotary சங்கம், அரிமா சங்கம் போன்ற நிறுவனங்களையும் பள்ளிகளைத் தத்து எடுக்கச் செய்து அவர்கள் மூலமாக கல்வித் தரத்தை உயர்த்திடவும் மாணவர்களுக்கு சுகாதார வசதி முறையாக

கிடைத்திடவும் அவர்களுக்கு ஒரு வேண்டுகோளை மாண்புமிகு முதலமைச்சர் வெளியிட முன்வருவார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திரு. சொக்கர் அவர்கள் இங்கே குறிப்பிட்டதைப் போல, ஏற்கெனவே சில தொழில் நிறுவனங்களைச் சேர்ந்தவர்கள் இந்த மருத்துவ நிலையங்களைத் தத்து எடுத்து நடத்துவதைப்போல கல்விச்சாலைகள் சிலவற்றை எடுத்து நடத்துவதற்கு முன்வரத் தயாராக இருப்பதாக எடுத்துக் கூறியிருக்கின்றார்கள். அதைப்பற்றி நானும், கல்வி அமைச்சரும் சிந்தித்து, ஏற்ற முடிவு விரைவில் எடுக்கப்படும். அதற்கான அழைப்பும் திரு. சொக்கர் அவர்கள் சொன்னதைப்போல விடுக்கப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** டாக்டர் ஆ ஞானசேகரன்.

**டாக்டர் ஆ. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தொண்டை அடைப்பான், இளம்பிள்ளை வாதம், தட்டம்மை, டைபாய்டு காய்ச்சல், மூளைக் காய்ச்சல், மஞ்சள் காமாலை போன்ற நோய்களுக்கெல்லாம் தடுப்பூசியும், சொட்டு மருந்துகளும் வழங்கப்பட்டு வருகின்றன. இந்தத் தருணத்தில் வைரஸ்-பி என்கிற கிருமியால் தாக்கப்பட்டு வருகின்ற மஞ்சள் காமாலை நோய் உயிரைக் கொல்லக்கூடிய நோயாக இருக்கின்றது. அதற்கு, பொது மருத்துவமனைகளில் நோயாளிகளுக்கு தடுப்பூசி எளிதாக வழங்குவது இல்லை என்று கூறப்படுகிறது. எனவே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் வைரஸ்-பி என்ற கிருமியால் வருகின்ற மஞ்சள் காமாலை நோய்க்கு தடுப்பூசி சீராக வழங்குவதற்கு ஆவன செய்வார்களா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, T.B. நோயால் பாதிக்கப்பட்டவர்களுக்கு B.C.G. என்ற தடுப்பூசியும், இளம்பிள்ளை வாதத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்கு போலியோ சொட்டு மருந்தும், தொண்டை அடைப்பான் நோயால் பாதிக்கப்பட்டவர்களுக்கு Diphtheria ஊசியும், வில்வாத ஜன்னி நோயால் பாதிக்கப்பட்டவர்களுக்கு Tetenus ஊசியும், தட்டம்மை நோயால் பாதிக்கப்பட்டவர்களுக்கு Measles ஊசியும் போட்டு இப்போது இலவசமாக எல்லா மருத்துவமனைகளிலும் வழங்கப்பட்டு வருகிறது.



மாண்புமிகு உறுப்பினர் சொல்வதைப்போல, ஹெபடிடிஸ்-பி மற்றும் இன்ப்ளுயன்ஸா வேக்சின் ஆகிய இரண்டு மருந்துகள் மட்டும் அரசாங்க மருந்துவமனைகளிலே இலவசமாக கொடுப்பது இல்லை. தனியார் மருத்துவமனைகள் மூலமாக நோயாளிகள் அதைப் பெற்று வருகின்றார்கள். அரசாங்கத்தின் மூலம் இந்த மருந்துகளை வாங்கி பாதிக்கப்பட்ட நோயாளிகளுக்கு வழங்க வேண்டுமென்று சொன்னால் ஏராளமாக செலவாகும். அதைப்பற்றி அரசு பரிசீலிக்கும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சி. வேலாயுதன்.

**திரு. சி. வேலாயுதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கல்லூரிகளில் N.S.S. முகாம் போன்ற முகாம்கள் நடத்தி, மருத்துவத்திற்கு பலவிதமான சேவைகள் செய்கின்றார்கள். நான் இந்த மாதம் 15 ஆம் தேதி குமாரகோவிலிலுள்ள நூர்-உல் இஸ்லாம் பொறியியல் கல்லூரியினுடைய N.S.S. முகாமிற்குச் சென்றிருந்தேன். அங்கு பாராட்டத்தக்க விஷயங்கள் பல இருந்தன. அது பொதுவாக பயன்படும் என்று கருதுகிறேன். அதாவது ஒரு நாள் மட்டும் மருத்துவ சோதனை என்று விட்டுவிடாமல், அவர்களுடைய Photo எடுக்கச் செய்து, அந்த Photo-வைகூட அட்டையில் ஒட்டி, அவருடைய அப்பா, அம்மாவுக்கு என்ன நோய் இருந்தது, அதன்மூலம் இவருக்கு என்ன நோய் பாதித்திருக்கிறது, இவருடைய உடம்பில் என்னென்ன நோய் இருக்கிறது, இந்த நோய்களில் எந்த நோய்கள் எல்லாம் தொற்று நோய், அதாவது வருங்கால சந்ததிகளுக்குக்கூட பரவக்கூடிய நோய், அவற்றிற்கு என்னென்ன முறையில் சிகிச்சை செய்ய வேண்டும் என்ற வகையிலே அந்த அட்டையிலே போடப்பட்டு பிளாஸ்டிக் கவரிங் செய்து சிறந்த முறையில் மருத்துவ உதவி செய்தார்கள். அதற்கு அரசாங்கம் எந்த அளவு நிதி கொடுக்கிறது என்பது தெரியவில்லை. எனவே பொதுவாக சிறந்த முறையில் அதாவது வருங்காலத்தை—முன்காலத்தையும், வருங்காலத்தையும்—தொலைநோக்கோடு கருத்தில்கொண்டு இந்த மருத்துவ முகாம் நடத்தக்கூடிய கல்லூரிகளுக்கு அதனுடைய முக்கியத்துவத்தை புரிந்துகொண்டு விசேஷமாக ஏதாவது நிதி உதவி அரசாங்கம் செய்ய முடியுமா? அரசு எந்த அளவுக்கு இதுபோன்ற உதவிகள் செய்து தருகின்றது என்பதை அறிய விரும்புகிறேன்.

[1999 மார்ச் 25

முற்பகல் 9-45

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கல்லூரிகளில், அதுபோல உயர்நிலைப் பள்ளிகளிலே படிக்கின்ற மாணவர்கள் N.S.S. திட்டத்தின்கீழ் சமூகப் பணியாற்றுவதற்கு அந்த அந்தக் கல்லூரி முதல்வர் அல்லது தலைமையாசிரியர், அவர்களோடு சேர்ந்து பணியாற்றுகிற அந்த N.S.S. பயிற்சியாளர் அவர்கள் மூலமாக ஆங்காங்கே திட்டம் வகுக்கப்பட்டு, சமூகத்திற்கும் அதுபோல மாணவர்களுக்கும் பயன்படக்கூடிய பல பணிகள் நிறைவேற்றப்படுகின்றன. அது இடத்தைப் பொறுத்தும், சூழ்நிலையைப் பொறுத்தும், தேவையைப் பொறுத்தும் தீர்மானிக்கப்படுகிறது. அந்த N.S.S. இயக்கத்திற்கு மாணவர்களுக்கு ஆகின்ற செலவுக்காக மத்திய அரசும் மாநில அரசும் விகிதாச்சார அளவில் பங்கீட்டுத் தொகையைத் தொடர்ந்து வழங்கிக்கொண்டிருக்கிறது. அந்தத் தொகையைக்கொண்டு அவர்கள் அந்தப் பணியை ஆற்றுகிறார்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்.

**டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய அரசாங்கத் துறையிலே, தொற்றுநோயால் பாதிக்கப்படக்கூடிய வியாதிகளுக்கு தனியாக மருத்துவமனை இருக்கிறது. குறிப்பாக I.D.H. Communicable Disease—என்று தண்டையார்பேட்டையில் தொற்று நோய்க்காக தனியாக மருத்துவமனை இருக்கிறது. ஆனால், இன்றைக்கு உலகத்திலே மிகவும் அஞ்சப்படுகின்ற நோயாக உயிர்க்கொல்லி நோயாக இருக்கின்ற எய்ட்ஸ்-க்கு தனியாக எதுவும் மருத்துவமனை இல்லை. பாதிக்கக்கூடிய நோயாளிகள் எல்லாம் தாம்பரம் டி.பி. சானடோரியம் மருத்துவமனையில் சேர்க்கப்படுகிறார்கள். இன்றைக்கு எய்ட்ஸ் நோயைத் தடுப்பதற்காக, அல்லது விழிப்புணர்வுக்காக 20 கோடி ரூபாய் செலவில் பிரச்சாரம் செய்யப்படுகிறது, பல்வேறு துறைகளில், பல்வேறு முறைகளில் பிரச்சாரம் செய்யப்படுகிறது. அந்த நிலையில், மிகப் பெரிய அளவில் அஞ்சப்படுகிற நோயாக இருக்கிற இந்த எய்ட்ஸ் நோய்க்கு தனியாக மருத்துவமனை ஏற்படுத்துகிற திட்டம் அரசின் செயற்குறிப்பில் இருக்கிறதா? அதுபோல அதற்குண்டான ஆராய்ச்சிகள், குறிப்பாக சித்த மருத்துவம், ஆயுர்வேத மருத்துவம் போன்ற பல்வேறு துறைகளின் மூலம் நடைபெறுகின்ற ஆராய்ச்சிகளைச் செம்மைப்படுத்துவதற்காகவும் அங்கே ஒரு நிறுவனம் ஏற்படுத்தப்படுமா என்று உங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.



1999 மார்ச் 25]

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொதுவாக எய்ட்ஸ் தவிர மற்ற நோய்களுக்கு எல்லாம் மருத்துவமனைகளில் மருந்து கொடுத்தாலும், எய்ட்ஸைப் பொறுத்தவரையில் தனியாக மருத்துவமனை எங்கேயும் தொடங்கப்படவில்லை, இப்போது தொடங்குவதற்கான வாய்ப்பும் இல்லை. இருந்தாலும்கூட, தாம்பரம் டி.பி. சானடோரியத்தில் ஒரு பகுதி அதற்கென ஒதுக்கப்பட்டு வருகின்ற நோயாளிகள் யாராக இருந்தாலும் அத்தனை பேருக்கும் அங்கே சிகிச்சை அளிக்கப்பட்டு வருகின்றது. இன்றுள்ள சூழ்நிலையில் அலோபதி முறையிலேகூட மருந்துகள் இல்லை என்று உலக அளவில் தெரிவித்துக்கொண்டிருக்கின்ற நேரத்தில், சித்த மருத்துவத்திலே அதற்கான மருந்துகள் இருக்கின்றன என்று பல்வேறு மருத்துவர்கள் அரசாங்கத்திடம் தெரிவித்து அவர்கள் கொடுக்கின்ற மருந்தை தனிப்பட்ட 5 நோயாளிகளுக்கு 5 படுக்கைகள் என தனிப்பட்ட முறையில் ஒதுக்கி ஒவ்வொருவருக்கும் அந்த மருந்துகளைக் கொடுத்து, அதிலே இதுவரையில் ஏறக்குறைய 250 பேர் உடல்நலம் தேர்ச்சி பெற்று மறுபடியும் அவர்கள் பழைய பணிக்கே திரும்பிச் சென்றிருக்கிறார்கள். டிரைவர்களாக இருந்தால் டிரைவர்களாகவும், கண்டக்டர்களாக இருந்தால் கண்டக்டர்களாகவும்—இவர்கள் எல்லாம் —அந்தப் பணிக்கே திரும்பி இருக்கிறார்கள். இன்றுள்ள சூழ்நிலையில் ஏறக்குறைய 140 நோயாளிகள் தாம்பரம் மருத்துவமனையில் சிகிச்சைப் பெற்று வருகிறார்கள். அங்கே எந்தப் புகாரும் இல்லை. அவர்களுக்கு இன்னும் கொஞ்சம் கூடுதலாக உணவு வழங்கினால் இந்த எய்ட்ஸ் நோய் வேகமாகக் குறையும் என்று சொல்கிறார்கள். அது குறித்து அரசு பரிசீலித்துக்கொண்டிருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. லா. சந்தானம்

**திரு. லா. சந்தானம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, டைபாய்டு நோய்க்கு தடுப்பு ஊசியினால் பலன் ஏற்படவில்லை என்கிற காரணத்தால் 1989 ஆம் ஆண்டிலிருந்து நிறுத்தப்பட்டிருக்கிறது என்பதை அமைச்சர் அவர்கள் தன்னுடைய பதிலில் தெரிவித்தார்கள். டைபாய்டு நோய் என்பது மிக அதிகமாகப் பரவுகின்ற ஒரு நோயாக இருக்கின்ற காரணத்தால் அதைத் தடுப்பதற்கு, மருந்து கண்டுபிடிப்பதற்கு ஏதாவது முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளனவா என்பதைத் தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

[1999 மார்ச் 25

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, World Health Organisation இந்த மருந்தால் எந்தப் பயனும் இல்லை என்ற காரணத்தால்தான் இந்தத் திட்டம் கைவிடப்பட்டது. இருந்தாலும் இப்போது மாத்திரைகள் மூலமாக அந்த நோயாலே பாதிக்கப்பட்டவர்களுக்கு நாம் சிகிச்சை அளித்துக் கொண்டிருக்கிறோம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 184, திரு. ப. ரங்கநாதன், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்.

**184—**

**அரசு ஊழியர்களின் குழந்தைகளுக்கு சுயநிதிக் கல்லூரி**

***19063—திரு. ப. ரங்கநாதன்:**

*மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*தமிழக அரசு ஊழியர்களின் குழந்தைகளுக்கென்று மருத்துவம், பல் மருத்துவம், மருந்தியல், செவிலியர் போன்ற பட்டப் படிப்புகளுடன் திருச்சிராப்பள்ளியில் தொடங்கப்படவுள்ள சுயநிதி கல்லூரியின் தற்போதைய நிலை என்ன?*

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

திருச்சிராப்பள்ளியில் தமிழக அரசு அலுவலர்களின் குழந்தைகளுக்கென்று மருத்துவம், பல் மருத்துவம், மருந்தியல், செவிலியர் போன்ற பட்டப்படிப்பு கல்லூரிகள் தொடங்குவது பற்றிய செயற்குறிப்பு கைவிடப்பட்டு, அதற்குப் பதிலாக கி.ஆ.பெ. விஸ்வநாதம் பெயரில் அரசு மருத்துவக் கல்லூரி 1997-98 முதல் தொடங்கப்பட்டுள்ளது.

**திரு. ப. ரங்கநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதிலுரையில் அரசு ஊழியர்களுக்கு என்று தொடங்கப்படவில்லை, அரசு சார்பாகத் தொடங்கப்பட்டுள்ளது என்று இங்கே கூறியிருக்கிறார்கள். ஆனால் இந்தியாவிலுள்ள ஒரு சில மாநிலங்களில் அரசு ஊழியர்களுடைய குழந்தைகளுக்கான மருத்துவத் துறையில், அதைச் சார்ந்த பல் மருத்துவம், மருந்தியல், செவிலியர்



1999 மார்ச் 25]

போன்ற Para Medical அனைத்துத் துறைகளிலும், ஒரு குறிப்பிட்ட விழுக்காடு ஒதுக்கியுள்ளதாக தகவல் வந்துள்ளது. அது உண்மையா என்று அறிந்து, நமது மாநிலத்திலேயும் முதலமைச்சர் அவர்கள் இதுபோன்ற ஒரு சலுகையை அரசு ஊழியர்களுடைய பிள்ளைகளுக்கு வழங்குவாரா என்று அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 9-50

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசாங்க ஊழியர்களுடைய குழந்தைகளுக்கு இப்படிப்பட்ட மருத்துவக் கல்லூரிகளிலே இடம் கொடுக்க வேண்டுமென்ற அடிப்படையிலேதான் திருச்சியிலே ஒரு கல்லூரி ஆரம்பிக்க வேண்டுமென்று முடிவு எடுத்து ஏறக்குறைய 10 கோடி ரூபாய் Tamil Nadu Medical Service Corporation மூலம் முதலீடு செய்து அரசாங்க ஊழியர்கள் ஒவ்வொருவரும் தங்களுடைய வருமானத்திலிருந்து 5 ஆயிரம் ரூபாயும் அதற்குச் செலுத்தி, ஒரு கல்லூரி தொடங்குவது என்று முடிவு செய்தோம். ஆனால், நாங்கள் ஆட்சிக்கு வந்தவுடனேயே இதுகுறித்து மத்திய அரசாங்கத்தோடு தொடர்பு கொண்டபோது, ஏற்கெனவே தமிழகத்திலே போக்குவரத்துத் தொழிலாளர்களுக்கு என்று ஆரம்பிக்கப்பட்ட ஒரு மருத்துவக் கல்லூரியில் உச்சநீதிமன்றத்திலே உன்னிக்கிருஷ்ணன் Judgement மூலமாக அது சரிவர இயங்க முடியாமல் இருக்கின்ற சூழ்நிலையில் மறுபடியும் அதே நிலை அரசாங்க ஊழியர்களுடைய பிள்ளைகளுக்கும் வருமானால் அவர்களுடைய கல்வியும் பாதிக்கப்படக்கூடும் என்ற காரணத்தினாலே அந்தத் திட்டத்தைக் கைவிட்டுவிட்டு, யார் யார் பணத்தைச் செலுத்தினார்களோ அவர்களுக்கெல்லாம் அந்தப் பணத்தை refund செய்துவிட்டு, இப்போது அரசாங்கமே தனியாக ஒரு மருத்துவக் கல்லூரியைத் தொடங்கி இருக்கிறது. மற்ற மாநிலங்களிலே அரசு ஊழியர்களுடைய பிள்ளைகளுக்கு இடம் கொடுக்கிறார்களா என்பதைப் பற்றிய விவரங்கள் என்னிடத்திலே இல்லை. ஆனால் எனக்குத் தெரிந்த வரையிலே அரசு ஊழியர்களாக இருந்தாலும் அல்லது ஆலை அதிபர்களுடைய குழந்தைகளாக இருந்தாலும், ஏழைகள் வீட்டுப் பிள்ளைகளாக இருந்தாலும், தகுதி அடிப்படையிலேதான் இப்போது அகில இந்திய அளவில் இடங்கள் ஒதுக்கப்பட்டு வருகின்றன.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ச. அழகிரி.

[1999 மார்ச் 25

**திரு. ச. அழகிரி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மருத்துவப் படிப்பு படித்து வெளிவரும் மாணவர்களுடைய எண்ணிக்கை தமிழகத்தைவிட கர்நாடகத்திலே கூடுதலாக இருப்பதை அரசு அறியுமா? தமிழகத்திலேயிருக்கின்ற கிராமப்புறங்களுக்கு இன்னும் போதுமான மருத்துவர்கள் செல்ல முடியாத ஒரு சூழ்நிலை இருக்கிறது. போதுமான மருத்துவர்கள் எண்ணிக்கை இல்லை. எனவே, இதனை மனதிலே வைத்து, மேலும் சுயநிதி மருத்துவ கல்லூரிகள் கொண்டு வருவதற்கு அரசு முன்வருமா? அதற்காக ஏற்பட்டிருக்கின்ற தடை நீக்கப்படுமா? அதேபோல, சட்டக் கல்லூரிகளையும் தனியார் கொண்டு வருவதற்கு அரசு அனுமதிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்திலேயிருக்கக்கூடிய மருத்துவக் கல்லூரிகளைவிட கர்நாடகத்திலே அதிகமான கல்லூரிகள் இருக்கின்றன என்பது உண்மை. தமிழகத்திலே இப்போது மருத்துவர்கள் இல்லையென்று சொல்லக்கூடிய வாய்ப்பில்லை. ஏனென்றால், ஏற்கெனவே படித்தவர்களிலே ஏறக்குறைய 4 ஆயிரம், 5 ஆயிரம் பேர் வேலையில்லாமல் இருந்துகொண்டிருக்கிறார்கள். தனியார் கல்லூரிகளுக்குத் தடையிருப்பதை நீக்கிவிட்டு, அனுமதி அளிக்க முடியுமா என்று மாண்புமிகு உறுப்பினர் கேட்டார். இந்த அரசாங்கத்தைப் பொறுத்தவரையிலே தனியார் மருத்துவக் கல்லூரிகளையும், தனியார் பல் மருத்துவக் கல்லூரிகளையும் அனுமதிப்பதில்லை என்று ஏற்கெனவே முடிவு செய்திருக்கின்றோம். ஏற்கெனவே டாக்டர்களுடைய Association வேலைநிறுத்தம் செய்தபோது இந்த ஒப்பந்தத்திலே கையெழுத்து போட வேண்டுமென்று அவர்கள் இதை ஒரு condition-ஆக வைத்தார்கள். அதை அரசாங்கம் ஏற்றுக்கொண்டு இருக்கிறது. இதற்கிடையிலே காஞ்சி சங்கராச்சாரியார் அவர்கள் ஒரு மருத்துவக் கல்லூரி தொடங்க வேண்டுமென்று உயர்நீதிமன்றத்திலே வழக்கு தொடுத்து உயர்நீதிமன்றத்திலே அதற்குரிய Inspection Team அனுப்ப வேண்டுமென்று சொன்னதை அடிப்படையாக வைத்தே இன்று தமிழ்நாட்டிலே சென்னை மருத்துவக் கல்லூரி, ஸ்டான்லி மருத்துவக் கல்லூரி, கீழ்ப்பாக்கம் மருத்துவக் கல்லூரிகளிலே இருக்கக்கூடிய House Surgeons எல்லாம் ஒரு நாள் அடையாள வேலைநிறுத்தம் செய்துகொண்டிருக்கிறார்கள். எனவே, இதையெல்லாம் மனதிலேகொண்டு, எந்தக் காரணத்தைக்கொண்டும் தனியார் மருத்துவக் கல்லூரி அல்லது பல் மருத்துவக் கல்லூரியை



1999 மார்ச் 25]

தமிழகத்திலே அனுமதிப்பதில்லை என்று இந்த அரசாங்கம் முடிவு செய்திருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, House Surgeon-கள் மட்டும் இப்போது வேலைநிறுத்தம் செய்யவில்லை. இங்கேயிருக்கக்கூடிய எல்லா அரசு மருத்துவக் கல்லூரி மாணவர்களும் இந்தப் போராட்டத்திலே குதித்து அவர்கள் எல்லாம் badge-ஐப் போட்டுக்கொண்டு இன்று கோட்டை முற்றுகைப் போராட்டம் என்றுகூட அறிவித்திருக்கிறார்கள். அதனால் Medical College Students யாரும் இன்று கல்லூரிக்கே போகவில்லை. மற்ற மாநிலங்களிலே அதிகமாக கல்லூரிகள் இருக்கின்றன, இங்கேயிருக்கக்கூடிய தமிழகத்து மக்கள் 15 இலட்சம், 20 இலட்சம் ரூபாய் என்று கொண்டுபோய் கர்நாடகத்திலே கொடுத்து படித்துவிட்டு வருகிறார்கள். நம்முடைய மாணவர்களும், House Surgeon-களும் ஏன் அதை எதிர்க்கிறார்கள் என்ற ஆய்வை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் செய்திருக்கிறார்களா என்பதை அறிய விரும்புகிறேன.

முற்பகல் 9-55

அடுத்து, எங்கள் வேலூருக்கு மருத்துவக் கல்லூரி என மாண்புமிகு முதல்வர் அவர்கள் அறிவித்து இருப்பதற்கு என்னுடைய நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்**: ஒரு துணை வினாதான் அனுமதிக்க முடியும்; உட்காருங்கள்.

**திரு. சி. ஞானசேகரன்:** ஒரே ஒரு கேள்வி...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அதுதான் சொல்லியாகிவிட்டதே, உட்காருங்கள்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாணவர்களும் House Surgeon-களும் ஏன் அத்தகைய போராட்டங்களிலே ஈடுபடுகிறார்கள் என்ற காரணத்தை அரசு அறியுமா என்று கேட்டார்கள். அவர்களுடைய உள்ளத்தில் இருக்கக்கூடிய அச்சமே, ஏற்கெனவே, இப்போது 5 ஆயிரம்

[1999 மார்ச் 25

டாக்டர்களுக்கு வேலை இல்லை என்று சொல்லக்கூடிய ஒரு சூழ்நிலையில், மேலும் பல புதிய கல்லூரிகள் தமிழகத்திலே வந்து, அதன் மூலம் பல்லாயிரக்கணக்கான டாக்டர்கள் வேலை இல்லாத ஒரு சூழ்நிலை உருவாகுமானால்—எப்படி S.S.L.C. படித்துவிட்டு, B.A., படித்துவிட்டு, இன்னமும் வேலை கிடைக்காமல் 40 வயது ஆனால்கூட, தெருவிலே நின்று கொண்டு இருக்கிறார்களோ, அப்படிப்பட்ட ஒரு நிலைமை டாக்டர்களுக்கும் வந்துவிடக் கூடாது என்ற அச்சத்தின் காரணமாகத்தான் அவர்கள் இப்படிப்பட்ட போராட்டத்திலே ஈடுபட்டு இருக்கிறார்கள்.

மாண்புமிகு உறுப்பினர் வேலூர் மருத்துவக் கல்லூரி பற்றி இங்கே சொன்னார்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்களே நிதிநிலை அறிக்கையிலே தெளிவாகக் குறிப்பிட்டதற்குப் பிறகு எந்தவிதமான சந்தேகமும் வேண்டாம். அடுத்த ஆண்டு நிச்சயமாக இந்த அரசு வேலூரிலே ஒரு மருத்துவக் கல்லூரியைத் தொடங்கும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்**: வினா எண் 185, திரு. மு.பெ. சாமிநாதன், மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்.

**185—**

### கூட்டுக் குடிநீர்த் திட்டப் பணிகள்

***19190—திரு. மு.பெ. சாமிநாதன்:**

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காங்கேயம்-முத்தூர் கூட்டுக் குடிநீர்த் திட்டம் நிலை-2 பணிகள் தாமதமாக நடைபெறுவதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், பணியினை விரைவுபடுத்த அரசு ஆவன செய்யுமா?

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,



1999 மார்ச் 25]

(அ) மற்றும் (ஆ): காங்கேயம்-முத்தூர் கூட்டுக் குடிநீர்த் திட்டம் நிலை இரண்டிற்கு ரூ.24.37 கோடிக்கு அரசு ஆணை எண் 152, நாள் 9-5-1997 மூலம் ஒப்புதல் அளிக்கப்பட்டு உள்ளது.

முதல் நிலை எஞ்சிய பணிகளுடன் இரண்டாம் நிலைப் பணிகளும் நடப்பு நிதி ஆண்டில் செயலுக்கு எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளன. இரண்டாண்டுகளில் இத்திட்டப் பணிகள் முடிவுறும்.

**திரு. மு.பெ. சாமிநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முத்தூர்-காங்கேயம் கூட்டுக் குடிநீர்த் திட்டம் காவிரி ஆற்றிலிருந்து செயல்பட்டு வருகிறது. இதில் முதல் நிலையில் முத்தூர் பேரூராட்சி மற்றும் காங்கேயம் பேரூராட்சி ஆகியவற்றில் கடந்த 10 மாதங்களுக்கு முன்னால் குடிநீர் வழங்கப்பட்டாகிவிட்டது. அதற்காக நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கும், நம்முடைய மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களுக்கும் எனது தொகுதி மக்களின் சார்பாக நன்றியை உரித்தாக்குவதோடு, இந்தத் திட்டத்தின் இரண்டாவது நிலையாக, எனது தொகுதியில் வெள்ளக்கோயில், மூலனூர், கன்னிவாடி ஆகிய மூன்று பேரூராட்சிகளிலும் இப்போது பணிகள் முழு வீச்சில் நடைபெற்று வருகின்றன. அதேபோல, இந்தத் திட்டத்தின் மூன்றாவது நிலையில், என்னுடைய தொகுதியில் உள்ள கொளத்துப்பாளையம் பேரூராட்சியை இந்த ஆண்டு எடுத்து, அதற்குரிய பணிகளை அரசு செய்யுமா எனத் தங்கள் மூலம் அறிய விரும்புகின்றேன்.

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒவ்வொரு பெரிய திட்டங்களையும் இப்படி 1,2,3,4 என்று பிரிப்பதற்கான மூல காரணம், நிதி வசதி என்பது ஒருபுறமும், பணிகள் தொடக்கம், முடிவு—இவற்றில் கடைசி வரை காத்திருந்து, முடிவுற்ற நிலையில்கூட சிலருக்குத் தண்ணீர் கிடைக்காமல் இருப்பதை தவிர்ப்பதற்காகவும், 3, 4 கட்டங்களாக இந்தப் பணிகள் பிரிக்கப்பட்டு, தொடர்ந்து நடைபெற்றுக்கொண்டு வருகின்றன. முதல் நிலைப் பணிகளில் மற்றும் இரண்டாம் நிலைப் பணிகளில் இருக்கின்ற ஒருசில பணிகள் குறைவும் மூன்றாவது திட்டத்தில் ஏற்றுக்கொண்டு விரைவாக அந்தப் பணிகளை முடிப்பதற்கான நடவடிக்கை எடுத்துக்கொண்டு இருக்கிறோம். எப்படி இருந்தாலும், படிப்படியாக 3ஆம் கட்டம், 4ஆம் கட்டம் என்று இருந்தாலும்கூட, அவை எல்லாம் அடுத்த இரண்டு ஆண்டுகளில் முடிவுற்று, 3-வது ஆண்டிலே, 4-வது

திட்டமும் முடிகிற அளவுக்கு நிலைமைகளை சீர் தூக்கிப் பார்த்து நடவடிக்கை மேற்கொள்வோம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திருமதி ஆர். சரஸ்வதி.

**திருமதி ஆர். சரஸ்வதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மூன்றாம் நிலையாக மூலனூர் முதல் சின்னக்காம்பாளையம் கூட்டுக் குடிநீர்த் திட்டப் பணிகளை இந்த ஆண்டே ஆரம்பிக்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது கேட்டு முடிந்த துணைக் கேள்வியிலேயே நான் குறிப்பிட்டு இருக்கிறேன். இரண்டாம் கட்டப் பணி முடிந்து, அதில் மீதிபடுகிற பணிகளையும், மூன்றாம் கட்டப் பணிகளோடு இணைத்து விரைவாக முடிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்று நான் சொன்னேன். அநேகமாக இந்த இரண்டாம் கட்டப் பணிகள் வெள்ளக்கோயில். மூலனூர், கன்னிவாடி ஆகிய பேரூராட்சிகளுக்கும், அதேபோல, மூன்றாம் நிலையில் சின்னக்காம்பாளையம், கொளத்துப்பாளையம் ஊரகப் பேரூராட்சிகள், தாராபுரம் நகராட்சி மற்றும் 91 வழியோரக் கிராமங்கள் பயன்பெறும். அதற்கான மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டு இருக்கின்றன. அரசு ஒப்புதல் அளித்தவுடன் அந்தப் பணிகளைத் தொடங்குவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளலாம். அநேகமாக ஏப்ரல், மே மாதங்களில் இந்தப் பணிகளினுடைய ஆய்வுகள் முடிவுற்று அரசு அனுமதி பெறப்பட்டு, அதற்குப் பிறகு பரிசீலிக்கலாம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10-00

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 186, திரு. ஆர். சக்ரபாணி, மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர்.

**186—**

## அணையில் தூர் எடுத்தல்

***10590—திரு. ஆர். சக்ரபாணி:**

மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—





(அ) ஒட்டன்சத்திரம் தொகுதி, பரப்பலாறு அணையில் தூர் எடுக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது நிறைவேற்றப்படும்?

**மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப்பணித் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) ஒட்டன்சத்திரம் வட்டம், பரப்பலாறு அணையில் தூர் எடுக்கும் திட்டம் எதுவும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

**திரு. ஆர். சக்ரபாணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தப் பரப்பலாறு அணை 1974 ஆம் ஆண்டு இன்றைய தமிழக முதல்வர், முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அவர்களாலே கட்டப்பட்டு, திறக்கப்பட்டது. இந்த அணை ஒட்டன்சத்திரத்திலிருந்து பாச்சலூர் செல்கின்ற மணற்பகுதியில் 15 கிலோமீட்டர் தூரத்திலே அமைந்திருக்கிறது. இதனுடைய கொள்ளளவு 90 அடி. இருந்தபோதிலும் பல்லாண்டுகளாக மழை பெய்து, வெள்ளத்தில் மண் அடித்து வந்து, அந்த அணையில் 40 அடி வரையில் மண் தேங்கி இருக்கிறது. தற்போது அந்த அணையில் 50 அடிதான் தண்ணீர் இருக்கிறது. அந்த அணையிலிருந்து ஒட்டன்சத்திரம் பேரூராட்சி, ஒட்டன்சத்திரம் ஒன்றியம் முழுவதிற்கும் தண்ணீர் கொடுக்கிறார்கள். இப்போது முத்துசமுத்திரம், முத்துபாளசமுத்திரம், பெருமாள்குளம், சடையக்குளம், காவிரிமாவட்டிகுளம், சவ்வாரெட்டி பெரியகுளம், செங்குளம் போன்ற பகுதிகளுக்கும் தண்ணீர் விநியோகம் செய்யப்படுகிறது. அதைப்போல இப்போது கட்டப்பட்டு வருகிற நங்காஞ்சி அணைக்கும் இந்த அணையிலிருந்துதான் தண்ணீர் வருகிறது. பொதுப்பணித் துறை, வனத் துறை, வருவாய்த் துறை மூன்று துறைகளும் சேர்ந்துதான் இந்த அணையில் தூர் வார வேண்டும். ஆகவே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மறுபரிசீலனை செய்து இந்தத் திட்டத்தினை ஆய்வு செய்து இந்த அணையைத் தூர் எடுப்பார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** தலைவர் அவர்களே, பரப்பலாறு அணை, குளம் அல்ல தூர் வாருவதற்கு. பொதுவாக ஏரிகளைத் தூர் வாருகிறோம். பல முறை இந்த மாமன்றத்திலே தெரிவித்திருக்கிறேன். அணைகளிலே தூர் வாருவது என்பது இதுவரையிலே எந்த இடத்திலும் செய்யப்படாத ஒன்று. இந்தியாவின்

[1999 மார்ச் 25

தலைசிறந்த நீரியல் நிபுணரான திரு. மோகனகிருஷ்ணன் அவர்களை நான் கேட்டேன். பல ஆண்டுகளாக அணையிலிருந்து தூர் வார வேண்டுமென்கிறார்களே என்று கேட்டேன். பொதுவாக பல அணைகளிலே மணல் போக்கிகளை வைத்துத்தான் கட்டுவார்கள். தண்ணீர் வரவர மணலும் வெளியே வந்துவிடும். சில அணைகளில் அப்படியில்லாமல் இருக்கலாம். ஆனாலும் மாண்புமிகு உறுப்பினர்கள் திரும்பத் திரும்ப கேட்கிறார்கள் என்பதற்காக, இந்தியாவிலே எங்கேயாவது இப்படித் தூர் வாரி இருக்கிறார்களா என்று பார்த்தால் இதுவரையிலே எந்த மாநிலத்திலும் அணைகளில் தூர் வாரப்பட்டதில்லை. இதற்கு வேண்டிய தொழில்நுட்ப ஆலோசனை கிடையாது. எனவே இதுகுறித்து என்ன செய்யலாம் என்று நம்முடைய பொதுப்பணித் துறை தீர்மானித்து, ஓர் ஆலோசகரை இஸ்ரேல் நாட்டிலிருந்து நாங்கள் நியமித்திருக்கிறோம். அவர்களிடத்திலே இதற்கான ஒரு செயற்குறிப்பைத் தர வேண்டுமென்று கேட்டிருக்கிறேன். அது வந்ததற்குப் பிறகுதான் இப்படிப்பட்ட அணைகளை எப்படி தூர் வாருவது என்பதற்கான முறைகளை, அதற்கு வேண்டிய நடைமுறைகளைச் சாத்தியப்படுத்த முடியும். காரணம் அணைகளிலே தூர் வாருவது என்பது இலேசான காரியமல்ல. சாதாரண ஏரிகளிலேயிருந்து தூர் வாரி மணலைக் கொட்டுவதிலேயே மிகப் பெரிய பிரச்சினை இருக்கிறது. ஆகையால் அணைகளிலேயிருந்து தூர் வாருவதற்கு வேண்டிய நடைமுறைகள் தெரிந்ததற்குப் பிறகுதான், இதுகுறித்து அரசு பரிசீலனை செய்யும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 187, திரு. ந. கருப்பண்ண உடையார், மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர்.

**187—**

## பாசன வாய்க்கால்களை ஆழப்படுத்துதல்

***17226—திரு. ந. கருப்பண்ண உடையார்:**

மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், பாபநாசம் தொகுதியிலுள்ள அனைத்து பாசன வாய்க்கால்களையும் புல்டோசர் வைத்து ஆழப்படுத்தவும், செப்பனிடவும் அரசு ஆவன செய்யுமா?



1999 மார்ச் 25]

**மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப்பணித் துறை அமைச்சர்:** தலைவர் அவர்களே, திருத்திய விடையைப் படிக்க தங்கள் அனுமதியைக் கோருகிறேன்.

தஞ்சை மாவட்டம், பாபநாசம் தொகுதியில் மொத்தம் உள்ள வாய்க்கால்களின் எண்ணிக்கை 69. இதன் மொத்த நீளம் 132 கிலோமீட்டர். இதில் கடந்த இரண்டாண்டுகளில் 58 வாய்க்கால்களில், சுமார் 87 கிலோமீட்டர் தூரத்திற்குத் தூர் வாரியிருக்கிறார்கள். மீதமுள்ளவை அடுத்தடுத்த ஆண்டுகளில் தூர் வாரப்படும்.

**திரு. மு. அப்பாவு:** பாசனம் பற்றிய...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** தஞ்சை மாவட்டத்தைப் பற்றித் கேட்கிறீர்கள் என்றால் அனுமதிப்பேன். (குறுக்கீடு) இல்லை, உட்காருங்கள்.

வினா எண் 188, திரு. ஐ. கணேசன், மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர்.

**188—**

## ஓட்டுநர் பயிற்சிப் பள்ளி

***22049—திரு. ஐ. கணேசன்:**

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஓட்டுநர் பயிற்சிப் பள்ளியை ஓர் ஊராட்சி ஒன்றியத்திற்கு ஒன்று என ஏற்படுத்திட அரசு முன்வருமா?

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

ஓட்டுநர் பயிற்சிப் பள்ளியை, ஓர் ஊராட்சி ஒன்றியத்திற்கு ஒன்று என அமைக்கும் உத்தேசம் இல்லை.

**திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வளர்ந்துவரும் உலகத்திற்கேற்ப, தினசரி பல்லாயிரக்கணக்கான புதிய வாகனங்கள் வந்து கொண்டிருக்கின்றன. குறிப்பாக, தமிழ்நாட்டிலே பல புதிய கார் தொழிற்சாலைகளிலிருந்து புதிய கார்கள் உற்பத்தி

[1999 மார்ச் 25

செய்யப்பட்டு, தினசரி வெளியே வந்து கொண்டிருக்கின்றன. சிறந்த ஓட்டுநர்கள் இல்லாததால் பல விபத்துக்கள் ஏற்பட்டு, உயிருக்கும் உடைமைக்கும் உத்தரவாதம் இல்லாத ஒரு நிலை இந்த நாட்டிலே ஏற்பட்டிருக்கிறது. ஆகையால், ஒன்றியத்திற்கு ஒன்று என்று இல்லாவிட்டாலும், ஒரு வட்டத்திற்கு, ஒரு தாலுகாவிற்கு ஒன்றாவது ஏற்படுத்திக்கொடுக்க அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-05

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்பொழுது தமிழ்நாட்டில் சாலைப் போக்குவரத்து நிறுவனம், கும்மிடிப்பூண்டியில் கனரக வாகன ஓட்டுநர் பயிற்சி மையம் ஒன்றை நடத்தி வருகிறது. மேலும் 13 போக்குவரத்துக் கழகங்களில் நடத்துநருக்கும், ஓட்டுநருக்குமான பயிற்சிப் பள்ளிகள் இயங்கி வருகின்றன. அதுமட்டுமின்றி, இந்த அரசு பொறுப்பு ஏற்றதற்குப் பிறகு, திருச்சி, குரோம்பேட்டை ஆகிய இரண்டு இடங்களிலேயும் கனரக வாகனம் மற்றும் மற்ற வாகனங்களை ஓட்டுவதற்கான பயிற்சியை அளிக்க வேண்டுமென்று இரண்டு பள்ளிகள் உருவாக்கப் பட்டிருக்கின்றன. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கோரியிருப்பதைப் போல, வட்டத்திற்கு ஒன்று என்று சொன்னால், ஒரு பயிற்சிப் பள்ளியை நிறுவுவதற்கு கிட்டத்தட்ட 15 ஏக்கர் நிலமும், இரண்டு கோடி ரூபாய் செலவும் ஆகும். ஆகவே, வட்டத்திற்கு ஒன்று என்ற நிலைமையில் உருவாக்க முடியாது. மாவட்டத்திற்கு ஒன்று என்றே இல்லாதிருக்கிறபோது, வட்டத்திற்கு ஒன்று என்பது இயலாத ஒன்றாகும். வரும் காலங்களில் நிதிநிலையை அனுசரித்து மாவட்டத்திற்கு ஒன்று என்றாவது நிறுவுவதற்கு முயற்சிகளை அரசு மேற்கொள்ளலாம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 189, திருமதி ஏ.ஆர். வேடம்மாள், மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்.

**189—**

**இரயில்வே மேம்பாலம் அமைத்தல்**

***17538—திருமதி ஏ.ஆர். வேடம்மாள்:**

மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



1999 மார்ச் 25]

(அ) தருமபுரி மாவட்டம், மொரப்பூரில் இரயில்வே மேம்பாலம் அமைக்கும் திட்டம் அரசின் ஆய்வில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

**மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன், நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) 1998-99 ஆம் ஆண்டு இரயில்வே பணிகள் திட்டத்தில் இப்பணியைச் சேர்க்கப் பரிந்துரை செய்யப்பட்டுள்ளது. இரயில்வே துறை இப்பணியை எடுத்துக்கொள்ள முன்வரும்போது அரசும் தொடர் நடவடிக்கை மேற்கொள்ளும்.

**திருமதி ஏ.ஆர். வேடம்மாள்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மொரப்பூர் வழித்தடத்தில் தினமும் ஆயிரக்கணக்கான மக்கள் தருமபுரி, ஓசூர், கிருஷ்ணகிரி மற்றும் பெங்களூர் ஆகிய நகரங்களுக்கு அலுவலகம், மருத்துவம், வியாபாரம் போன்ற எல்லா வசதிகளுக்காகவும் செல்கிறார்கள். இரயில்வே கேட் அடிக்கடி மூடப்படுவதாலும், அதுவும் மணிக்கணக்கில் மூடப்படுவதாலும், மிகவும் பாதிப்பு ஏற்படுகிறது. சில நேரங்களில் உயிர் இழப்புகள் கூட ஏற்படுகின்றன. எனவே, இன்றியமையாத இந்த வழித்தடத்தில் இரயில்வே மேம்பாலம் கட்ட, ஐக்கிய முன்னணி ஆட்சியில், கழகத்தின் சார்பில் இடம் பெற்றிருந்த மாண்புமிகு தரைவழிப் போக்குவரத்துத் துறை அமைச்சர் வெங்கட்ராமன் அவர்களும், மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்களும், எங்களுடைய மாண்புமிகு செய்தி மற்றும் விளம்பரத் துறை அமைச்சர் அவர்களும் பெரும் முயற்சி எடுத்து, ஆய்வெல்லாம் நடத்தி, திட்ட மதிப்பீடெல்லாம் தயார் செய்யப்பட்டது. ஆட்சி மாற்றத்திற்குப் பின்னால், இந்தத் திட்டம் கிடப்பில் போடப்பட்டுவிட்டது. எனவே, நமது நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் அவர்கள், மாண்புமிகு முதல்வர் அவர்களிடம் எடுத்துச் சொல்லி, இந்தத் திட்டத்தை முன்னுரிமை அடிப்படையில், மத்திய அரசுக்கு எழுதி மீண்டும் இந்த மேம்பாலம் அமைக்கும் திட்டத்தை ஏற்படுத்தித் தருவார்களா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மொரப்பூர் இரயில்வே மேம்பாலம் அமைக்கும் பணியை, 1998-99 ஆம் ஆண்டு - Railway Programmes -

பணித் திட்டத்தில் எடுத்துக்கொள்ள தமிழக அரசின் நெடுஞ்சாலைத் துறை, இரயில்வே துறைக்குப் பரிந்துரை செய்துள்ளது. இத்திட்டத்தின் உத்தேச மதிப்பீடு ரூ.7.80 கோடி ஆகும். இரயில்வே துறை இவ்வேலையை நடப்பாண்டில் எடுத்துக்கொள்ள முன்வரும்பொழுது, தமிழக அரசும், நெடுஞ்சாலைத் துறையும் இப்பணியை மேற்கொள்ள முடியும் காரணம், இரயில்வே துறை 50 சதவிகிதமும், தமிழக அரசு நெடுஞ்சாலைத் துறை 50 சதவிகிதமும் பங்கீடு செய்துதான் இந்த இரயில்வே மேம்பாலங்கள் அமைக்கின்ற பணிகள் பெரும்பாலும் நிறைவேறுகின்றன. எனவே, இரயில்வே துறை முதலில் முன் வந்தால் தமிழக அரசுக்கு எவ்விதமான ஆட்சேபணையும் இல்லை. உடனடியாக இந்தப் பணி மேற்கொள்ளப்படும். ஏற்கெனவே இரயில்வே துறைக்கு, மொரப்பூர் இரயில்வே மேம்பாலம் கட்டுவதற்கான பரிந்துரை செய்யப்பட்டிருக்கிறது என்பதை மீண்டும் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 190. திரு. வ. வேலுசாமி, மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்.

**190—**

**நடைபாதை மேம்பாலம் அமைத்தல்**

***18235—திரு. வ. வேலுசாமி:**

*மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா:*

*(அ) மதுரை பெரியார் பேருந்து நிலையம் கட்டபொம்மன் சிலை அருகிலும், மேலவெளி வீதியிலும், டி.பி.கே. சாலை வணிக வளாகம் அருகிலும், போக்குவரத்து நெரிசலைத் தவிர்க்க நடைபாதை மேம்பாலங்கள் அமைக்கும் திட்டம் அரசின் ஆய்வில் உள்ளதா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன், நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருத்திய விடையை இங்கே தெரிவிக்கவிரும்புகிறேன்.

(அ) மற்றும் (ஆ): மதுரை பெரியார் பேருந்து நிலையம் கட்டபொம்மன் சிலை அருகிலும், மேலவெளி வீதியிலும், டி.பி.கே. சாலை வணிக வளாகம் அருகிலும் போக்குவரத்து நெரிசலைத்





தவிர்க்க நடைபாதை மேம்பாலங்கள் அமைக்கும் திட்டம் அரசின் ஆய்வில் உள்ளதா என்று மாண்புமிகு உறுப்பினர் கேட்டிருக்கிறார். ஏற்கெனவே அது ஆய்வில் இல்லை. வரும் ஜனவரி மாதம், தமிழகத்தில் மதுரையில் I.R.C-Indian Road Congress மாநாடு நடைபெறுவதற்கு ஒப்புதல், நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள் வழங்கியிருக்கிறார்கள். அதையொட்டி, மதுரையில் சில சாலைகளை மேம்படுத்துவதற்கு நெடுஞ்சாலைத் துறை முயற்சிகளை மேற்கொண்டிருக்கிறது. அதிலே மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டிருக்கிற மேம்பாலங்களையும் அமைக்கலாமா என்பதுகுறித்து தற்பொழுது ஆய்வு நடந்து கொண்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

முற்பகல் 10-10

**திரு. வ. வேலுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மதுரை மாநகர் மேலவெளி வீதியில், கட்டபொம்மன் சிலை அருகே பெரியார் பேருந்து நிலையத்திற்குச் செல்வதற்காக மாநகராட்சி மூலம் இப்போது ஒரு நடைபாதை மேம்பாலம் அமைக்கப்பட்டுக் கொண்டிருக்கிறது. மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவர், மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் மற்றும் எங்களைப் போன்றவர்கள் எல்லாம் அதன் கால்கோள் விழாவிலே கலந்து கொண்டோம். அதன் வேலைகள் வேகமாக நடந்து வருகின்றன. அதற்காக எங்களுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். குறிப்பாக, திருப்பரங்குன்றம் சாலை அருகே வணிக வளாகமும், அதற்குள்ளே பேருந்து நிலையமும் அமைந்து இருக்கின்ற காரணத்தாலும், மதுரையினுடைய வடக்குப் பகுதியிலிருந்து கன்னியாகுமரி வரையிலே செல்லும் நெடுஞ்சாலையிலே எல்லா வாகனங்களும் ஒரு வழிப் பாதையாக அனுப்பப்படுவதாலும், அனைத்து நகரப் பேருந்துகளும் அந்தப் பேருந்து நிலையத்திற்குள் நுழைவதாலும், மதுரை மாநகரத்திலிருந்து வரக்கூடிய பல்லாயிரக்கணக்கான மக்கள் அந்தச் சாலையைக் கடக்க வேண்டியிருப்பதாலும், அங்கே நடைபாதை மேம்பாலம் தேவைப்படுகிறது. ஆகவே, அதை விரைவாகப் பரிசீலனை செய்து, முக்கியமான அந்த இடத்திலே நடைபாதை மேம்பாலம் அமைப்பதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் நடைபாதை மேம்பாலம்

கேட்கிறாரா அல்லது பறக்கும் பாலம் கேட்கிறாரா என்று எனக்குத் தெரியவில்லை. நடைபாதை மேம்பாலம் அமைக்கின்ற பொறுப்பினை மாநகராட்சிதான் மேற்கொள்ள வேண்டும். காரணம் அது மாநகராட்சிக்கு உட்பட்ட பகுதி, மேலவெளி வீதி சாலை நெடுஞ்சாலைத் துறையைச் சேர்ந்தது. அந்தப் பேருந்து நிலையம் இருக்கின்ற இடத்தில் ஏற்பட்டிருக்கின்ற சங்கடத்தை நீக்குவதற்காக சுப்பிரமணியபுரம் பாலத்திலிருந்து இரயில்வே நிலையத்தைத் தாண்டி வருகின்ற வரையில் ஒரு பறக்கும் பாலம் அமைக்கலாமா என்ற யோசனை நெடுஞ்சாலைத் துறையிடத்திலே இருக்கிறது. அதேபோல, கட்டபொம்மன் சிலையைக் கடந்து எல்லிஸ் நகர் வழியாக தேசிய நெடுஞ்சாலை செல்கிறது. அந்த எல்லிஸ் நகர் பாலத்தையும் விரிவுபடுத்த வேண்டுமென்ற முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன. அதை மத்திய இரயில்வே துறை ஏற்றுக்கொண்டிருக்கிறது. ஆனால், அவர்கள் தர வேண்டிய 50 சதவிகித பணத்தைத் தர அவர்கள் ஒத்துக்கொள்ளவில்லை. எனினும் அதில் தமிழ்நாட்டிற்குப் பிரச்சினை இல்லை. காரணம், அது தேசிய நெடுஞ்சாலையாகும். எப்படிப்போனாலும் மத்திய சர்க்கார் பணம்தான் அதற்குக் கிடைக்கிறது. ஆகவே, அந்த எல்லிஸ் நகர் மேம்பாலத்தை அமைக்கின்றபோது இந்த மேம்பாலத்தையும் பற்றிச் சிந்திக்க வேண்டிய அவசியம் இருக்கிறது. Technical Feasibility பற்றித் தெரிந்ததற்குப் பிறகுதான் இதுபற்றி ஒரு இறுதி முடிவு எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். நடைபாதை மேம்பாலத்தை மாநகராட்சிதான் அமைக்க வேண்டும் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 191, திரு. செங்கை சிவம், மாண்புமிகு தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர்.

**191—**

**ஐநூற்றுவன் குளம் கல்வெட்டு**

***22405—திரு. செங்கை சிவம்:**

மாண்புமிகு தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னை, பல்லாவரம் அருகிலுள்ள பொழிச்சலூரில் ஐநூற்றுவன் குளம் என்று பொறிக்கப்பட்ட கல்வெட்டு கண்டுபிடிக்கப்பட்டதா?





(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

**மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகன், தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) சென்னை, பல்லாவரம் அருகிலுள்ள பொழிச்சலூரில் "ஐநூற்றுவன் குளம்" என்று பொறிக்கப்பட்டுள்ள கல்வெட்டு ஒன்று தொல்பொருள் ஆய்வுத் துறையால் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இக்கல்வெட்டு கி.பி. 12-13 ஆம் நூற்றாண்டைச் சார்ந்தது. இக்கல்வெட்டின் இருபுறங்களில் குத்து விளக்குகள், கலப்பை, குறுவாள் மற்றும் உடுக்கை போன்ற அமைப்பிலுள்ள சுருக்குப்பை ஆகியவை பொறிக்கப்பட்டுள்ளன. நான்கு அடி உயரமுள்ள பாறையில் இக்கல்வெட்டு பொறிக்கப்பட்டுள்ளது.

**திரு. செங்கை சிவம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஐநூற்றுவன் கல்வெட்டைக் கண்டுபிடித்தது யார்? அக்கல்வெட்டில் பண்டைய காலத்து ஐநூற்றுவன் வியாபாரக் குழுக்கள் என்று பொறிக்கப்பட்டு இருக்கிறது. அதைப்போல வேறு எந்தக் குழுக்களாவது பண்டைக் காலத்தில் இருந்தனவா? அவர்கள் என்னென்ன வியாபாரங்களைச் செய்து வந்தார்கள் என்பதைத் தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-15

**மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அக்கல்வெட்டு தொல்பொருள் ஆய்வுத் துறையால் கண்டுபிடிக்கப்பட்டது என்று ஏற்கெனவே விடை தந்திருக்கிறேன். அக்கல்வெட்டின் அருகே தற்போது குளம் ஏதும் இல்லை. குளம் தூர்ந்து இன்று வீடுகளும், வீட்டுமனைகளும் உள்ளன. பண்டைத் தமிழகத்தில் மணிக்கிராமம், நானாதேசி, ஐயம்புளி, சித்தரமல்லி, பெரியநாடு போன்ற பெயர்களில் பல்வேறு வணிகர் குழுக்கள் இருந்தன. அக்குழுக்கள் தென் இந்தியா, இலங்கை மற்றும் தென்கிழக்கு ஆசிய நாடுகளில் வணிகப் பணிகளை மேற்கொண்டன. இவர்களுக்கென்று மூன்று கை, மகாசேனை, எறிவீரர் என்ற பெயர்களில் பாதுகாப்புப் படைகள் இருந்தன. இப்படையைச் சேர்ந்த வீரன் ஒருவன் இறந்ததற்காக எடுக்கப்பட்ட நடுகல் ஒன்று ஓகேனக்கல் அருகில் உள்ளது. இவ்வகை வணிகக் குழுக்களில் ஒன்று ஐநூற்றுவன்

[1999 மார்ச் 25

என்ற வணிகக் குழுவாகும். இவர்கள் வணிகம் மேற்கொண்ட ஊர்களில் சைவ, வைணவ, பௌத்த, சமணக் கோவில்களுக்குப் பல கொடைகளை அளித்துள்ளனர். புதுக்கோட்டை அருகே முனிச்சந்தையில் ஐநூற்றுவன் பெயரேரி என்ற ஒரு ஏரியும், திருவிடைமருதூரில் ஐநூற்றுவன் மண்டபம் என்ற பெயரில் ஒரு மண்டபமும், போரூர் அருகேயுள்ள கலசப்பாக்கத்தில் ஐநூற்றுவன் அம்பலம் என்ற ஓர் அமைப்பும், பிள்ளையார்பட்டியில் ஐநூற்றுவன் பெருந்தெரு என்ற தெருவும், விசாகப்பட்டினத்தில் ஐநூற்றுவன் பெரும்பள்ளி என்ற மற்றொரு அமைப்பும் பல்வேறு குறிப்புகளிலிருந்து, பல்வேறு கல்வெட்டுகளிலிருந்து கண்டுபிடிக்க முடிகின்றது. ஐநூற்று ஈஸ்வரர் என்று பல்வேறு இடங்களிலுள்ள சிவன் கோவில்கள் இவருடன் தொடர்புடையனவாகும். மேலும், பொழிச்சலூரில் ஐநூற்றுவன் குளம் கல்வெட்டில் காணப்படும் மற்ற பொருட்களைக் கொண்டு, தங்கம், மணி போன்ற விலையுயர்ந்த பொருட்களையும் தங்கள் வணிகத்தில் இந்த வணிகக் குழுக்கள் பயன்படுத்தியிருக்கின்றன என்பதையும், 12, 13 ஆம் நூற்றாண்டுகளில் உலகளாவிய நிலையில் தமிழர்கள் ஏற்கெனவே இருக்கின்ற சங்க காலத்தைப் போலவே வணிகத் தொடர்பு கொண்டிருந்தனர் என்பதையும் இவை உறுதி செய்கின்றன.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்**: திரு. மீ.அ. வைதியலிங்கம்.

**திரு. மீ.அ. வைதியலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் குறிப்பிட்ட இவ்வளவு சிறப்பு வாய்ந்த அந்தக் கல்லுக்குப் பக்கத்தில் இப்போது மலைக்கல் உடைத்து, பள்ளமாக வெட்டி, அந்தக் கல்லே மறைந்துபோய் விடுமோ என்ற நிலையில் இருக்கிறது. அதைப் பத்திரப்படுத்துவதோடு சரித்திர ஆய்வுகளைக் காப்பாற்றுவதற்கு அரசு ஏற்பாடு செய்யுமா என்பதைத் தங்கள் மூலம் அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே இதுகுறித்த குறிப்பு நம்முடைய கல்வெட்டுத் துறையில் எடுத்து வைக்கப்பட்டிருக்கிறது. எனினும், மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கருத்து கவனிக்கப்பட்டு உடனடியாக ஆவன செய்யப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 192, திரு. கே. ரவி அருணன், மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர்.



1999 மார்ச் 25]

**192—**

### பீடித் தொழிலாளர்களுக்குக் காப்பீடு

***10728—திரு. கே. ரவி அருணன்:**

மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பீடித் தொழிலாளர் ஒவ்வொருவருக்கும் குறைந்தபட்சம் ரூ. 50,000 காப்பீடு செய்ய வேண்டுமென்று உச்ச நீதிமன்றம் கட்டளை பிறப்பித்தும்கூட, பீடி நிறுவனங்கள் அதைச் செயல்படுத்தாமல் இருப்பது அரசின் கவனத்திற்கு வந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதைச் செயல்படுத்துவதற்குச் சட்டம் இயற்றுவது குறித்து அரசு நடவடிக்கை எடுக்குமா?

**மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான், தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே.

(அ) ஆம்.

(ஆ) உச்ச நீதிமன்ற கட்டளை எண் 11-ன்படி ஆயுள் காப்புறுதித் திட்டத்தை அகில இந்திய ரீதியில் செயல்படுத்த மத்திய அரசு சட்ட வடிவமைப்பில் கொண்டுவந்தால் அத்திட்டத்தைச் செயல்படுத்த இயலும் என்று, தமிழ்நாட்டிலுள்ள பீடி நிர்வாகத்தினர் கூறியுள்ளார்கள். எனவே, இது தொடர்பாகச் சட்டமியற்ற வேண்டியது மத்திய அரசின் வரம்பிற்குட்பட்டதால், இதுகுறித்து மாநில அரசு நடவடிக்கை எடுக்க இயலாது.

**திரு. கே. ரவி அருணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அகில இந்திய ரீதியில் இதுகுறித்துச் சட்டம் இயற்றுவதற்கு மத்திய அரசுக்குப் பரிந்துரை செய்ய மாநில அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உச்சநீதிமன்றம் பீடித் தொழிலாளர்கள் நலனைப் பாதுகாக்க வேண்டுமென்பதற்காக 11 கட்டளைகளைப் பிறப்பித்து இருக்கிறது. மாநில அரசுக்கு உட்பட்ட வரம்பிலே அந்த நலச் சட்டங்கள் அமல்படுத்தப்பட்டு வருகின்றன. மத்திய அரசு இதுகுறித்து,

[1999 மார்ச் 25

அகில இந்திய அளவிலே சட்டத்திருத்தம் கொண்டுவர வேண்டுமென்ற கருத்து ஏற்கெனவே முன்னாள் நீதிபதி கிருஷ்ணசாமி ரெட்டியார் தலைமையிலேயுள்ள தமிழ்நாடு சட்ட உதவி மற்றும் ஆலோசனைக் குழு, உச்சநீதிமன்றத்திலே affidavit-ஐ file பண்ணியிருக்கிறது. இதுகுறித்து பீடித் தொழிலாளர்களிடத்திலேயும், பல்வேறு சங்கங்களிடத்திலேயும் பேசி, நிச்சயமாக இதை அமல்நடத்த மாநில அரசு எல்லா நடவடிக்கைகளையும் எடுக்கும் என்பதைக் கூறிக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 193, திரு. டி. அமரமூர்த்தி, மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர்.

**193—**

### அரியலூரில் மாவட்ட நீதிமன்றம்

***15797—திரு. டி. அமரமூர்த்தி:**

**மாண்புமிகு** சட்டத் **துறை** அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு **விடையளிப்பாரா—**

பெரம்பலூர் மாவட்ட நீதிமன்றத்தை மாவட்டத்தின் மத்திய பகுதியாகவுள்ள அரியலூரில் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

**மாண்புமிகு திரு. ஆலடி அருணா, சட்டத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

உயர்நீதிமன்றத்தின் பரிந்துரையின்படி பெரம்பலூர் மாவட்டத்திற்கான மாவட்ட அமர்வு நீதிமன்றம் பெரம்பலூரில் அமைப்பதற்கு அரசு ஆணை (நிலை) எண் 1015, உள் (நீதிமன்றங்கள்-3) துறை, நாள் 30-7-1998-ல் அரசு அனுமதித்து ஆணை பிறப்பித்துள்ளது. எனவே, அரியலூரில் மாவட்ட நீதிமன்றம் அமைப்பதற்கான வாய்ப்பு இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 194, திரு. இ.ஜி. சுகவனம், மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்.



1999 மார்ச் 25]

**194—**

### வருவாய் உச்சவரம்பை உயர்த்துதல்

***14073—திரு. இ.ஜி. சுகவனம்:**

மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு கல்வி நிலையங்களில் பயில்வதற்கு அளிக்கப்பட்டு வரும் உதவித் தொகையைப் பெறுவதற்குத் தகுதியளிக்கும் வருவாய் உச்சவரம்பை உயர்த்தி வழங்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) பிற்படுத்தப்பட்ட மற்றும் மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்குக் கல்வி நிலையங்களில் பயில்வதற்கு அளிக்கப்பட்டு வரும் உதவித் தொகையைப் பெறுவதற்குத் தகுதி அளிக்கும் வருவாய் உச்ச வரம்பை உயர்த்தி வழங்கும் செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

முற்பகல் 10-20

**திரு. இ.ஜி. சுகவனம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள் நான்காவது முறையாக முதலமைச்சராகப் பொறுப்பேற்ற பிறகுதான் நம்முடைய நீண்ட நாள் கோரிக்கையான 12,000 ரூபாயாக இருந்த உச்சவரம்பு 1996 அக்டோபர் திங்களிலிருந்து 25,000 ரூபாயாக உயர்த்தித் தரப்பட்டது. தமிழகத்திலிருக்கிற அத்தனை கிராமங்களிலும் தொடக்கப் பள்ளிகளை உருவாக்க வேண்டும் என்று பெருமுயற்சி எடுத்துக் கொண்டிருக்கிறார் மாண்புமிகு முதல்வர் அவர்கள். பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்த மாணவர்கள் நிறைய பேர் கல்விக்கூடங்களுக்குச் சென்று படிக்கவிருக்கிற இந்த வேளையில் அந்த 25,000 ரூபாயை 40,000 ரூபாயாக உயர்த்தும் செயற்குறிப்பு அரசிடம் இருக்கிறதா என்பதைத் தங்கள்மூலம் அறிய விரும்புகின்றேன்.

[1999 மார்ச் 25

**மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே இருந்த வருமான வரம்பை உயர்த்தியது மாண்புமிகு முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள் தான். அதை மேலும் உயர்த்துவதற்கான செயற்குறிப்பு தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 195, திரு. க. மணிவர்மா, மாண்புமிகு வீட்டுவசதித் துறை அமைச்சர்.

**195—**

**வீட்டு வசதி வாரியம் மூலம் அலுவலர்களுக்கு வீடுகள்**

***9184—திரு. க. மணிவர்மா:**

மாண்புமிகு வீட்டு வசதித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தண்டராம்பட்டில் தமிழ்நாடு வீட்டுவசதி வாரியம் மூலமாக அரசு அலுவலர்களுக்கு வீடு கட்டிக் கொடுக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது கட்டப்படும்?

**மாண்புமிகு திரு. கு. பிச்சாண்டி, வீட்டு வசதித் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) இல்லை.

**திரு. க. மணிவர்மா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய தண்டராம்பட்டு தொகுதியிலே 500-க்கும் மேற்பட்ட ஆசிரியர்களும், அரசு அலுவலர்களும் கொண்ட அரசு அலுவலகங்கள் இயங்கிக் கொண்டிருக்கின்றன. திருவண்ணாமலையிலிருந்து ஆசிரியர்களும், அரசு அலுவலர்களும் என்னுடைய தொகுதியின் கடைக்கோடி பகுதிக்குச் செல்லும்போது இரண்டு மணி நேரம் பேருந்துகளில் பயணம் செய்யக்கூடிய சூழ்நிலை ஏற்படுகிறது. அதனால் அரசு ஊழியர்களும், ஆசிரியர்களும் சரியான நேரத்திற்குப் பள்ளிகளுக்கும், அலுவலகங்களுக்கும் செல்ல முடியாத சூழ்நிலை இருக்கிற காரணத்தால் அந்த மண்ணின் மைந்தராக இருக்கிற மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பெரிய மனது வைத்து இதனை மறுபரிசீலனை செய்வார்களா என்பதைத் தங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.



1999 மார்ச் 25]

**மாண்புமிகு திரு. கு. பிச்சாண்டி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தண்டராம்பட்டு இன்னும் தாலுகா தலைமையிடமாகவே மாறவில்லை. மாவட்டத் தலைமையிடம் மற்றும் வருவாய்க் கோட்டத் தலைமையிடங்களில் மட்டுமேதான் அரசு அலுவலர்களுக்கு வாடகைக் குடியிருப்புகள் கட்டப்படுவது இவ்வரசின் கொள்கை. அது தாலுகா தலைமையிடமாக மாறிய பிறகு பரிசீலிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. க. மணிவர்மா.

**திரு. க. மணிவர்மா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, யானை வரும் பின்னே, மணியோசை வரும் முன்னே என்பதைப்போல நமது மாண்புமிகு முதல்வர் அவர்கள் கருணை உள்ளத்தோடு இந்தக் கூட்டத்தொடரிலேயே தாலுகா......

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அது தாலுகாவாக வருகிற அன்றைக்குக் கேளுங்கள், இப்போது உட்காருங்கள்.

வினா எண் 196, திரு. பி. இராசமாணிக்கம், மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர்.

**196—**

**பத்திரப் பதிவு அலுவலகத்திற்குக் கட்டடம்**

***9669—திரு. பி. இராசமாணிக்கம்:**

மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவாரூர் மாவட்டம், ஒரத்தநாடு தொகுதி, வடுவூரில் வாடகைக் கட்டடத்தில் இயங்கிவரும் பத்திரப் பதிவு அலுவலகத்திற்கு நிரந்தரக் கட்டடம் கட்ட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், இந்த ஆண்டு கட்டப்படுமா?

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

[1999 மார்ச் 25

(அ) மற்றும் (ஆ) திருவாரூர் மாவட்டம், ஒரத்தநாடு தொகுதி, வடுவூர் சார்பதிவாளர் அலுவலகத்திற்கு தற்சமயம் அரசுக் கட்டடம் கட்டுவதற்கான செயற்குறிப்பு ஏதுமில்லை.

**திரு. பி. இராசமாணிக்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வடுவூரில் நீண்டகாலமாக வாடகைக் கட்டடத்தில் இயங்கி வருகிற சார்பதிவாளர் அலுவலகத்திற்கு நிரந்தரக் கட்டடம் கட்ட வேண்டும் என்று அந்தக் கிராம மக்கள் நீண்ட நாட்களாகக் கோரிக்கை வைத்திருக்கிறார்கள். எனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மறுபரிசீலனை செய்து இந்த ஆண்டு அதற்கு ஒரு நிரந்தக் கட்டடம் கட்ட ஆவன செய்வார்களா என்பதைத் தங்கள்மூலமாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நிதிநிலையைப் பொறுத்து வருகிற ஆண்டிலே அதுபற்றிப் பரிசீலிக்கப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 197, திரு. சீ. வெ. கிருஷ்ணன், மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர்.

**197—**

### ஆவண எழுத்தர்களுக்கு உரிமங்கள் வழங்குதல்

***18847—திரு. சீ.வெ. கிருஷ்ணன்:**

மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1997 ஆம் ஆண்டு நடைபெற்ற ஆவண எழுத்தர், நகல் எழுத்தர் தேர்வு முடிவுகள் வெளிவந்தும் இதுவரை உரிமங்கள் வழங்கப்படவில்லை என்பது அரசிற்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், நடப்பாண்டில் அதற்குண்டான உரிமங்கள் வழங்கப்படுமா?

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) 1997 ஆம் ஆண்டு நடைபெற்ற ஆவண மற்றும் நகல் எழுத்தர் தேர்வுகளில் தேர்ச்சி பெற்றவர்களுக்கு தேர்ச்சிச் சான்றிதழ்கள் வழங்கப்படாமல் இருந்தன. தற்போது தேர்ச்சி சான்றிதழ்கள்



1999 மார்ச் 25]

வழங்கப்பட்டுவிட்டன. இனி தேர்ச்சி பெற்றவர்கள் உரிய கட்டணத்துடன் உரிமங்கள் கோரி விண்ணப்பித்துக் கொண்டவுடன் உரிமங்கள் வழங்கப்படும்.

(ஆ) உரிமங்கள் கோரி விண்ணப்பங்கள் பெறப்பட்டவுடன் உரிமங்கள் வழங்கப்படும்.

**திரு. சீ.வெ. கிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். ஆவண எழுத்தர்களுக்கு உரிமம் வழங்குவது இரண்டு ஆண்டுகளுக்கு ஒரு முறை புதுப்பிக்கப்படும் என்று இப்போது இருக்கிறது. அதை ஐந்து ஆண்டுகளுக்கு ஒரு முறை புதுப்பிக்க ஏற்பாடு செய்யப்படுமா என்பதைத் தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-25

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த நிதிநிலை அறிக்கையிலே, மானியக்கோரிக்கையின் போது, ஆவண உரிமங்கள், எழுத்தர் உரிமங்களைப் புதுப்பிக்க இரண்டாண்டுகள் என்றிருந்ததை ஐந்தாண்டுகளாக மாற்றி ஏற்கெனவே அறிவிக்கப்பட்டிருக்கிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 198, திரு. ரா. சேதுநாதன், கால்நடைப் பராமரிப்புத் துறை அமைச்சர்.

**198—**

### கால்நடை மருத்துவமனை அமைத்தல்

***15918—திரு. ரா. சேதுநாதன்:**

மாண்புமிகு கால்நடைப் பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திண்டிவனம் தொகுதி, வீடூர் கிராமத்தில் கால்நடை மருத்துவமனை அமைக்க அரசு முன்வருமா?

**மாண்புமிகு புலவர் பூ.ம. செங்குட்டுவன், கால்நடைப் பராமரிப்புத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

இதுகுறித்து செயற்குறிப்பு ஏதும் இல்லை என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

[1999 மார்ச் 25

**திரு. ரா. சேதுநாதன்**: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திண்டிவனம் பகுதி, விவசாயம் நிறைந்த பகுதி. விவசாயிகள், கால்நடைகளை நம்பி வாழ்ந்து வருகிறார்கள். எனவே, அதன் பக்கத்தில் வீடூர் மற்றும் அதைச் சுற்றியுள்ள கிராமங்களில், 10 கிராமங்களில், 50 ஆயிரம் கால்நடைகளை அவர்கள் வளர்த்துவருகிறார்கள். மனிதனுக்கு உடல்நலம் பாதிக்கப்படுகிறபோது, பேருந்துகளிலோ, கார்களிலோ சென்றுகூட வைத்தியம் செய்துகொள்ளலாம். கால்நடைகள் பாதிக்கப்படுகிறபோது, அவ்வாறு இயலாததால், மிகுந்த பாதிப்பு ஏற்பட்டு, கால்நடைகளுக்கு மிகுந்த உயிர்ச்சேதம் ஏற்படுகிறது. எனவே, வீடூர் பகுதியைச் சுற்றியுள்ள கிராமங்களுக்கு ஒரு கால்நடை கிளை நிலையம் அமைக்கப்படுமா என்பதோடு, திண்டிவனம் பகுதியிலுள்ள கொள்ளார், அகூர், எண்டியூர், தென்ஆலப்பாக்கம் போன்ற கிராமங்களில் கால்நடை கிளை நிலையங்கள் இருக்கின்றன; ஆனால் கால்நடை ஆய்வாளர்கள் இல்லாமல், கால்நடை கிளை நிலையங்கள் செயல்படாமல் இருக்கின்றன; அவற்றிற்குக் கால்நடை ஆய்வாளர் நியமிக்கப்படுவார்களா என்பதையும், தமிழகத்தில் எத்தனைக் கிளை நிலையங்களில் ஆய்வாளர்கள் இல்லாமல் இருக்கிறார்கள் என்பதையும் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு புலவர் பூ.ம. செங்குட்டுவன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விழுப்புரம் மாவட்டம், திண்டிவனம் தொகுதி, மைலம் ஊராட்சி ஒன்றியத்தில் மைலம், பாதிராப்புலியூர், ரெட்டணை ஆகிய 3 ஊர்களில் கால்நடை மருந்தகங்கள் செயல்பட்டு வருகின்றன. பொதுவாக, கால்நடை மருந்தகத்திற்குச் சிகிச்சைக்காக வரும் கால்நடைகளின் எண்ணிக்கை தினசரி சராசரி வருகை எண்ணிக்கை 40-க்கு மேலாக இருப்பின், அதனை கால்நடை மருத்துவமனையாக, பகுதி-2 திட்டத்தின்கீழ் தரம் உயர்த்த, ஒவ்வோராண்டும் அரசு நிதிநிலை மற்றும் தகுதியின் அடிப்படையில் பரிசீலிக்கிறது. வீடூர் கிராமத்திற்கு அருகில் 8 கிலோமீட்டர் தூரத்தில் மைலம் கால்நடை மருந்தகமும், 2 கிலோமீட்டர் தூரத்தில் தென் ஆலப்பாக்கம் கால்நடை கிளை நிலையமும், 2½ கிலோமீட்டர் தூரத்தில் பொங்கூர் கால்நடை கிளைநிலையமும், வீடூர் கிராமத்திலேயே 19-10-1997 முதல் பார்வை கிளை நிலையமும் செயல்பட்டு வருவதால், மேற்படி வீடூர் கிராமத்திலுள்ள கால்நடைகளுக்கென, எதிர்வரும் ஆண்டுகளில், நிதிநிலைமைக்கேற்ப கால்நடை மருந்தகம் அமைக்க பரிசீலிக்கலாம் என்றும், அந்தக் கால்நடைகளுக்கு அங்கே தற்போது சிகிச்சை



1999 மார்ச் 25]

அளிக்கப்பட்டுவரும் முறையையே தொடரலாம் என்றும் தெரிவித்துக்கொள்வதோடு, கால்நடை ஆய்வாளர்கள்-தமிழகத்தைப் பொறுத்தவரையில்—680 காலியிடங்கள் இருக்கின்றன; அவற்றில் 125 இடங்கள் வேலைவாய்ப்பு அலுவலகங்கள் மூலம் தேர்வு செய்து நிரப்புவதற்கு ஆணையிடப்பட்டிருக்கின்றன என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 199, டாக்டர் மு. தேவராஜன், மாண்புமிகு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர்.

**199—**

**ஆதிதிராவிடப் பெண்கள் உயர்நிலைப் பள்ளி**

***10918—டாக்டர் மு. தேவராஜன்:**

மாண்புமிகு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பொம்பலூர் தொகுதி, பூலாம்பட்டி பேரூராட்சியில் ஆதிதிராவிடப் பெண்கள் உயர்நிலைப் பள்ளி அமைக்க அரசு முன்வருமா?

**மாண்புமிகு திரு. சமயநல்லூர் எஸ். செல்வராசு, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர்**: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 200, திரு. கே. சுப்பராயன், மாண்புமிகு கதர்த் துறை அமைச்சர்.

**200—**

**நூற்பாலைக்குச் சொந்தக் கட்டடம்**

***15932—திரு. கே. சுப்பராயன்:**

மாண்புமிகு கதர்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[1999 *மார்ச்* 25

(அ) திருப்பூர், இடுவாய் கதர் கிராமத் தொழில் வாரியத்தின் நூற்பாலை வாடகைக் கட்டடத்தில் இயங்கி வருவதால், சொந்தக் கட்டடத்திற்கு மாற்ற அரசு நடவடிக்கை எடுத்து வருகிறதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. அந்தியூர் ப. செல்வராசு, கதர்த் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) வாரியத்தின் சொந்தக் கட்டடம் கட்டும் திட்டம் அரசின் செயற்குறிப்பில் ஏதும் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கதர் கிராம நூற்பாலையைப் பொறுத்தவரையில், அது வாடகைக் கட்டடத்தில் இயங்கிவருவது. குறைந்த வருமானம் உள்ள அந்தத் தொழிலை நடத்த, அது ஒரு சிக்கலை ஏற்படுத்துகிறது. எனவே, நடைமுறைச் சிக்கலை உணர்ந்து மறுபரிசீலனை செய்து வாய்ப்புள்ள இடங்களில், சொந்தக் கட்டடங்களை உருவாக்க இந்த அரசு முயற்சிகளை மேற்கொள்ள முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. அந்தியூர் ப. செல்வராசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இடுவாயிலிருந்து 9 கிலோமீட்டர் தூரத்திலுள்ள திருப்பூர் நகரத்தில் வாரியத்திற்குச் சொந்தக் கட்டடம் இருக்கிறது. திருப்பூர் நகரத்திற்கு வந்து தாங்கள் நூற்பதற்குச் சிரமமாக இருக்கிறது; ஆகவே, இடுவாய் கிராமத்திலேயே தங்களுக்கு நூற்பாலை வேண்டுமென்ற நெசவாளர்களின் கோரிக்கையை ஏற்றுத்தான் — 300 ரூபாய் மாத வாடகை அடிப்படையில் அந்த வாடகைக் கட்டடத்தில் இயங்கிவருகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு: ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடம்பெற்றிருந்தால், அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்]



1999 *மார்ச்* 25]

## 2. தகவல் கோரல்

### (அ) பாண்டியாறு—புன்னம்புழா மின் திட்டப் பணிகளுக்கு கேரள அரசு அளித்த அனுமதியை நிறுத்திவைப்பது தொடர்பாக கேரள உயர்நீதிமன்றம் அளித்துள்ள தீர்ப்பு

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கே. சுப்பராயன்.

**திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு Point of Clarification இன்றைய தினமணி பத்திரிகையில், பாண்டியாறு-புன்னம்புழாத் திட்டத்திற்கு கேரள அரசு அனுமதி அளித்து விட்டதாகவும், அளித்துவிட்ட அந்த அனுமதி, கேரளத்தில், கோழிக்கோடு, வயநாடு, மலப்புரம் போன்ற பகுதிகளைச் சேர்ந்த விவசாயிகளைப் பாதிக்கும் என்பதால், அந்தப் பகுதி விவசாயிகள் கேரள உயர்நீதிமன்றத்திலே ஒரு வழக்குத் தொடுத்து, அந்த வழக்கின் அடிப்படையில் கேரள உயர்நீதிமன்றம் ஒரு தீர்ப்பு அளித்திருக்கிறது. தமிழகத்திற்கு அளித்திருக்கிற அந்த அனுமதியை நிறுத்திவைக்க உத்தரவிட வேண்டுமென்று — கேரள அரசு இரண்டு மாதங்களுக்குள் உத்தரவிட வேண்டுமென்று—தீர்ப்பளித்திருக்கிறது, என்று செய்தி வெளியாகியுள்ளது.

முற்பகல் 10-30

நான் இங்கே தங்கள்மூலம் மாநில அரசிடமிருந்து தெரிந்து கொள்ள விரும்புவது, கூடலூர் தாலுகாவிலே சாலியாற்றின் உப நதிக்குக் குறுக்கே அணை கட்டுவதற்கு கேரள அரசு அனுமதியளித்து விட்டதாகவும், அந்த அனுமதி மறுக்கப்பட வேண்டுமென்றும் அங்கே நீதிமன்றத்திலே சொல்லப்பட்டிருக்கிறதே, அதுபற்றிய விவரங்கள் என்ன? மேற்கொண்டு அந்தப் பிரச்சினைகள் குறித்து மாநில அரசு என்ன செய்ய இருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

* **மாண்புமிகு திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நானும் பத்திரிகையிலேதான் அந்தச் செய்தியைப் பார்த்தேன். எனவே, அதுகுறித்து அதிகமாக என்னுடைய கருத்தை அரசின் சார்பிலே தெரிவிக்க முடியாது. இருந்தாலும், பத்திரிகையிலே வந்திருக்கும் செய்தியைப் பொறுத்தவரையில் பார்த்தால், வழக்கைத் தொடுத்தவர்கள் உண்மைக்கு மாறான தகவல்களை நீதிமன்றத்திற்கு அளித்திருக்கிறார்கள் என்று கருதுகிறேன்.

[திரு. துரைமுருகன்] [1999 மார்ச் 25

நீலகிரி மாவட்டம், கூடலூர் தாலுகாவிலுள்ள சாலியாற்றின் நீர்ப்பிடிப்புப் பகுதியில் அந்த அணையைக் கட்டத் திட்டமிட்டுள்ளது தமிழக அரசு. அங்கிருந்து நீரைத் திருப்பி கோவை, திருநெல்வேலி, மதுரை ஆகிய பகுதிகளிலுள்ள தரிசு நிலங்களை விளைநிலங்களாக மாற்றத் திட்டமிடப்பட்டுள்ளதாக அவர்கள் வழக்கைத் தொடுக்கிறபோது சொல்லியிருக்கிறார்கள். பாண்டியாறு-புன்னம்புழா தண்ணீரை திருநெல்வேலி மாவட்டத்திற்குக் கொண்டு போவது என்பது நினைத்துக்கூடப் பார்க்க முடியாத ஒன்று. இது உண்மைக்கு மாறான தகவல். இது ஒன்று.

இரண்டாவது, இந்த அணைக்கட்டுத் திட்டத்திற்கு கேரள அரசு ஒருதலைப்பட்சமாக அனுமதி அளித்துள்ளது என்று தெரிவிக்கப்பட்டிருப்பதும் தவறான செய்தி. இதுவரையிலே, நமக்கு கேரள அரசு அனுமதி அளிக்கவில்லை. பாண்டியாறு-புன்னம்புழா பகுதியிலே ஒரு அணையைக் கட்டி மின்சாரம் தயாரிக்கலாம் என்பது குறித்து கலைஞர் அரசு வந்ததற்குப் பிறகு அந்த மாநில அமைச்சரை இங்கே அழைத்துப் பேசினோம். இடையிலே நானும் ஒருமுறை திருவனந்தபுரத்திற்குச் சென்று பேசிவிட்டு வந்திருக்கிறேன். மின்சாரம் தயாரிப்பது குறித்து அவர்கள் கவலைப்படுவதாகத் தெரிவித்தார்கள். எனவே, நம்முடைய மாநில மின்சார வாரியத்திலிருந்து ஒரு கருத்துருவைக் கேட்டார்கள். அதையும் நாம்தான் அனுப்பியிருக்கிறோம். அதன்மீது இதுவரையிலே அவர்கள் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. ஆனால், அந்தக் கருத்துருவில் நாம் என்ன தெரிவித்தோம் என்றால், அணையைக் கட்டி மின்சாரம் தயாரிப்பதோடு குறைந்தது 7 T.M.C. தண்ணீரைத் திருப்பித் தமிழகத்திற்கு அவர்கள் தருவார்களேயானால், இங்கே இருக்கின்ற பல்லடம் மற்றும் தாராபுரம் போன்ற வட்டங்களில் குடிநீருக்கும் விவசாயத்திற்கும் பயன்படும் என்று தெரிவித்திருந்தோம். ஆனால், கேரள முதலமைச்சர் அவர்கள் அதைக்கூட மறுத்திருக்கிறார்களே தவிர இன்னும் இந்தத் திட்டத்திற்கு முழு அனுமதியைக் கொடுக்கவில்லை. ஆக, கொடுக்காத நிலையில், இல்லாத காரணங்களைச் சொல்லி அவர்கள் வழக்கினைத் தொடுத்திருக்கிறார்கள். அதற்கு எப்படி ஒரு தடை உத்தரவு போடப்பட்டது என்பது எனக்கு ஆச்சரியமாக இருக்கிறது. இதற்கு மேல் இதுகுறித்து எதையும் நான் தெரிவிக்க விரும்பவில்லை.



## 3. அறிவிப்பு

### உறுப்பினர் திரு. பி.ஆர். சுந்தரம் கைது

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சென்னை மாநகரக் காவல் துறை ஆணையரிடமிருந்து ஒரு தகவல் வந்திருக்கிறது:

"I have the honour to inform you that Thiru P.R. Sundaram, M.L.A., Rasipuram Constituency and 8 others were arrested today under Section 143 IPC and produced before VIII Metropolitan Magistrate, G.T.Court for remanding them to judicial custody till 7-4-1999. They were taken to Central Prison, Vellore, since there is no accommodation in Central Prison, Chennai."

—

## 4. உரிமை மீறல் பிரச்சினை

### (அ) முன்னாள் முதல்வர் செல்வி ஜெ. ஜெயலலிதா 22-3-1999 அன்று பேரவையில் நடைபெற்ற நிகழ்வுகள் குறித்து வெளியிட்ட அறிக்கை

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அடுத்து, மாண்புமிகு உறுப்பினர் திருநாவுக்கரசு அவர்கள் ஓர் உரிமை மீறல் பிரச்சினையை அவையில் எழுப்ப அனுமதி கேட்டு அறிவிப்பு கொடுத்திருக்கிறார்கள். அவர்களுக்கு அனுமதி வழங்குகின்றேன். திரு. திருநாவுக்கரசு அவர்கள், அது எப்படி உரிமை மீறல் ஆகும் என்பது பற்றி மிகவும் சுருக்கமாகச் சொல்ல வேண்டும். நேற்றைக்கு முந்தைய நாளன்று அறிவிப்பு கொடுத்தபோது நான் அனுமதி கொடுக்கவில்லை. இன்றைக்குத் திரும்பவும் கொடுத்திருக்கிறார்கள். அது எப்படி உரிமை மீறல் ஆகும் என்பதைச் சுருக்கமாகச் சொல்லுங்கள்.

முற்பகல் 10-35

***திரு. எஸ். திருநாவுக்கரசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த 22 ஆம் தேதி இந்தச் சட்டமன்றத்தில் இங்கே இருக்கின்ற சட்டமன்ற உறுப்பினர் மாண்புமிகு தாமரைக்கனி அவர்களால் மாண்புமிகு விவசாயத் துறை அமைச்சர் திரு. வீரபாண்டி ஆறுமுகம் அவர்கள் நேரடியாகத் தாக்கப்பட்டு பலத்த காயத்திற்கு ஆளாக்கப்பட்டார் என்பதை இந்த மன்றத்தில் இருக்கிற அத்தனை பேரும் பார்த்தோம். அதற்குப் பின்னாலே அதைப்பற்றி நீங்கள் மன்றத்தின் மூலமாக அனைவரின் ஒப்புதலோடு நடவடிக்கை எடுத்தீர்கள்.

[திரு. எஸ். திருநாவுக்கரசு] [1999 மார்ச் 25

இந்தச் சம்பவங்கள் அனைத்தும் தொலைக்காட்சிகளிலேயும், பத்திரிகைகளிலேயும் அப்படியே வெளிவந்திருக்கின்றன. என்ன நடந்தது என்பது அப்படியே வெளிவந்திருக்கிறது. ஆனால், இங்கே நடந்த சம்பவத்தை அப்படியே மாற்றியும், திரித்தும், கற்பனையைக் கலந்தும், இட்டுக்கட்டியும், உண்மைக்குப் புறம்பான செய்திகளைக் கோர்வையாக்கி, முன்னாள் முதலமைச்சர் செல்வி ஜெயலலிதா அவர்கள் ஓர் அறிக்கையை வெளியிட்டிருக்கிறார்கள். அந்த அறிக்கையையொட்டித்தான் நான் உரிமை மீறல் பிரச்சினை கொடுத்திருந்தேன். ஏனென்றால், சட்டமன்றத்தை அவமதிக்கிற, சட்டமன்றத்தின் உரிமைகளை மீறுகிற செயலாக அவர்களுடைய அறிக்கை அமைந்திருந்தது. கண்ணுக்குக் கண்ணாக நேரே இங்கே நடந்த சம்பவத்தை அப்படியே நடக்கவில்லை என்று சொல்லி, மாண்புமிகு அமைச்சர் வீரபாண்டி ஆறுமுகம் அவர்கள் தாக்கப்படவே இல்லை என்று கூறி, முற்றிலும் உண்மைக்குப் புறம்பான, அப்பட்டமான ஒரு பொய்யை அறிக்கையாக வெளியிட்டிருக்கிறார்கள். இருந்தாலும், இது குறித்து நீங்கள் அந்த உரிமைக் குழுவிற்கு அனுப்ப வேண்டிய பிரச்சினையாக எடுத்துக்கொள்ளாமல், பிரச்சினை அதற்குரியது என்றாலும்கூட, தாங்கள் பெருந்தன்மையோடு அந்த உரிமைக் குழுவிற்கு அனுப்பவேண்டியதில்லை. இருந்தாலும் முன்னாள் முதலமைச்சர் செல்வி ஜெயலலிதா அவர்கள் அப்படி அறிக்கை வெளியிட்டது தவறு என்பதைச் சுட்டிக்காட்டி தங்களுடைய தீர்ப்பை அளித்தீர்கள். அதற்குப் பிறகு 23 ஆம் தேதி இந்தச் சட்டமன்றத்திலே ஒருமனதாகத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டு மாண்புமிகு உறுப்பினர் தாமரைக்கனிக்கு 15 நாள் சாதாரண சிறைவாசம் என்று நீங்கள் அறிவித்தீர்கள்; தீர்ப்பு அளித்திருக்கிறீர்கள். அதைப்பற்றியும் தாங்கள் இங்கே எச்சரித்ததற்குப் பின்னாலேயும் இன்னொரு அறிக்கையை முன்னாள் முதலமைச்சர் செல்வி ஜெயலலிதா அவர்கள் 23 ஆம் தேதி மாலையே வெளியிட்டிருக்கிறார்கள். அதிலேயும் அவர் உண்மைக்குப் புறம்பான விஷயங்களை எல்லாம் அறிக்கையாகச் சொல்லி, இங்கே அதுபோன்ற சம்பவங்கள் நடக்கவில்லை என்பதாக மீண்டும் சொல்லி, தங்களுடைய தீர்ப்பையே சட்டத்திற்குப் புறம்பானது, விதிகளுக்குப் புறம்பானது, தாங்கள் ஏதோ அவசரக் கோலத்தில் தீர்ப்பளித்திருக்கிறீர்கள் என்றெல்லாம் தங்களுடைய தீர்ப்பை விமர்சித்து, தீர்ப்புக்கு உள்நோக்கம் கற்பித்து, களங்கம் கற்பித்து, அறிக்கை



1999 மார்ச் 25] [திரு. எஸ். திருநாவுக்கரசு]

இந்தச் சட்டமன்றத்திற்கு அதைவிட இன்னொரு களங்கம் விளைவிக்கக்கூடிய உரிமைப் பிரச்சினையாக நான் கருதக்கூடியது, இந்த மன்றம் எடுத்துக்கொள்ள வேண்டியது, அந்தத் தீர்மானம் இங்கே ஒருமனதாக எல்லா கட்சிகளைச் சார்ந்தவர்களாலும் வழிமொழியப்பட்டு, நிறைவேற்றப்பட்டது. ஆனால், அதை இங்கேயிருக்கிற, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், தங்களை வற்புறுத்தி, அந்த வற்புறுத்தலின் பேரில்தான் தாங்கள் இந்தத் தீர்ப்பை அளித்திருப்பதாக அவர் தன்னுடைய அறிக்கையிலே கூறியிருக்கிறார்.

அந்த அறிக்கையில் "சபாநாயகர், தனக்கு இல்லாத அதிகாரத்தைச் செயல்படுத்த ஆரம்பத்தில் தயக்கம் காட்டியதாகவும், அதாவது தங்களுக்கு இல்லாத அதிகாரத்தை, முதலமைச்சர் கருணாநிதி வற்புறுத்தியதால்தான் சபாநாயகர் அரக்கப் பறக்க சிறை தண்டனை வழங்கி வாரண்ட் பிறப்பித்ததாகவும்" கூறியிருக்கிறார்.

சட்டமன்றத்திலே நாங்கள் கடந்த ஆட்சியின் 5 ஆண்டுகளிலே, இப்போது துணை சபாநாயகராக இருக்கிற பரிதியும் சரி, நானும் சரி, அப்போது காங்கிரஸ் கட்சியிலே இருந்து, இப்போது த.மா.கா.-விலே இருக்கிற உறுப்பினர்கள் பலரும் சரி, இதே மாண்புமிகு முன்னாள் முதலமைச்சர் செல்வி ஜெயலலிதா அவர்கள் இங்கே முதலமைச்சராக இருந்தபோது எவ்வளவு தூரம் நாங்கள் எல்லாம் அவமானப்படுத்தப்பட்டோம், எத்தனை முறை இந்தச் சட்டமன்றத்திலேயிருந்து பேச வாய்ப்பு தரப்படாமல் தூக்கி வெளியே வீசப்பட்டோம் என்பதெல்லாம், கடந்த கால வரலாறு --- எல்லாம் இந்த நாட்டு மக்களுக்கு மிக நன்றாகத் தெரியும்.

முற்பகல் 10-40

இப்போதுகூட மாண்புமிகு பேரவைத் தலைவர், உறுப்பினர் யாரையாவது வெளியேற்றுகிறபோது, இவரை வெளியேற்றுகிறேன் என்று சொல்கிறீர்கள். அப்போதெல்லாம் சபாநாயகர் எங்களை எல்லாம் மனிதர்களாகக் கூட மதித்தது இல்லை; இவர்களையெல்லாம் அப்புறப்படுத்துங்கள் என்று சொல்வார்; ஏதோ குப்பைக் கூளங்கள் மாதிரி. அப்போது என்ன சொல்வார் என்றால், பரிதியை அப்புறப்படுத்து என்று உத்தரவிடுகிறேன், திருநாவுக்கரசை அப்புறப்படுத்த உத்தரவிடுகிறேன் என்று ஏதோ குப்பைக் கூளம் மாதிரி தூக்கி வெளியே போடுங்கள் என்று சொல்லி, அஃறிணைப் பொருளாக ஆக்கப்பட்டு நாங்கள் எல்லாம் வெளியே தூக்கி வீசப்பட்டோம்.

[திரு. எஸ். திருநாவுக்கரசு] [1999 மார்ச் 25

அதுமட்டுமல்ல, இந்த மன்றத்தினுடைய கண்ணியம் எப்படி எல்லாம் பாதிக்கப்பட்டது என்பதை நாட்டு மக்கள் அறிவார்கள். நீங்களும் பேரவைத் தலைவராக இருக்கிறீர்கள். பேரவைத் தலைவர் ஒரு கட்சியின் சார்பிலேதான் சட்டமன்ற வேட்பாளராக நின்று வெற்றி பெற்று வருகிறார் என்பது உண்மைதான். உங்களுக்கு Ticket கொடுப்பதே கட்சியினுடைய தலைவர்தான். இன்னும் சொல்லப்போனால், உங்களுக்குப் பரிந்துரை செய்வதே முதலமைச்சர்தான். யார் முதலமைச்சரோ அந்த முதலமைச்சருடைய விருப்பத்தின் பேரில்தான் சபாநாயகர் தேர்ந்தெடுக்கப்படுகிறார். அதற்குப் பிறகுதான் முன்மொழியப்பட்டு, வழிமொழியப்பட்டு, பிறகு தேர்ந்தெடுக்கப்படுகிறீர்கள். இருந்தாலும்கூட, சபாநாயகராக ஆனதற்குப் பின்னாலே நீங்கள் எந்தக் கட்சியையும் சாராதவர் என்கிற அடிப்படையிலே நடுநிலையாக நடக்க வேண்டியவராக அந்தப் பொறுப்பிலே, அந்தப் பொறுப்பிற்கேற்ப நடக்கிறீர்கள். உங்களை நான் ஒரு நாள் கவனித்தேன். நீங்கள் சொன்னீர்கள்-மாண்புமிகு முதலமைச்சர் சொல்கிறார் என்று யாரோ மாண்புமிரு உறுப்பினர் குறிப்பிட்ட உடனே நீங்கள் சொன்னீர்கள். "முதலமைச்சர் யார் என்னைக் கட்டுப்படுத்த? முதலமைச்சர் சொல்கிறபடி நான் நடக்க வேண்டியதில்லை" என்று நீங்கள் சொல்கிறீர்கள் என்று சொன்னால் அது உங்களுடைய கட்சியினுடைய தலைவரை அவமதிக்கிறீர்கள் என்று அல்ல. உங்களுக்கும் தெரியும். இந்தக் கட்சிதான் ticket கொடுக்கிறது. தலைவர் கலைஞர்தான் கொடுக்கிறார்கள் என்று. ஆனால் இந்தச் சட்டமன்றத்தினுடைய சபாநாயகர் என்ற முறையில் உங்களுக்கு இருக்கிற அந்தப் பொறுப்பை நிறைவேற்றுகின்ற விதத்திலே அந்த அளவிற்குக் குறிப்பிடுகிறீர்கள். இப்படி நடந்து கொள்கிற ஒரு சபாநாயகரைப் பார்த்து, முதலமைச்சர் அவர்கள் வற்புறுத்தியதால்தான், நீங்கள் அதுவும் அரக்க பறக்க இந்தத் தீர்ப்பை அளித்தீர்கள் என்கிறார். அதுவும் ஏதோ அவசரத்திலே, அரக்க பறக்க அல்ல. ஒரு நாள் முழுவதும் விவாதம் நடந்து எல்லா கட்சியினருக்கும் வாய்ப்பு தரப்பட்டு, உறுப்பினர்கள் பேசி எடுக்கப்பட்ட முடிவை, அரக்க பறக்க அறிவித்தீர்கள், முதலமைச்சர் வற்புறுத்தலால் அறிவித்தீர்கள் என்ற ஓர் அப்பட்டமான, உண்மைக்குப் புறம்பான செய்தியைச் சொல்லி இருக்கிறார்கள். நீங்களே எப்படிச் சொல்கிறீர்கள். முதலமைச்சரைப் பற்றியே எப்படி குறிப்பிடுகிறீர்கள். என மேலே குறிப்பிட்டேன்.

ஒருகாலத்தில் முதலமைச்சர் காலிலே சபாநாயகர் இந்த மன்றத்திலேயே விழுந்து கும்பிட்ட, அதுபோன்ற அநாகரீகமான செயல்



1999 மார்ச் 25] [திரு. எஸ். திருநாவுக்கரசு]

இந்த மன்றத்திலேயே நடந்திருக்கிறது. (சிரிப்பு) நான்கூட துணை சபாநாயகராக இருந்தேன். அப்போதெல்லாம் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். இங்கே உள்ளே நுழைகிறபோது-நான் அப்போது சட்டசபைக்கு புதிது-உட்கார்ந்திருக்கும்போது, அவரைப் பார்த்தால் நகர்ந்து வருவேன். என்ன இருந்தாலும் கட்சித் தலைவர் இல்லையா? ஒரு நாள் உள்ளே கூப்பிட்டார். இந்தமாதிரி நகர்கிற வேலையெல்லாம் வைத்துக்கொள்ளாதே, நீ கட்சியிலே இருக்கிறாய், நான் தலைவர் சரிதான். ஆனால் அது வெளியே உள்ளே உட்கார்ந்திருக்கிறபோது நான் பாட்டுக்கு போவேன், வருவேன், நீ பாட்டுக்கு உட்கார்ந்திருக்கவேண்டும். எழுந்து நிற்கிறது, நகர்கிறது இதெல்லாம் கூடாது என்று சொன்ன எம்.ஜி.ஆர். பெயராலே, அவர் ஆரம்பித்த ஒரு கட்சியைக் கைப்பற்றிக்கொண்டு, அதிலேயிருந்து, அவருடைய வழியிலேயிருந்து திசை மாறிச் சென்று, இந்த மன்றம் எப்படி அசிங்கப்படுத்தப்பட்டது என்பதற்காக நான் அதைக் குறிப்பிட்டேன்.

அதுமட்டுமல்ல, இந்தச் சட்டமன்றத்திற்கு உள்ளே சட்டமன்ற உறுப்பினர்கள்தான் வந்து உட்கார வேண்டும். அதிகாரிகளுக்கு என்று தனி இருக்கைகள் இருக்கின்றன. பத்திரிகையாளர்களுக்கு என்று தனி பத்திரிகையாளர்கள் இருக்கைகள் இருக்கின்றன. ஏன், இன்னும் யார் வந்தாலும் சரி, வெளி நாட்டிலிருந்து தூதர்கள் வந்தால்கூட, எவ்வளவு பெரிய High dignitaries-ஆக இருந்தாலும் சரி, அவர்களுக்கெல்லாம்-ஏன் எலிசபெத் மகாராணியே வந்தாலும், மேலே மாடத்திலேயிருந்துதான் பார்க்க வேண்டும். ஆனால் உள்ளூர் மகாராணிக்கு இங்கே இடம் தரப்பட்டது. ஜெயலலிதாவினுடைய தோழிக்கு துணை சபாநாயகர் உட்கார்ந்து இருக்கின்ற இடத்திலே. நாங்கள் யாரும் கேள்வியே கேட்க முடியாது. கேட்டால் நாங்கள் அப்புறப்படுத்தப்படுவோம். துணை சபாநாயகர் இருக்கையிலே ஜெயலலிதாவினுடைய தோழி அமர்த்தப்பட்ட காலம். இந்தச் சட்டமன்றம் அப்படி களங்கப்படுத்தப்பட்ட காலம் எல்லாம் இருந்தது. இப்படி எதிர்க்கட்சிகளுக்கு எந்த வாய்ப்புமே தரப்படாமல், நாங்கள் எல்லாம் பேச ஆரம்பித்தாலே போதும். அதாவது அரசாங்கத்தைப் பற்றி, இப்போது என்ன வேண்டுமானாலும் பேசலாம். அமைச்சர்கள் பதில் சொல்கிறார்கள், முதலமைச்சர் பதில் சொல்கிறார். இப்போது என்ன வேண்டுமானாலும் குற்றச்சாட்டு சொல்ல முடிகிறது, பேச முடிகிறது. எதிர்க்கட்சிகளின் சார்பிலே எல்லோருக்கும் தகுந்த வாய்ப்பு தரப்படுகிறது. இந்த மாதிரி எல்லாம் அந்த ஐந்து ஆண்டுகாலத்திலே நடந்ததே கிடையாது. நானும், பரிதியும் எழுந்துகொண்டாலே ஏதாவது

[திரு. எஸ். திருநாவுக்கரசு] [1999 மார்ச் 25

இரண்டு வார்த்தைகள் பேசிய உடனேயே சபாநாயகர் எழுந்துகொண்டுவிடுவார். நான் நிற்கிறேன், உட்காருங்கள், உட்காருங்கள் என்று சொல்லி விடுவார். நம்முடைய அப்துல் லத்தீப் சொன்னார்கள். Speaker யார் என்றால், பேசாமல் இருப்பவர் என்று சொன்னார். அது உங்களுக்கு; அந்த ஐந்து ஆண்டுகாலம் அவரே சிரித்துக் கொண்டு, அவரே பாட்டு பாடிக்கொண்டு, அவரே பேசிக் கொண்டிருப்பார் முன்னாள் சபாநாயகர்.

முற்பகல் 10-45

நானே இந்தச் சட்டமன்றத்தில் கேட்டேன். என்னங்க, நீங்கள் உங்கள் பாட்டுக்கு பி.எஸ்.வீரப்பா மாதிரி மேலே உட்கார்ந்து சிரித்துக் கொண்டிருக்கிறீர்களே என்று இந்தச் சட்டசபையிலே பேசினேன். எங்களை எல்லாம் பேசவே விடாமல் வெளியேற்றப்பட்ட அந்தக் காலம் எல்லாம் இருந்தது. எனவே, அப்படி நடந்த ஒரு சபைக்கு, அந்த ஆட்சிக்குத் தலைமையேற்று முதலமைச்சராக இருந்து நடத்திக்கொண்டிருந்த செல்வி ஜெயலலிதா, இன்றைக்கு இந்த வெற்று அறிக்கைகள் மூலமாக வாழ்கிறார். மக்களைச் சந்திப்பதே கிடையாது. 3 வருடங்கள் ஆயிற்று, 3 வருடங்களில் இரண்டே இரண்டு கூட்டங்களுக்குத்தான் போயிருக்கிறார். தன் வீட்டுக்குள்ளேயே இருந்துகொண்டு ஒரு நாளைக்கு 3 வேளை உணவு, 6 வேளை அறிக்கை (மேசையைத் தட்டும் ஒலி) என்று மாற்றி மாற்றி அறிக்கை விட்டுக்கொண்டு, இந்த அறிக்கைகளின் வாயிலாகவே நாட்டு மக்களைத் திசை திருப்ப முடியும், ஏமாற்ற முடியும், தவறான செய்திகளைப் பரப்பி அவர்களைத் தன்பக்கம் இழுத்துச் செல்ல முடியும் என்கிற தவறான எண்ணத்தின் அடிப்படையில், எவ்வளவோ அறிக்கைகளை விடுகிறார். அதுபற்றிப் பிரச்சினையில்லை. வெளியிலே இருக்கிறார்கள். அதனால் அறிக்கை விடட்டும். பிரச்சினையில்லை. ஆனால் இந்தச் சட்டமன்ற சம்பவங்களைக்கூட திரித்தும், மாற்றியும் சட்டமன்ற நிகழ்ச்சிகளுக்கு உள்நோக்கம் கற்பித்தும், உங்களுக்குக் களங்கம் கற்பித்தும், வெளியிட்டிருக்கிற அறிக்கை என்பது உள்நோக்கம் உடையது. சட்டமன்றத்தினுடைய மாண்பைக் குலைக்கக்கூடியது. மரபுகளை மீறக்கூடியது, களங்கம் ஏற்படுத்தக் கூடியது, உரிமையை மீறக்கூடியது. எனவே, அவருடைய அறிக்கையை உரிமைக் குழுவிற்கு அனுப்பி விசாரிக்க வேண்டுமென்று நான் கேட்டு அமர்கிறேன்.



1999 மார்ச் 25]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நான் தீர்ப்பு வழங்க இருக்கின்றேன். அவை முன்னவர் அவர்கள் ஏதாவது சொல்ல வேண்டுமென்றால் சொல்லலாம்.

***மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு திருநாவுக்கரசு அவர்கள் கொண்டுவந்த இந்த உரிமை மீறல் தீர்மானம், உரிமை மீறல் ஆய்வுக் குழுவுக்கு அனுப்பவேண்டிய தகுதி உடையதாக, வெளிப்படையாகவே தெரிகிறது. குறிப்பாக இந்தச் சட்டமன்றம் எடுக்கிற முடிவுகள், சட்டமன்றத்தினுடைய தலைவராக இருக்கிற தாங்கள் அறிவிக்கிற அறிவிப்புகள், இவை எல்லாம் தங்களுடைய தனிப்பட்ட தீர்ப்பு என்ற முறையிலேதான் கருதப்பட வேண்டுமே தவிர, எந்தவொரு காரணத்தினாலேயும் தாங்கள் அளிக்கிற தீர்ப்பு இன்னொருவர் தூண்டுதலால் நடைபெற்றது என்றோ, சட்டத்தை மீறி தாங்கள் தீர்ப்பளித்ததாகவோ, அப்படி அளிக்கத் தாங்கள் தயங்கியதற்குப் பின்னால் முதலமைச்சரின் வற்புறுத்தல் காரணமாகத் தீர்ப்பளித்ததாகவோ சொல்கிற அத்தனையும், இந்தச் சட்டப் பேரவையை அவமதிக்கிற, சட்ட பேரவையினுடைய கண்ணியத்தைக் குறைக்கிற ஒரு இழிவான செயலாகும்.

யாருடைய அறிக்கையாக இருந்தாலும், கருத்தாக இருந்தாலும் அவரவருடைய தரத்திற்கு ஏற்பத்தான் அந்த அறிக்கை மதிக்கப்படும் என்பதை நான் அறிந்தவன் என்று சொன்னாலும்கூட, பல முறை தவறாக, பலமுறை உண்மைக்கு மாறாக, செய்திகளை இட்டுக்கட்டி அறிக்கை வெளியிடுகிறபோது, அந்த அறிக்கைகள் அரிப்பினுடைய விளைவாக வந்ததாகத்தான் கருதப்படுமே தவிர (மேசையைத் தட்டும் ஒலி) அறிக்கையாகவே கருதப்படாது, மதிக்கப்படாது என்பது இயற்கையான உண்மையாக இருந்தாலும்கூட, சட்டப் பேரவையினுடைய கண்ணியத்திற்கு மாறாக, சட்டப் பேரவையில் நடந்ததைக் குறித்து, சட்டப் பேரவையில் இடம் பெறாத ஒருவர், சட்டப் பேரவை நிகழ்ச்சியைக் காணாத ஒருவர், கண்டதுபோல் கருத்து அறிவித்து, அதன்மூலமாக ஓர் இழுக்கை, களங்கத்தை, இந்த அவை மீது சுமத்துவது, இந்த அவையினுடைய மதிப்பிற்கு மிகப் பெரிய கேடு செய்வதாகும். அந்தக் கேடுகளைச் செய்வதற்குத் தொடர்ந்து அனுமதியில்லை என்பதை அவர்கள் உணரச் செய்வதற்காக இதை உரிமைக் குழுவிற்கு அனுப்பி விசாரிக்க வேண்டுமென்று நான் தங்களைப் பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

[1999 மார்ச் 25

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திருநாவுக்கரசு அவர்கள் இந்த உரிமை மீறல் பிரச்சினை மீது பல கருத்துக்களைச் சொன்னார்கள். அவர் ஒரு முன்னாள் துணை சபாநாயகர் என்ற முறையிலே, அவருடைய தலைவர் மீது எந்த உணர்வோடு இருந்தார் என்பதைச் சொன்னார். அவர் எந்த உணர்விலே இருந்தாரோ, என்னுடைய தலைவரைப் பொறுத்தவரையில் அதே உணர்வுதான் எனக்கு என்று நான் வெளிப்படையாகவே (மேசையைத் தட்டும் ஒலி) தெரிவிக்க விரும்புகின்றேன். ஆனால், இந்த இருக்கையிலே என்னை அமர்த்திய காலத்தில், தன்னுடைய விருப்பம், "நான் நடுநிலையாக நடக்க வேண்டுமென்ற ஒரே விருப்பம்" என்று என்னுடைய தலைவர் அவர்கள் சொன்னதை நான் இன்றல்ல, பலமுறை சொல்லியிருக்கிறேன்.

முற்பகல் 10-50

அவைக்கு வெளியே, நானும் திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பிலே தேர்ந்தெடுக்கப்பட்ட ஒரு சட்டமன்ற உறுப்பினர் என்ற முறையில், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கிழித்த கோட்டைத் தாண்ட மாட்டேன். ஆனால், அவையிலே நான் நடுநிலையோடு நடக்க வேண்டும் என்ற அவர் விருப்பத்திற்கேற்ப என்னால் முடிந்தவரை செய்து கொண்டிருக்கிறேன். மாண்புமிகு முதலமைச்சரே உத்தரவு போட்டார் என்று ஓர் உறுப்பினர் சொன்னார் என்று நம்முடைய திரு. திருநாவுக்கரசு அவர்கள் சொன்னார்கள். அந்த உறுப்பினர் வேறு யாரும் அல்ல, நம்முடைய நண்பர் திரு. தாமரைக்கனி அவர்கள்தான். நான் அவருக்குப் பதில் சொல்லும்போதுநான் சொன்னேன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் எனக்கு உத்தரவு போட முடியாது என்று சொன்னேன். திரு. திருநாவுக்கரசு அவர்கள் சொன்னதைப்போல ஓர் அவமரியாதையாகச் சொல்லவில்லை. மாண்புமிகு முதலமைச்சர் சட்டப் பேரவைத் தலைவருக்கு உத்தரவு போட முடியாது; கலைஞர் அவர்கள் P.T.R.-க்கு எந்த உத்தரவு வேண்டுமானாலும் போடலாம். (மேசையைத் தட்டும் பலத்த ஒலி) அதைத் தலைமேற்கொண்டு நான் ஏற்றுக்கொள்வேன். இதுதான் வேறுபாடு.

இந்த நிகழ்ச்சியைப் பொறுத்தவரையில் நூற்றுக்கு நூறு அபாண்டமான குற்றச்சாட்டு. வரிசையாக உங்களுக்குச் சொல்ல முடியும். திரு. தாமரைக்கனி அவர்களை கைது செய்ய வேண்டும் என்று, நான் சொன்ன நேரத்திலே மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்



1999 மார்ச் 25] [பேரவைத் தலைவர்]

அவையிலே இல்லை. இன்னும் சொல்லப்போனால், அன்று அவர் அவைக்கே வரவில்லை. எனவே, மாண்புமிகு அமைச்சர் வீரபாண்டியார் அவர்கள் காயமுற்றதைக் கேள்விப்பட்டு, என்னுடைய அறையிலே அவர்களைப் பார்க்க வந்தார்கள். இங்கே பேசிய பல்வேறு கட்சித் தலைவர்கள், உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று சொன்ன காரணத்தினால் நான் இந்த இருக்கையிலேயிருந்து அறிவித்தேன். திரு. தாமரைக்கனி அவர்களைக் கைது செய்யச் சொல்லி உத்தரவு போடப் போகிறேன் என்று அறிவித்தேன். ஆகவே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இந்த இடத்திலேயே இல்லை; எனக்கு சொல்லக்கூடிய இடத்திலும் அன்று அவர் இல்லை.

இரண்டாவது உத்தரவு—நான் ஏற்கெனவே பல முறை சொன்னதைப் போல—கைது செய்யும்பட்சத்தில் திரு. தாமரைக்கனியை என்ன செய்வது என்று Police Commissioner என்னைக் கேட்டதற்குத்நான் இரண்டாவது உத்தரவைப் பிறப்பித்தேன். அதுகூட சட்டசபை இல்லாத நேரத்திலே பிறப்பித்த உத்தரவு. இந்தத் தண்டனையைப் பொறுத்தவரையில், எல்லாக் கட்சித் தலைவர்களையும் என்னுடைய அறைக்கு அழைத்து, அங்கே பேசி, எடுக்கப்பட்ட முடிவு ஆகும்.

கட்சித் தலைவர்கள் கூட்டத்திலே பேசியதை வெளியே சொல்லக்கூடாது என்ற ஒரு மரபு இருந்தாலும், இந்தச் சூழ்நிலையில் ஓர் உண்மையைச் சொல்லியாக வேண்டும். திரு. தாமரைக்கனி அவர்களுக்கு 15 நாட்கள் தண்டனை கொடுக்க வேண்டும் என்று ஒருமனதாக நாங்கள் எல்லோரும் முடிவெடுத்த நேரத்தில், அங்கேயிருந்த தலைவர்கள் எல்லோருக்கும் தெரியும்; மாண்புமிகு முதலமைச்சருக்கு அதில் விருப்பம் இல்லை; இது அதிகம் என்றுகூட அவர்கள் சொன்னார்கள். ஆகவே மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இந்தத் தண்டனையைக் கொடுக்க வேண்டும் என்று என்னைக் கட்டாயப்படுத்தி, இந்த உத்தரவை நான் கொடுத்தேன் என்று சொல்லுவது, அப்பட்டமான பொய். ஏற்கெனவே, திரு. லத்தீப் அவர்களும், திரு. திருநாவுக்கரசு அவர்களும் இரண்டு நாட்களுக்கு முன்னால் கொடுத்த உரிமைப் பிரச்சினைகளை, இந்த வம்பைத் தொடர்ந்து வளர்க்க வேண்டாம், இது ஒரு பெரிய பிரச்சினையாக அன்றாடம் பத்திரிகைகளிலே வரும் என்பதற்காக நான் அந்த உரிமைப் பிரச்சினைகளை ஏற்றுக்கொள்ளவில்லை என்று சொன்னேன். இன்று மறுபடியும் ஓர் அறிக்கை மூலமாக இப்படிப்பட்ட அப்பட்டமான பொய்களைச் சொல்கின்ற காரணத்தினால், இப்போது அந்த உரிமைப்

[பேரவைத் தலைவர்] [1999 மார்ச் 25

பிரச்சினையை எடுத்துக்கொள்ளலாம் என்று கருதுகின்றேன். நான் சொன்ன காரணங்களுக்காக, நிச்சயமாக அதிலே உண்மையில்லை. ஆகவே, பேரவை விதி 226-ன்படி இந்தப் பிரச்சினையை உரிமைக் குழுவிற்கு அனுப்பி, அவர்கள் தீர விசாரித்து ஓர் அறிக்கையைக் கொடுக்க வேண்டும் என்று நான் உத்தரவிடுகிறேன். (மேசையைத் தட்டும் பலத்த ஒலி)

### (ஆ) சட்டத் துறை அமைச்சர் பேரவையில் தன்னைத் தாக்கியதாக திரு. சொ. கருப்பசாமி தெரிவித்துள்ள கருத்து

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அடுத்து, மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் அவர்கள்.

முற்பகல் **10-55**

**மாண்புமிகு திரு. ஆலடி அருணா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு பிரச்சினை குறித்து உரிமைக் குழுவிற்கு அனுப்ப வேண்டும் என்று நானும் வேண்டியிருக்கிறேன். கடந்த 22 ஆம் தேதி மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர், மாண்புமிகு நாயனாக்கனி அவர்களால் தாக்கப்பட்டார். அப்படியொரு மோசமான சூழ்நிலை உருவாவதற்கு மாண்புமிகு உறுப்பினர் சொ. கருப்பசாமியும் காரணம் என்பதை இந்த அவை நல்லமுறையிலே அறியும்.

இந்தத் தாக்கப்பட்ட சம்பவம் நடந்தபோது நான் அவையிலே இல்லை. அப்படி இல்லை என்பதற்காக உண்மையிலே நான் வெட்கப்படுகின்றேன். வருந்தப்படுகிறேன். என்னுடைய சக அமைச்சர் தாக்கப்படும்போது ஆறுதலுக்காகக்கூட அந்த நேரம் இல்லாமல் இருந்தேனே என்று என்னுடைய மனசாட்சியே என்னைக் குத்திக்கொண்டிருக்கிறது. ஆனால், தாக்கப்பட்ட சம்பவம் அறையிலிருந்த எனக்குச் சொல்லப்பட்டபொழுது அவசரம் அவசரமாக அவைக்கு வந்தேன். அப்பொழுது அவையினுடைய முன்னவர், நம்முடைய மாண்புமிகு கல்வித் துறை அமைச்சர், பேராசிரியர் அவர்கள், அந்த இருவருக்கும் எத்தகைய தண்டனை வழங்க வேண்டும் என்ற தீர்மானத்தைப் படித்துக் கொண்டிருந்தார். அப்பொழுதுதான் (குறுக்கீடு) மன்னிக்கவும், ஆற்காடு வீராசாமி அவர்கள் அந்தத் தீர்மானத்தைப் படித்துக் கொண்டிருந்தார். அந்த நேரத்தில்தான் நான் உள்ளேயே வந்தேன். வந்தவுடன் அவருடைய தீர்மானம், "இந்தத் தொடர் கூட்டம் முடிகின்ற வரை அவர்கள் இரண்டு பேரும் இந்த அவை நடவடிக்கைகளில் கலந்து கொள்ளக் கூடாது" என்றுதான் இருந்தது.



1999 மார்ச் 25] [திரு. ஆலடி அருணா]

அதிலே மனநிறைவடையாத நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் தீரன் அவர்கள் எழுந்திருந்து, இவ்வளவுதானா தண்டனை? அவர்கள் பெரிய Criminal குற்றத்தையல்லவா இந்த அவைக்குள்ளே செய்திருக்கிறார்கள். இந்த அளவுக்கு மோசமாக நடந்தவர்களுக்கு மிகச் சாதாரண தண்டனையைக் கொடுக்கிறீர்களே என்று எழுந்து சொன்னார். அதற்கு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் - நீங்கள் சொன்னீர்கள், நான் அதைப்பற்றி நாளைக்கு ஆலோசிக்கிறேன். வேறு தண்டனை எப்படிக் கொடுப்பது என்பதற்கு எனக்கு அவகாசம் கொடுங்கள் என்று சொன்னீர்கள்.

அந்த நேரத்திலேதான் நான் அவையில் எழுந்து சொன்னேன். இந்த அவையில் உடனடியாகத் தண்டிப்பதற்கு உரிமை இருக்கிறது. இது ஒரு Soverign Body — இறையாண்மை கொண்ட ஓர் அவை. உரிமை மீறல் குழுவுக்கு அனுப்பித்தான் பிரச்சினைக்கு முடிவு காண வேண்டும் என்பதல்ல; எதிர்பாராத ஒரு சம்பவம், மோசமான சம்பவம், கொடுமையான சம்பவம் நடக்கின்ற நேரத்தில் இந்த அவையே முடிவெடுத்துத் தீர்ப்புச் சொல்லலாம்" என்ற கருத்தை அந்த நேரத்தில் சொன்னேன். இந்த ஒன்றுதான் நான் சொன்ன - அந்த நிகழ்ச்சி சம்பந்தமாகப் பங்கு கொண்ட என்னுடைய பகுதியாகும்.

இந்த கருத்தைக்கூட இன்றையதினம் நாடாளுமன்றத்திலே Secretary-General ஆக இருந்த Subash Kashyap அவர்கள் 'The Hindu' பத்திரிகையிலே ஒரு கட்டுரையிலே எழுதி இருக்கிறார்கள்.

"...Under the Privilege Law, they are guilty of breach of parliamentary privilege and contempt of the House and deserve severe punishment which can extend to sending them to prison for the rest of the session days and in extreme cases even expulsion from the membership of the House.

...Where the acts of breach of privilege and Contempt of House occur in full view of the House and its members, it is not necessary to refer the matter to the Privilege Committee etc.,.."

**HON. SPEAKER:** Please confine yourself to your privilege against the Hon. Member.

**HON. THIRU ALADI ARUNA:**"..for any enquiry or investigation and the Assembly is within its rights to pronounce its order of punishment through its resolution" என்று சொல்லப்பட்டிருக்கிறது. இந்தக் கருத்தை

[திரு. ஆலடி அருணா] [1999 மார்ச் 25

மையமாக வைத்துத்தான் சொன்னேன். இதைத் தவிர நான் எதுவும் பேசவும் இல்லை; செய்யவும் இல்லை. ஆனால், மாண்புமிகு உறுப்பினர் கருப்பசாமி அவர்கள் தன்னை அடித்ததாக, தாக்கியதாக அப்பல்லோ மருத்துவமனையிலே போய்ச் சேர்ந்தார். அவர் மீது எந்தக் காயமும் இல்லை, அவரை அடித்ததற்கான எந்த அறிகுறியும் இல்லை; சிகிச்சை அளிக்க வேண்டிய அவசியமில்லை என்று அப்பல்லோ மருத்துவமனையிலேயிருந்து அவரை வெளியேற்றியிருக்கிறார்கள். அதற்குப் பிறகு பூந்தமல்லி நெடுஞ்சாலையில் இருக்கிற குமரன் மருத்துவமனையிலே போய் அவர் தானாகவே சேர்ந்திருக்கிறார். அது அவருடைய விருப்பம். அதைப்பற்றி எனக்கு பிரச்சினை இல்லை.

அங்கே நிருபருக்கு அளித்த பேட்டியின்போது அவர் என்னைப் பற்றிக் குறிப்பிட்டிருக்கிறார். அதைத்தான் இந்த மாமன்றத்தின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். அவர் குறிப்பிட்டிருப்பதாவது; தினமலர் பத்திரிகையிலே முதல் பக்கத்திலே வெளியாகியிருக்கிறது. "அப்போது எனக்கு ஆதரவாக நாமக்கனி பேசினார். நான் தாழ்த்தப்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்தவன் என்பதால், வீரபாண்டி ஆறுமுகம் என்னை ஜாதிப் பெயரைச் சொல்லித் திட்டினார். தாமரைக்கனியை ஆளுங்கட்சியினர் தாக்கினர்; நான் அவரைக் காப்பாற்ற முற்பட்டேன். அமைச்சர்கள் வீரபாண்டி ஆறுமுகம், நேரு, பொன்முடி, துரைமுருகன் மற்றும் ஆலடி அருணா ஆகிய ஐந்து பேரும் எங்களைத் தாக்கினர்."

இதோடு விட்டுவிடவில்லை. "எனது ஜாதி பெயரை இழிவாகக் குறிப்பிட்டு, 'ஏண்டா...பயலே, இன்னும் நீ தொலையலையாடா' என்று ஆவேசத்தோடு கத்திக் கொண்டு, அமைச்சர் ஆலடி அருணா என்னைச் செருப்புக் காலால் மிதித்தார்' என்று சொல்லியிருக்கிறார்.

அவையிலேயே நான் இல்லை. எப்படிப் பகிரங்கமாக, உண்மைக்கு மாறாக, திட்டமிட்டு சதிகள், பழிகள் சுமத்தப்படுகின்றன என்பதை இந்த மாமன்றமும் உணர வேண்டும், பத்திரிகைகளும் இதையெல்லாம் வெளியிட வேண்டும்.

இதே கருத்தை மையமாக வைத்துத்தான் இதை இந்த அளவுக்குப் பச்சையாக அவருடைய பேட்டியை வெளியிடாவிட்டாலும், 'Hindu' பத்திரிகை என்ன வெளியிட்டிருக்கிறது என்றால் '..He charged that he was beaten inside the House by a Minister because of a personal rivalry. As both hailed from the same district"....



1999 மார்ச் 25] [திரு. ஆலடி அருணா]

முற்பகல் 11-00

என் பெயரைச் சொல்லாமல் மறைமுகமாகச் சொல்கிறார்கள். "இரண்டுபேரும் ஒரே மாவட்டத்தைச் சேர்ந்தவர்கள். ...the commotion in the House was utilised to settle their personal scores..``

அவர்களுடைய தனிப் பகையைத் தீர்த்துக் கொள்வதற்கு இந்தச் சூழ்நிலையைப் பயன்படுத்திக் கொண்டார்கள் என்று 'Hindu' பத்திரிகையில் வெளியாகியிருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆதிதிராவிட மக்கள் மத்தியில் அதிகமான பற்றுக்கொண்டவனே நான்தான். என்னைப் பற்றி என்னுடைய அரசியல் எதிரிகள் சொல்கிற குறையேகூட, அருணா எப்போதுமே ஆதிதிராவிடர்களுக்கே பேசிக்கொண்டு இருக்கிறார், அவர்களுக்குப் பக்கபலமாக இருக்கிறார் என்றெல்லாம் என்மேலே குறை சொல்லிக்கொண்டிருக்கிறார்கள். அதற்காக நான் கவலைப்படவில்லை. அவர்கள் நசுக்கப்பட்டவர்கள், ஒடுக்கப்பட்டவர்கள். சமுதாயத்தில் அவர்களை முன்னுக்குக் கொண்டுவர நாமெல்லாம் கடமைப்பட்டிருக்கிறோம். ஆனால் அப்படி அந்த அளவுக்கு அனுதாபத்தோடும், பொறுமையோடும், அவர்களை அரவணைத்துச் செல்கிற நான், அவரை ஜாதிப் பெயரை சொல்லித் திட்டினேன், அதுவும் உதைத்தேன் என்று சொல்வது, என்னை மட்டும் களங்கப்படுத்துவதாக, அவமதிப்பதாக, கேவலப்படுத்துவதாக நான் கருதவில்லை. இது என் மாவட்டத்தில் எவ்வளவு பெரிய பிரதிபலிப்பை உண்டாக்கும் என்பதை இந்த அவை சிந்தித்துப் பார்க்கக் கடமைப்பட்டிருக்கின்றது. ஆகவே அவர் இந்த அவையை அவமதித்திருக்கிறார். இந்த அவையில் நடக்காத சம்பவத்தை நடந்ததாகச் சொல்லியிருக்கிறார். எனவே உண்மைக்கு மாறாகச் சொல்லியிருக்கிறார். இது மாதிரி வெளியில் நடந்த சம்பவம் பற்றி அவர் சொல்லியிருப்பாரேயானால், நான் அவரை வேறு விதத்தில் - நீதிமன்றத்திலே சந்தித்திருக்க முடியும். ஆனால் இந்த அவைக்குள்ளே நடந்த சம்பவத்தைப் பற்றி தவறாகச் சொல்கிறார், இட்டுக்கட்டிச் சொல்கிறார். இல்லாததைச் சொல்கிறார், பழியைச் சுமத்திச் சொல்கிறார், எனவே அவை உரிமையை மீறியிருக்கிறார். உண்மைக்கு புறம்பாகச் சொல்லியிருக்கிறார்; அவையை அவமதித்திருக்கிறார். எனவே, இதனுடைய உண்மையை அறிய, அவருக்கும் நியாயமான வாய்ப்பை நீங்கள் கொடுத்து, இதை உரிமைக் குழுவிற்கு அனுப்பி, நல்ல தீர்ப்பைப் பெற்றுத் தாருங்கள் என்று தங்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் கருப்பசாமி அவர்கள்மீது மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் ஆலடி அருணா அவர்கள் எழுப்பியுள்ள இந்த உரிமை மீறல் பிரச்சினை, நிச்சயமாகத் தங்களுடைய அனுமதியோடு உரிமைக் குழுவிற்கு அனுப்பப்பட வேண்டிய ஒன்று என்பதை நானும் திட்டவட்டமாகத் தெரிவித்துக் கொள்ள விரும்புகின்றேன்.

அதேநேரத்தில், மாண்புமிகு உறுப்பினர் கருப்பசாமியைப் போன்றவர்கள் வெளியிலே எந்த அளவுக்கு இந்த அவையில் நடக்காத செய்திகளையெல்லாம் இட்டுக்கட்டிச் சொல்கிறார்கள், அபாண்டமாகப் புளுகுகிறார்கள் என்பதற்கு, கடந்த இரண்டு, மூன்று நாட்களின் ஏடுகளை எடுத்துப் பார்த்தாலே மிக நன்றாக நாம் புரிந்துகொள்ள முடியும். திரு. அருணா அவர்கள் கொண்டு வந்த உரிமைப் பிரச்சினை என்பதற்காக மாத்திரமல்ல, நாட்டில் இன்று மூட்டிவிடப்படுகிற ஜாதி மதச் சச்சரவுகள், கலவரங்கள், இவற்றிற்கு ஒரு தூண்டுகோலாக இந்த அபாண்டம், இந்த உண்மைக்கு மாறான செய்தி அமைந்துவிடக்கூடும்; அப்படி அமைந்துவிடக் கூடாது என்கின்ற அச்ச உணர்வின் காரணமாகவும் நான் இந்தப் பிரச்சினையிலே சில வார்த்தைகளைக் கூறக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

ஜாதியின் பெயரால், அதிலும் குறிப்பாக, கருப்பசாமி அவர்கள் சார்ந்த ஜாதியின் பெயரால், இழிவாக, ஓர் அமைச்சர் சட்டப் பேரவையிலேயே குறிப்பிட்டார் என்று, ஒரு கதை புனைந்தெடுத்த, உண்மைக்கு மாறான செய்தியைச் சொல்வதிலிருந்து, நியாயமாக வெளியிலே கடைப்பிடிக்கப்பட வேண்டிய P.C.R. சட்டம்கூட வலிமையிழந்து விடுமோ என்கிற பயமும் எனக்கு ஏற்பட்டிருக்கின்றது. இப்போது பலர், இந்த P.C.R. சட்டமே கூடாது என்று வாதிட்டுக் கொண்டிருக்கிறார்கள். ஆனால், அந்தக் கருத்து இந்த அரசுக்கு உடன்பாடான கருத்து அல்ல என்பதை வெளிப்படையாகப் பல முறை தெரிவித்திருக்கின்றோம். இருந்தாலும் இதுபோன்ற நிகழ்வுகள், ஒரு சட்டமன்றத்தினுடைய மாண்புமிகு உறுப்பினரே, வேண்டுமென்றே, திட்டமிட்டு ஓர் அமைச்சர் மீது அவதூறு கூறுவது மாத்திரமல்ல, ஜாதிப் பிரச்சினையைக் கிளப்பிவிடக்கூடிய ஒரு நிலையை ஏற்படுத்துவது நிச்சயமாக உரிமைப் பிரச்சினைக்கு உட்பட்ட ஒன்றேயாகும். இந்த நிகழ்வுகள் - தாமரைக்கனியினுடைய நிகழ்வுகள்-





சட்டப் பேரவையில் நடைபெற்ற பிறகு, தொடர்ந்து பல்வேறான அவதூறுச் செய்திகள், உண்மைக்கு மாறான செய்திகள் இந்த அவையைப் பற்றியும், மாண்புமிகு பேரவைத் தலைவராகிய தங்களைப் பற்றியும், அமைச்சர்களைப் பற்றியும், இங்கேயிருக்கின்ற அவை உறுப்பினர்களைப் பற்றியும் வெளிவந்து கொண்டிருக்கின்றன. பத்திரிகைகளும் சற்றும் யோசிக்காமல், சாதியின் பெயரைச் சொல்லி அமைச்சர் திட்டினார் என்று சொன்ன ஒரு பொய்யான செய்தியை வெளியிட்டு, ஒரு பரபரப்பை உண்டாக்குவதற்கு, அவர்களும்-பத்திரிகைக்காரர்களும் காரணமாகிவிடுகிறார்கள் என்பதை எண்ணும்போது, பத்திரிகா தர்மத்தை எண்ணிச் சிரிப்பதா, அழுவதா என்றே எனக்குப் புரியவில்லை.

முற்பகல் 11-05

கருப்பசாமி அவர்கள் எந்த அளவுக்கு உண்மைகளைத் திரித்துக் கூறுபவர் என்பதற்கு, இரண்டு பத்திரிகைகளில் வந்த செய்திகளை மாத்திரம் இங்கே எடுத்துக்காட்ட விரும்புகிறேன். என் கையிலே இருப்பது மாலை முரசு பத்திரிகை. 23-3-1999 செவ்வாய்க்கிழமை சென்னையிலே வெளிவந்த பத்திரிகை. வெளியூர்களிலே 24 ஆம் தேதி வெளியிடப்பட்ட பத்திரிகை. அந்தப் பத்திரிகையிலே, முதல் பக்கத்தில் Indian Express-ஸிலும், தினமணியிலும் வந்த படத்தை reproduce செய்து - மறுபிரசுரம் செய்து வெளியிட்டிருக்கிறார்கள். அதிலே, மாண்புமிகு உறுப்பினர் கருப்பசாமி அவர்கள் கை முழுவதும், மணிக்கட்டிலேயிருந்து, தோள்பட்டை வரையிலே ஒரு கட்டுப்போட்டுக் கொண்டு படுத்திருக்கின்ற அந்தக் காட்சி படமாக வெளியிடப்பட்டிருக்கிறது, மாலை முரசு பத்திரிகையிலே. இதே படம், Indian Express, தினமணி போன்ற ஏடுகளிலும் வெளிவந்தது. இதற்குப் பிறகு, 25 ஆம் தேதி - இன்று வெளிவந்த 'கதிரவன்' பத்திரிகையில், அவர் குமரன் மருத்துவமனையிலிருந்து பேட்டி கொடுக்கிறார். குமரன் மருத்துவமனையைப் பற்றிய விவரங்களை நான் சொல்ல விரும்பவில்லை. அது யாருடைய மருத்துவமனை என்பதெல்லாம், அவையில் உள்ள விஷயம் தெரிந்த உறுப்பினர்களுக்கு நன்றாகத் தெரியும். அந்த மருத்துவமனையிலேயிருந்து பேட்டி கொடுக்கிறார். 23 ஆம் தேதி போடப்பட்ட கட்டு கையிலே இல்லை. வெறும் கையாகத்தான் இருக்கிறது. 23 ஆம் தேதி கை முழுவதும் போடப்பட்ட பேண்டேஜ், மணிக்கட்டில் இருந்து, தோள்பட்டை வரையிலே போடப்பட்ட பேண்டேஜை, காலையிலே 'கதிரவன்' பத்திரிகையிலே காணமுடியவில்லை. ஒருவேளை, கதிரவன் ஒளிபட்டு (சிரிப்பு)

பனித்துளி காய்ந்து விடுவதைப்போல, அந்தக் கட்டு காய்ந்து விட்டதோ, என்னவோ எனக்குத் தெரியவில்லை. அதிலே சொல்கிறார் அவர் - 'என்னை அமைச்சர் அடித்தார். அவர் அடித்ததில், செருப்புக் காலால் மிதித்ததில், முதுகு மீது மிதித்ததில் என் நடு முதுகில் எலும்பு முறிவு ஏற்பட்டு விட்டது' என்று. (சிரிப்பு) நடு முதுகில் எலும்பு முறிந்தால், இப்படி உட்கார்ந்து கொண்டு பேட்டி கொடுக்க முடியுமா என்பதை உண்மையிலேயே டாக்டருக்குப் படித்தவர்கள்தான் சொல்ல வேண்டும். ஏனென்றால், உண்மையிலேயே டாக்டருக்குப் படித்தவர்கள் என்பது வேறு; கையிலே இருக்கின்ற பணப் புழக்கத்தினாலே டாக்டர்கள் ஆனவர்கள் என்பது வேறு. நன்றாக நிமிர்ந்து உட்கார்ந்து, போட்டோவுக்கு pose கொடுத்துக்கொண்டு, என்னுடைய நடு முதுகில் எலும்பு முறிவு ஏற்பட்டு விட்டது என்று அவர் சொல்லியிருக்கிறார். எக்ஸ்ரே எடுக்கப்பட்டதால், நடு முதுகிலே எலும்பு முறிவு ஏற்பட்டது தெரிய வந்தது என்றும் அவர் குறிப்பிட்டிருக்கிறார். இப்படி இரண்டு நாட்களுக்குள்ளே ஒரு பெரிய பொய்யை, புனைசுருட்டை, அவதூறை, அண்டப் புளுகை, ஆகாசப் புளுகைச் சொல்கிறவர்கள், அவர்கள் அ.தி.மு.க.காரர்களாகத்தான் இருக்க முடியும்; வேறு யாராகவும் இருக்க முடியாது என்பதற்கு இதைவிட வேறு எடுத்துக்காட்டுத் தேவையில்லை என்றே நான் கருதுகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

இன்னொன்று, காலையில்கூட, தங்களுடைய அறையிலே இரண்டு, மூன்று நண்பர்களிடத்திலே — தாங்கள் இங்கு வந்த பிறகு, அங்கே பேசிக்கொண்டிருக்கும்போது, அவர்களிடத்திலே குறிப்பிட்டேன்.

மார்க்கபந்து என்கிற ஒரு நாடாளுமன்ற உறுப்பினர், அவர் ஓர் அறிக்கை விட்டிருக்கிறார். அதுவும் கதிரவன் பத்திரிகையிலே வந்திருக்கிறது. தாமரைக்கனி எப்படி வீரபாண்டி ஆறுமுகத்தை அடித்திருக்க முடியும் என்று. அவர் - மார்க்கபந்து - நல்ல வக்கீல், Bar Council தலைவர்கூட, எப்படி அடிக்க முடியும் என்று கேள்வி கேட்டு, அமைச்சர்கள் அமர்ந்திருக்கின்ற வரிசைக்கு முன் வரிசையிலே தாமரைக்கனிக்கு இடமில்லை, தாமரைக்கனி பின்வரிசையிலேதான் அமர்ந்திருக்கிறார், அவர் எப்படி வீரபாண்டி ஆறுமுகத்தைப் போய்த் தாக்கி இருக்க முடியும் என்று ஓர் அருமையான கேள்வியை மார்க்கபந்து அவர்கள் கேட்டிருக்கிறார்கள். அவர் இந்தச் சட்டசபைக்கே வந்து பார்த்ததில்லை போலும். அல்லது, ஒருவேளை அவர் பார்க்கவந்தபோது, தாமரைக்கனி வழக்கம்போல் தன்னுடைய முன்வரிசை இடத்தைவிட்டு, தன் நண்பர்களுடைய இடத்திற்குப்போய் உட்கார்ந்திருக்கக்கூடும். அதை வைத்துக்கொண்டு, அவருக்கு முன்





வரிசையிலே இடம் இல்லை என்று அவர் சொல்கிறார். இப்படிப் போட்டி போட்டுக்கொண்டு, ஒருவருக்கொருவர் பொய்ச்செய்திகளை வெளியிட்டு, அவை பத்திரிகைகளிலும் வெளிவருவதைக் காணும்போது, நான் உள்ளபடியே மிகுந்த வேதனைப்படுகிறேன்.

முற்பகல் 11-10

ஆலடி அருணா அவர்களானாலும் அல்லது வீரபாண்டி ஆறுமுகம் அவர்களானாலும், ஏன் இந்த அவையிலே இருக்கின்ற யாரானாலும், யாருமே ஒரு குறிப்பிட்ட சமுதாயத்தைப் பார்த்து, அந்தச் சமுதாயத்திலே பிறந்தவர்களைப் பார்த்து, அவர்களுடைய ஜாதியின் பெயரைக் குறிப்பிட்டுத் திட்டுகின்ற அளவிற்கு நாகரிகம் அற்றவர்கள் அல்லர். (மேசையைத் தட்டும் ஒலி) அத்தகைய நாத்தழும்பு ஏறியவர்களும் அல்லர். இன்னும் சொல்லப்போனால், எங்களைப் பொறுத்தவரையில், தந்தை பெரியார் அவர்களுடைய குருகுலத்திலே பயின்று, அறிஞர் அண்ணா அவர்களிடத்திலே பழகி, அவர்களுடைய இனிய இலட்சியங்களையெல்லாம் இதயத்திலே ஏந்திக் கொண்டிருக்கிற நாங்கள், எங்களைப் போன்ற ஒரு சட்டமன்ற உறுப்பினரைப் பார்த்து ஜாதியின் பெயரால் வசைமாரி பொழிந்தோம் என்று கூறுவது, இட்டுக்கட்டிய, அவதூறான திட்டமிட்ட பொய் என்பதை நிரூபிக்கின்ற வகையில், அவரை அழைத்து, அவருக்கு வாய்ப்பளித்து விசாரிக்கின்ற வகையில், இந்தப் பிரச்சினையை — மாண்புமிகு அமைச்சர் ஆலடி அருணா அவர்கள் எழுப்பியிருக்கின்ற இந்த உரிமைப் பிரச்சினையை — உரிமைக் குழுவிற்கு அனுப்பி வைக்கவேண்டுமென்று இந்த அவையின் சார்பாகத் தங்களை நான் மெத்தப் பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இந்தப் பிரச்சினையைப் பொறுத்தவரையில், மாண்புமிகு சட்ட அமைச்சர் அவர்கள் எடுத்துச் சொன்னதைப்போல, அவையின் விதிகளின்படி எந்த உறுப்பினர்மீது குற்றம்சாட்டி, உரிமைப் பிரச்சினை கொண்டு வரப்பட்டதோ அவருக்கு ஒரு வாய்ப்புக் கொடுக்க வேண்டுமென்று இருக்கிறது. இதிலே எனக்கு ஏற்பட்ட சிக்கல், மாண்புமிகு உறுப்பினர் கருப்பசாமி அவர்கள் இந்தக் கூட்டத்தொடர் முடிகின்ற வரையில் அவைக்கு வரக்கூடாது என்ற உத்தரவை நம்முடைய அவையே போட்டுவிட்டது. ஆகவே, இந்தத் தீர்ப்பு எந்த முறையிலே அமைய வேண்டுமென்று நான் சட்ட விதிகளைப் பார்த்து, பின்னால் தீர்ப்புச் சொல்வேன் என்பதை அவைக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

[1999 மார்ச் 25

**(இ) மாநிலங்களவை உறுப்பினர் திரு. மார்க்கபந்து அளித்துள்ள பத்திரிகைச் செய்தி**

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அடுத்து, மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. மீ.அ. வைதியலிங்கம், திரு. வ. அன்பழகன் ஆகியோர் மாநிலங்களவை உறுப்பினராக இருக்கின்ற திரு. மார்க்கபந்து மீது ஓர் உரிமை மீறல் பிரச்சினையைக் கொண்டு வந்தார்கள். அந்தப் பிரச்சினையைப் பற்றி மாண்புமிகு முதலமைச்சர் அவர்களே பேசிவிட்ட காரணத்தால் இவர்கள் கொடுத்த தீர்மானத்திற்கு அனுமதி மறுக்கின்றேன்.

## 5. சிறப்புக் கவன ஈர்ப்பு

### முன்னாள் முதல்வரின் Auditor இராஜசேகரன் தாக்கப்பட்டிருப்பது

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அடுத்து, Auditor இராஜசேகரன் தாக்கப்பட்டது குறித்து மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. ப. ரங்கநாதன், திரு. சி. ஞானசேகரன், திரு. அ. வெங்கடாசலம், திரு. வை. சிவபுண்ணியம், திரு. கே. சுப்பராயன், திரு. லா. சந்தானம், திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன், டாக்டர் க. கிருஷ்ணசாமி, பேராசிரியர் தீரன், திரு. டி. மணி, திரு. ஜி.கே. மணி, திரு. ஐ. கணேசன், திரு. எஸ். திருநாவுக்கரசு, திரு. ஜி. நிஜாமுதீன், டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன், திரு. ம. அப்துல் லத்தீப், திரு. நா. பெரியசாமி, திரு. பி. வெங்கடசாமி ஆகியோர் அறிவிப்புக் கொடுத்திருக்கிறார்கள். (மணியடிக்கப்பெற்றது) அவையிலே அமைதியாக இருக்கவேண்டும். கட்சிக்கு ஒருவர் என்ற முறையிலே, முதலில் திரு. ப. ரங்கநாதன் அவர்களைப் பேசுமாறு அழைக்கிறேன்.

***திரு. ப. ரங்கநாதன்**: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அண்மையில் Auditor இராஜசேகரன் அவர்களை அகில இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய பொதுச் செயலாளரும், முன்னாள் முதலமைச்சருமான செல்வி ஜெயலலிதா அவர்களும், அவருடைய தோழியார் திருமதி சசிகலா அவர்களும், தங்களுடைய போயஸ் தோட்டம் கோட்டையிலிருந்து ரவுடிகளை அனுப்பி, தனக்கு Auditor ஆகப் பணியாற்றிக் கொண்டிருந்த இராஜசேகரன் அவர்களைப் துப்பாக்கி முனையில் அழைத்து வந்தார்கள். அழைத்து வந்ததோடு, அவருடைய தம்பியை இராஜசேகரன் அவர்கள் தனக்குப் பின்னாலே காரிலே வரவேண்டுமென்று அவர்கள்

---



1999 மார்ச் 25] [திரு. ப. ரங்கநாதன்]

பணித்ததனுடைய காரணமாக அவருடைய தம்பியும் அவருக்குப் பின்னாலேயே அவரைத் தொடர்ந்து காரிலே போயஸ் தோட்டம் வந்திருக்கிறார். மகாதேவன் அவர்கள் இராஜசேகரனை அழைத்துவந்தபோது அங்கேயிருந்த காவலர்கள், அதாவது ஜெயலலிதா வீட்டிற்கு — அந்த போயஸ் தோட்டக் கோட்டைக்கு — காவலுக்கு இருந்த காவலர்கள், இராஜசேகரனிடம் பதிவேட்டிலே கையெழுத்து போட்டுவிட்டுத்தான் செல்ல வேண்டுமென்று கேட்டபொழுது, மகாதேவன் அவர்களும், மற்றும் இருவரும் சேர்ந்து, அவர் Auditor ஆக இருக்கிறார், ஆகவே அவரிடம் பதிவேட்டில் கையெழுத்துத் தேவையில்லை என்று கூறியதற்கு அங்கிருந்த காவலர்கள், யார் வந்தாலும் கையெழுத்து வாங்குகிற காவலர்கள், இராஜசேகரனிடம் மட்டும் அன்றைக்கு அவர்கள் வற்புறுத்திக் கூறியதன் காரணமாக கையெழுத்து வாங்கவில்லை. அதைப் பயன்படுத்திக்கொண்டு அங்கே இராஜசேகரன் அவர்களைச் செருப்பாலும், தடியாலும், காட்டுமிராண்டித்தனமாக ஜெயலலிதா அவர்களும், தோழி சசிகலா அவர்களும் தாக்கியிருக்கிறார்கள்.

முற்பகல் 11-15

அதோடு மட்டுமல்லாமல் மகாதேவன் அவர்களும், இன்னும் இரண்டு, மூன்று பேர்களும் சேர்ந்து, அவரைக் கடுமையாகத் தாக்கி, கொலை செய்கின்ற அளவுக்கு அவர் தாக்கப்பட்டு, மருத்துவமனையிலே கண் தெரியுமோ, தெரியாதோ என்ற சூழ்நிலையிலே அனுமதிக்கப்பட்டிருக்கிறார் என்பதையும் நான் இந்த நேரத்திலே கூறக் கடமைப்பட்டிருக்கிறேன். அவர் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டபோது எம்.ஜி.ஆர் அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய தலைவர், மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் திருநாவுக்கரசு அவர்கள், இராஜசேகரனை மருத்துவமனையிலே சென்று பார்த்து அவருக்கு ஆறுதலும் சொல்லி வந்திருக்கிறார்கள். அனைத்துப் பத்திரிகைகளிலும், அவர் கண் கட்டு போட்டிருப்பதைப் படம் எடுத்துப்போட்டு, செய்திகளை வெளியிட்டு இருக்கிறார்கள். நான் இதையெல்லாம் எதற்காகக் கூறுகிறேன் என்றால் இன்றைக்கு தமிழகத்திலே செல்வி ஜெயலலிதா அவர்கள் ஒரு ரவுடிக் கூட்டத்தை வைத்துக்கொண்டு தன்னை எதிர்ப்பவர்கள், தன்னை விமர்சனம் செய்பவர்கள் யாராக இருந்தாலும், அவர்களை அடக்கிவிடலாம் என்ற ஒரு மனோபாவத்தை வளர்த்துக் கொண்டிருக்கிறார்கள். இது எதைக் காட்டுகிறது என்றால், மறைந்த எம்.ஜி.ஆர். அவர்கள் நடித்து வெளிவந்த படம், ‘குலேபகாவலி’ என்ற படம் ஞாபகத்திற்கு வருகிறது.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

அந்தப் படத்திலே அவருக்கு உதவிகரமாக இருப்பதாக நடித்தவர் மறைந்த நடிகர் சந்திரபாபு அவர்கள். அந்தப் படத்தில் எம்.ஜி.ஆர் அவர்கள் ஒரு நாட்டினுடைய இளவரசராக வேடமிட்டு நடித்திருக்கிறார். அவர் தன்னுடைய நாட்டைவிட்டு வேறு ஒரு நாட்டிற்குப் பயணம் செய்கின்றபோது, இடையிலே இருக்கின்ற ஒரு நாடு, அந்த நாட்டினுடைய பெயர் மருதநாடு என்று கேள்விப்படுகிறேன்; அதுதான் என் ஞாபகத்தில் இருந்துவருகிறது. தவறாக இருக்கலாம். அந்த நாட்டினுடைய அரசியாக, அங்கே ஆளுகையில் இருப்பவர் - அந்த குலேபகாவலி படத்திலே ஹீரோயினாக நடித்த அஞ்சலி தேவி அவர்கள் என்று நினைக்கிறேன். (குறுக்கீடுகள்) சரி, டி.ஆர். இராஜகுமாரி நடித்திருக்கிறார். பெயர் தவறாக இருக்கலாம்; இருந்தாலும் பெயர் சொல்ல விரும்பவில்லை, ஆனால் அது எம்.ஜி.ஆர். நடித்தபடம். அங்கே இந்த நாட்டைக் கடந்து வேறு நாட்டுக்குச் சென்றபோது எம்.ஜி.ஆர். அவர்கள் குதிரையிலே பயணம் செய்கிறார்கள். அவரும், அவருடைய உதவியாளர் சந்திரபாபு அவர்களும் பயணம் செய்கிறார்கள். அப்போது இடையிலே மறித்து அங்கே காவலுக்கு இருந்த பெண் காவலர்கள் அவர்களைத் தடுத்து நிறுத்தி நீங்கள் எங்களுடைய எல்லையைத் தாண்டிச் செல்கிறீர்கள், உங்களை நாங்கள் கைது செய்கிறோம் என்று கைது செய்து....

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** இன்னும் நிறைய உறுப்பினர்கள் பேச வேண்டியிருக்கிறது. அதனால், உங்கள் உரையை சுருக்கமாகப் பேசி முடியுங்கள்.

**திரு. ப. ரங்கநாதன்:** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இது முக்கியமான பிரச்சினை. இப்போதுதான் கைது செய்த இடத்திற்கு வந்திருக்கிறேன். அவர்கள் கைது செய்து அந்த நாட்டினுடைய அரசி முன்பு தர்பார் மண்டபத்திலே நிறுத்துகிறார்கள். அங்கே ஆட்சி செய்து கொண்டிருக்கிற அந்த அரசி எங்களுடைய நாட்டினுடைய வழக்கப்படி, எங்களுடைய நாட்டிலே ஆண்கள்தான் வீட்டிலே இருப்பார்கள்; சமைக்கின்ற வேலை மற்றும் பெண்களுக்குத் தேவையான வீட்டுப் பணிகளைச் செய்து கொண்டிருப்பவர்கள் ஆண்கள். ஆகவே, பெண்களை மதிக்காமல் நீங்கள் குதிரையிலே சென்றது தவறு; அதற்காக உங்களுக்குத் தண்டனை விதிக்கப் போகிறோம், நீங்கள் புலியோடு சண்டை போட வேண்டும் என்று பல்வேறு போட்டிகளை





வக்கிறார்கள். அந்தப் போட்டிகளில் எல்லாம் எம்.ஜி.ஆர். வெற்றி பெறுகிறார். இருப்பினும், அதைப் பொறுக்க முடியாத அந்த கதாநாயகி ஆக இருந்த அஞ்சலி தேவி அவர்கள் அவருக்கு (குறுக்கீடுகள்).

முற்பகல் 11-20

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** டி.ஆர். இராஜகுமாரி அவர்கள்.

**திரு. ப. ரங்கநாதன்:** டி.ஆர். இராஜகுமாரி அவர்கள் அவருக்குத் தண்டனை வழங்குகிறார்கள். அதேபோன்றுதான் இப்போது Auditor இராஜசேகரன் விவகாரத்திலேயும். அவர் முன்னாள் முதலமைச்சரோடு இருந்தபோது அரசுப் பணத்தைக் கொள்ளை அடித்து, ஆயிரக்கணக்கான கோடிகளைக் கொள்ளை அடித்து, அந்தப் பணத்தை வைத்து தமிழகத்திலே பல்வேறு இடங்களில் சொத்துக்களை வாங்கிக் குவித்த கணக்குகளையும், அவர் கறுப்புப் பணமாக வைத்திருந்த கணக்குகளையும், அவர் முறையாக, உண்மையான கணக்குகளைக் கொடுத்தார் என்று காரணம் காட்டி அவரைக் கொலை செய்ய வேண்டுமென்ற எண்ணத்தோடு இராஜசேகரனை ரௌவுடிகளை அனுப்பி அழைத்து வந்து கொலைவெறித் தாக்குதலை நடத்தியிருக்கிறார்கள். இராஜசேகரன் அவர்கள் காவல் நிலையத்திலே புகார் கொடுக்கின்றபோது, என்னைக் கொலை செய்ய முயன்றார்கள் என்று புகார் கொடுத்து, அவருடைய புகாரின் அடிப்படையில் முதல் தகவல் அறிக்கை, F.I.R. file செய்திருக்கிறார்கள். Section 307, கொலை முயற்சி வழக்கு, அந்த அடிப்படையில் வழக்கு பதிவு செய்திருக்கிறார்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்-ஏறத்தாழ 10 நாட்கள் ஆகிவிட்டன இந்த வழக்கு பதிவு செய்து - இப்போது பெரும்போக்காக இருந்து - ஏனென்றால் முன்னாள் முதலமைச்சர், மீது நாம் எப்படி உடனடியாக நடவடிக்கை எடுக்கச் சொல்வது என்ற மனிதாபிமானத்தோடு, பொறுமையோடு, அதைப் பொறுத்திருந்து பார்ப்போம் என்று நினைத்துக் கொண்டிருக்கின்ற நேரத்திலே, சட்டமன்றத்திலே திசைதிருப்புவதற்காக இங்கே ஒரு நாடகத்தை நடத்தியிருக்கிறார்கள். ஏனென்றால், திரு. இராஜசேகரன் தாக்கப்பட்டதைக் கண்டித்து தமிழகத்திலேயிருக்கின்ற பல்வேறு அரசியல் கட்சித் தலைவர்கள், இரண்டு கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர்கள், ம.தி.மு.க. பொதுச் செயலாளர் வைகோ. அவர்கள், இன்னும் பல்வேறு அரசியல் கட்சித் தலைவர்கள் அறிக்கை விட்டிருக்கிறார்கள்.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

**மாண்புமிகு** பேரவைத் தலைவர் அவர்களே, இராஜசேகரன் அவர்கள் தாக்கப்பட்ட சம்பவத்தில் ஈடுபட்டவர்கள் யாராக இருந்தாலும், இப்போது மகாதேவனைக் கைது செய்திருக்கிறீர்கள். அடுத்து நீங்கள் அதிலே குற்றவாளிகளாக இருக்கின்ற ஜெயலலிதா அவர்களையும், சசிகலா அவர்களையும் கைது செய்ய வேண்டுமென்று இந்த நேரத்திலே நான் முதலமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொண்டு எனக்கு வாய்ப்புத் தந்தமைக்கு நன்றி சொல்லி, அமைகின்றேன்.

முற்பகல் 11-25

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இந்த Auditor இராஜசேகரன் விஷயமாக இந்தச் சட்டமன்றக் கூட்டத்தொடர் தொடங்கிய நாள் அன்று ஏராளமான உறுப்பினர்கள் சிறப்புக் கவன ஈர்ப்பிற்கு அறிவிப்புக் கொடுத்திருந்தார்கள். நான் இத்தீர்மானத்தை இதுவரை எடுக்காததற்குக் காரணம், இது விசாரணையிலே இருக்கக்கூடிய ஒன்று. இப்படிப்பட்ட சம்பவங்களிலே இரண்டு வகையான நிலை இருக்கலாம். ஒன்று, நீதிமன்றத்திலே வழக்கு இருக்கலாம். நீதிமன்றத்திலே வழக்கு இருந்தால் அது Sub-judice என்று, பேசக் கூடாது எனறு, ஒரு நிலை இருக்கிறது. இந்தச் சம்பவத்தைப் பொறுத்தவரையிலே நீதிமன்றத்திலே இன்னும் charge sheet file பண்ணவில்லை; வழக்கு இல்லை. ஆனால், போலீஸ் விசாரணையிலே இருக்கிறது. இந்த விசாரணை பாதிக்கப்படக் கூடாது என்ற காரணத்திற்காகத்தான் நான் இதை எடுப்பதற்குத் தயங்கினேன். இருந்தாலும் மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவருமே கட்டாயமாக இதிலே பேச வேண்டுமென்று சொன்னார்கள். ஆகவே, இதை எடுத்திருக்கின்றேன். உண்மையான குற்றவாளிகளைக் கண்டுபிடித்துத் தண்டனை கொடுக்க வேண்டுமென்ற அளவிலேதான் பேச்சு அமைய வேண்டுமேயொழிய, இதற்கு மேலாக அரசியல், விவகாரங்களைப் பேசி, போலீஸ் விசாரணை பாதிக்கின்ற அளவுக்கு பேச்சு அமையக் கூடாது என்று கேட்டுக்கொண்டு, அடுத்து மாண்புமிகு உறுப்பினர் திரு. சுப்பராயன் அவர்களைப் பேசுமாறு அழைக்கின்றேன்.

**திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு சட்டமன்றத்தில் இப்போது ஏற்பட்டு இருக்கிற நெருக்கடிக்குக் காரணமாக அமைந்த சம்பவமே Audidor இராஜசேகரன் தாக்கப்பட்ட சம்பவம்தான். அநேகமாக தாங்கள் சட்டமன்றப் பேரவைத் தலைவராக பொறுப்பேற்றதிலிருந்தே இரண்டு





நாட்களுக்கு நடந்த திரு. தாமரைக்கனி சம்பவம் வரையிலும், நீங்கள் தேர்ந்த முறையிலேதான் கையாண்டு வந்து இருக்கிறீர்கள். ஆனால், தங்களுடைய இலாவகமான அணுகுமுறையிலே கூட அகப்படாமல், மீறி, ஒரு விபரீதத்தை இந்தப் பேரவையிலே நிகழ்த்துவதற்குக் காரணமாக அமைந்த சம்பவமே இந்த Auditor இராஜேசேகரன் தாக்கப்பட்ட சம்பவம்தான் என்பதை நாம் ஒப்புக்கொள்கிறோமோ இல்லையோ, அதுதான் உண்மையாகும். நான் விவரங்களுக்குள்ளே போக விரும்பவில்லை. புலன் விசாரணை நடைபெற்றுக் கொண்டிருக்கிறபோது, திரும்பத் திரும்பச் சொல்லப்படுகிற விஷயம், நாங்கள் அப்படிச் செய்ய மாட்டோம் என்று அவர்கள் தெரிவித்தாலும்கூட, இன்றைக்கும் ஜெயலலிதா அவர்களுடைய Auditor ஆக இருக்கக்கூடிய சண்முகம் அவர்கள்கூட ஒரு பத்திரிகை பேட்டியிலே குறிப்பிட்டு இருக்கிறார்கள்: நான் குறிப்பிட்ட இராஜசேகரன் அடிப்பட்ட அன்றைக்கு போயஸ் கார்டன் தோட்டத்திலே, இராஜசேகரன் அவர்களைப் பார்த்தேன் என்று குறிப்பிட்டு இருக்கிறார்கள். அது புலனாய்விலேகூட கவனிக்கப்பட்டு இருக்கக்கூடும் என்று நான் கருதுகிறேன். அப்படி அவர், ஜெயலலிதாவினுடைய Auditor ஆக இருக்கின்றவரே, - நான் அங்கே போயஸ் கார்டனிலே பார்த்தேன் என்று சொல்லுகிற விஷயத்தையும் நாம் கவனிக்க வேண்டியிருக்கிறது. நான் இங்கே இந்த கவன ஈர்ப்பின் மூலம் குறிப்பிட விரும்புவது, இந்தப் பிரச்சினையில் Auditor இராஜசேகரன் தாக்கப்பட்டு இருப்பது என்பது யாராலும் மறுக்க முடியாத ஓர் உண்மை. அந்த Auditor இராஜசேகரன் அவர்கள், இன்றைக்கு இருக்கிற அரசாங்கத்தை நடத்துகிற கட்சிக்கு நெருக்கமானவர் அல்ல; எந்த வழிமுறைகளிலேயும் நெருக்கமானவர் அல்ல; இன்னும் தெளிவாகச் சொல்லப் போனால், எல்லா வகைகளிலேயும் முன்னாள் முதலமைச்சர் ஜெயலலிதா அவர்களுடைய குடும்பத்திற்குத்தான் நெருக்கமானவராக அவர் இருந்திருக்கிறார். எனவே, அவர்கள் எந்த உள்நோக்கத்தோடு இத்தகைய புகாரைக் கொடுத்து இருக்க முடியும் என்று கருத அடிப்படையிலேயே நியாயம் இல்லை. சம்பவம் நடந்து இருக்கிறது, தாக்கப்பட்டு இருக்கிறார். Auditor சண்முகம் அவர்கள், ஜெயலலிதா அவர்களுடைய Auditor-ஐ நான் அன்றைக்கு அங்கே பார்த்தேன் என்றும் பத்திரிகையிலேயே சொல்லி இருக்கிறார். இராஜசேகரன் தாக்கப்பட்டதும், இவர் அன்றைக்கு அங்கே இருந்திருக்கிறார் என்று சொல்லப்பட்டதற்குப் பின்னரும், தமிழ்நாட்டில் ஒரு பரபரப்பான அரசியல்

[திரு. கே. சுப்பராயன்] [1999 மார்ச் 25

ஊக்குவிக்கப்படுகிறது. நான் இதை ஒரு பெரும் தனிப் பிரச்சினையாகப் பார்த்து, இந்தப் பிரச்சினையைக் கிளப்பவில்லை. இந்தப் பிரச்சினைக்குள் பல்வேறு அரசியல் உள்நோக்கங்கள் உள்ளடங்கிக் கிடக்கின்றன. இந்த அரசியல் உள்நோக்கத்தோடுதான், திசை திருப்பிவிடுகிற நோக்கத்தோடுதான், இப்பொழுது சம்பவங்கள் நடைபெறுகின்றன. ஆகவே, நான் மாநில அரசைக் கேட்டுக்கொள்ள விரும்புவது, விருப்பு வெறுப்பு இல்லாமல், தெளிவாகப் புலனாய்வு செய்து, உண்மையான குற்றவாளிகள் யார் என்பதைப் புலனாய்வில் கிடைக்கிற விவரங்களின் அடிப்படையிலே தீர்மானித்து, உரிய நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என்பதைக் கேட்டு முடித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி. நிஜாமுதீன்.

**திரு. ஜி. நிஜாமுதீன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தச் சட்டமன்றத்திலே தாமரைக்கனி அவர்கள் மாண்புமிகு அமைச்சரைத் தாக்கியதும், அதுகுறித்து இந்தச் சட்டப் பிரச்சினைகள்...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. நிஜாமுதீன், நேற்றைக்கே இதையொட்டி கருத்துச் சொல்லி இருக்கிறீர்கள். நான் ஏற்கெனவே சொன்னதுபோல, இந்த விசாரணையைப் பாதிக்காத அளவுக்கு மிக ஜாக்கிரதையாகப் பேசுங்கள்.

**திரு. ஜி. நிஜாமுதீன்:** ....காரணமாக அமைந்த, இந்த Auditor தாக்கப்பட்ட சம்பவத்தைக் குறித்து இந்த அவையின் கவனத்தை ஈர்க்க விரும்புகின்றேன். கடந்த 13-3-1999 அன்று Auditor இராஜசேகரன் அவர்கள், முன்னாள் முதலமைச்சர் ஜெயலலிதா, அவர்களுடைய உற்ற தோழி சசிகலா மற்றும் மகாதேவன் ஆகியோரால் தாக்கப்பட்டு, பலத்த காயமுற்று, இன்று உயிருக்கே அஞ்சக்கூடிய நிலையிலே சிகிச்சை பெற்று வந்து கொணடிருக்கின்றார். சமீபத்திலே மத்திய உளவுத் துறை பிரிவு அதிகாரிகள் அவர்களிடம் விசாரிக்கும்போது, பூணூல் மீது சத்தியமாகச் சொல்கிறேன், ஜெயலலிதா, சசிகலா என்னைக் கொல்லாமல் விடமாட்டார்கள் என்று கடுமையான அச்சத்துடன் சாட்சியம் கொடுத்து இருக்கின்றார். நான் இதிலே கேட்டுக்கொள்வது என்னவென்றால், ஒருவர் இந்த அளவுக்குத் தாக்கப்பட்டு இருக்கும்போது, 3 குற்றவாளிகள் பெயரை அதிலே குறிப்பிட்டு இருக்கும்போது, மகாதேவன் மட்டும் இன்று கைது



1999 மார்ச் 25] [திரு. ஜி. நிஜாமுதீன்]

செய்யப்பட்டு இருக்கின்றார். மற்ற 2 குற்றவாளிகளும் வெளியிலே விடப்பட்டு, அவர்கள் டில்லிக்கும் அங்கும் இங்குமாக ஓடிச் சென்று கொண்டிருக்கிறார்கள்.

முற்பகல் 11-30

இதில் இன்னொரு விஷயத்தைக் கவனிக்க வேண்டும். மகாதேவன் கைது செய்யப்படும்பொழுது, அவரிடம் 2 உரிமங்கள் புதுப்பிக்கப் படாத துப்பாக்கிகள் இருந்ததாகப் பத்திரிகைகளில் தகவலைப் பார்த்தேன். ஒருவர் துப்பாக்கி உரிமத்தை புதுப்பிக்கவில்லையென்றால், அதை உடனடியாகப் பறிமுதல் செய்யாமல் அல்லது புதுப்பிக்காத காரணத்திற்காக அவர்மீது நடவடிக்கை எடுக்காமல் இவ்வளவு நாட்களாக காவல் துறை ஏன் மௌனமாக இருந்தது என்பதை நான் அறிய விரும்புகிறேன். இப்படி மேல்மட்டத்திலே இருக்கின்றவர்கள் சட்டத்திலேயிருந்து நப்புவார்களேயானால், எதிர்காலத்திலே சட்டத்தை இந்த நாட்டிலே நாம் எப்படி நிலைநாட்ட முடியும்? சாதாரண கீழ்த் தட்டிலே இருக்கிறவர்கள் தவறு செய்துவிட்டால், அதைச் சார்ந்தவர்கள், சாராதவர்கள் என்று கண்மூடித்தனமாகப் பலரையும் கைது செய்து, நாங்கள் விசாரணைக்காக கைது செய்கிறோம்; விசாரித்து விட்டு அனுப்பிவிடுவோம், என்று சிறைச்சாலையிலே தள்ளுகின்றார்கள். ஆனால் நாடறிந்த ஒருவர், இந்த நாட்டு மக்களை 5 ஆண்டு காலம் அலங்கோலப்படுத்தியவர், அவர்மீது குற்றம் சுமத்தப்பட்டிருக்கிறது. அதற்காக மத்திய உளவுத் துறை விசாரணைக்கு வந்தபோது, அவர்களும் அதை மீண்டும் வலியுறுத்தியிருக்கிறார்கள். நமது மாண்புமிகு உறுப்பினர் திரு. சுப்பராயன் அவர்கள் கூறியதைப்போல, இப்போது இருக்கிற Auditor சண்முகம் அவர்களும், அவரை அந்த வீட்டிலே பார்த்ததாகச் சொல்லியிருக்கிறார்கள். இவ்வளவு இருந்தும் சட்டம் தன் வேலையைச் செய்யாதது ஏன்? அப்படியென்றால் உயர்ந்த நிலையில் இருக்கிறவர்களுக்கு ஒரு சட்டம்; சமுதாயத்திலே தாழ்ந்த நிலையில் உள்ளவர்களுக்கு ஒரு சட்டமா? இந்த நாட்டில் சட்டம் செயல்படுகிறதா, இல்லையா என்பதை நான் அறிய விரும்புகிறேன். குற்றவாளிகள் யாராக இருந்தாலும் அவர்கள் எந்த மத்திய கூட்டாட்சியில் இருக்கக்கூடியவர்களாக இருந்தாலும், மத்திய அரசை ஆட்டிவைக்கக் கூடியவர்களாக இருந்தாலும் அவர்கள்மீது உடனடியாக நடவடிக்கை எடுத்து, கைது செய்து, முறையான விசாரணையைத் தொடங்க வேண்டும். சட்டத்தை இறந்துவிடச் செய்யக் கூடாது என்று கேட்டுக்கொண்டு, வாய்ப்புக்கு நன்றி கூறி அமர்கிறேன்.

[1999 மார்ச் 25

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி.கே. மணி.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, Auditor இராஜசேகரன் தாக்கப்பட்ட பிரச்சினை இன்றைக்கு நாடு முழுவதும் பெரிய சர்ச்சைக்குள்ளாகிய ஒரு பிரச்சினையாக விஸ்வரூபம் எடுத்திருப்பதை நாம் எல்லோரும் நன்றாக அறிந்திருக்கிறோம். ஆகவே, Auditor இராஜசேகரன் தாக்கப்பட்டிருப்பதை, அவர் கொடுத்த புகாரின் மேல் எதிர் தரப்பிலேயிருந்து இந்த மாநிலத்தினுடைய முன்னாள் முதலமைச்சராக இருந்தவர், ஒரு இயக்கத்தினுடைய பொதுச் செயலாளராக இருக்கக்கூடிய செல்வி ஜெயலலிதா அம்மையார் அவர்கள், ஒரு பெண்மணி இப்படி தாக்கக்கூடுமா என்ற கேள்வியை எழுப்பியிருக்கிறார்கள். ஆகவே, தங்களுடைய Auditor ஆக இருந்தவர், நெருக்கமாக இருந்தவர், இப்படி தாக்கப்பட்டிருக்கிறார் என்று சொல்கிறபோது, நினைத்துப் பார்க்கிறபோது, நிச்சயமாகவே ஒரு பெண்மணி இப்படி தாக்கியிருப்பாரா என்பதை ஒரு கேள்விக்குறியாக சொல்லக்கூடிய நிலைமையில் மாத்திரம் அல்ல; இதை உள்நோக்கத்தோடு இராஜசேகரன் சொல்லியிருப்பாரோ என்று சர்ச்சைக்குரிய பிரச்சினையாக கிளப்பப்பட்ட நிலையிலே இருக்கின்ற காரணத்தினாலே, உண்மையான குற்றவாளிகள் யார் என்பதைக் கண்டறிவதிலே எங்களுக்கு இருவேறு கருத்துகளுக்கு இடம் இல்லை. ஆகவே, உண்மையான குற்றவாளிகளைக் கண்டறியக்கூடிய நிலையிலே, இது உண்மையான புகார்தானா அல்லது பொய்ப் புகாரா என்ற உண்மையை அறிவது காவல் துறையினுடைய, அரசினுடைய தலையாயக் கடமையாக இருக்கிற காரணத்தினாலே இதற்கு C.B.I. விசாரணை தேவை என்று சொல்லி அமர்கிறேன்.

**(மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. சி.டி. தண்டபாணி) தலைமை)**

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. சி.டி. தண்டபாணி):** திரு. லா. சந்தானம்.

***திரு. லா. சந்தானம்:** மாண்புமிகு பேரவை மாற்றுத் தலைவர் அவர்களே, Auditor இராஜசேகரன் அவர்கள் முன்னாள் முதலமைச்சர் அவர்களுடைய இல்லத்திற்கு அழைக்கப்பட்டு, அங்கு தாக்கப்பட்டிருக்கிறார் என்ற நிலையிலே, அவருடைய கண்ணிலே



1999 மார்ச் 25] [திரு. லா. சந்தானம்]

பலமான அடிபட்டு, அதன் காரணமாக இன்றைக்கு அரசு மருத்துவமனையிலே சிகிச்சை பெற்றுக்கொண்டிருக்கிறார். அவர் கொடுத்த புகாரின் பேரில் காவல் துறை இன்றைக்கு ஒரு வழக்கைத் தொடர்ந்திருக்கிறது. அந்த வழக்கிலே 307-வது பிரிவு பிரகாரம், இராஜசேகரன் அவர்களைக் கொலை செய்வதற்கு முற்பட்டார்கள் என்று வழக்கு பதிவாகியிருக்கிறது. அந்தக் குற்றத்தினைச் செய்தவர்கள், காவல் துறைக்கு செருப்பு எப்படி உயிரைக் கொல்லுகிற ஆயுதமாகக் கண்ணுக்குத் தெரிந்தது என்ற கேள்வியையெல்லாம் இன்றைக்கு எழுப்பிக் கொண்டிருக்கிறார்கள்.

முற்பகல் 11-35

வள்ளுவர்கூட ஒரு குறளில் குறிப்பிட்டிருக்கிறார்:

*"பீலிபெய் சாகாடும் அச்சிறும் அப்பண்டஞ்*
*சால மிகுத்துப் பெயின்"*

என்று சொல்லியிருக்கிறார். அதாவது, மிக மென்மையான மயில் தோகைகூட அதிகமாக வண்டியிலே ஏற்றப்படுமானால், அந்த மயில் தோகையும் வண்டியினுடைய அச்சை முறிக்கின்ற நிலையைப் பெறும் என்று குறிப்பிட்டிருக்கிறார். அதுபோல, செருப்புகூட அடிக்கக்கூடாத இடத்திலே அடியைக் கொடுக்குமானால், அதுகூட உயிரை மாய்க்கின்ற ஒரு ஆயுதமாகக் கருதப்படும் (மேசையைத் தட்டும் ஒலி) என்கிற நிலையிலே, உண்மையான நிலையை உணர்ந்துதான் இந்த வழக்குத் தொடரப்பட்டிருக்கிறது. இருந்தாலும் இந்த வழக்கு இன்னும் முழுமையான விசாரணையை முடிக்கவில்லை, முற்றுப்பெறாத நிலையிலே இருக்கிறது என்பதை அவைத் தலைவர் அவர்கள் குறிப்பிட்டிருக்கிற காரணத்தால், இந்த வழக்கினுடைய உண்மையான குற்றவாளி யாராக இருந்தாலும், நீதி என்பது சாதாரண பாமரனாக இருந்தாலும், உயர்ந்த இடத்திலே உள்ளவர்களாக இருந்தாலும், சமமாக வழங்கப்பட வேண்டுமென்பதுதான் ஜனநாயகக் கட்டமைப்பினுடைய உண்மையான நிலை என்கிற நிலையை எடுத்துச் சொல்லி, தவறு செய்தவர்கள் யாராக இருந்தாலும், இந்த அரசு அதற்குரிய நடவடிக்கையை மேற்கொள்ள வேண்டும். தாக்கப்பட்ட Auditor இராஜசேகரன் அவர்கள் தன்னைத் தாக்கியவர்கள் ஏவலர்களாக இருந்து ஒருவரைத் தாக்கினார்கள் என்று சொல்வதற்கு எந்தவிதமான

[திரு. லா. சந்தானம்] [1999 மார்ச் 25

உள்நோக்கமும் இருக்கமுடியாது. ஒருவர் வழக்கு தொடுப்பாரேயானால், உண்மையாக அடித்தவர்களை விட்டு, வேறு ஒருவர்மீது தொடுப்பார்கள் என்பதை யாரும் ஏற்றுக்கொள்ள முடியாது என்கிற காரணத்தால், இதற்குரிய உண்மைக் குற்றவாளிகளைக் கண்டுபிடித்து, உரிய நடவடிக்கை எடுத்து, தண்டிக்க வேண்டுமென்று என்னுடைய இயக்கத்தின் சார்பிலே கேட்டு அமைகின்றேன்.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர்: (திரு. சி.டி. தண்டபாணி):** திரு. எஸ். திருநாவுக்கரசு.

**திரு. எஸ். திருநாவுக்கரசு:** மாண்புமிகு பேரவை மாற்றுத் தலைவர் அவர்களே, ஒரு Auditor வீட்டிலேயிருந்து புறப்பட்டுக் கொண்டிருக்கிறார் அவருடைய மனைவி எங்கே போகிறீர்கள் என்று கேட்கிறார். உடனே Auditor, நான் யாருக்குப் பணியாற்றுகிறேனோ அவர் வரச் சொல்லியிருக்கிறார், பார்க்கப் போகிறேன் என்று சொல்கிறார். உடனே அவருடைய மனைவி, "போகாதே, போகாதே என் கணவா, பொல்லாத சொப்பனம் நானும் கண்டேன்" (சிரிப்பு) என்று சொல்லி, போகவேண்டாமென்று தடுத்து, பாட்டுப் பாடுவதாக, அருமை நண்பர் சோ அவர்கள், தன்னுடைய துக்ளக் பத்திரிகையிலே, அட்டைப் படத்திலே கார்ட்டூன் வெளியிட்டிருப்பதை நான் இங்கே நினைவு கூரக் கடமைப்பட்டிருக்கிறேன்.

சமீபத்திலே ஒரு நீதிபதி வீட்டு திருமணத்திற்குப் போய் உட்கார்ந்திருந்தேன். சுற்றி சில வக்கீல்கள் இருந்தார்கள், சில நீதிபதிகளும் இருந்தார்கள். அதிலே ஒரு வக்கீல் விளையாட்டாகச் சொன்னார், 'முதல் turn Auditor turn முடிந்திருக்கிறது. அடுத்த turn வக்கீல்களுக்கு வரப்போகிறது என்று சொன்னார். உடனே அங்கிருந்த வக்கீல்களும், நீதிபதிகளும் விழுந்து விழுந்து சிரித்துக் கொண்டிருக்கிற சூழல் ஏற்பட்டது. இதை நான் சொல்லக் காரணம், Auditor சங்கத்தின் சார்பிலே அவர்களுக்கு வந்த செய்தியின் அடிப்படையில், அவர்கள் சென்று இராஜசேகரனைப் பார்த்து விட்டு, ஒரு கண்டன அறிக்கையையும் அவர்கள் கொடுத்து இருக்கிறார்கள். நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று அந்தச் சங்கம் வற்புறுத்தியிருக்கிறது.

சட்டம் எல்லோருக்கும் பொதுவானதுதான். அது யாராக இருந்தாலும் சரி, முன்னாள் முதலமைச்சராக இருந்தாலும் சரி, அல்லது முன்னாள் பிரதமராக இருந்தாலும் சரி, எந்தப்



1999 மார்ச் 25] [திரு. எஸ். திருநாவுக்கரசு

பொறுப்பிலே இருந்தாலும் சரி, அல்லது பொறுப்பிலேயிருந்து விலகியவர்களாகயிருந்தாலும் சரி, எல்லோருக்கும் பொதுவானதுதான். Auditor இராஜசேகரன் அவர்களை நானும் அறிவேன். அவருடைய வீட்டுக் கல்யாணத்திற்கு நானும் செல்வி ஜெயலலிதா அவர்களும் போயிருக்கிறோம் அப்பொழுது. நான் பார்க்கப் போனவுடன் அதைத்தான் அவர் சொன்னார், அவரது விருப்பத்தின் பேரிலேதான் போலீஸ்காரர்கள் உள்ளே விடுகிறார்கள் என்று. நான், அவரைச் சென்று பார்க்கப் போனது, ஒரு மனிதாபிமான அடிப்படையிலே பார்க்கப்போனேன், தெரிந்தவர் என்ற முறையில்; இப்பொழுதுதான் போனேனா என்றால் இல்லை, ஏற்கெனவே வக்கீல்கள் எல்லாம் அடிக்கப்பட்டபோதுகூட பார்த்திருக்கிறேன். சண்முகசுந்தரம் அவர்களையும் சென்று பார்த்து இருக்கிறேன்.

(முற்பகல் 11-40)

அப்படி அவரைச் சென்று பார்த்தபோது, என்னை உள்ளே வரச்சொல்லிவிட்டு, என்னிடம் சொன்னார், 'நீங்கள், அந்த அம்மா எல்லாம் கல்யாணத்திற்கு வந்தீர்கள், அதுவெல்லாம் நன்றாக ஞாபகம் இருக்கிறது, அதனால்தான் நீங்கள் வந்திருக்கிறீர்கள் என்று சொன்னவுடன் உள்ளே வரச்சொன்னேன்' என்று சொன்னார். அவர் நல்ல சிவப்பு ஐயர், அடிபட்டபின் கறுப்பு ஐயராக மாறியிருக்கிறார். காலிலேயிருந்து ஒரே அடி. எங்கே பார்த்தாலும் கன்னிப்போய் இருக்கிறது. உடம்பெல்லாம் தடித்து தடித்து ரொம்பவும் பரிதாபகரமான நிலையில் படுத்திருந்தார்; பயப்படுகிறார். அவருடைய சகோதரரும் கூட இருந்தார், அவர் அதைவிட பயப்படுகிறார். அவரை அடித்தது மட்டுமல்ல, வெளியிலே செல்வி ஜெயலலிதா அவர்களுடைய கட்சியில் இருக்கின்ற முன்னாள் அமைச்சர்கள்—ஒரு முன்னாள் அமைச்சர் திருச்சியிலே பேசியிருக்கிறார். Auditor-டைய குடும்பத்தையே கொலை செய்து விடுவோம், தொலைத்து விடுவோம், காணாமல் ஆக்கிவிடுவோம், அம்மா கண் அசைத்தாலே போதும், விரல் அசைத்தாலே போதும், Auditor குடும்பமே காணாமல் போய்விடும் என்று பேசியிருக்கிறார்.

**(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)**

இன்னொருவர் சொல்லுகிறார். எங்க அம்மாவா அடிக்க வேண்டும்?
4 ஆட்களை அனுப்பி, இரண்டு போடு போட்டுவிட்டு வாங்கடா

என்றால் போட்டுவிட்டு வந்துவிட்டுப் போகிறார்கள் என்று துணைப் பொதுச் செயலாளர் பொறுப்பில் இருக்கிற இன்னொருவர் அறிக்கை விடுகிறார். இதையெல்லாம் பார்த்தவுடனே நாம் அடிபட்டது மட்டுமல்லாமல் எங்கே தன்னுடைய குடும்பத்தினரும் பாதிக்கப்பட்டு விடுவார்களோ என்று பயப்படுகிற சூழ்நிலையில் அவர் பயந்துபோய் இருக்கிறார்; பாவம். அவர் எதையுமே அரசியல் ஆக்க விரும்பவில்லை. அதற்கு அவசியமும் இல்லை. அவர் அரசியல்வாதியும் அல்ல. இன்னும் சொல்லப் போனால் நான் அங்கே போனவுடனே நான் அங்கு சென்றிருக்கிறேன் என்று தெரிந்துகொண்டு T.V.-காரர்கள் எல்லாம் வெளியே வந்துவிட்டார்கள். உள்ளபடியே ஒரு விளம்பரப் பிரியராக இருந்திருந்தால் என்ன செய்திருப்பார் என்றால் T.V.-காரர்களை அழைத்து அவர் படுத்திருப்பதை எல்லாம்—இப்போது எப்படி நம்முடைய சட்டமன்ற உறுப்பினர்கள் சிலர் படுத்துக்கொண்டு Star T.V. வரையிலே வந்துகொண்டிருக்கிறதோ இல்லாத கட்டுகளைப் போட்டுக்கொண்டு, அதுமாதிரி—அவரும் போட்டி கொடுத்துக்கொண்டே இருக்கலாம், சொல்லிக்கொண்டே இருக்கலாம். ஆனால், அவர் நான் யாரையும் பார்க்க விரும்பவில்லை என்று சொல்லிவிட்டார். எந்த T.V.-யும் வேண்டாம், எந்த T.V.-யையும் பார்க்க விரும்பவில்லை. சன் T.V. ராஜ் T.V.-காரர்கள் எல்லாம் வந்திருந்தார்கள்—எந்த T.V.யும் வேண்டாம். எந்த T.V.-காரர்களையும் பார்க்க விரும்பவில்லை. எந்தப் பத்திரிகைகாரர்களையும் பார்க்க விரும்பவில்லை, நானே பயந்து போய் பாதிக்கப்பட்டுக் கிடக்கிறேன். என்னைத் தொல்லை செய்யாதீர்கள் Sir என்று உள்ளே அழுது கொண்டிருக்கிறார். எனவே, இப்படிப்பட்ட ஒரு கொடுமையான சம்பவம் நடைபெற்றிருக்கிறது. இது போயஸ் தோட்டத்திற்குள்ளே நடைபெற்றிருக்கிறது என்று அவர் சொல்கிறார். சிலபேர் போயஸ் தோட்டத்திற்குள்ளே நடக்குமா, அந்த அம்மா ஒரு பெண்மணி ஆயிற்றே, இப்படியெல்லாம் செய்யக்கூடியவர்களா, செருப்பால் அடித்து ஒரு மனிதனைக் காயப்படுத்த முடியுமா, இப்படி எல்லாம் கூட, கேள்விகள் வியப்புக்குரிய கேள்விகள், வெளியே சிலராலே கேட்கப்படுகிறது.

போயஸ் தோட்டத்தில் இதுமாதிரி பல சம்பவங்கள் நடந்திருக்கின்றன. (குறுக்கீடு) எனக்கு எதுவும் நடக்கவில்லை. அதற்கான துணிச்சலும் அந்த அம்மாவுக்குக் கிடையாது. (சிரிப்பு) ஏனென்றால் அந்த அம்மா முதலமைச்சராக 5 ஆண்டுகள் இருக்கின்றவரையில், சட்டசபைக்கு உள்ளேயும், வெளியேயும் நான் எதிர்த்துதான்





வந்திருக்கிறேன். அதற்கான தைரியம் அவருக்குக் கிடையாது. ஆனால் அப்பாவிகள் பலபேர் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள்.

இன்னும் சொல்ல வேண்டுமானால், பத்திரிகையில் வந்த ஒரு செய்தியைச், சொல்ல விரும்புகிறேன். புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் மறைந்த உடனே, முன்னாள் M.L.A. பாப்பா சுப்ரமணியம்—தஞ்சாவூர் மாவட்டம், குடவாசல் M.L.A.-வாக இருந்தார். இப்போது பாட்டாளி மக்கள் கட்சியில் இருக்கிறார்; சுருக்கமாக முடித்து விடுகிறேன். அவருடைய வீட்டுக் கல்யாணத்திற்கு போய்விட்டு வருகிறோம். நானும், பண்ருட்டியாரும் பின்னால் காரில் அமர்ந்திருந்தோம். அந்த அம்மா முன்னால் காரில் அமர்ந்திருந்தார்கள். வழியிலே — விவசாயிகள் எல்லாம் தஞ்சாவூர் பக்கம் ரோட்டில் தான் போட்டு கட்டு எல்லாம் அடித்துக்கொண்டிருப்பார்கள்—கட்டு அடித்துக் கொண்டிருந்தபோது, அந்த அம்மா வண்டியை நிறுத்தி, விசாரிக்கிற மாதிரி எவ்வளவு கூலி வாங்குகிறீர்கள் என்று விசாரித்துக்கொண்டிருந்தார். அப்போதுதான் அவரது முதல் அரசியல் பிரவேசம் நடக்கிறது. அதனால் அழைத்து விசாரிக்கும் நாடகம் நடக்கிறது. அவர் இறங்கிச் சென்றபோது அந்த அம்மாவின் Security ஆட்கள் அவர் பின்னாலே ஓடுகிறார்கள். எங்களது காருக்குப் பின்னால் வந்த ஆட்களும் இறங்கி ஓடுகிறார்கள். அப்படி ஓடும்போது ஒருவருக்கொருவர் கால் இடறி விழுந்துவிடுகிறார்கள், உடனே அவர்களுக்கிடையே தள்ளுமோதல் ஏற்படுகிறது. இதில் யார் சம்பந்தப்பட்டது என்றால் பண்ருட்டியார் அவர்களுடன் வந்த மோகன் என்ற அவரது உதவியாளர். அதாவது, பண்ருட்டியார் உதவியாளர் மோகன் தட்டி, ஜெயலலிதாவிடம் இருந்த, சசிகலா போட்ட ஒரு ஆள் கீழே விழுந்துவிடுகிறார். அந்த ஆத்திரத்திலே-கொஞ்ச நாள் கழித்து பொதுக் குழு நடைபெறுகிறது - அப்போது கூப்பிட்டு, ஜானகி அம்மா 15 நாட்கள் முதலமைச்சராக இருந்தபோது, ஜெயலலிதா மிகவும் பயந்துபோய் இருந்த நேரம் அது - நான் வேறு புதுக்கோட்டையிலிருந்து சோழா கராத்தே இன்ஸ்ட்டிடியூட் என்று ஒன்று இருக்கிறது, அதிலிருந்து 15 முதல் 20 பேர் போட்டு ஜெயலலிதாவின் 'Bodyguard-களாக' அங்கு இருந்தார்கள். நடராஜன் போட்ட 10 முதல் 15 பேர் அங்கே இருந்தார்கள். நடராஜன் போட்ட அந்த ஆட்கள் என்ன செய்கிறார்கள் என்றால், நான் போட்டிருந்த ஆட்களிடம் சொல்லி, பொதுக் குழுவிற்குப் போய்விட்டு வரும்போது பண்ருட்டியாரின் உதவியாளர் மோகனை சரியாக வசமாக

அடித்துவிடுங்கள் என்று ஜெயலலிதாவும், சசிகலாவும் சொல்லுகிறார்கள். பண்ருட்டியார் எனக்கு மிகவும் வேண்டியவர் என்பது இவர்களுக்குத் தெரியும்; அப்போது நாங்கள் ஒன்றாக அமைச்சர்களாக இருந்தோம். நான் நியமித்தவர்கள் என்ன சொன்னார்கள் என்றால், அது எப்படி நாங்கள் அடிப்பது, உங்களுக்கு அவசியம் இருந்தால் நீங்களே அடியுங்கள் என்று சொல்லியிருக்கிறார்கள்.

முற்பகல் 11-45

அப்பொழுது அவர்களுக்கு தனி uniform அதிலேகூட, நடராஜன் போட்டவர்கள் First Grade. நான் நியமித்தவர்கள் இரண்டாவது கிரேடு என்று அர்த்தம். தோட்டத்திலே அது வேறு. அப்பொழுது அவர்களுக்கெல்லாம் uniform அவர்கள் சொன்னார்கள். 'நாங்கள் uniform போட்டிருக்கிறோம்; uniform நாங்கள் அடித்தால் தெரியும். எனவே, uniform இல்லாமல் இருக்கிற நீங்கள் அடியுங்கள்' என்று சொல்கிறார்கள். இவர்கள் அடிக்கவில்லை; வந்துவிட்டார்கள். அடிக்காமல் போனதால் என்ன நடந்தது என்றால், வீட்டிற்குள்ளே போனவுடனே இந்த ஆட்களையெல்லாம் சசிகலா முன்னாலேயே போட்டு அடிக்கிறார்கள். இவர்களெல்லாம் கோபித்துக் கொண்டு வெளியே வந்துவிட்டார்கள். பிறகு, என் வீட்டிலே அந்த அம்மாவிடம் இருந்து Letter கொடுப்பதற்காக நான்கு பேர் ஜீப்பிலே வருகிறார்கள். உடனே இவர்கள் என்ன செய்கிறார்களென்றால், என் வீட்டிலே வைத்து அவர்களை அடித்துவிடுகிறார்கள். அன்றைக்கு மாலை முரசிலே வெளிவந்த செய்தி, ஜெயலலிதா வீட்டில் இருக்கிற உதவியாளர்களுக்குள் சண்டை, கராத்தே படைகளுக்குள் சண்டை என்று எட்டு பத்தியிலே அன்றைக்கு சாயங்காலம் மாலை முரசிலே வருகிறது. இதுமாதிரி ஒன்றிரண்டு அடிதடி அல்ல. ஜெயலலிதா, சசிகலா முன்னாலேயே நடந்த அடிதடி, அவர்களாலேயே நிகழ்த்தப்பட்ட அடிதடி உண்டு.

இன்னொரு சம்பவம் மட்டும் சொல்கிறேன். ஒரு சட்டமன்ற உறுப்பினர். உப்பிலியாபுரம் இரவிச்சந்திரன் என்று பெயர். ஆதிதிராவிட சமுதாயத்தைச் சேர்ந்த சட்டமன்ற உறுப்பினர். ஒருநாள் காலையிலே 9-30 மணி இருக்கும்; வீட்டிலே ஆட்டோ வந்து நிற்கிறது. 'ஒரு M.L.A. வந்திருக்கிறார்' என்று சொன்னார்கள். 'மேலே வரச் சொல்லுங்கள்' என்று சொன்னேன். அவரும் வந்தார். அப்பொழுது ஜெயலலிதா முதலமைச்சர்; அவர் கட்சியிலே அந்த M.L.A. இருக்கிறார். பயந்து ரொம்ப பதற்றமாக வந்தார். நான், 'உட்காருங்கள் —



சாப்பிடுகிறீர்களா' என்று கேட்டேன். அதற்கு அவர், 'நான் போனேன; அந்த அம்மா என்னை அடித்துவிட்டார்கள்' என்றார். வரவேற்பு அறையிலே போட்டு ஒரே அறை; ஒரே இழுப்பு, அந்த M.L.A.-வை ஏன் என்று கேட்டேன். அதற்கு முன்னாலே என்ன நடந்திருக்கிறது என்றால், அவர் தொகுதியிலே ஐந்தாறு பேரைக் கைது பண்ணிக் கொண்டுபோய் சாராய வழக்கிலே உள்ளே வைத்திருக்கிறார்கள், பொங்கலுக்கு இரண்டு நாட்களுக்கு முன்பு. இவர், M.L.A. என்ன செய்கிறார் என்றால், காவல் நிலையத்திற்குப்போய், அங்கே இருக்கிற போலீஸ்காரரிடம் சொல்லிவிட்டு, அப்பொழுது S.I., Inspector எல்லாம் இல்லை, ஏன் நீங்கள் பொங்கலுக்கு முன்னால் கொண்டுவந்து வைத்திருக்கிறீர்கள்; பொங்கல் முடிந்து கொண்டுவந்து விடுகிறேன் என்று சொல்லி கூட்டிக்கொண்டு வந்துவிட்டார். வெளியிலே சென்றிருந்த Inspector வந்து கேட்டிருக்கிறார், 'எங்கே உள்ளேயிருந்த ஆட்கள்' என்று. M.L.A. வந்து கூட்டிக்கொண்டு போய்விட்டார்' என்று அவர் சொல்லிவிட்டார், அவர்களைக் காப்பாற்றிக் கொள்வதற்காக. இந்தத் தகவல் அப்படியே ஜெயலலிதாவிற்கு வந்துவிட்டது. உடனே அவரை வரச்சொல்லி, வீட்டிலே வைத்து அவரை அடித்து, அந்தப் பதற்றத்திலே அவர் வெளியிலே வந்து அழுதுகொண்டிருந்தார். நான் சொன்னேன், 'நான் என்னய்யா பண்ண முடியும்; நான் இதைப் போய் சட்டசபையிலே கேட்டால், திருப்பி அடி விழும் உங்களுக்கு' என்று ஆறுதல் சொல்லி அனுப்பினேன். இதுமாதிரி பல சம்பவங்கள்; இதெல்லாம் நடக்குமா என்பதற்கு, ரொம்ப dignified பெண்மணி, யாரையும் பற்றித் தரக்குறைவாகப் பேசமாட்டார்; இப்படியெல்லாம் பத்திரிகையிலே வருகிறது. நான் மிகுந்த கண்ணியத்திற்குரிய பெண்மணி; யாரையும் தவறாக விமர்சிப்பது இல்லை; விமர்சிக்க மாட்டார்; தவறாக நடக்க மாட்டார்; மிகுந்த நாகரிகம் நிறைந்த சிகாமணி; பெண்மணி இப்படியெல்லாம் பத்திரிகையிலே அவரே பேட்டி கொடுக்கிறார். இப்படிப்பட்ட மிகச்சிறந்த நயத்தகு நாகரிகம் தெரிந்த ஒரு பெண்மணி, இப்படியெல்லாம் தரக்குறைவாகப் பேசுவாரா; தரக்குறைவாக நடந்து கொள்வாரா என்றெல்லாம் சொல்லப்படுகிறது. வரிசையாக அந்த நிகழ்ச்சிகளுக்குள்ளே நான் போகவில்லை. ஒன்றை மட்டும் ஞாபகத்திற்காக நான் சொல்கிறேன். அதாவது, எப்படியெல்லாம் திருப்பித் திருப்பி, எத்தனை வகையான பொய்கள். அடுக்கிக் கொண்டே போனால் நூற்றுக்கணக்கிலே வரும். ஆனால், நேரம் கருதி சுருக்கமாகச் சொல்கிறேன்.

[திரு. எஸ். திருநாவுக்கரசு] [1999 மார்ச் 25

முதல் பொய், புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் இறந்த உடனே, தான் ஒரு அனாதை என்று ஆரம்பித்தார், கூடப்பிறந்த அண்ணன் இருக்கிறார்; அண்ணி இருக்கிறார்கள்; பிள்ளைகளெல்லாம் இருக்கிறார்கள் — அண்ணனுக்கு குழந்தை — இவ்வளவு பேர் இருக்கும்போது, இவர் எப்படி அனாதையாக இருக்க முடியும்? ஜெயக்குமார் இப்போதுதான் இறந்தார். இந்த அம்மா போய் மாலையெல்லாம் வைத்துவிட்டு வந்த செய்தி பத்திரிகையிலே வந்தது. எனவே, தலைவர் இறந்த உடனே இப்படி ஆரம்பித்து, அதற்கு அடுத்து, 'புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர்., தான் அரசியலில் வளருவதைப் பொறுக்க முடியாமல், தன்னை அரசியல் ரீதியாக அழிக்கப் பார்க்கிறார்', என்று பிரதம மந்திரிக்கு, உள்துறை அமைச்சராக இருந்த பூட்டாசிங் அவர்களுக்கு எல்லாம் தன் கைப்படவே கடிதம் எழுதினார். அந்தச் செய்தி பத்திரிகையிலேயெல்லாம் வந்திருக்கிறது. பிறகு அவரே என்ன சொன்னார் என்றால், தன்னுடைய அம்மா படத்தை தலைவர் வைத்துக் கொண்டு, இந்த அம்மாவைக் கூப்பிட்டு, 'நான் இறக்கப் போகிறேன்; கட்சியை நீதான் காப்பாற்ற வேண்டும்; வெளியிலே போய்விடமாட்டேன் என்று சத்தியம் பண்ணு' என்று சத்தியம் வாங்கினார் என்று அடுத்த பொய்யை ஆரம்பித்தார். வரிசையாக, அதற்கு அடுத்து, திருச்சியிலே முதல் கூட்டம் நடக்கிறது. நாங்களெல்லாம் போயிருந்தோம். அந்தக் கூட்டத்திலே ஒரு சின்ன அசம்பாவிதம் நடக்கிறது. உடனே அந்தக் கூட்டத்திலே இந்த அம்மா என்ன சொல்லிவிட்டார்களென்றால், அப்பொழுது மூப்பனார் காங்கிரஸ் கட்சியிலே இருக்கிறார்; தமிழ் மாநிலக் காங்கிரஸ் கட்சித் தலைவர் மூப்பனார் அவர்கள் அப்போது காங்கிரஸ் கட்சியிலேதான் இருக்கிறார். உடனே இந்த அம்மா, ஒரு அறிக்கையை அந்தக் கூட்டத்திலேயே சொல்கிறார், இதற்கெல்லாம் காரணம், திரு மூப்பனார் என்றும், அவர் முதலமைச்சராக வருவதற்கு அவருக்கு ஆசை வந்துவிட்டது; அதனால்தான் என் கூட்டத்திலே புகுந்து வன்முறை நிகழ்த்திவிட்டார் என்று ஆரம்பித்து, அடுத்த நாள் காலையில் நான் அப்படிச் சொல்லவில்லை, பத்திரிகையிலே தவறாக வந்துவிட்டது என்று அடுத்த அறிக்கை விட்டார்.

அதற்கடுத்து, வன்முறை என்று பார்த்தீர்களென்றால், வக்கீல் சண்முகசுந்தரம் தாக்கப்பட்டது, விஜயன் தாக்கப்பட்டது, தன்னைப் பிடிக்காதவர்கள் மேலே முதலமைச்சராக இருந்தபோது முத்து, ஏன் முத்து கைது செய்யப்பட்டார் என்ற விவரத்திற்கெல்லாம் போனீர்களென்றால், அது அசிங்கமான விவரம். எனவே, அதற்குள்ளே



1999 மார்ச் 25] [திரு. எஸ். திருநாவுக்கரசு]

நான் போக விரும்பவில்லை. முத்து கஞ்சா வழக்கிலே உள்ளே போடப்பட்டார். அதுமாதிரி, திரு. ஏ.எல். லட்சுமணன், நீதிபதி, அவருடைய மருமகன் மேலேயே கஞ்சா வழக்கைப் போட்டு, அவரையும் விடுதலை பண்ணினார்கள். வழக்கு நடக்கவில்லை. வழக்கை திரும்பப் பெற்றுக்கொண்டார்கள். அதற்குப் பின்னாலே பார்த்தீர்களென்றால், மதுராந்தகம் சொக்கலிங்கம் M.L.A. உப்பிலியாபுரம் இரவிச்சந்திரன், தூத்துக்குடி ரமேஷ், காட்பாடி மோகன் என்று வரிசையாக ஆளுங்கட்சியில் இருந்த சட்டமன்ற உறுப்பினர்களெல்லாம் அடி வாங்கினார்கள்.

முற்பகல் 11-50

இதை சட்டமன்றத்திலே நான் ஒரு நாள் சொக்கலிங்கம்-ரமேஷ் அடி வாங்கினார் என்று சொல்லிவிட்டேன். நான் இந்தச் சட்டமன்றத்திலே வந்து ஒரு பிரச்சினையை எழுப்புகிறேன். சட்டமன்ற வளாகத்திற்குள்ளேயிருந்து தூக்கிச் செல்லப்படுகிறார் மதுராந்தகம் சொக்கலிங்கம். வெளியிலே போய் அடிபட்டு, ஜட்டியோடு இருந்து நகர்ந்துபோய் ஒரு வாட்ச்மேன் காலிலே விழுந்தவுடன், அவர் யாரய்யா நீ என்கிறார். நான்தான் மதுராந்தகம் சொக்கலிங்கம் என்றவுடன் அந்த ஆள் கொண்டுபோய் மருத்துவமனையில் சேர்க்கிறார். நான் சட்டமன்றத்திலே எழுப்புகிறேன். அப்போது செல்வி ஜெயலலிதா முதலமைச்சர். அவர் எழுந்து என்ன சொன்னார் தெரியுமா? இந்தமாதிரி நடக்கவில்லை என்றோ, நான் விசாரிக்கிறேன் என்றோ சொல்லவில்லை. என்கட்சி சட்டமன்ற உறுப்பினர் அடி வாங்கினார், இவர் இன்னொரு கட்சி, இவருக்கு என்ன? — சட்டமன்ற குறிப்பேட்டில் இருக்கிறது. நான் கேட்டவுடனே முதலமைச்சர் எழுந்து பதில் சொல்கிறார். அடி வாங்கியது என்னுடைய கட்சி, அடிபட்டது என்னுடைய கட்சி சட்டமன்ற உறுப்பினர், திருநாவுக்கரசுக்கு என்ன? அவர் வேறு கட்சி — என்று கேட்டார்கள். உடனே நான் திருப்பிச் சொன்னேன். அவர் உங்கள் கட்சி சட்டமன்ற உறுப்பினராக இருக்கலாம். அவர் ஒரு சட்டமன்ற உறுப்பினர். சட்டசபை நடக்கும்போது, சட்டசபை விடுதியில் இருந்து தூக்கிச் செல்லப்பட்டு, சட்டமன்றக் கூட்டத்தின்போது அடிக்கப்பட்டிருக்கிறார். எனவே நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று சொன்னேன். அது எல்லாம் இங்கேயே பதிவாகி இருக்கிறது.

அதுமாதிரி தலைமைத் தேர்தல் ஆணையாளர் திரு. சேஷன். அவர் ஒரு காலத்திலே இந்தியாவையே ஆட்டிப் படைத்துக்

கொண்டிருந்தார். அவர் சென்னையிலே வந்து ஆடிப்போனார் இங்கே வந்தவுடனே. அவரை விமான நிலையத்திற்குள்ளேயே காக்க வைத்து, தாக்க முயற்சி நடந்தது. அதற்குப் பின்னாலே அவர் தங்கியிருந்த ஹோட்டல் அடித்து நொறுக்கப்பட்டது. தலைமைத் தேர்தல் ஆணையாளருக்கே அந்த கதி.

பிறகு சகோதரர் சுப்பிரமணியம் சுவாமி. அவர் பல வெளிநாடுகளுக்கு எல்லாம் போனவர், இங்கே வந்து சொன்னார். இந்த நாட்டில் நான் வந்து பார்த்த காட்சிகளை வேறு எந்த நாட்டிலேயும் பார்க்கவில்லை (சிரிப்பு) என்று சொல்லக்கூடிய அளவுக்கு அவரைப் பயமுறுத்தி, போகிற இடத்தில் எல்லாம் அடித்து, கல்வீசி இப்படிப் பல சம்பவங்கள் நடந்தன. சுப்பிரமணியம் சுவாமி திருச்சியிலே இரயில் ஏறுகிறார். அவரைத் தாக்குவதற்காக அண்ணா தி.மு.க.-விலிருந்து ஒரு பிரிவினர், மற்றும் குண்டர்கள் மன்னார்குடி பக்கத்திலிருந்து அனுப்பப்படுகிறார்கள். அப்போது அங்கே இருந்த S.P. காசி விஸ்வநாதன். இப்போது அவர் இறந்துவிட்டார்-கக்கன் அவர்களுடைய மகன் அங்கே இருந்தார். அவர் என்ன பண்ணினார் என்றால், இந்தத் தகவல் தெரிந்து -- இல்லையென்றால் சுப்பிரமணியம் சுவாமி கொல்லப்பட்டிருப்பார் - உடனே போய் அவருக்கு பந்தோபஸ்து கொடுத்து அங்கு வந்தவர்களை எல்லாம் அடித்து விரட்டி விடுகிறார். அதுதான் அவர் செய்த பாவம். அன்றைக்கு இரவிலேயே Wireless-லேயே he has been transferred அங்கேயிருந்து அந்த S.P. மாற்றப்படுகிறார்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** இன்னும் 5 உறுப்பினர்கள் பேச வேண்டும். ஆகவே, கொஞ்சம் சுருக்கமாகப் பேசுங்கள்.

**திரு. எஸ். திருநாவுக்கரசு:** உடனே முடித்துவிடுகிறேன். அடுத்த நாள் நான் சொன்னேன். இந்த நாட்டிலே பெருந்தலைவர் காமராஜரோடு இருந்து பணியாற்றிய மிகச் சிறந்த கண்ணியத்திற்குரிய மனிதராக திகழ்ந்தவர். எல்லா அரசியல்வாதிகளாலும் போற்றப்படுகின்ற, மக்களால் மதிக்கப்படுகிற பெருந்தலைவராக இருந்த கக்கன் அவர்கள், காவல் துறைக்கே அமைச்சராக இருந்தவர். அவருடைய மகனுக்கே இந்தக் கதியா என்று இதே சட்டமன்றத்திலே கேட்டேன். அந்த அம்மா என்ன சொன்னார்கள் தெரியுமா? உடனே எழுந்து நான் Transfer, Postings எல்லாம் திருநாவுக்கரசைக் கேட்டுக் கொண்டு போட முடியுமா? என்று கேட்டார்கள், இதே சட்டமன்றத்திலே.



எனவே சம்பவத்தை அவர் மறுக்கவில்லை. ஆக இப்படி சுப்பிரமணியம் சுவாமி தாக்கப்பட்டார். அவர்கூட இருக்கின்ற திருமதி சந்திரலேகா, I.A.S. அந்த அம்மா இன்னமும் அந்த போயஸ் தோட்டத்திற்குள் போவதே இல்லை. சுவாமியுடன் இருந்தால்கூட சுவாமி நீங்கள் போங்கள், வீட்டிற்குள்ளே நான் வரமாட்டேன் என்று வெளியேதான் நிற்கிறார்கள். அந்த அம்மையார் மீது ஆசிட் வீசப்பட்டது. தராசு பத்திரிகை ஊழியர்கள் அடித்துக் கொலை செய்யப்பட்டார்கள். C.B.I.-யிலே case இன்னும் இருக்கிறது.

அதேமாதிரி முன்னாள் அமைச்சராக இருந்த திரு. ப. சிதம்பரம், நாடாளுமன்ற உறுப்பினராக இருந்த அடைக்கலராஜ் ஆகியோர் திருச்சியிலே வைத்துத் தாக்கப்பட்டார்கள். அதுவெல்லாம் வெளியிலே தெரிந்த உண்மை, அதற்காகத்தான் சொல்கிறேன். பத்திரிகைகளிலே சட்டமன்ற உறுப்பினர்கள், கம்போடு எல்லாம் நிற்கிறார்கள், ஆயுதங்களோடு நிற்பது எல்லாம் அப்படியே பத்திரிகைகளிலே வந்தது. இன்றைக்கு நாடாளுமன்ற உறுப்பினராக இருப்பவர்கள் உள்பட, முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள் மேலே எல்லாம் வழக்கு இருக்கிறது. எல்லோரும் accused ஆக இருக்கிறார்கள் இப்போது. உடனே அந்த அம்மா அதற்கு என்ன அறிக்கை கொடுத்தார் என்றால், ஏதோ பொது மக்கள் தாக்கினார்கள். சிதம்பரம் மேலே இருந்த கோபத்திலே, அவர் காவிரி நதிநீர்ப் பிரச்சினையிலே ஒரு மாற்று கருத்தைச் சொன்னார், அதற்காக பொதுமக்கள் கொதித்தெழுந்து தாக்கினார்கள் என்று இதே செல்வி ஜெயலலிதா முதலமைச்சராக இருந்து அறிக்கை விட்டார். நடந்த சம்பவம் என்னவென்றால் மாவட்டச் செயலாளர், சட்டமன்ற உறுப்பினர்கள் எல்லாம் வந்து அடித்தார்கள் என்று பத்திரிகையிலே புகைப்படங்கள் வந்திருக்கிறது.

அதேமாதிரி மதுரையிலே இராஜா முத்தையா மன்றம் - அந்த மண்டபத்திலே எம்.ஜி.ஆர். அறக்கட்டளை தொடங்க இருந்தோம். அந்த மண்டபத்திலே போய் இரவில் புகுந்து அடித்து, மண்டபத்தை மூடினார்கள். பல இடங்களிலே கூட்டங்களிலே acid வீச்சு, சோடா புட்டி வீச்சு. இதெல்லாம் பல இடங்களிலே நடந்தது. இங்கே அதேமாதிரி பண்ருட்டியார் இந்தச் சட்டமன்றத்திலே தாக்கப்பட்டார்.

அருமை நண்பர் முன்னாள் மத்திய அமைச்சர் திரு. அருணாசலம் - ஆதிதிராவிட சமுதாயத்தைப் பற்றி இன்றைக்கு செல்வி ஜெயலலிதா

அதிகம் பேசுகிறார் - அவரும் ஆதிதிராவிட சமுதாயத்தைச் சார்ந்தவர் தான். நானும் அன்றைக்கு விமான நிலையத்திலே அவரோடு கூட இருந்தேன். அதிகாரிகள் இரண்டு பேரையும் கூப்பிட்டார்கள். என்னையும் அழைத்தார் அருணாசலம். நான் அவசரமாக டெல்லிக்குச் செல்ல வேண்டியிருக்கிறது. நீங்களும் வாருங்களேன் என்னுடன் விமானத்தில் என்று.

முற்பகல் 11-55

நான் அவரிடம் அப்போது விளையாட்டாகச் சொன்னேன். அப்போது அந்த அம்மா என்னிடம் மிகவும் கோபமாக இருந்தார்கள். நான் சொன்னேன்; கண்டிப்பாக நீங்கள் போய்ச் சேர்வீர்களா என்பது சந்தேகம்; நான் வந்தேன் என்றால், என்னை விமானத்திலே இருந்து கீழே தள்ளிவிடுவார்கள்; அப்படித் தள்ளிவிட்டு, தற்கொலை பண்ணிக்கொண்டார் என்று சொன்னாலும் சொல்வார் அந்த அம்மா; நான் வரவில்லை; நீங்கள் போங்கள் என்று சொல்லிவிட்டு நான் போய்விட்டேன். சென்றபின், சாயங்காலம் திரு. அருணாசலம் அவர்கள் எனக்கு phone செய்கிறார்கள்: என்ன, திருநாவுக்கரசு நீங்கள் சொன்னதுபோலவே நடந்துவிட்டது: நல்லவேளை நீங்கள் வரவில்லை என்று திரு. அருணாசலம் அவர்கள் phone செய்தார். விமானத்திற்குள்ளே போனவுடனே, அவரைப் பார்த்தவுடனே சத்தமோ சத்தம் என்று சத்தம் போட்டார். அப்போது விஜயகுமார் I.P.S. இருந்தார். அவரைக் கூப்பிட்டு who is he? எப்படி அவரை ஏற்றினீர்கள்? ஆர்சா, போச்சா என்று சத்தம் போட்டு, அவரைக் கீழே போ என்று விரட்டி, அவரும் கீழே இறங்கி ஓடிவந்தார்—அவ்வாறு அவர் விமானத்திலிருந்து கீழே இறக்கிவிடப்பட்டார். நாகரிகமான பெண்மணி! அதற்காகச் சொல்கிறேன். கண்ணியமான பெண்மணி, நாகரிகமான பெண்மணி, நாகரிகம் குறைவாக நடந்துகொள்ள மாட்டார் என்றெல்லாம் பத்திரிகையிலே, இப்படியெல்லாம் நடப்பாரா ஜெயலலிதா என்றெல்லாம் வருகிறது அல்லவா, அதற்காக நான் சொல்கிறேன்.

அதேமாதிரி ஒவ்வொருவரையும் — யாரையுமே விட்டுவைக்கவில்லை. ராஜீவ் காந்தி—அவர்தான் எல்லா உதவிகளையும் செய்தார். கடைசியில், தமிழ்நாட்டிலே வந்து செத்து, உயிரையும் கொடுத்து, ஜெயலலிதாவை முதலமைச்சராக ஆக்கினார். அவரைப் பார்த்து, ராஜீவ் காந்தி — அவர் பிரதமர் — அந்த அம்மா phone



பண்ணினார்களாம். அவர் கிடைக்கவில்லையாம்; இந்த நாட்டின் பிரதமர் 10-00 மணிக்குத் தூங்கப் போகலாமா என்று கேட்கிறார். அவர் எத்தனை மணிக்குத் தூங்கப் போகலாம் என்பதைப் பற்றி அவரது வீட்டிலே உள்ளவர்கள் கவலைப்பட்டால் பரவாயில்லை. இந்த அம்மா, பிரதமர் 10-00 மணிக்குத் தூங்கப் போகலாமா என்று சொல்லி, அவரைப் பார்த்து ஒரு அறிக்கை.

அதேமாதிரி, திரு. நரசிம்மராவைப் பார்த்து செயலற்ற பிரதமர் என்றார். இதே சட்டசபையில்தான் inert Prime Minister என்று அவரைப்பற்றிச் சொன்னதை இந்த நாடு அறியும்.

அதேமாதிரி திரு. அத்வானி. இங்கு நம்முடைய பா.ஜ.க.. உறுப்பினரும் இருக்கிறார். திரு. அத்வானிக்கு selective amnesia என்கிற மறதி நோய் இருக்கிறது என்று சொல்லி, அவரைப் பற்றிச் சொன்னதையும் இந்த நாடு அறியும்.

அதேமாதிரி, தமிழ்நாட்டிலே வழிப்பறியெல்லாம் நடந்தது. அப்போது சட்டசபையிலே அதைப்பற்றி விவாதம் வந்தபோது, — அப்போது காங்கிரஸுக்கு அந்த அம்மாவோடு கொஞ்சம் மோதல் ஏற்பட்ட நேரம். இதே சட்டமன்றத்திலேதான் சொன்னார்கள்; நாங்கள் அவர்களைப் பிடித்து, போலீசை வைத்து விசாரித்தபோது என்ன தெரிகிறது என்று சொன்னால், எல்லோரும் கிட்டத்தட்ட தெலுங்கிலே பேசுகிறார்கள்; ஆந்திராவிலே இருந்து வந்த ஆட்கள் மாதிரி தெரிகிறது; அதாவது நரசிம்மராவ்தான் அனுப்பி, வழிப்பறி செய்யச் சொல்லியிருக்கிறார் என்கிறபடி — அப்போது அவர் பாரதப் பிரதமராக இருக்கிறார். இதே சட்டமன்றத்திலே பேசியது. எல்லாம் பார்த்து விசாரிக்கிறபோது இதற்குப் பின்னணி எங்கே இருந்து வருகிறது என்பது தெரியுமா? ஆந்திராவிலே இருந்து வருகிறது. எல்லோரும் தெலுங்கிலே பேசுகிறார்களாம் வழிப்பறியிலே ஈடுபடுகிறவர்கள் என்று சொல்லி, இதே சட்டமன்றத்திலே செல்வி ஜெயலலிதா பேசினார். அதாவது உண்மைக்கும், அவர் சொல்வதற்கும் சம்பந்தமே இல்லாமல் இருக்கிறது என்பதற்காக சில விஷயங்களுக்காக இதைச் சொல்கிறேன்.

அதேபோல் திரு. ஆர்.கே. குமார் அமைச்சராக இருந்தார். திடீரென்று பார்த்தால், அவர் மருத்துவமனையில் படுத்துக் கிடக்கிறார், உயிருக்குப் போராடுகிறாராம். அதாவது பணியாற்ற முடியாமல், பதவியிலிருந்து இராஜினாமா செய்கிறேன் என்று சொன்னாராம். டெல்லியிலே சென்று பார்த்தால், உண்மையிலேயே நீங்கள் யார்

[திரு. எஸ். திருநாவுக்கரசு] [1999 மார்ச் 25

வேண்டுமானாலும் விசாரியுங்கள். டெல்லியிலே full time இருந்து பணியாற்றி வருகிற கட்சியின் ஒரே M.P. அவர்தான். நல்ல Health-தோடு இருக்கிறார். நாடாளுமன்றத்திலே உட்கார்ந்து பணியாற்றுகிறார். சொன்னதையெல்லாம் செய்யவில்லை என்பதற்காக அவரைப் படுக்கவைத்துவிட்டார்கள் — எது உண்மையோ அந்த உண்மைக்கு நேர்மாறாக அறிக்கை கொடுப்பது, உடம்பு சரியில்லை என்று படுக்கவைத்த இப்படிப்பட்ட நிகழ்வுகளை எல்லாம் நான் சுட்டிக்காட்ட கடமைப்பட்டிருக்கிறேன். மிகவும் மரியாதையாக பேசுவார் செல்வி ஜெயலலிதா என்கிறார்கள். அருமை அண்ணன் டாக்டர் நாவலர், நடமாடும் பல்கலைக்கழகம், எல்லோருக்கும் தெரியும் — அவரை என்னென்ன சொன்னார் என்று. உதிர்ந்த மயிர், தெரு நாய் என்று வரிசையாக, எப்படியெல்லாம் அவர் விமர்சிக்கப்பட்டார் என்பது தெரியும்.

அதேபோல், ஆளுநர் சென்னா ரெட்டி அவர்கள் ஒரு நிகழ்ச்சிக்குப் பின்னாலே தனியாக பேசுவதையே விட்டுவிட்டார்கள். நயாத முறையில் நடக்க முயன்றார் என்று சொல்லி, ஆளுநர் சென்னா ரெட்டி மீது அபாண்டமாக என்ன சொன்னார் என்பதை நாடு அறியும்.

அது மட்டுமல்ல; அவர் போகிறபோது, அவருடைய convoy திண்டிவனத்திற்குப் பக்கத்திலே நிறுத்தப்பட்டு, அந்தக் கார்களை எல்லாம் அடித்து நொறுக்கி, எவ்வளவு வன்முறை, ஒரு ஆளுநர் மீது நான் எதற்காக இவற்றையெல்லாம் சொல்கிறேன் என்று சொன்னால், ஒரு ஆட்சி நடக்கிறபோது, முதலமைச்சராக இருக்கிற செல்வி ஜெயலலிதாவுக்குத் தெரியாமல், சேஷன் தாக்கப்பட முடியுமா? ஒரு மத்திய அமைச்சர், திரு. சிதம்பரம் தாக்கப்பட முடியுமா? ஆளுநர் சென்னா ரெட்டி தாக்கப்பட முடியுமா? இவையெல்லாம் அவருடைய தூண்டுதலின்பேரில் நடந்த சம்பவங்கள்தான் அதற்குப் பின்னாலே அவர் கொடுத்த அறிக்கையெல்லாம் என்ன? மாற்றி மாற்றி; தனக்குச் சம்பந்தமே இல்லாத மாதிரி. மக்கள் செய்தார்கள் என்றோ, யாரோ செய்தார்கள் என்றோ, இப்படியே கொடுத்து, கொடுத்து, ஐந்தாண்டுகளிலே இப்படியே பழகிப் போனார். இப்படி வரிசையாக ஒவ்வொன்றாகச் சொல்லிக் கொண்டே போகலாம்.

அதேமாதிரி, சமீபத்திலே பா.ஜ.க. ஆட்சிக்கு வந்தபிறகு, திரு. இராமகிருஷ்ண ஹெக்டே கலந்து கொண்ட ஒரு கூட்டத்திற்குப் போய்விட்டு வந்த பிறகு, அம்மா சொல்கிறார். என்னைப் பார்த்து



1999 மார்ச் 25] [திரு. எஸ். திருநாவுக்கரசு]

ஒரு நமட்டு சிரிப்புச் சிரித்தார், கிண்டலாகச் சிரித்தார் (சிரிப்பு) என்று சொன்னார். இராமகிருஷ்ண ஹெக்டே பாவம், அவர் ஒரு நல்ல மனிதர். அதிலே இருந்து வாழ்க்கையையே வெறுத்திருப்பார். அதற்குப் பிறகு இப்போது டெல்லியிலே இருக்கிற அரசியல் தலைவர்கள் யாருமே தனியாகப் பேசுவதற்கே பயப்படுகிறார்கள். இதே செய்தி பத்திரிகையிலே வந்தது... கிண்டலாகச் சிரித்தார்; கேலியாகச் சிரித்தார். அதைப் பக்கத்திலே இருந்த வாஜ்பாயும், அத்வானியும் கண்டிக்கவில்லை. வடநாடு, தென்னாடு என்று வேற்றுமையைக் காட்டினார்கள். என்னை ஒருமாதிரி ill-treat செய்தார்கள் என்று சொல்லி பிரதமரைப் பற்றி கொடுத்த அறிக்கைகள் எல்லாம் இந்த நாட்டு மக்களுக்குத் தெரியும்.

நண்பகல் 12-00

அதேமாதிரி இஸ்லாமியப் பெருமக்களுக்காக இப்போது ஆதரவாகப் பேசுகின்றார். அன்றைக்கு கரசேவையைப் பற்றி என்னமாதிரி பேசினார்? முதலமைச்சர் மாநாட்டிலே இவர் பேசியதைப்பற்றி அத்வானி வெளியே ஒன்றைச் சொன்னார். அதாவது எங்களுடைய பா.ஜ.க. முதலமைச்சர் மாநாட்டிலே கலந்துகொண்டிருந்தால் என்ன பேசியிருப்பாரோ அதைத்தான் தமிழ்நாடு முதலமைச்சர் செல்வி ஜெயலலிதா பேசினார் என்று அத்வானி வெளியே சொன்னார். அதற்குப் பின்னாலே இஸ்லாமியப் பெருமக்களுக்கு வக்காலத்து வாங்கி, முதலமைச்சர்கள் மாநாட்டிலே அப்படிச் சொல்லவேயில்லை என்று அறிக்கை கொடுத்தார், இப்படி எல்லாம் சொல்லிக்கொண்டே போகலாம்.

சோனியா காந்தி அம்மையார் வந்தவுடனே, அந்த அம்மாவைப் பற்றி, இவர் வெளிநாட்டுக்காரப் பெண்மணி; it is unfortunate அவர் எப்படி கட்சிக்குத் தலைவராக வரலாம் என்று அறிக்கை விட்டார். இப்போது ஆள் மேல் ஆள் தூது போய்க்கொண்டிருக்கிறார்கள் அந்த அம்மாவிடம். எனவே, சொல் ஒன்று செயல் ஒன்று என்கிற மாதிரி அவர்.

அதேமாதிரி நீதிபதிகளையும் விட்டு வைக்கவில்லை. நீதிபதி சம்பந்தம் அவர்கள்மீது வெளியேயிருந்து ஓர் அறிக்கையை அவர் எப்படி கொடுக்கலாம்? அதாவது அவரை மிரட்டுகிற விதத்திலே, நான் இரகசியங்களை எல்லாம் வெளியிடுவேன் என்று சொல்லி ஒரு

முன்னாள் முதலமைச்சர் கூறுகிறார்: அதுவும் ஒரு குற்றவாளி, பல வழக்குகளிலே குற்றவாளியாக இருக்கிற ஒருவர், அதுவும் அந்த நீதிபதி முன்னால் குற்றவாளியாக இருக்கிற ஒருவர், ஒரு நீதிபதியையே மிரட்டுகிற விதத்திலே வெளியிலேயிருந்து அறிக்கை கொடுக்கின்றார்.

காவல் துறை, மகாதேவனைக் கூட்டிக் கொண்டு போன உடனே, அவரை ஏதாவது விசாரித்தீர்கள் என்றால், ஏதாவது கொடுமைப்படுத்தினீர்கள் என்றால் அதற்கெல்லாம் நீங்கள்தான் பொறுப்பு என்று முதலமைச்சருக்கு மிரட்டல், காவல் துறைக்கு மிரட்டல்.

அந்த மகாதேவனை உடனே விட்டார்கள். எப்படித்தான் விட்டார்களோ, நாம் நீதிமன்றத்தையெல்லாம் விமர்சிக்கக்கூடாது. பிரிவு 307-ல் வழக்கு போடப்பட்டிருக்கிறது. Weapons Act-ல் போடலாம். அவர் ஆயுதங்களை வைத்து இருக்கிறார். Licence இல்லாமல் இருக்கிறது. இவவளவெல்லாம் இருக்கிறபோது அவர் எப்படி இரண்டே நாளில் bail-இல் வரமுடியும் என்று தெரியவில்லை. Co-accused எவரும் arrest ஆகவில்லை. மற்ற accused யாரும் இன்னும் கைதாகவில்லை. எனவே 15 நாள் remand பண்ணாமல் நீதிபதி விட்டுவிட்டார். அதையெல்லாம் நாம் விமர்சிக்க முடியாது. அது நீதிபதிகளுக்கு இருக்கிற பிரத்யேகமான உரிமை, இதுவே யாராவது சாதாரண ஆளாக அப்பாவியாக இருந்தால் என்று வைத்துக்கொள்ளுங்கள். அவன் இரண்டு 15 நாட்களுக்கு சிறையிலே இருந்திருப்பான். எனவே, அதெல்லாம் நீதிபதிகளுக்கு உள்ள உரிமை, அதிலே நாம் தலையிட முடியாது. எனவே, இப்படி நான் சொல்லிக்கொண்டே போகலாம். பல விஷயங்கள் கடந்த காலத்திலே நடந்திருக்கின்றன.

பல அறிக்கைகள் உண்மைக்குப் புறம்பாக, மாற்றி, மாற்றி வந்திருக்கின்றன. கையிலே காசு இல்லை என்றார் ஒரு தடவை. பொதுக்குழுவிலே ஒரு தீர்மானமே போடப்பட்டது. அதை கே.கே.எஸ்.எஸ்.ஆர். தான் முன்மொழிந்தார். அவர் என்ன தீர்மானத்தை முன்மொழிந்தார் தெரியுமா? அண்ணா தி.மு.க.-வை காப்பாற்றுவதற்காக அண்டா, குண்டா, நகைநட்டையெல்லாம் விற்று கட்சியை நடத்திய புரட்சித் தலைவிக்கு பாராட்டு என்று பொதுக்குழுவிலே ஒரு தீர்மானம் போடப்பட்டது. ஆக, ஆட்சிக்கு வருவதற்கு முன்னாலேயே அண்டா, குண்டா, நகைநட்டையெல்லாம் விற்றாகிவிட்டது. அடகு வைத்தாகி



விட்டது. ஆட்சிக்கு வந்ததற்குப் பிறகு, போலீஸ் போய் rai செய்கிறபோது தங்கமும், வெள்ளியும் கோடிக்கணக்கான ரூபாய்க்( உள்ளே இருக்கின்றன. அதற்குப் பின்னாலே இது எப்படி என்று கேட்டால், மைசூர் மகாராஜா எங்களுடைய தாத்தாவிற்கு கொடுத்த என்கிறார். பாட்டி வேலை பார்க்கவில்லை, தாத்தா தானே வேலை பார்த்தவர். தாத்தாவுக்கு மைசூர் மகாராஜா என்ன கொடுத்திருக்கிறா என்றால் ஒட்டியாணம், வளையல் இவையெல்லாம் கொடுத்திருக்கிறார் நேரமில்லாத காரணத்தாலே நான் முடித்துக்கொள்ள விரும்புகிறேன் இப்படி அந்த அம்மா நூற்றுக் கணக்கிலே கடந்த பத்து ஆண்டுகளிலே செய்திருக்கிறார். இப்படி அவர் செய்த தவறுகள், மோசடிகள் அதாவது இந்தியாவிலேயே, உலகத்திலேயே, எந்த அரசியல் கட்சியின் தலைவரும் கட்சிப் பணத்தை தன்னுடைய குடும்பச் செலவிற்காகவும், தன்னுடைய தோழிக்காகவும் இப்படி கையாடியிருக்கமாட்டார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

1989 தேர்தலின்போது அங்கு நானும் பொருளாளர். இரண்டுபேரும் சேர்ந்து Joint Account-இல் மூன்றரை கோடி ரூபாய் வரையில் பணம் போட்டிருக்கிறோம். Ticket கேட்கிறவர்கள் எல்லாம் ஒரு லட்சம் ஒன்றரை லட்சம் என்று பணம் கட்டுகிறார்கள். கட்சி தோற்றுப் போகிறது. 26 பேர்தான் வருகிறோம். இதற்கிடையில் அந்த மூன்றரை கோடி ரூபாயை எடுத்து — நான் கையெழுத்து எல்லாம் போடவில்லை — செலவு பண்ணி முடித்தாகிவிட்டது. கட்சி தோற்றவுடன் கட்சி அலுவலகத்திலே வந்து எல்லோரும் அடிக்க வருகிறார்கள். எனக்கு Seat-ம் இல்லை, பணமும் இல்லை, பணத்தைத் திருப்பிக் கொடுங்கள் என்று சொல்லி கேட்டார்கள். நான்போய் உட்கார்ந்து அவர்களை எல்லாம் சமாதானப்படுத்தினேன். அதற்குப் பிறகுதான் merger நடந்தது. அப்போது, திரு. மாதவன் பொருளாளராக இருக்கிறார். புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். காலத்தில் கட்சிக் கணக்கிலே ஒரு கோடி ரூபாய் அந்தப் பணம் இருந்தது. திரு. மாதவனை சமாதானப்படுத்தி அந்த ஒரு கோடியை எடுத்துக் கொடுத்து கடன் கணக்கு எல்லாம் settle ஆயிற்று. இது ஆட்சிக்கு வருவதற்கு முன்னாலே. ஆட்சிக்கு வந்தவுடனே இப்போது என்ன ஆயிற்று என்றால் நான்கு கோடி ரூபாய் கட்சிக் கணக்கிலிருந்து இப்போது தன்னுடைய வரிபாக்கியைக் கட்டுவதற்கு எடுத்திருக்கிறார்கள். அந்தப் பணத்தையும் திருப்பிக் கொடுக்கவில்லை. இந்தப் பணத்தையும் திருப்பி கொடுக்கவில்லை. எனவே இப்படி முறைகேட்டினுடைய மொத்த உருவமாக, என்ன

[திரு. எஸ். திருநாவுக்கரசு] [1999 மார்ச் 25

செய்கிறார்களோ, அதற்கு மாற்றி மாற்றி பேசக்கூடியவர். தவறாக, பொய்யாக சொல்லக்கூடியவர்.

இப்போது சட்டமன்ற நிகழச்சிகளைப் பற்றி எல்லாம் திருப்பித், திருப்பி பேசிவிட்டோம். இங்கே நடந்ததையெல்லாம் எப்படி மாற்றி சொன்னார்கள் என்பதை நாட்டு மக்கள் பார்த்துக் கொண்டிருக்கின்றார்கள். எனவே, இப்படியெல்லாம் செய்யக்கூடிய, செய்திருக்கிற செல்வி ஜெயலலிதா, அவர்கூட இருக்கிற சசிகலா, இதுமாதிரி செய்யமாட்டார்கள் என்று நிச்சயமாகச் சொல்ல முடியாது. செய்திருப்பார்கள் என்றுதான் என்னைப் பொறுத்தவரையில், என்னுடைய அனுபவத்தைப் பொறுத்தவரையில், கடந்தகால அவர்களுடைய நடவடிக்கைகளைப் பொறுத்தவரையில் நம்பத் தோன்றுகிறது.

அவருக்கு அவசியமேயில்லை. Auditor பாவம். அவர் பூனூலைப் பிடித்துக்கொண்டு—அவர் நல்ல ஐயர் சத்தியப்பிரமாணமாக சொல்கிறார். மகாதேவன் மட்டும் அடித்திருந்தால், மகாதேவன் அடித்துவிட்டார் என்று சொல்லியிருப்பார். இல்லையென்றால் ஜெயலலிதா தூண்டுதலிலே அடித்திருப்பார் என்று சொல்லியிருப்பார். இது நடந்த காரணத்தினாலே, நடந்த உண்மையைச் சொல்கிறார். வழக்கு பதிவு செய்யப்பட்டிருக்கிறது.

பிற்பகல் 12-05

நான் முதலமைச்சர் அவர்களைக் கேட்கிறேன். அவர் முன்னாள் முதலமைச்சர் என்பதால் நீங்கள் மிகவும் யோசிக்கிறீர்கள். யோசித்து, யோசித்து தான் காரியங்களைச் செய்கிறீர்கள். அதனாலேதான் பலபேர் தப்பித்துக்கொண்டிருக்கிறார்கள். ரொம்பவும் நீங்கள் யோசிக்கிறீர்கள். சரி, முன்னாள் முதலமைச்சர் அவரைத்தான் கைது செய்ய வேண்டாம். சசிகலாவிற்கு என்ன வந்தது? சசிகலாவை ஏன் நீங்கள் பிடிக்கக் கூடாது? சசிகலா இரண்டாவது accused தானே? சசிகலாவை கைது பண்ணினால் என்ன? அந்த அம்மையார் என்ன M.L.A.-வா, M.P.யா? இல்லை, கட்சியிலே ஏதாவது பதவி உண்டா? கட்சியிலே உறுப்பினரும் கிடையாது, எந்தப் பொறுப்பும் கிடையாது. ஆனால், மகாதேவனிடமே, அந்தப் பழைய மந்திரிகள் எல்லாம் போய் நிற்கிறார்கள். "இந்த மகாதேவன் உறவினர் குடும்பத்தாலேதான் எனக்கு கெட்டப் பெயர் வந்தது. இந்தக் குடும்பத்தைத் தள்ளி வைக்கிறேன், ஒதுக்கி வைக்கிறேன்"



1999 மார்ச் 25] [திரு. எஸ். திருநாவுக்கரசு]

என்று ஜெயலலிதா ஆட்சி போனவுடனே அறிக்கை கொடுத்தார்கள். இப்போது அந்த உடன்பிறவாச் சகோதரியிலிருந்து அத்தனை பேரையும் வீட்டிற்குள்ளே வைத்திருக்கிறார்கள். அதிலே ஒரு ஆள் மகாதேவன். கைது செய்யப்படுகிறது 12 மணிக்கு என்றால், இந்த அம்மா 12½ மணிக்கு அறிக்கை தருகிறார்கள். அவர் செல்போனிலே பேசுகிறார். அம்மா போலீஸ் வந்துவிட்டது, பிடித்துக் கொண்டு போய்க்கொண்டிருக்கிறது, பின்னால் வந்துகொண்டிருக்கிறேன் காரில் என்பது. ஏனென்றால், அந்த அளவிற்கு குற்றவாளிகளோடு நெருக்கமாக, அவர்களை கூட வைத்துக்கொண்டிருக்கிற ஜெயலலிதாவைத்தான் நீங்கள் பிடிக்கவில்லை; முன்னாள் முதலமைச்சர்; யோசியுங்கள், விசாரிக்கட்டும், மெதுவாக நடக்கட்டும், சட்டப்படி காரியங்கள் நடக்கட்டும்.

இன்னொரு accused சசிகலாவை கைது பண்ணினால் என்ன? எனவே, இப்படி நீங்கள் ரொம்பவும் தாட்சண்யம் காட்டுகிற காரணத்தினாலே பல குற்றவாளிகள் தப்பிக்கிற சூழ்நிலை இருக்கிறது என்று நான் சொல்வேன். எனவே, இதிலே மற்றவர்களுக்கு ஒரு சட்டம் அல்லது சாமானியர்களுக்கு ஒரு சட்டம் என்று இருக்க முடியாது. எனவே, Auditor இராஜசேகரன் அடிபட்ட இந்த விவகாரத்தில் நிச்சயமாக காவல் துறை உரிய நடவடிக்கைகளை எடுக்க வேண்டும், அவர்களைக் கைது செய்ய வேண்டும். நீங்கள் ஜெயலலிதாவை கைது செய்யவில்லை என்றால் விட்டுவிடுங்கள், ஏற்கெனவே பண்ணியது போதும், இருந்துவிட்டு வந்தாகிவிட்டது. அதை வைத்துக் கொண்டு ஊர் ஊராக அழுது, பிறகு அது ஒரு நாடகம் நடக்கும். ஏனென்றால், இந்த நாடகத்திற்கு வாய்ப்பு வேண்டாம் என்று காவல் துறை நினைத்தாலோ அல்லது Charge Sheet போடுவதென்றாலோ போடட்டும், இரண்டாவது accused சசிகலாவை arrest பண்ணுங்கள். எனவே, குற்றவாளிகள் மீது உரிய நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று நான் வற்புறுத்தி அமைகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. டி. மணி.

**திரு. டி. மணி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, எனக்கு முன்னால் பேசிய மாண்புமிகு நண்பர் திருநாவுக்கரசு அவர்கள் போயஸ் கார்டன் நிகழ்ச்சியும், இந்த

இராஜசேகரனுடைய நிகழ்ச்சிக்கு ஏதுவான, சான்றான காரணங்களை, பல்வேறு விஷயங்களை எல்லாம், இங்கே கோடிட்டு காட்டி இருக்கின்றார்கள். அதற்கு மேலே நான் அதிகம் பேசுவதற்கு இல்லை. அவருடைய அனுபவம், போயஸ் கார்டனுக்கும் அவருக்கும் இருக்கக்கூடிய அனுபவம் ஏராளம். (மேசையைத் தட்டும் ஒலி) அந்த அனுபவங்களின் பின்னணியிலே அவர் மிகத் தெளிவாக விவரங்களை எல்லாம் தந்திருக்கின்றார்கள். நான் அதிலே ஒன்றிரண்டு விஷயங்களை மட்டும் சொல்ல விரும்புகிறேன். Auditor இராஜசேகரனை அடிப்பதற்கு ஏதுவான காரணம் என்பது, செல்வி ஜெயலலிதா அவர்கள் முன்னாள் முதலமைச்சராக இருந்த காலத்தில் 5 ஆண்டு காலத்திலே கொள்ளை அடித்த, அந்தக் கோடிக்கணக்கான பணத்தினுடைய கணக்கு விவரங்களை, அவர் சரிவர எழுதாததால் ஒரு வழக்குக்கு ஆதாரமாக வந்தது என்ற ஒரு காரணத்தைச் சொல்லி அவரைத் தாக்கி இருக்கின்றார்கள். அது ஒன்று.

இரண்டாவது, இந்த பகாதேவன் என்று சொல்கின்ற நபர் அதற்குள்ளே வருகின்றார். அவர் கடந்த 5 ஆண்டு காலத்திலே கோடீஸ்வரர் ஆனாரா? இல்லை. அதற்கு முன்னாலே அவருடைய பணி என்ன என்பதை நம்முடைய காவல் துறை ஆழமாகப் பரிசீலனை செய்ய வேண்டும். அப்படிப்பட்ட ஒரு நபர் துப்பாக்கியை வைத்துக்கொண்டு இருக்கின்றார். அந்தத் துப்பாக்கிக்கு licence புதுப்பிக்கப்படவில்லை. அப்படி இருந்தும் அவர் மீது என்ன நடவடிக்கை காவல் துறை எடுத்து இருக்கிறது என்பது நாம் பரிசீலிக்க வேண்டிய ஒரு விஷயமாகும்.

நண்பர் திருநாவுக்கரசு சொன்னது மாதிரி, சரி, செல்வி ஜெயலலிதா முன்னாள் முதலமைச்சர், இன்றைக்கு அந்தக் கட்சியினுடைய பொதுச் செயலாளர், அவர்கள் ஒரு நடவடிக்கையிலே போகலாம்; ஆனால் இந்த சசிகலா அம்மையார், அவர்கள் இப்படிப்பட்ட ஒரு அடிதடிக்கு போவதற்கு என்ன காரணம், அல்லது என்ன சம்பந்தம் என்பதையெல்லாம் நம்முடைய காவல் துறை சரிவர விசாரிக்க வேண்டும். ஏனென்றால் அடித்தது 3 பேர். அடித்ததில் ஒரு நபரைத்தான் கைது பண்ணியிருக்கிறோம். முன்னாள் முதலமைச்சர் என்ற காரணத்தினால் அம்மையாரை விட்டுவிடுங்கள்.





இரண்டாவது குற்றவாளியான சசிகலா பெயரிலே ஒரு நடவடிக்கை எடுத்து இருக்க வேண்டும். கைது செய்யப்பட்டு இருக்க வேண்டும். அதிலே காவல் துறை எந்த அளவிற்கு நடவடிக்கை மேற்கொண்டிருக்கிறது என்பதை எல்லாம் பார்த்தால் நமக்கெல்லாம் ஆச்சரியத்தைத் தருகிறது. ஏனென்றால், நாம் எல்லாம் காவல் நிலையத்திலே போய் ஏதாவது ஒரு மறியல் பண்ணி, இரண்டு மணிநேரம் சாலை மறியல் பண்ணினாலே பிடித்து உள்ளே கொண்டுபோய், பன்னிரண்டு மணிநேரம் உள்ளே வைத்து, அப்புறம்தான் மேல் இடத்திலிருந்து சில தகவல்களைப் பெற்ற பிறகுதான் வெளியே விடுகிறார்கள். அது, மக்களுடைய தேவைக்காக ஒரு இயக்கத்தை நடத்துகின்றோம். இந்த அனுபவங்கள் எல்லாம் நமக்கு இருக்கின்றன. ஆனால், இதற்கெல்லாம் நேர்மாறானது, விபரீதமானது இது. எனவே, இதற்கெல்லாம் உள்நோக்கம் என்ன? ஏனென்றால் Auditor இராஜசேகரனை தாக்கிய சம்பவத்தினுடைய பின்னணி, அது வெளியே வராமல் இருப்பதற்காக நம்முடைய சட்டமன்ற வளாகத்திற்குள்ளே, சட்டமன்றத்திற்குள்ளே, கடந்த சில நாட்களுக்கு முன்னாலே நடந்த நிகழ்ச்சி போக்குகளுக்குத் தொடர்புடையது.

பிற்பகல் 12-10

அதற்கும் மேலாக பின்னணி, இங்கே பெருவாரியான மக்களுடைய வாக்குகளைப் பெற்று, ஜனநாயக ரீதியாக இன்று ஆட்சி நடத்துகின்ற ஓர் அரசாங்கத்தைக் கலைக்க வேண்டுமென்ற உள்நோக்கம்தான் இந்த முன்னாள் முதலமைச்சர் செல்வி ஜெயலலிதாவிற்கும், அவரைச் சார்ந்திருக்கின்ற அந்த இயக்கத்தினருக்கும் நோக்கம். அதனுடைய பின்னணியிலேதான் இங்கே இந்த நிகழ்ச்சிப் போக்குகளையெல்லாம் இன்று நாம் பார்க்க முடிகிறது. அந்த வகையிலே அரசியல் ரீதியாக பார்க்கின்றபோது 5 ஆண்டு காலம் பொறுத்திருக்க வேண்டும். இன்றைய ஆட்சிக் காலத்தில் ஒன்றும் நடைபெறவில்லை என்றால், அதைச் சொல்லி வாக்குகளைப் பெறலாம். ஆனால் அதற்கு பொறுத்துக் கொள்ளாமல், அதற்கிடையிலேயே மத்திய அரசைக்கொண்டு இதைக் கலைப்பதற்கான, சட்டம்-ஒழுங்கு

[திரு. டி. மணி] [1999 மார்ச் 25

கெட்டுவிட்டது என்று சொல்லக்கூடிய பல்வேறு காரணங்களை இன்று மக்கள் மத்தியிலே தவறான தகவல்களைக் கொடுத்து செய்ததினுடைய ஒரு நடவடிக்கையாகத்தான் இதைப் பார்க்க முடியும். ஆகவே இந்த Auditor இராஜசேகரன் அவர்களைத் தாக்கிய இந்தச் சம்பவத்தில், தாக்கியவர்கள் யாராக இருந்தாலும் சரி, அவர்கள்மீது ஒரு criminal நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென்றும், ஒரு சரியான விசாரணை வேண்டுமென்றும், நான் இந்தக் கவன ஈர்ப்பு விவாதம் மூலமாக நம்முடைய மாண்புமிகு அமைச்சர் பெருமக்களுடைய மேலான கவனத்திற்குக் கொண்டு வருகின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. சி. வேலாயுதன்.

**திரு. சி. வேலாயுதன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, எங்களைப் பொறுத்தமட்டில் சட்டம் என்பது அனைவருக்கும் சமம். சட்டம் தன் கடமையைத் தங்குதடையின்றிச் செய்ய வேண்டும். அதற்கு எந்தவிதமான குறுக்கீடும் இல்லாத அளவிற்கு பார்த்துக்கொள்ள வேண்டியது அரசினுடைய கடமை. அதே வேளையில் ஒரு குற்றவாளி தப்பித்தாலும், ஒரு நிரபராதி தண்டனை அனுபவிக்கக் கூடாது என்று சொல்வார்கள். அந்த அடிப்படையில் உண்மையான குற்றம் செய்தது யார் என்பதை நல்லபடியாகக் கண்டறிந்து, உண்மையான குற்றவாளி எக்காரணம் கொண்டும் தப்பிவிடக்கூடாது என்ற அடிப்படையில், ஒரு பொய்யான குற்றவாளி இந்தக் குற்றத்தில் கைது செய்யப்பட்டு அல்லது அவர்மீது வழக்குத் தொடரப்பட்டு, உண்மையான குற்றவாளி தப்பித்து விடக்கூடாது. அதிலும் கண்ணியமாக இருக்க வேண்டும். எனவே, சட்டம் அனைவருக்கும் சமம் என்பதை நிலைநாட்டக் கூடிய வகையில் சட்டம் சரியான முறையில் செயல்பட்டு உண்மையிலேயே தன்னுடைய பங்கை ஆற்றக்கூடிய வகையில் அனைத்து வாய்ப்புகளும் ஏற்படுத்தப்பட வேண்டுமென்று கேட்டு அமைகிறேன். பாரத் மாதா கி ஜே!

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. பி. வெங்கடசாமி.



1999 மார்ச் 25]

**THIRU B. VENKATASAMY**: Hon. Deputy Speaker Sir, I have given notice of a Call Attention regarding the assault on Mr. Rajasekaran, Auditor. He has been beaten badly and he has given a complaint against Mr. Mahadevan, Sasikala and former Chief Minister Selvi Jayalalitha. I want to know one thing from the Hon. Chief Minister. If Mahadevan has been arrested, what made the police not to take action againt Sasikala and Jayalalitha? It shows that you are showing distinction and you are not taking action because she was a former Chief Minister. In the eyes of law, nobody is great. Whoever it may be, they must be punished severely. So I request the Hon. Chief Minister to instruct the Police to take stern action against those who have done the mistake. Actually it shows that the Government is showing some distinction. I came to know that because of the reason that the Government has not taken proper action people outside are talking that they have not been arrested. So, I request the Hon. Chief Minister to instruct the Police to take stern action against those who have done the mistake. With this, I conclude my speech on this call attention issue.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** டாக்டர் க. கிருஷ்ணசாமி.

***டாக்டர் க. கிருஷ்ணசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, முன்னாள் முதல்வர் ஜெயலலிதா அவர்கள் Auditor இராஜசேகரன் அவர்களைத் தாக்கியது சம்பந்தமாக பல்வேறு சட்டமன்ற உறுப்பினர்கள் தங்களுடைய கருத்துக்களைத் தெரிவித்திருக்கிறார்கள்.

பிற்பகல் 12-15

என்னுடைய கருத்து, பத்திரிகைகளிலே பல்வேறு கருத்துக்கள் வருகின்றன. அவற்றையெல்லாம் நாட்டு மக்களுக்கு எடுத்துக் கூறக்கூடிய வகையில், ஒரு முன்னாள் முதல்வர், ஓர் அரசியல்வாதி, அவர்மீது பழிவாங்கும் நோக்கத்தோடு போடப்பட்ட வழக்கா என்ற வகையில், என்னதான் நடந்தது என்பதைத் தமிழக முதல்வர் அவர்கள் இந்த அவையில் விளக்க வேண்டுமென்று வலியுறுத்தி விடைபெறுகிறேன், வணக்கம்.

[1999 மார்ச் 25

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்.

**திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, Auditor இராஜசேகரன் தாக்கப்பட்ட அந்தக் கொடுமைக்கு நம்முடைய சட்டம் ஒழுங்கைப் பராமரிக்கிற காவல் துறையானது, விரைந்து விசாரணை நடத்தி, உரிய நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று நான் இந்த நேரத்திலே கேட்டுக்கொள்ள விரும்புகிறேன். Auditor இராஜசேகரன் தாக்கப்பட்டிருப்பாரா? இது நடந்திருக்குமா? அதிலும் பெண்களால் தாக்க முடியுமா? என்றெல்லாம்கூட இங்கே, — இங்கே மட்டும் அல்ல வெளியிலேயும்கூட சில கேள்விகள் சிலராலே எழுப்பப்படுகின்றன. ஒன்றைமட்டும் நாம் புரிந்துகொள்ள வேண்டும். புதிதாக நாம் ஒரு செருப்பு வாங்கி 2, 3 நாட்கள் போட்டிருந்துவிட்டு, திடீரென்று சில நேரங்களிலே கழற்றிவிடுவோம். நாம் காசு கொடுத்து வாங்கிய செருப்பு, நாமே போட்டுக் கொண்டிருந்தாலே, என்ன ஆனது என்று கழற்றிவிட்ட பிறகு கேட்டால், செருப்பு கடித்துவிட்டது என்று சொல்கிறோம். ஆக, செருப்பு கடிக்கிறபோது, இன்னொருவரால் அடித்தால் படுகாயப்படாதா என்பதை அப்படிக் கேள்வி கேட்கிறவர்கள் கொஞ்சம் சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

அதுமட்டும் அல்ல, அவர் எத்தகைய செருப்பாலே அடித்தார்கள் என்பதற்குப் பத்திரிகைகளில் வந்த செய்திகளைப் பார்த்தால் அவர்களுக்குப் புரியும் என்று கருதுகிறேன். சாதாரண செருப்பல்ல. அவர்கள் போட்டு நடக்கிற செருப்பு குதிகால் செருப்பு. குதிகால் உயர்ந்த செருப்பு. வேண்டுமானால் பரிசோதிப்பதற்குச் சிலபேர் அறையிலேகூட அடித்துப் பார்த்துக்கொள்ளலாம். அந்த அளவுக்கு குதிகால் போட்ட செருப்பாலே அடிக்கின்றபோது எந்த அளவிற்குப் பாதிப்பு ஏற்படும் என்பதை அவர்கள் உணர்வதற்கு அப்படிப்பட்ட வாய்ப்புக்களைக்கூட அவர்கள் நாடிக்கொள்ளலாம். தேடிக்கொள்ளலாம். ஆனால் இந்த Auditor இராஜசேகரன் அவர்களை அந்த போயஸ் தோட்டத்திற்கு அழைத்து அடித்திருக்கிறார்கள் என்பதை ஏற்கெனவே நாம் பத்திரிகைகளிலே வந்திருக்கக்கூடிய



செய்திகளிலே இருந்து தெரிந்துகொள்ள வாய்ப்பிருக்கிறது. அந்த போயஸ் தோட்டத்திலே மட்டும் அல்ல அவர்கள் இருக்கின்ற பங்களாக்களில் எல்லாம் ஏ.சி. அறைகளிலே 500-க்கும் மேற்பட்ட செருப்புக்கள் வைக்கப்பட்டிருப்பதை யாரும் மறந்திருக்க முடியாது. ஆசைக்கு ஒவ்வொரு செருப்பாக எடுத்து அடித்திருந்தால்கூட, Auditor இராஜசேகரன் என்ன கதிக்கு ஆளாகியிருப்பார் என்பதை நாம் ஒரு கணம் எண்ணிப் பார்க்க வேண்டும்.

அதுமட்டும் அல்ல, சட்டத்திலே Corroborative evidence, Supportive evidence என்றெல்லாம் சொல்வார்கள். ஒத்துப்போகிற சாட்சியங்கள்; அந்த ஒத்துப்போகிற சாட்சியங்களை அடிப்படையாக வைத்துப் பார்க்கிறபோதுதான் நம்முடைய உறுப்பினர் திருநாவுக்கரசு அவர்கள் ஏராளமான ஆதாரங்களை இங்கே அடுக்கடுக்காக காட்டியிருக்கிறார்கள். அதுமட்டும் அல்ல, இந்த ஒத்துப்போகிற சாட்சியங்களுடைய அடிப்படையிலே அந்த முன்னாள் முதல்வராலே தாக்கப்பட்டிருக்கின்ற இன்னொரு Auditor-ஐப் பற்றிய ஒரு செய்தியும் பத்திரிகைகளிலே வந்திருக்கிறது. சங்கர் குமார் என்று சொல்லப்படுகிற அந்த Auditor, அந்த அம்மையாருக்குத் திடீரென்று கோபம் வந்தால் என்ன செய்வார் என்பதைப் பற்றி பேட்டி கொடுத்திருக்கிறார். அந்தப் பேட்டியிலே, சங்கர் குமார் என்ற ஜெயலலிதாவினுடைய அந்தப் பழைய Auditor சொல்கிறார், சாதாரணமாக ஜெயலலிதாவிற்குச் சட்டென்று கோபம் வந்துவிடும். கோபம் வந்தால் கையில் கிடைத்த பொருட்களையெல்லாம் வீசி எறிவார். Table weight, பூந்தொட்டிகள் ஆகியன பறப்பது போயஸ் தோட்டத்தில் சகஜமான விஷயம். ஆத்திரம் அதிகமாகிவிட்டால் kill him என்று கத்துவார். அவரது தொண்டர்கள் அதை வேத வாக்காக எடுத்துக்கொள்வார்கள் என்பதுதான் அதிர்ச்சியளிக்கும் உண்மை என்று சொல்லி, உதை வாங்கிய அந்த முன்னாள் Auditor சங்கர் குமார் அவர்கள் சாட்சியமே பத்திரிகையிலே கொடுத்திருக்கிறார்.

அதுமட்டும் அல்ல, அவருடைய மகன்மீது வீசுவதாகக் கருதிக்கொண்டு யாரோ ஒரு அப்பாவிமீது அமிலத்தை வீசி லயோலா கல்லூரி அருகே கொன்றும் இருக்கிறார்கள். அதற்கெல்லாம்

[திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்] [1999 மார்ச் 25 இதுவரையிலே காவல் துறையிலே எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்கப்பட்டதாகத் தெரியவில்லை.

பிற்பகல் 12-20

இவ்வளவும் செய்துவிட்டு நாகரிகம் தெரிந்தவள், பண்பாடு தெரிந்தவள், நானா இப்படிப்பட்ட இழிவான காரியங்களை எல்லாம் செய்வேன் என்று அந்த அம்மையார் சொல்லியிருக்கிறார். அந்த அம்மையாருடைய பண்பாடு, நாகரிகத்தைப் பற்றி இந்த நாடே நன்கு அறியும். இன்னும் சொல்லப்போனால் முதல்வராக இருக்கிற டாக்டர் கலைஞர் அவர்கள் அந்த அம்மையார் முதல்வராக இருந்தபோது, ஒரு அரசு விழா நடத்துகிறபோது, கலைஞர் அவர்களுக்கு ஒரு அரசு விழா அழைப்பிதழை அனுப்புகிறபோது, முன்னாள் M.L.A. என்று போட்டு தன்னுடைய நவநாகரிகத்தை வெளிப்படுத்திக்காட்டிக் கொண்டவர்தான் அந்த அம்மையார் என்பதை இந்த நாடு இன்றைக்கும் கேவலமாக எண்ணி விமர்சித்துக் கொண்டுதான் இருக்கிறது. அதுமட்டுமல்ல, அந்த அம்மையார் எந்த அளவிற்குப் படுமோசமாக நடந்து கொண்டார் என்பதைத்தான், திரு. சென்னா ரெட்டி ஆளுநர் அவர்களிடம் நடந்த விதத்தை இங்கே சொன்னார்கள். நல்லவேளை, ஆளுநர் என்னிடம் தகாத முறையில் நடந்துகொண்டார் என்று சொன்னதைப்போல, Auditor இராஜசேகரன் கூட என்னிடம் தகாத முறையில் நடந்துகொண்டார். ஆகவே நான் அடித்தேன் என்று சொல்லாமல் விட்டார் என்பதற்காக வேண்டுமானால் நாம் பெருமைப்படலாம். அதை ஒரு சாதாரணமாக எடுத்துக்கொள்ளலாம். ஆக நாகரிகம் என்பதே தெரியாமல், பண்பாடு என்பதே தெரியாமல், ஒரு Auditor-க்கே இந்த கதி; இனிமேல் போயஸ் தோட்டத்திற்கு எந்த வேலைக்கு யாரைக் கூப்பிட்டாலும் எப்படி துணிச்சலாக போவார்கள்? எந்த வேலைக்கும் யாரும் போக பயப்படுவார்கள். ஆகவே, அந்த அளவிற்குப் படுமோசமாக நடந்துகொண்டிருக்கிற இந்த Auditor விவகாரத்திலே, அரசானது உரிய நடவடிக்கை எடுக்கத் தயங்குகிறது என்பதுதான் எங்களைப் போன்றவர்களுடைய குற்றச்சாட்டு. ஆகவே, முன்னாள் முதல்வர் என்ற முறையில் அவரை விசாரித்து வேண்டுமானால் நீங்கள் நடவடிக்கை எடுங்கள். ஆனால், மற்றவர்கள்மீதுகூட நடவடிக்கை



1999 மார்ச் 25] [திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்]

எடுப்பதற்கு என்ன தடையிருக்கிறது, அதிலே, விசாரணையில் என்ன சுணக்கம் இருக்கிறது என்பதை இந்த அவைக்குத் தெரியப்படுத்த வேண்டும் என்று நான் இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

Auditor இராஜசேகரன் தாக்கப்பட்ட இந்தச் சம்பவத்திலே ஒத்துப்போகிற சாட்சியங்கள் நிறைய இருக்கின்ற காரணத்தாலே உடனடியாக இந்த அநாகரிகச் செயலுக்கு முற்றுப்புள்ளி வைக்க வேண்டும். முதலிலே அமலாக்கப் பிரிவு அதிகாரிகளை மாற்றினார்கள், அதற்குப் பின்னாலே நீதிபதிகளை மாற்றினார்கள்; நீதிபதிகளை மிரட்டுகிறார்கள்; இப்போது ஊழல் வழக்குகளிலே அரசுத் தரப்பிலே சாட்சியங்களாக இருக்கக்கூடியவர்கள் தாக்கப்படுகிறார்கள். ஏனென்றால் Auditor இராஜசேகரன் அவர்கள்கூட அந்த அம்மையாருக்கு Auditor ஆக இருந்தார் என்ற காரணத்திற்காக அரசுத் தரப்புச் சாட்சியங்களாக பல வழக்குகளில் இருக்கிறார். ஆகவே, இது சாட்சியங்களைக் கலைக்கிற ஒரு சதி வேலையாகக்கூட தெரிகிற காரணத்தினாலே, இப்படிப் படிப்படியாக எல்லோரையும் மிரட்டி, ஊழல் வழக்குகளிலேயிருந்து எப்படியாவது தப்பித்துவிடலாம் என்று மனப்பால் குடித்துக் கொண்டிருக்கின்ற, அரசியலிலே வேண்டத்தகாத இத்தகைய சக்திகள் வளர்வதைத் தடுத்து நிறுத்துவதற்காகவாவது, சாட்சியங்களைக் கலைக்கின்ற அல்லது சாட்சியங்களை மிரட்டுகிற வேலைகளைச் செய்கிற இத்தகைய சமூக விரோதிகள்மீது பாரபட்சம் இல்லாமல் விசாரித்து நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டு அமைகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவையின் துணைத் தலைவர் அவர்களே, Auditor இராஜசேகரன் தாக்கப்பட்ட சம்பவம் குறித்து இந்த அவையிலே தரப்பட்ட சிறப்புக் கவன ஈர்ப்பு அறிவிப்பின் மீது தமிழ் மாநில காங்கிரஸ் கட்சியின் சார்பில் மாண்புமிகு உறுப்பினர் ரங்கநாதன் அவர்களும், இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் மாண்புமிகு உறுப்பினர் சுப்பராயன் அவர்களும்,

[கலைஞர் மு. கருணாநிதி] [1999 மார்ச் 25

இந்திய தேசிய லீக் கட்சியின் சார்பில் மாண்புமிகு உறுப்பினர் நிஜாமுதீன் அவர்களும், பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பில் மாண்புமிகு உறுப்பினர் ஜி.கே. மணி அவர்களும், அகில இந்திய பார்வர்டு பிளாக் கட்சியின் சார்பில் மாண்புமிகு உறுப்பினர் சந்தானம் அவர்களும், எம்.ஜி.ஆர். அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் மாண்புமிகு உறுப்பினர் திருநாவுக்கரசு அவர்களும், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் மாண்புமிகு உறுப்பினர் டி. மணி அவர்களும், பாரதிய ஜனதா கட்சியின் சார்பில் மாண்புமிகு உறுப்பினர் வேலாயுதன் அவர்களும், ஜனதா தளம் கட்சியின் சார்பில் மாண்புமிகு உறுப்பினர் வெங்கடசாமி அவர்களும், புதிய தமிழகம் கட்சியின் சார்பில் மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் கிருஷ்ணசாமி அவர்களும், தமிழ்ப் பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பில் மாண்புமிகு உறுப்பினர் பேராசிரியர் தீரன் அவர்களும், நீண்ட நேரம் தங்களுடைய விளக்கங்களையெல்லாம் இங்கே அளித்திருக்கின்றார்கள்.

பிற்பகல் 12-25

அதிலும் குறிப்பாக, நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் திருநாவுக்கரசு அவர்கள், ஒரு நீண்ட, நெடிய வரலாற்றை, வரலாற்றுச் சம்பவங்களை இங்கே அடுக்கடுக்காக எடுத்துக் காட்டியிருக்கின்றார்கள். மகாபாரதத்தை எழுதிய வேதவியாசர் அந்த மகாபாரதச் சம்பவங்களிலே ஒரு கதாபாத்திரமாக இருந்த காரணத்தினால் அந்த மகாபாரதம் மிக அருமையாக அமைந்தது என்று பாராட்டுவது உண்டு. அதேபோல, வேதவியாசர் எழுதிய மகாபாரதத்தைப்போல, நம்முடைய தம்பி திருநாவுக்கரசு அவர்கள், இந்தச் சிறப்புக் கவன ஈர்ப்பிலே அனைவருடைய கவனத்தையும் ஈர்க்கின்ற வகையில், இந்த அவையிலே உள்ளவர்களுடைய கவனத்தை மாத்திரம் அல்ல; பத்திரிகைக்காரர்கள் மாத்திரம் அவருடைய முழுப் பேச்சையும் வெளியிடுவார்களேயானால் தமிழ்நாட்டிலே உள்ள எல்லா மக்களுடைய கவனத்தையும் ஈர்க்கின்ற வகையிலே (மேசையைத் தட்டும் ஒலி) நல்ல உரையினை, தேவையான உரையினை இங்கே ஆற்றியிருக்கின்றார்கள்.



1999 மார்ச் 25] [கலைஞர் மு. கருணாநிதி]

நான் இங்கே விரிவாக எதையும் பேச விரும்பவில்லை. ஆனால், இவ்வளவு பேர் பேசியதற்கிடையில் நம்முடைய பாட்டாளி மக்கள் கட்சியினுடைய சார்பில் பேசிய உறுப்பினர் மணி அவர்களுடைய கருத்துக்கு மாத்திரம் ஒரு விளக்கத்தை அளிக்க வேண்டியவனாக இருக்கின்றேன்.

நம்முடைய பாரதிய ஜனதா கட்சியின் சார்பில் பேசிய வேலாயுதன் அவர்கள், "சட்டம் தன்னுடைய கடமையைச் செய்யட்டும்" என்று வாஜ்பாய் தோரணையில் (சிரிப்பு) இங்கே தன்னுடைய கடமையை ஆற்றி அமர்ந்திருக்கின்றார்.

ஆனால், மணி அவர்கள் ஒரு சந்தேகத்தை எழுப்பினார்கள். ஒரு பெண்மணி இப்படிச் செய்வார் என்று நம்ப முடிகிறதா என்று கேட்டார். பெண்மணி நிச்சயமாகச் செய்ய மாட்டார் (சிரிப்பு) என்பதை நான் மணி அவர்களுக்கு எடுத்துக் கூற விரும்புகின்றேன்.

ஒன்றை மாத்திரம் இங்கே நான் படித்துக் காட்ட விரும்புகிறேன். அந்தப் பெண்மணி, 'இதுபோன்ற காரியங்களில் நான் ஈடுபடக் கூடியவளா'? என்று கேட்டு, தன்னுடைய நாகரிகத்தைப் பற்றியும், கண்ணியத்தைப் பற்றியும், — அவர்கள் இப்பொழுது அறைகூவல் விட்டுக் கேட்கிறாரே, — அந்த அம்மையார் ஒரு அறிக்கை வெளியிட்டார். அந்த அறிக்கை முழுவதையும் நான் படிக்க விரும்புகிறேன். சின்ன அறிக்கைதான்.

"ஒரு சில தலைவர்களுக்குக் கூட்டம் போடத் தெரியும். ஊர்வலம் நடத்தத் தெரியும். தொண்டர்களைத் தூண்டிவிட்டு வன்முறையிலே ஈடுபடச் செய்து பொதுச் சொத்துக்களுக்குச் சேதம் விளைவிக்கவும் தெரியும். ஆனால் காவல் துறை சட்டபூர்வ நடவடிக்கை எடுக்க ஆரம்பித்துவிட்டால் அவர்கள் பேசிய வசனங்கள் காற்றில் பறந்தோடி விடும். தொண்டர்களின் நினைவு மறந்து விடும். சிறையில் அசௌகரியங்களைச் சிறிது நேரம்கூடத் தாங்கிக்கொள்ள முடியாமல், எப்படியாவது வெளியே வந்துவிடத் தோன்றும். அதற்குத் தயாராக, இடுப்பு வலி, தலை வலி, திருகு வலி, நெஞ்சு வலி என்று இதுவரையில்லாத வலிகளெல்லாம் திடீரென முளைத்துவிடும். டாக்டர்

இராமதாஸைக் கைது செய்து ரிமாண்டு செய்யும்பொழுது, அதை எப்படியும் தடுக்க வேண்டுமென்ற எண்ணத்தில் திடீரென இடுப்பு வலி, நெஞ்சு வலி என்று மருத்துவமனைக்குக் கொண்டு செல்ல ஏற்பாடு செய்தார். அங்கு மருத்துவப் பரிசோதனையிலே அவருக்கு ஒன்றுமில்லை என்று தெரிந்த பின்பு காவலர்கள் அவரை ரிமாண்டு செய்ய முற்பட்டவுடன், வேறு வழியின்றி சிறையிலுள்ள அசௌகரியங்களைப் பொறுத்துக்கொள்ள முடியாமலும், பழகிப்போன சுகங்களை விட்டுக் கொடுக்க முடியாமலும், தன்னை உடனே விடுவிக்க ஏற்பாடு செய்யும்படி தனது மனைவி மூலமாக எனக்கு ஒரு வேண்டுகோள் அனுப்பி இருக்கிறார். டாக்டர் இராமதாஸின் மனைவி எனக்கு அளித்துள்ள வேண்டுகோளை ஏற்று, ஒரு பெண்மணியின் துயரை இன்னொரு பெண்மணியால்தான் புரிந்துகொள்ள முடியும் என்பதால் டாக்டர் இராமதாசை உடனடியாக வேலூர் சிறைச்சாலையிலிருந்து விடுவிக்க நடவடிக்கை எடுக்க, காவலதுறைக்கு ஆணை பிறப்பித்துள்ளேன்."

இது நாகரிகம் தெரிந்த - நயத்தகு நாகரிகம் கற்ற (மேஜையைத் தட்டும் ஒலி) அவரா இப்படிச் செய்திருப்பார் என்று என்னுடைய அருமை நண்பர் மணி அவர்களால் இங்கே ஐயப்பாட்டோடு வினா எழுப்பப்பட்ட, அம்மையார் ஜெயலலிதா அவர்கள் முதலமைச்சராக இருந்தபொழுது விடுத்த அறிக்கை. இதை மறுத்து டாக்டர் இராமதாஸ் அவர்களுடைய துணைவியார், நான் அப்படி ஒன்றும் மன்னிப்புக் கேட்கவும் இல்லை; என் கணவருக்காக வேண்டுகோள் விடுக்கவும் இல்லை என்று மறுத்து அப்பொழுது அறிக்கையும் வெளியிட்டிருக்கிறார்.

பிற்பகல் 12-30

இப்படிப்பட்ட அபாண்டங்களைச் சொல்வதில் வெகு சமர்த்தராகத் தான் அம்மணி ஜெயலலிதா அவர்கள் தன்னுடைய ஆட்சியை நடத்தினார். இன்றைக்கும் அது தொடர்கிறது. இன்றைக்குக்கூடப் பார்த்தால் 33 சதவீதம் பெண்களுக்கு எங்களுடைய கட்சியில் இடம் தந்திருக்கிறேன் என்று கூறி, அதற்கு ஒரு விழா டெல்லியில் நடப்பதாக இங்கேயுள்ள பத்திரிகைகளில் எல்லாம் செய்தி வெளியிட்டு, அதற்கு குஜ்ரால் தலைமை வகிக்கப் போகிறார் என்றும் செய்தியைப் பரப்பி, அதுபற்றி நாடாளுமன்ற உறுப்பினர் முரசொலி மாறன், குஜ்ரால் அவர்களுக்கு எழுதிக் கேட்க, "அப்படி ஒரு பாராட்டு விழாவும் கிடையாது, நான் தலைமை வகிக்கவும் இல்லை, நடக்க இருப்பது



மகளிர் கருத்தரங்கம். அதில் நானும் கலந்து கொள்கிறேன், வேறு சிலரும் கலந்து கொள்கிறார்கள், ஜெயலலிதாவும் கலந்துகொண்டு பேசுகிறார்; அவ்வளவுதானே தவிர, பாராட்டு விழா 33 சதவீதம் அவருடைய கட்சியில் உள்ளவர்களுக்கு தந்ததற்காக அல்ல" என்று மாறனுக்கு விளக்கமாக குஜ்ரால் பதிலும் எழுதியிருக்கிறார்.

இவையெல்லாம் பத்திரிகைகளில் வெளிவந்தவுடன் இன்னொரு நாடாளுமன்ற உறுப்பினர் விடுதலை விரும்பி இதைப்பற்றிய பிரச்சினையை இன்னும் பெரியதாக்கி செய்தியை வெளியிட்டார். இவருடைய கட்சியில் 29 மாவட்டங்களை 50 மாவட்டங்களாகப் பிரிப்பது — நிர்வாக வசதிக்காக அது இயல்பு. கட்சியின் வசதிக்காக எத்தனை மாவட்டங்களாக வேண்டுமானாலும் பிரித்துக் கொள்ளலாம். அப்படிப் பிரிக்கப்பட்ட 50 மாவட்டங்களில், 48 மாவட்டங்களில் ஆண்களே மாவட்டச் செயலாளர்கள், இரண்டே இரண்டு மாவட்டங்களில்தான் பெண்கள் மாவட்டச் செயலாளர்களாகத் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கின்றார்கள், என்ற செய்தியை மாறனும், விடுதலை விரும்பியும் பத்திரிகைகளில் வெளியிட்ட பிறகு, இன்றைக்கு அவர்கள் வெளியிட்டிருக்கிறார்கள். ஏற்கெனவே தேர்ந்தெடுக்கப்பட்டிருந்தாலும், ஒவ்வொரு மாவட்டத்திலும் பெண்களையும் அந்த ஆண்களோடு கூடுதல் செயலாளர்களாக நியமிக்கப் போகிறேன் என்று சொல்லியிருக்கின்றார்கள்.

கூடுதல் செயலாளர் என்றால் - Additional Secretary-யாகப் பெண்களையும் நியமிக்கப் போகிறேன் என்று அம்மையார் அவர்கள் அறிக்கை வெளியிட்டு, தான் சொன்ன உண்மைக்கு மாறான தகவலை இன்றைக்குச் சமாளிப்பதற்கு முயற்சி செய்து கொண்டிருக்கிறார். இப்படித்தான் ஒவ்வொன்றையும் சமாளிப்பதற்காக - ஒரு பொய்யை மறைக்க ஒன்பது பொய் என்று சொல்வார்களே - அதைப்போல, பொய்களைச் சொல்வதில் வல்லவராக ஜெயலலிதா அம்மையார் இருக்கிறார். அதனால்தான் அவருடைய இல்லத்தில் Auditor இராஜசேகரன் தாக்கப்பட்டார், அவரும், திருமதி சசிகலா அவர்களும், மகாதேவனும் சேர்ந்து தாக்கினார்கள் என்ற செய்தி வெளிவந்து, பத்திரிகைகளில் அது பெரிய அளவில் பிரசுரிக்கப்பட்ட சூழ்நிலையில், இது எல்லாம் கருணாநிதியின் வேலை என்று என் மீது ஓர் பழி சுமத்தினார். அதற்கு உதாரணம் சொன்னார். ஏற்கெனவே இப்படித்தான், தாணு என்ற பெண்ணோடு தான் இருப்பதாக ஒரு படத்தை வெளியிட்டு கருணாநிதி பொய்ச் செய்தியைப் பரப்பினார் என்று சொன்னார்.

உங்களுக்கெல்லாம் நன்றாக நினைவிருக்கும் என்று கருதுகின்றேன். 27-3-1997 அன்று இதே அவையில் மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர்கள் ஞானசேகரன், சுப்பராயன், சொக்கர், குமாரதாஸ், எதிர்க்கட்சித் தலைவர் போன்றவர்கள் எல்லாம், ஒரு பத்திரிகையில் வந்த அந்தப் படத்தைப் பற்றிப் பிரச்சினையை எழுப்பியபோது, நம்முடைய நண்பர் வெங்கடசாமி அவர்கள் அதைப்பற்றிக் குறிப்பிட்டு, அந்தப் படத்தில் இருப்பவர் தானு அல்ல, எங்கள் ஊர் வக்கீலைப்போல இருக்கிறது என்று சொன்னவுடன், அதைப்பற்றி விபரமாக விசாரித்து நாளைக்கு அறிக்கை தருகிறேன் என்று சொன்னேனேயல்லாமல், அது தாணுதான் என்று இந்த அவையில் நான் சொல்லவும் இல்லை, ஜெயலலிதாவை அதுகுறித்துக் குற்றம் சாட்டவும் இல்லை. இதுகுறித்து மாநில அரசு விசாரித்துத் தெரிவிக்கும் என்றுதான் குறிப்பிட்டேன். அது மட்டுமல்ல, சில பேர் பேசுகின்றபோதுகூட நான் குறுக்கிட்டு, "இங்கே குற்றம் சாட்டப்பட்ட நிலையிலே, முன்னாள் முதல்வர், செல்வி ஜெயலலிதா குற்றவாளி என்று சொல்லப்பட்ட அந்தச் சொற்களை நான் ஏற்றுக்கொள்ளத் தயாராக இல்லை. ஏனென்றால், எந்த ஒரு முடிவுக்கும் வருவதற்கு முன்பு, இங்கே சொல்லப்பட்ட அந்த வார்த்தைகள் சற்று அதிகமானவை என்பதை நான் நிச்சயமாக உணர்கிறேன்" என்றுகூடக் குறிப்பிட்டேன்.

அன்றைக்கே போலீஸ் அதிகாரிகளை ஊருக்கு அனுப்பி, அந்தப் படத்தைப் பற்றிய விபரங்களைத் தெரிந்துகொள்ளச் சொல்லி, மறுநாள் நான் டெல்லிக்குச் செல்ல வேண்டியிருந்த காரணத்தால், அவை முன்னவர் பேராசிரியர் அவர்களிடத்திலே, போலீசார் சேகரித்த அந்த அறிக்கையைத் தந்து, அந்தச் செய்தி ஆதாரமற்றது, பத்திரிகையில் வந்த செய்தி தவறானது, அவர்கள் வக்கீல்தான், நம்முடைய வெங்கடசாமி அவர்கள் சொன்னதைப்போல அவர்கள் வழக்கறிஞர்தான் என்ற விளக்கம் இந்த அவைக்கு அளிக்கப்பட்டது. இருந்தாலும் வேண்டுமென்றே அன்றைக்கு நடைபெற்ற ஒரு செய்தியை இணைத்து, இப்படித்தான் கருணாநிதி எப்போதும் என்மீது பழி சுமத்துவார் என்பதைப்போல சொல்லி, அந்த மறைவிலே இராஜசேகரன் தாக்கப்பட்ட செய்தியையும் மறைத்துவிடலாம் என்ற எண்ணத்தோடு அவர்கள் அறிக்கையை வெளியிட்டிருக்கின்றார்கள்.

இங்கே இன்னொன்றையும் நான் குறிப்பிட வேண்டியவனாக இருக்கின்றேன். Auditor இராஜசேகரன் தாக்கப்பட்டது சம்பந்தமாக,





ஏதோ மத்திய அரசு மாநில அரசிடத்திலே விளக்கம் கேட்டதாகவும், மாநில அரசு தந்த விளக்கம் மத்திய அரசுக்கு ஏதோ புரியாமல் போய்விட்டதாகவும், அது vague-ஆக இருப்பதாகவும் 19 ஆம் தேதி காலை வந்த ஒரு ஆங்கிலப் பத்திரிகையில் செய்தி வந்தது.

பிற்பகல் 12-35

நான் பத்திரிகையினுடைய பெயரைக் குறிப்பிட விரும்பவில்லை, தேவையும் இல்லை என்று கருதுகிறேன். ஓர் ஆங்கிலப் பத்திரிகை. எப்போதுமே அந்த ஆங்கிலப் பத்திரிகை எந்தத் தகவலானாலும், அதை நன்றாக விசாரித்து வெளியிடக்கூடிய பத்திரிகை. அதனால்தான், அதிலே வருகின்ற செய்திகளைப் பொதுமக்கள் நம்புகின்ற அளவுக்கு இருப்பதால், அந்தப் பத்திரிகையினிடத்திலே ஒரு கண்ணியமான மதிப்பை எங்களைப் போன்றவர்கள் எல்லாம் வைத்திருக்கின்றோம். ஆனால், 19 ஆம் தேதி காலையிலே வந்த அந்தச் செய்தி, 18 ஆம் தேதியிட்டு வரப்பெற்ற செய்தியாகும். சில தமிழ் ஏடுகளும் அதை நம்பி, அந்தச் செய்தியை மாலையிலே எடுத்து மறுபிரசுரம் செய்திருக்கின்றன. அந்தச் செய்தியிலே காணப்பட்டது தவறானது. ஏனென்றால், 19 ஆம் தேதி காலையிலே அந்தப் பத்திரிகையிலே 18 ஆம் தேதியிட்டு செய்தி வருகிறது. ஆனால், மத்திய அரசிடமிருந்து அதைப்பற்றி விவரம் கேட்டு Fax மூலம் வருகின்ற கடிதம் 19 ஆம் தேதி மாலையில்தான், தமிழக அரசுக்கே வருகிறது. ஆனால், 19 ஆம் தேதி காலையிலே ஆங்கிலப் பத்திரிகையிலே செய்தி வந்துவிட்டது. எங்களுக்கு வந்ததாகவும், நாங்கள் அளித்த பதில் மத்திய அரசுக்குத் திருப்திகரமாக இல்லை என்பதாகவும் செய்தி வந்துவிட்டது. ஆனால் Fax மூலம் மத்திய உள் துறையினுடைய கடிதம் 19 ஆம் தேதி மாலைதான் தமிழக அரசுக்குக் கிடைக்கிறது. அதற்கு, 20 ஆம் தேதி மாலையில் தமிழக அரசு பதில் அனுப்பியிருக்கிறது. 19 ஆம் தேதி மாலையில் கடிதம் வந்து, 20 ஆம் தேதி மாலையில் தமிழக அரசு பதில் அனுப்பிய அந்தச் சூழ்நிலையில், 18 ஆம் தேதியே, நாங்கள் அனுப்பிய கடிதம் திருப்தியாக இல்லையென்று எப்படி மத்திய உள் துறை அலுவலகம் ஒரு செய்தியை வெளியிட்டிருக்க முடியும் என்பது வியப்புக்குரிய ஒன்று.

ரஸ்டோகி, இயக்குநர், S.B., உள் துறை அமைச்சகம், புதுடெல்லி— அவர்தான் 19 ஆம் தேதி இந்தச் செய்தியை அனுப்புகின்றார். "பூர்ணலிங்கம், முதன்மைச் செயலாளர், உள் துறை, தமிழ்நாடு அரசு, சென்னை". அவர் என்ன குறிப்பிடுகிறார் என்றால், "முன்னாள்

முதலமைச்சர் செல்வி ஜெயலலிதாவின் வீட்டில் Auditor தாக்கப்பட்டதாகச் செய்தி கிடைத்துள்ளது. அந்தச் சம்பவம் பற்றிய விவரங்களையும், அதன் மீது மாநில அரசால் எடுக்கப்படும் நடவடிக்கைகளையும் உள் துறை அமைச்சருக்கும், உள் துறைச் செயலாளருக்கும் தெரிவிக்க வேண்டியிருப்பதால், உடனடியாக எங்கள் அமைச்சகத்திற்குக் கிடைக்கச் செய்யக் கேட்டுக்கொள்ளப்படுகிறது". அவ்வளவுதான்.

Explanation என்று அல்ல. விவரம்தான் கேட்டிருக்கிறார்கள். "ஒரு செய்தி வந்திருக்கிறது. இதைப்பற்றி நாங்கள் உள் துறைச் செயலாளருக்கும், உள் துறை அமைச்சருக்கும் தெரிவிக்க வேண்டியிருக்கிறது. எனவே, விவரத்தை எங்களுக்கு அறிவிக்க வேண்டுகிறோம். இப்படிக்கு, பி.சி. ரஸ்டோகி, இயக்குநர், S.B." என்று வந்திருக்கிறது.

அதற்கு, உடனடியாக நம்முடைய அரசின் சார்பில் அவர்களுக்குப் பதில் அனுப்பப்பட்டது. அந்தப் பதில் 20-3-1999 அன்று உள் துறைச் செயலாளர் மூலமாக மத்திய அரசுக்கு அனுப்பப்படுகிறது. அந்தப் பதிலில், 13-3-1999 மாலை 5¼ மணிக்கு இ-3, தேனாம்பேட்டை காவல் நிலையத்திற்கு, இராயப்பேட்டை அரசு மருத்துவமனையிலே இருந்து, பி-4, எண் 38, வெங்கட்ராமன் தெரு, தியாகராய நகர், சென்னை-17 என்ற விலாசத்திலே வசிக்கும் Auditor ஆர். இராஜசேகரன் என்பவர் தாக்கப்பட்டது குறித்துத் தகவல் தரப்பட்டது. இ-3, தேனாம்பேட்டை காவல் நிலைய ஆய்வாளர், மாலை 6½ மணிக்கு அரசு இராயப்பேட்டை மருத்துவமனைக்குச் சென்றார். அங்கே, காயமடைந்த நபர் ஏற்கெனவே எழும்பூரில் உள்ள கண் மருத்துவமனைக்கு அனுப்பப்பட்டிருக்கிறார் என்ற தகவலை அறிந்து, எழும்பூர் கண் மருத்துவமனைக்குச் சென்றார். அங்கே இராஜசேகரன் மருத்துவ அலுவலர்கள் முன்னிலையில் எழுத்து மூலமாகப் புகார் ஒன்றைக் கொடுத்தார். அப்புகாரில், Auditor இராஜசேகரன் பின்வருமாறு கூறியிருக்கிறார். இது, மாநில அரசு, மத்திய அரசுக்கு எழுதிய விவரக் கடிதம்.

பிற்பகல் 12-40

"தான் ஒரு தணிக்கையாளர் என்றும், செல்வி ஜெயலலிதா மற்றும் திருமதி சசிகலா ஆகியோரின் வருமான வரிக் கணக்குகள் பற்றிய விவரங்களைத் தான் பார்த்து வந்ததாகவும், பின்னர் அந்தப் பணியிலே



இருந்து விடுவிக்கப்பட்டதாகவும், 13-3-1999 அன்று, மகாதேவன் என்பவர் அழைத்ததன்பேரில், தானும், தனது சகோதரர் கணேசன் என்பவரும் சுமார் 11-00 மணி அளவுக்கு போயஸ் தோட்டத்திலே உள்ள ஜெயலலிதாவின் இல்லத்திற்குச் சென்றதாகவும், எதிர்த்திசையில் தமது காரை நிறுத்திவிட்டு, காரில் தனது சகோதரரை இருக்கக் கூறிவிட்டு, தான் மட்டும் வீட்டிற்குள் சென்றதாகவும், அங்கே திரு. சண்முகம் என்ற தணிக்கையாளர், அவர் எழுதிய கடிதம் குறித்து இவரிடம் விளக்கம் கேட்டதாகவும், அதன் பின்னர், ஜெயலலிதா உள்ளே வந்து, சண்முகத்தை வெளியே செல்லுமாறு கூறிவிட்டு, சசிகலாவை மட்டும் உள்ளே அழைத்துக்கொண்டு, பின்னர் கதவைத் தாளிட்டுவிட்டு, செல்வி ஜெயலலிதா, திருமதி சசிகலா மற்றும் மகாதேவன் ஆகியோர் தன்னை high-heel chappal கொண்டும், மற்றும் லத்தியைக் கொண்டும் மாற்றி, மாற்றி, கைகள், தொடைகள், தலை மற்றும் கண் ஆகிய இடங்களைத் தாக்கியதாகவும், தமிழில் சசிகலா சொல்லச் சொல்ல இரண்டு கடிதங்களை எழுதுமாறு பணித்து, அதிலே கையெழுத்திடச் செய்தும், பின்னர் ஜெயலலிதா அவ்வாறே ஆங்கிலத்தில் dictate செய்து, மற்றொரு கடிதத்தை எழுதச் செய்து, அதிலே, வருமான வரிக் கணக்குகளைத் தாக்கல் செய்வதில் தவறு ஏற்பட்டமைக்கு இவர்தான் காரணம் என்று அதிலே எழுதச் செய்து, கையெழுத்துப் பெற்றதாகவும், மற்றும் இரண்டு முத்திரைத்தாள்களில் ஒன்றில் 30 இலட்சமும், மற்றொன்றில் 20 இலட்சமும் இவர் பெற்றுக் கொண்டதாக எழுதி தன் கையெழுத்துக்களை அதிலே போடச் செய்ததாகவும், அந்தக் கடிதங்களில் தனது அலுவலக முத்திரை இடப்பட வேண்டுமென்று ஜெயலலிதா கட்டளை இட்டதாகவும், அந்த அலுவலக முத்திரையைத் தன்னிடம் ஒப்படைக்க வேண்டுமென்று கூறியதாகவும், மூவரும் இவருடைய குடும்பத்தினரின் உயிருக்கு ஆபத்தை உண்டாக்குவதாகக் கூறினார்கள் என்றும், அதன் பின்னர், மகாதேவன் மற்றும் இருவர் இவரை ஒரு காரில் இவருடைய அலுவலகத்திற்கு அந்த முத்திரையிடுவதற்காக அழைத்துச் சென்றதாகவும், போகும் வழியில் மகாதேவன் ஒரு துப்பாக்கியை எடுத்து இவரை மிரட்டியதாகவும், அலுவலகம் அன்றையதினம் பூட்டியிருந்ததாகவும், அங்கே தான் இறக்கிவிடப்பட்டதாகவும், அதன் பின்னர், தன்னைத் தொடர்ந்து வந்த சகோதரர் கணேசனிடம் ஜெயலலிதா வீட்டில் தான் அடிபட்டதை விவரித்ததாகவும், தனது புகார் மனுவிலே Auditor இராஜசேகரன் தெரிவித்திருக்கிறார். எழுத்து மூலமான அந்தப் புகாரின் அடிப்படையில் [illegible] காவல்

221092

[கலைஞர் மு. கருணாநிதி] [1999 மார்ச் 25

நிலையத்தில் 13-3-1999 அன்று, முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டு, குற்ற எண் 303/99-ன்கீழ் வழக்கு ஒன்று இந்திய தண்டனைச் சட்டம், பிரிவுகள் 343, 323, 324, 347, 385, 506 (2), 307 மற்றும் படைக்கலச் சட்டப் பிரிவு எண் 25 ஆகியவற்றில் பதிவு செய்யப்பட்டுள்ளது. வழக்குப் பதிவு செய்யப்பட்ட பின்னர், தேனாம்பேட்டை காவல் நிலைய சட்டம்-ஒழுங்குப் பிரிவு ஆய்வாளர், வழக்கை விசாரணைக்கு எடுத்துக் கொண்டுள்ளார். புகார் மனுக் கொடுத்த Auditor இராஜசேகரன் 15-3-1999 அன்று சென்னை 22-ஆவது கூடுதல் பெருநகர மாஜிஸ்ட்ரேட் முன்னிலையில் குற்றவியல் நடைமுறைச் சட்டத்தின் பிரிவு 164-ன்கீழ் வாக்குமூலம் கொடுத்துள்ளார். குற்றம் சாட்டப்பட்டுள்ளவர்களில் ஒருவரான மகாதேவன் 20-3-1999 அன்று கைது செய்யப்பட்டுள்ளார். மேலும், வழக்கில் புலன் விசாரணை தொடர்ந்து நடைபெற்று வருகிறது.

இதுதான் மத்திய அரசுக்குத் தமிழக அரசு அனுப்பியுள்ள விவரமான பதிலாகும் இதைத் தொடர்ந்து புலன் விசாரணை நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. ஏன் மூவரும் கைது செய்யப்படவில்லை என்று இங்கே பேசிய உறுப்பினர்கள் அனைவரும் ஓரிருவரைத் தவிர பெரும்பாலானோர் கேட்டிருக்கின்றார்கள். நியாயமான கேள்வியாக இருந்தாலுங்கூட, புலன் விசாரணை முழுமையாக முடிவுற்ற பிறகு எடுக்கப்பட வேண்டிய சட்டபூர்வமான நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்பதை மாத்திரம் தெரிவித்து, இந்த அளவில் இந்தச் சிறப்புக் கவன ஈர்ப்பில் என்னுடைய கருத்துக்களைக் கூறி அமைகின்றேன், வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி)

## 6. வரவு-செலவுத் திட்டம், 1999-2000, பொது விவாதம்—தொடர்ச்சி

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அடுத்து, நிதிநிலை அறிக்கை மீது பொது விவாதம், திரு. ரா. ஈஸ்வரன்.

**திரு. ரா. ஈஸ்வரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த 1999-2000 ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்டத்தில் பேசுவதற்கு வாய்ப்பளித்தமைக்காக நன்றி கூறிக்கொள்கின்றேன். தமிழகத்தினுடைய வரவு ரூ. 15,856.78 கோடியாகவும், செலவு 18,500.32 கோடியாகவும், பற்றாக்குறை 529.13 கோடியாகவும் இருக்கின்றன.



1999 மார்ச் 25] [திரு. ரா. ஈஸ்வரன்]

22 ஆம் தேதி நடைபெற்ற சம்பவம் பத்திரிகைகளில் தவறான முறையில், ஏதோ வேளாண்மைத் துறை அமைச்சர் வீரபாண்டியார் அவர்கள் கீழே விழுந்து, தடுமாறி விழுந்ததாகத் தவறான ஒரு செய்தியை முன்னாள் முதலமைச்சர் ஜெயலலிதா அவர்கள் கூறியவை பத்திரிகைகளில் செய்திகளாக வந்திருக்கின்றன. முன்னாள் முதலமைச்சர் ஜெயலலிதாவைப் பொறுத்தவரையில், **

பிற்பகல் 12-45

அந்தவகையில், அவர் ஐந்தாண்டு காலம் ஆட்சியில் இருந்த நேரத்திலே இந்தச் சட்டமன்றம் எப்படி நடந்தது என்று முன்னாள் அமைச்சரும், இந்நாள் சட்டமன்ற உறுப்பினருமான மரியாதைக்குரிய திருநாவுக்கரசு அவர்கள் தெளிவாக எடுத்துரைத்துள்ளார்கள். ஏனென்றால் அவர் கூடவே இருந்தவர்கள். அந்தச் சம்பவம் பூராவும் அவர்களுக்கு நன்றாகத் தெரியும். அதிலேகூட ஒன்றை அனுதாபப்பட்டுச் சொன்னார்கள். சசிகலாவைக் கைது செய்யுங்கள், ஜெயலலிதாவைக் கொஞ்சம் விட்டுவிடுங்கள் என்று அனுதாபப்பட்டுச் சொன்னார்கள். அது என்ன அனுதாபமோ எனக்கு ஒன்றும் புரியவில்லை. ஆனால், அவர் முன்பு நெருங்கிய உறவு வைத்திருந்தார் என்ற காரணத்தாலோ என்னவோ அனுதாபப்பட்டுச் சொல்கிறார். இந்தச் சட்டமன்றத்திலே ஐந்தாண்டு காலமாக, ஜெயலலிதா ஆட்சியில் — இப்போதைய துணை சபாநாயகர் அவர்கள் உறுப்பினராக இருந்திருக்கிறார்கள், அவரை ஒருநாள்கூடச் சட்டமன்றத்திலே முழுமையாகப் பேசவிட்டதில்லை. எதிர்க்கட்சி சட்டமன்ற உறுப்பினர்களை நிம்மதியோடு இந்தச் சட்டமன்றத்தில் பேசவிட்டதில்லை. ஆனால், இப்போது இருக்கிற அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக சட்டமன்ற உறுப்பினர்களுக்கு, இந்த அரசு பொறுப்பேற்றதிலிருந்து ஜனநாயக மரபுப் படி முழுமையாக, எல்லாம் பேசுவதற்கு வாய்ப்புகள் கொடுக்கப்பட்டிருக்கின்றன.

இங்கிருக்கக்கூடிய பத்திரிகைத் துறையைப் பொறுத்த அளவில், நடந்த சம்பவம் — வீரபாண்டியார் கீழே தடுமாறி விழுந்துவிட்டார்கள் என்று பத்திரிகையிலே செய்தி வந்திருக்கிறது — குறித்து செய்தி வெளியாகவில்லை. உண்மையில் என்ன நடந்தது என்றால், அமைச்சர் தாக்கப்பட்டதுதான் உண்மை.

---

** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

[திரு. ரா. ஈஸ்வரன்] [1999 மார்ச் 25

முன்னாள் முதலமைச்சரைப் பொறுத்தவரையில் வேண்டுமென்றே செய்கிறார்கள். அப்பாவியாக இருந்து திரு. தாமரைக்கனி அவர்கள் நல்லமுறையில் செயல்பட்டுக் கொண்டிருந்தார்கள். ஜெயலலிதாவினுடைய தூண்டுதலின்பேரில் சட்டமன்றத்தில் எப்படியாவது வன்முறையை உருவாக்க வேண்டுமென்று சொல்லி, அவர் தினந்தோறும் பேசிக் கொண்டிருக்கிறாரே என்ற கெட்ட எண்ணத்தோடு, எப்படியாவது அவரை வழக்கில் சிக்க வைக்க வேண்டுமென்று, இந்தச் சட்டமன்றக் கூட்டத்தில் அவர் கலந்து கொள்ளக்கூடாது என்ற அளவில் நிலையை உருவாக்க வேண்டுமென்ற எண்ணத்தில் ஜெயலலிதாவே ஏற்பாடு செய்த ஒரு நாடகம் என்றுதான் சொல்ல முடியும்.

இந்தச் சட்டமன்றத்தில் அளிக்கப்பட்டிருக்கக்கூடிய நிதிநிலை அறிக்கையில் கல்வித் துறைக்கு மட்டும் 4,092 கோடி ரூபாயும், மக்கள் நல்வாழ்வுத் துறைக்கு 1,079 கோடி ரூபாயும் ஒதுக்கப்பட்டுள்ளன. கல்வித் துறையில், தொடக்கப் பள்ளிக்கு முன்னுரிமை கொடுக்கப்பட்டிருக்கிறது. அதுமாதிரி, மக்கள் நல்வாழ்வுத் துறையில் சுமார் 652 ஆரம்ப சுகாதார நிலையங்கள் கட்டுவதற்கு அரசு அனுமதியளித்துள்ளது. அதில் 434 நிலையங்களுக்குக் கட்டடம் கட்டி முடிக்கப்பட்டுள்ளன, 157 கட்டடங்கள் இம்மாத இறுதிக்குள் கட்டி முடிக்கப்படும் என்று நிதிநிலை அறிக்கையில் சொல்லப்பட்டிருக்கிறது.

கரும்புக்கு, தமிழகத்தில் இருக்கக்கூடிய விவசாயிகளுக்கு, டன் ஒன்றுக்கு 1,000 ரூபாயாவது கொடுக்க வேண்டும். ஏனென்றால், தமிழகத்தில் இருக்கக்கூடிய விவசாயிகளில், சுமார் 60 சதவிகிதம் பேர் கரும்பு பயிரிடும் விவசாயிகளாக இருக்கிறார்கள். பெரும்பாலானவர்கள் கஷ்டங்களுக்கு உள்ளாக்கப்பட்டுள்ளார்கள். கரும்பு உற்பத்தி செய்வதினுடைய செலவு அதிகப்படியாக இருக்கிறது. ஆகவே, மாண்புமிகு முதல்வர் அவர்கள் முத்தரப்பு பேச்சுவார்த்தை நடத்தி, விரைவில் பேசி இந்த விவசாயிகளுக்கு டன் ஒன்றுக்கு 1,000 ரூபாய் கொடுப்பதற்கு ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மாவட்ட வளர்ச்சி மன்றக் கூட்டங்கள் எப்போதுமே அந்தந்த மாவட்டங்களில் 45 நாளைக்கு ஒரு முறை நடைபெறும். ஆனால், இந்த ஆட்சி பொறுப்பேற்ற பிறகு மாவட்ட வளர்ச்சி மன்றக் கூட்டங்கள் நடைபெறவில்லை. மாவட்ட வளர்ச்சி மன்றக் கூட்டம் கூட்டப்படாததற்கு என்ன காரணம்? மத்திய, மாநில அரசுகள்



1999 மார்ச் 25] [திரு. ரா. ஈஸ்வரன்]

கொடுக்கக்கூடிய நிதிகள், அதைக் கொண்டு செய்யப்படும் வேலைகளைக் கண்காணிப்பதற்கு, அதிகாரிகளைத் தட்டிக் கேட்பதற்கு, அந்த வேலைகள் தேங்கி நின்றால், அந்த வேலைகளை முடுக்கி விடுவதற்கு, மாவட்ட வளர்ச்சி மன்றக் கூட்டம் உதவும். ஆகவே மீண்டும் அதை நடைமுறைப்படுத்த வேண்டுமென்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்களை மிக்க அன்போடு கேட்டுக் கொள்கிறேன்.

பிற்பகல் 12-50

மின்சாரத்தைப் பொறுத்தளவில், ஒரு நாளைக்கு 5 தடவை, 6 தடவை மின் துண்டிப்பு ஏற்படுகிறது. எப்போது மின்சாரம் வரும், எப்போது போகும் என்று தெரியவில்லை. என்னுடைய நெல்லை மாவட்டத்தில் தென் பகுதியில் படிக்கக்கூடிய மாணவர்களுக்கும், இரவு நேரங்களில் விவசாயத்திற்கும் முழுமையாக மின்சாரம் கிடைப்பதில்லை. ஆகவே, முன்னெச்சரிக்கையாக அந்த மின்சாரத் தடையை அந்தத் துறையைச் சார்ந்த அதிகாரிகள் அறிவிக்க வேண்டும். மின்சாரத் துறைக்காக 1,034 கோடி ரூபாய் வழங்கப்பட்டிருக்கிறது. என்னுடைய தொகுதியில் சிவகிரியில் ஒரு Sub-station அமைப்பதற்கு பரிந்துரை செய்து, அத்துறைக்கு அனுப்பப்பட்டு இருக்கிறது. ஆகையினால், உடனடியாக அந்த Sub-station-க்கு அனுமதி வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

போக்குவரத்துத் துறையைப் பொறுத்தளவில், எங்களுடைய மாவட்டத்தில் இந்த மூன்று ஆண்டுகளில் 7,309 வாகனங்கள் வாங்கப்பட்டு அந்தப் பேருந்துகள் ஓடிக் கொண்டிருக்கின்றன. ஆனால், முழுமையாக இயங்கவில்லை. 60 சதவிகிதம்தான் அந்தப் பேருந்துகள் இயங்குகின்றன. 40 சதவிகிதம் ஆங்காங்கே நடுவழியில் நிற்கின்றன. டீசல் தட்டுப்பாட்டுக்காக நிறுத்தப்பட்ட வாகனங்களை மீண்டும் ஓட்டுவதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும்.

நெல்லையில் இருக்கக்கூடிய போக்குவரத்துக் கழகங்களில் ஒரு நாளைக்கு 26 இலட்சம் ரூபாய் வருவாயும், ஒரு நாளைக்கு 4 இலட்சம் ரூபாய் நஷ்டமும் ஏற்படுவதாக அங்கேயிருக்கக்கூடிய நிர்வாக இயக்குநர், சம்பந்தப்பட்ட அதிகாரி அவர்கள் சொல்கிறார்கள். அப்படிப் பார்த்தால் மாதம் ஒன்றுக்கு ஒரு கோடியே 20 இலட்சம் ரூபாய் நஷ்டம் ஏற்படுவதாக நான் அறிகிறேன். ஆகையினால், பேப்பரோ அல்லது சாமான்களோ வாங்க முடியவில்லை. ஒரு stepney கூட இல்லை. ஆங்காங்கே அரசுத் துறை வாகனங்கள் மிக மோசமான

நிலையில் இருக்கின்றன. தனியார் வாகனங்கள் எல்லாமே இலாபத்தில் ஓடுகின்றன. அரசு போக்குவரத்துக் கழகங்கள் மட்டும் சுமார் 400 கோடி ரூபாய் நஷ்டத்தைக் காட்டுகின்றன. இதை ஈடுசெய்வதற்காக, அரசு 100 கோடி ரூபாய் வழங்கியிருக்கிறது. மாணவர்களுக்கு இலவசப் பேருந்து அடையாள அட்டை வழங்குவதற்காகச் சுமார் 80 கோடி ரூபாய் வழங்கியிருக்கிறது. ஆனால், இவ்வளவு ஈடுசெய்தும்கூட அந்தப் பேருந்துகள் முறையாக, குறிப்பிட்ட நேரங்களில் மக்களை ஏற்றிச் செல்வதற்குத் தகுதியற்றவையாக இருக்கின்றன. ஆகையினால், போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள், அதற்கு உடனடியாக மாற்று ஏற்பாடு செய்து அந்தப் போக்குவரத்தைச் செம்மைப்படுத்த வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். (மணியடிக்கப்பெற்றது)

வறுமைக்கோட்டிற்குக் கீழே உள்ளவர்களுக்கு 100 கோடி ரூபாய் ஒதுக்கியிருக்கிறீர்கள் வேட்டி சேலைக்காக. இந்த வேட்டி சேலைகளை யார் வாங்குகிறார்கள் என்றால், 10 ஏக்கர் நிலம் வைத்திருக்கக்கூடிய நபர்களும் வரிசையில் வந்து நிற்கிறார்கள், 5 ஆயிரத்திலிருந்து 10 ஆயிரம் ரூபாய் வரை சம்பளம் வாங்கக்கூடியவர்களும் இந்த வரிசையில் வந்து நிற்கிறார்கள். இந்த வேட்டி சேலைகளை எல்லோருக்கும் கொடுக்க வேண்டும் என்பது அவசியமேயில்லை. வறுமைக்கோட்டிற்குக் கீழே உள்ளவர்களுக்கு, அந்த உண்மையை அறிந்து, சாதாரண ஏழை எளிய மக்களுக்குக் கொடுங்கள். இதனால் எனக்கு வேட்டி கிடைக்கவில்லை, சேலை கிடைக்கவில்லை என்று ஒவ்வொரு இடத்திலேயும் போராட்டத்தை வைத்துக் கொள்கிறார்கள். இந்த மாதிரி நிலைமையில், நீங்கள் வறுமைக்கோட்டிற்குக் கீழே இருக்கின்ற நபர்களை மட்டும் தேர்வு செய்தால் இந்த 100 கோடி ரூபாயில் உங்களுக்கு 75 கோடி ரூபாய் மீதம் இருக்கும்.

தமிழ்நாட்டிலே சத்துணவுத் திட்டத்திற்காக 532 கோடி ரூபாய் ஒதுக்கியிருக்கிறீர்கள். இந்த 532 கோடி ரூபாயிலே சத்துணவுத் திட்டத்திலே என்ன நடக்கிறது என்பது உங்களுக்கு நன்றாகத் தெரியும். ஒரு கல்விக் கூடத்திலே 100 பிள்ளைகள் இருந்தால், அதில் 25 பிள்ளைகளுக்குத்தான் மதிய உணவு வழங்கப்படுகிறது. (மணியடிக்கப்பெற்றது).

முற்பகல் 12-55

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** இன்னும் ஒரு நிமிடத்தில் உரையை முடியுங்கள்.



**திரு. ரா. ஈஸ்வரன்:** ஆனால், 75 பிள்ளைகளுக்குப் பொய்யான voucher-கள்தான் போடப்படுகின்றன. இது தமிழ்நாடு முழுவதும் நடக்கிறது. காமராசர் ஆட்சியிலே 1967-க்கு முன்னாலே செய்ததுபோல 5 ஆம் வகுப்புக்குக் கீழே, வறுமைக்கோட்டுக்குக் கீழேயுள்ள பிள்ளைகளுக்கு இந்தத் திட்டத்தை நீங்கள் அமல்படுத்தினால் அதன் செலவு 135 கோடி அல்லது 100 கோடி ரூபாயோடு நின்றுவிடும்; அதில் 400 கோடி ரூபாய் உங்களுக்கு மிச்சம் ஏற்படும். அங்கே பணக்கார வீட்டுப் பிள்ளைகள் எல்லாம் மதிய உணவைச் சாப்பிடுவதில்லை. ஏதோ நாய்க்கும், பன்றிகளுக்கும்தான், அந்தச் சோற்றை வீசி எறிகிறார்கள். இதுதான் உண்மை. இந்நிலை தமிழ்நாடு முழுவதும் இருக்கிறது. ஆகையினால், அதுபற்றி நீங்கள் கொஞ்சம் ஆலோசனை செய்து, மறுபரிசீலனை செய்தால் நலமாக இருக்கும். நாம், அரசியல்வாதிகள் எல்லோரும் என்ன நினைக்கிறோம் என்றால் — மத்தியிலே எடுத்தாலும் சரி, மாநிலத்திலே எடுத்தாலும் சரி, தமிழ்நாட்டில் இருக்கக்கூடிய பொருளாதாரத்தை, மத்தியில் இருக்கக்கூடிய பொருளாதாரத்தைக் கெடுப்பதற்கு அரசியல்வாதிகளும் ஓட்டு வாங்கத்தானே ஏமாற்றுகிறோம்; இதுதான் காரணம்; நான் உண்மையைச் சொல்கிறேன். ஆகையினால், தைரியமாக நீங்கள் நியாயத்தைச் செய்யுங்கள். இனி ஆட்சிக்கு வந்த உடனே முதலில் இந்தமாதிரி தவறான திட்டங்கள் இருந்தால் தைரியமாக அதை விட்டுவிட்டு, மறு தேர்தலைச் சந்திப்பதற்குத் தயாராக இருக்க வேண்டும். இந்த அரசு மட்டுமல்ல, மத்தியிலும் அப்படித்தான் இருக்க வேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. இ.ஜி. சுகவனம். (குறுக்கீடு) திரு. ஈஸ்வரன், நேரம் அதிகமாகிவிட்டது; இன்னும் இருப்பது 34 நிமிடங்கள்தான், 10 உறுப்பினர்கள் பேசியாக வேண்டும்.

**திரு. ரா. ஈஸ்வரன்:** நான் இன்னும் தொகுதிப் பிரச்சினைக்கே வரவில்லை; அதுபற்றிப் பேசவேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** ஒரு நிமிடத்தில் பேசி முடியுங்கள்.

**திரு. ரா. ஈஸ்வரன்:** என்னுடைய சட்டமன்றத் தொகுதியில் நெடுஞ்சாலைத் துறையைப் பொறுத்தவரையில், இராஜபாளையத்தில் இருந்து நெல்லை வரைக்கும் மாண்புமிகு டாக்டர் முதல்வர் அவர்கள்

வந்திருந்தபோது, நெல்லையிலிருந்து சங்கரன்கோவில் வழியாக வந்தார்கள். அது 75 சதவிகிதம் இருவழிச் சாலையாக இருக்கிறது; அதில் இன்னும் 25 சதவிகிதத்தையும் சேர்த்து விட்டால் முழுமையாக இருவழிச் சாலையாக இருக்கும். அதேமாதிரி இராஜபாளையம் ஒரு நகராட்சி, புளியங்குடியும் ஒரு நகராட்சி. அதையும் இருவழிச் சாலையாக மாற்ற வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

நெடுஞ்சாலைத் துறையைப் பொறுத்தவரையில், சங்கரன்கோவிலில் நெடுஞ்சாலைத் துறையின் A.D.E. அலுவலகம் இருக்கிறது. அது 750 கி.மீ. தூரத்தைப் பராமரிக்கிறது. தமிழகத்திலே அதிகப்படியான தூரத்தைப் பராமரிக்கும் நெடுஞ்சாலைத் துறை A.D.E. அலுவலகம் ஒன்று இருக்கிறது என்றால், அது சங்கரன்கோவில் நெடுஞ்சாலைத் துறை A.D.E. அலுவலகம் தான். மற்ற தாலுகாக்களில் இருக்கக்கூடிய நெடுஞ்சாலைத் துறை A.D.E. அலுவலகம் 150 கி.மீ.-லிருந்து 250 கி.மீ. வரைதான் பராமரிக்கிறது. ஆகவே, அதை இரண்டாகப் பிரிக்க வேண்டுமென்று மாண்புமிகு முதல்வர் அவர்களிடமும், நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் அவர்களிடமும் நான் பலமுறை வலியுறுத்தி இருக்கிறேன். ஆகையினால், அதைப் பிரிக்க நீங்கள் உத்தரவிட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அதேமாதிரி, பொதுப்பணித் துறையில் 2 தாலுகாக்கள்.... (மணியடிக்கப்பெற்றது) இன்னும் கொஞ்ச நேரம் கொடுங்கள். தொகுதிப் பிரச்சினையைப் பற்றி மட்டும் சொல்லிவிடுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** நேரம் ஆகிவிட்டது. அடுத்து, திரு. இ.ஜி. சுகவனம்.

***திரு. இ.ஜி. சுகவனம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்தியத் துணைக் கண்டத்திலேயே வரலாற்றில் தனி இடத்தைப் பெற்றிருக்கின்ற தமிழக சட்டப் பேரவையில் பகுத்தறிவுப் பகலவன், தந்தை பெரியார் வகுத்துத் தந்த பாதையில், பேரறிஞர் அண்ணா அவர்கள் காட்டிய வழியில் அயராது பீடுநடைபோடும் நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள், இந்தியாவிலே எந்த முதல்வரும் நடைமுறைப்படுத்தாத புதுப் புதுத் திட்டங்களைத் தமிழகத்திற்கு அறிவித்து, 12 ஆவது நிதிநிலை அறிக்கையின் விவாதத்திலே நான் கலந்துகொண்டு பேசுகின்ற வாய்ப்பினை ஏற்படுத்தித் தந்த மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவருக்கும், மாண்புமிகு முதல்வருக்கும் என் நன்றியை முதற்கண் தெரிவித்துக் கொள்கிறேன்.



"Of the people, By the people, For the people" என்ற ஆப்ரஹாம் ங்கனின் தத்துவத்திற்கேற்ப பேரறிஞர் அண்ணா அவர்கள் காட்டிய ழியிலே, ஏழை எளிய நடுத்தர பாட்டாளி மக்களின் வாழ்க்கையை மையமாக வைத்து இந்த ஆட்சிச் சக்கரம் சுழலும் என்று அறிவித்த பரறிஞர் பெருந்தகை அண்ணா அவர்களின் வழியிலே வழி பிறழாமல், மிழகத் தரணியை உயர்த்தி, நம்முடைய முதல்வர் அவர்கள் இந்த வைக்கு அளித்த மிகச் சிறந்த நிதிநிலை அறிக்கையிலே பங்குகொண்டு பசுவதிலே பெருமகிழ்ச்சி அடைகிறேன்.

பிற்பகல் 1-00

நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஆட்சிப் பொறுப்பேற்ற பிறகு முதலாவதாக ஒன்றைச் செய்தார்கள். மன்னர் ஆட்சிக் காலத்திலேகூட தூர்வாரப்படாத நிலை இருந்தது. கடந்த ஆண்டு மாண்புமிகு முதல்வர் திட்டம் தீட்டி ஆறுகள், ஏரிகள், கால்வாய்கள், குளங்கள் ஆகியவற்றைத் தூர்வார நடவடிக்கை எடுத்திருக்கிறார்கள். தண்ணீர் முழுவதும் பாசனத்திற்குப் பயன்படுகின்ற வகையிலே, அதேநேரத்தில் மழைக் காலங்களிலே வெள்ளம் ஏற்பட்டு, அதனால் ஏற்படும் பெரும் சேதங்களைத் தடுப்பதற்கும் கிட்டத்தட்ட 58 கோடி ரூபாயைச் செலவு செய்து தூர் வாரியிருக்கிறார்கள். மறுபடியும் 50 கோடி ரூபாயை ஒதுக்கி, வருகின்ற நிதியாண்டிலே இந்தத் தூர்வாரும் பணிக்காக ஏற்பாடு செய்திருக்கிறார்கள். ஆனால் இங்கேயுள்ள பல மாண்புமிகு உறுப்பினர்களும், வெளியிலே உள்ளவர்களும், இந்த ஆட்சியிலே வேளாண்மைத் துறைக்கு ஏதும் செய்யவில்லை என்று சொல்கிறார்கள். நீர் இருந்தால்தான் வேளாண்மைத் துறை மிகச் செம்மையாக இருக்கும். நீர் மிக அவசியம் என்பதற்காகத்தான், வேளாண்மைத் துறை பயன்பெற வேண்டுமென்பதற்காகத்தான், நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள் இந்தத் தூர்வாருகிற பணியை மிகச் சிறப்பாகச் செயல்படுத்தி, நடைமுறைப்படுத்தியிருக்கிறார்கள் என்பதை நான் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

என்னுடைய தொகுதியைப் பொறுத்தவரையிலும் கடந்த 50 ஆண்டு காலமாக படேதலா என்று சொல்லப்படுகின்ற அந்த ஏரிக் கால்வாய் செப்பனிடப்படாமல் இருக்கிறது. நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் பொறுப்பேற்ற பிறகு, நம்முடைய பொதுப்பணித் துறை அமைச்சர்

பொறுப்பேற்ற பிறகு, அந்த ஏரிக் கால்வாயைச் செப்பனிடுவதற்கான பல முயற்சிகள், ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கின்றன. அதை வரும் ஆண்டிலே செப்பனிட்டுத் தந்து — என்னுடைய பகுதியில் விவசாயப் பெருங்குடி மக்கள் அதிகமாக இருக்கிறார்கள் — பர்கூர் தொகுதி மக்களுடைய வயிற்றில் பால் வார்க்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு முதல்வர் அவர்கள் சமத்துவபுரத்தினை ஏற்படுத்திய சரித்திர நாயகர். மனித நேயம் போற்றி, தந்தை பெரியார் வாழ்ந்த இந்த மண்ணில் சாதி மத பேதமின்றி அனைத்து மக்களும் ஒற்றுமையோடு வாழ வேண்டும்; சகோதரத்துவத்துடன் வாழ வேண்டுமென்பதற்காக, சமத்துவபுரங்களை உருவாக்கி, தன்னை ஆளாக்கிய மரியாதைக்குரிய தந்தை பெரியார் பெயராலே, இந்த சமத்துவபுரத் திட்டத்தினை 'தந்தை பெரியார் நினைவு சமத்துவபுரத் திட்டம்' என்று உருவாக்கி, இந்தியாவிலேயே எந்த மாநிலமும் நடைமுறைப்படுத்தாத ஒரு திட்டத்தினை இப்போது உருவாக்கியிருக்கிறார்கள். மாவட்ட அளவிலே 2, 3 என்று இருப்பதை மாற்றி, ஒவ்வொரு தொகுதியிலும் ஒரு சமத்துவபுரம் உருவாக்க வேண்டுமென்று இந்தநேரத்திலே கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இந்தியாவில் முதன்முதலாக நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஆட்சியிலேதான் அனைத்துக் கிராமங்களுக்கும் மின்வசதி செய்யப்பட வேண்டும் என்று ஒரு திட்டத்தைக் கொண்டு வந்தார்கள். கடந்த ஆட்சியிலே இருந்தவர்கள், அமைச்சர்கள் எல்லாம் மின்சாரத்தைப் பற்றிக் கவலைப்படாமல், தங்களுடைய சம்சாரங்களைப் பற்றிக் கவலைப்பட்டுக் கொண்டிருந்ததால், இப்போது சம்சாரத்தை அழைத்துக் கொண்டு நீதிமன்றத்திற்கு வந்துகொண்டும், போய்க்கொண்டும் இருக்கிறார்கள். அப்படிப்பட்ட நிலைமையை மாற்றி நம்முடைய மாண்புமிகு முதல்வர் பொறுப்பேற்ற பிறகு, மின்சாரத் துறையை வேகப்படுத்த வேண்டுமென்று தனியார் முதலீட்டின் மூலமாக மின் உற்பத்தி பெருக்கிட வேண்டுமென்பதற்காக, தனியார் துறையிலே மின் உற்பத்தி செய்ய அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. என்னுடைய தொகுதியிலே சாமல்பட்டியிலே 106 மெகாவாட் மின்சாரத்தை உற்பத்தி செய்வதற்கான ஒரு திட்டத்தைச் செய்திருப்பதால் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.



அதேபோல நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஆட்சிப் பொறுப்பிலே இருந்த காலத்தில், 1989 ஆம் ஆண்டு இந்த சாமல்பட்டியிலே ஒரு காவல் நிலையம் வேண்டுமென்ற கோரிக்கை வந்தபோது, காவல் நிலையத்தினை ஒதுக்கித் தந்தார்கள். அதற்குப் பிறகு ஆட்சிக்கு வந்த அந்தத் தொகுதியினுடைய சட்டமன்ற உறுப்பினராக இருந்தாலும் சரி, முன்னாள் முதலமைச்சராக இருந்தாலும் சரி, அதைப் பற்றியெல்லாம் கவலைப்படவில்லை. தங்களைப் பற்றிக் கவலைப்பட்டுக் கொண்டு, தாங்கள் பணம் சம்பாதிப்பதைப் பற்றி மட்டும் கவலைப்பட்டுக்கொண்டு, வகையற்றுப் போய்விட்டார்கள். ஆகவே, மாண்புமிகு முதல்வர் அவர்கள் பெருமனதோடு அந்தப் பகுதியிலே நீண்டநாட்களாக விடுபட்டிருக்கின்ற காவல் நிலையத்தினை உருவாக்கித் தர வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

`Open the door, let the dawn enter', 'கதவைத் திற, விடியல் உள்ளே வரட்டும்' என்ற ஆங்கிலச் சொற்றொடருக்கேற்ப, இந்த நவீன விஞ்ஞான உலகத்திலே கணினியின் பயன்பாடு உலகில் அதிக அளவு இருப்பதால், பள்ளிக் கல்வி பயின்று வெளியிலே வரும் மாணவர்கள் கணினியிலே அறிவு பெற்று விளங்க வேண்டுமென்பதற்காகத்தான், நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள் கல்வித் துறையிலே கணினியைப் புகுத்தியிருப்பதை இந்தநேரத்திலே பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதைப்போலத்தான், தமிழகத்தில் தொடக்கப்பள்ளிகள் இல்லாத கிராமங்கள் இருக்கக்கூடாது என்று நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்களும், மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களும் அனைத்துக் கிராம மக்களுக்கும் கல்வியைக் கற்பிக்க, தொடக்கப்பள்ளி ஆரம்பிக்க வேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள். பட்டதாரி ஆசிரியர் பயிற்சி பெற்றவர்களில், இடைநிலை ஆசிரியர் சம்பள வீதத்திலே, 6, 7, 8 ஆம் வகுப்புகளுக்கு விருப்பமுள்ள நபர்களை நியமித்திட ஆவன செய்ய வேண்டுகிறேன். இத்திட்டத்தின் மூலம் அனைத்து வகுப்பினருக்கும் வாய்ப்பு அளித்தால் வேலையில்லாத பலரும் பயன்பெறுவதோடு, தமிழகம் கல்வி வளர்ச்சியிலே மேலும் உயர்வடையும் என்பதை இந்தநேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

பிற்பகல் 1-05

தமிழ்நாடு கனிம நிறுவனத்தின் மூலமாக, கடந்த ஆட்சியாளர்கள் எங்களுடைய மாவட்டத்தில், குறிப்பாக, என்னுடைய தொகுதியில்

கனிமம் அதிகம் கிடைப்பதால், அதைப் பயன்படுத்திக்கொண்டு, தனக்கு வேண்டிய I.A.S., அதிகாரிகளை அங்கே நியமித்து, அரசாங்கத்திற்குச் சொந்தமான அனைத்து நிலங்களையும் இது 'டாமின்' என்று அடையாளம் போட்டு அதனை ஆர்ஜிதம் செய்தார்கள். அவர்கள் ஒரு தப்புக் கணக்குப் போட்டுவிட்டார்கள். என்னை ஆட்டவும் முடியாது, அசைக்கவும் முடியாது என்று சொன்ன அந்த அம்மையார், தாமே நிரந்தரமாக முதலமைச்சர் பொறுப்பிலே இருப்போம் என்று தப்புக் கணக்குப் போட்டு, தங்கள் பெயரில் எழுதி ஆர்ஜிதம் செய்து, அரசாங்கத்தினுடைய அத்தனை நிலங்களையும் 'டாமின்' நிறுவனத்தின் மூலமாக அவர்கள் அதை ஒதுக்கிக் கொண்டு விட்டார்கள். அந்த 'டாமின்' அன்றைக்கு செயல்படாமல் இருந்து, பிறகு நம்முடைய ஆட்சி வந்த பிறகுதான் பல பகுதிகளில் கிரானைட் தொழிற்சாலை சிறப்பாக நடைபெறுகிறது. வீணாகப் போயிருந்த அந்த டாமினில் இருப்பதையெல்லாம் ஏலத்தில் விற்று, அதன் மூலமாக இன்றைக்கு அரசாங்கத்திற்குப் பெரும்பணம் கிடைக்கும் நிலைமை உருவாக்கப்பட்டிருக்கிறது. இதன்மூலம் சிறந்த தனியார் துறைக்கு கிரானைட் ஏலம் விடுவதாக தலைவர் அவர்கள் அறிவித்திருக்கிறார்கள். இது மிகச் சிறப்பான திட்டம் என்பதை இந்தநேரத்தில் எடுத்துச் சொல்லி வரவேற்பதில் மகிழ்ச்சியடைகிறேன்.

எங்களுடைய தருமபுரி மாவட்டத்தில் நாங்கள் நிலத்தடி நீரை நம்பியிருப்பவர்கள். குடிப்பதற்குத் தண்ணீர் மிகவும் அவசியம் தேவைப்படுகிறது என்று சொன்னால், அந்தத் தண்ணீரில் ப்ளோரைடு என்கிற நச்சுத் தன்மை கலந்து இருக்கிற காரணத்தால், அந்தத் தண்ணீரை குடிப்பதால் அங்கே பற்கள் சம்பந்தப்பட்ட நோயும், எலும்பு சம்பந்தப்பட்ட நோயும் ஏற்படுகிறது. அங்கே ஒகேனக்கல் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தை நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள் கடந்த வருடம், 8-10-1998 அன்று மாவட்டத்தில் சுற்றுப்பயணம் செய்தபோது, ஜப்பான் நிதியுதவியுடன் நிறைவேற்றித் தருவதாக இருந்தது. ஆனால், இப்போது அந்தத் திட்டத்தை ஜப்பான் கைவிட்டுவிட்டாலும், நம்முடைய உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களும், மாண்புமிகு முதல்வர் அவர்களும் பெரு முயற்சி எடுத்துக்கொண்டு, ஜப்பான் நிதியுதவி வழங்காவிட்டாலும், மத்திய அரசு நிதியுதவி வழங்கவில்லை என்று சொன்னாலும், மாநில அரசின் மூலமாக நிதியைத் தருகிறேன் என்று சொல்லி ஒப்புதல் அளித்திருக்கிறார்கள். (மணியடிக்கப்பெற்றது)



இது எங்களுடைய மிகப் பெரிய ஜீவாதாரப் பிரச்சினை. நிறையப் பேர் நோய்வாய்ப்பட்டுக் கிடக்கிறார்கள். ஆகவே தயவுசெய்து, பெருமுயற்சி எடுத்துக்கொண்டு, நாங்கள் குடிப்பதற்குப் பாதுகாக்கப்பட்ட குடிதண்ணீரைத் தரவேண்டுமென்று இந்தநேரத்தில் கேட்டுக்கொள்கிறேன். மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கடந்த 11, 12, 13 தேதிகளில் வந்திருந்து அதைப்பற்றியெல்லாம் ஆராய்ந்திருக்கிறார்கள். உடனடியாக அந்தத் திட்டத்தை நிறைவேற்றித் தரவேண்டுமென்று இந்தநேரத்தில் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அடுத்து, பள்ளிப் படிப்பை முடித்தவர்கள் மேற்படிப்புக்காகத் தேவைப்படும் குடும்ப வருமானச் சான்றிதழ், சாதிச் சான்றிதழ், போன்றவற்றை பள்ளியிலே கொடுப்பதற்கு ஏற்பாடு செய்ததற்காக, இப்போது கிராமப்புறங்களிலே இருக்கிற அத்தனைபேரும் பாராட்டி வரவேற்றிருக்கிறார்கள் என்பதை இந்தநேரத்தில் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

விவசாயிகளுக்கு ஒன்றுமே செய்யவில்லை என்று இங்கே பலரும், வெளியே பல தலைவர்களும் பேசிக் கொண்டிருக்கிறார்கள். எங்கள் மாவட்டத்தைப் பொறுத்தளவில், தரிசு நிலங்கள் அதிகமாக இருக்கின்றன. அந்தத் தரிசு நிலங்களில் ஆயிரம் ஹெக்டேர் எடுத்து அதன் மூலமாக விவசாயப் பெருங்குடி மக்கள் பயன்படுத்த, தரிசு நில மேம்பாட்டுத் திட்டத்தை தலைவர் அவர்கள் எங்கள் மாவட்டத்தில் அறிவித்துச் செயல்படுத்திட வேண்டும் எனக் கேட்டுக்கொள்கிறேன்.

தருமபுரி மாவட்டத்தில் மாம்பழம் அதிகமாக விளைகிறது. கடந்த என்னுடைய தொகுதி பர்கூரில் மிக அதிகமாக விளைகிறது. கடந்த முறை என்னுடைய தொகுதியில் மாம்பழத் தொழிற்சாலையை உருவாக்குவோம் என்று சொல்லி, ஜெயலலிதா அவர்கள் ஏற்கெனவே அடிக்கல் நாட்டினார்கள், விளம்பரம் செய்தார்கள். ஆனால் இன்றையதினம் அந்த அடிக்கல் இல்லை. ஆகவே, அந்த இடத்தில் நம்முடைய தலைவர் முதல்வர் அவர்கள் பெருமுயற்சி எடுத்துக்கொண்டு தொழிற்சாலையை உருவாக்கினால் அந்தப் பகுதியிலே இருக்கிற ஏழை எளிய மக்கள், விவசாயப் பெருங்குடி மக்கள் எல்லாம் பயன்பெறுவார்கள் என்பதை இந்தநேரத்தில் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

[திரு. இ. ஜி. சுகவனம்] [1999 மார்ச் 25

சுதந்திரப் போராட்டத் தியாகிகளுக்கு சென்னை, கிண்டியிலே நினைவு மண்டபம் உள்ளதுபோல், மொழிப்போர்ப் போராட்டத்தில் உயிர் நீத்த தியாகிகளுக்கும் சென்னையிலே ஒரு மணிமண்டபம் உருவாக்க வேண்டுமென்று இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அடுத்து, மனிதக் கழிவை மனிதனே எடுப்பதை மாற்றிட வகை செய்ததை, மகாத்மா காந்தியடிகளே இன்று இருந்திருந்தால், நேரில் சென்னைக்கு வந்து எங்களுடைய தலைவர் அவர்களை வாழ்த்திச் சென்றிருப்பார். இங்கேகூட பலபேர் சொன்னார்கள். மனிதக் கழிவை அகற்றும் திட்டம் 5 ஆண்டுகளுக்கு முன்பே வந்தது. மத்திய அரசு திட்டமிட்டது, அதற்கான பணத்தை ஒதுக்கியது என்று சொன்னார்கள். ஆனால் பணம் ஒதுக்கியதாகத் தெரியவில்லை. நானும், நாடாளுமன்ற உறுப்பினர்கள் பல பேரிடம் கேட்டேன். அப்படி ஒரு திட்டம் மத்திய அரசால் நிறைவேற்றப்பட்டதாகத் தெரியவில்லை. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இந்தத் திட்டத்தை அறிவித்திருக்கிறார்கள் என்றால், அந்தத் துறையிலே இருக்கின்ற அத்தனை பேரும் இத்திட்டத்தைப் பாராட்டுகிறார்கள்.

பிற்பகல் 1-10

'முறைசெய்து காப்பாற்றும் மன்னவன் மக்கட்கு
இறையென்று வைக்கப் படும்'

என்ற குறளுக்கு ஏற்பச் செயல்பட்டு வரும் இந்த அரசிடம் மக்கள் இன்னும் எதிர்பார்க்கிறார்கள். நீங்கள் எவ்வளவுதான் செய்தாலும், இன்னும் உங்களிடம் எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். நீங்கள் செய்ய வேண்டுமென்று காத்துக் கொண்டிருக்கிறார்கள். நீங்கள் நிறைய செய்து கொண்டிருக்கிறீர்கள். இந்த நிதிநிலை அறிக்கையை வரவேற்று, நீங்கள் நீடுழி வாழ வேண்டும். பல ஆண்டு காலம் வாழவேண்டும், பல நூற்றாண்டுகள் வாழ வேண்டும், இந்த நாட்டுக்கும், தமிழ்ச் சமுதாயத்திற்கும் தொடர்ந்து பணியாற்ற வேண்டுமென்று, வேண்டி விரும்பிக் கேட்டுக்கொண்டு, இந்த நல்ல வாய்ப்பிற்கு நன்றி தெரிவித்து விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** டாக்டர் க. கிருஷ்ணசாமி.



1999 மார்ச் 25]

**டாக்டர் க. கிருஷ்ணசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 1999-2000 ஆம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கை மீது புதிய தமிழகம் கட்சியினுடைய கருத்துக்களைத் தெரிவிக்க வாய்ப்புக் கொடுத்த உங்களுக்கு என்னுடைய நன்றியைக் கூறி, நான் என்னுடைய கருத்துக்களைச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இந்த ஆண்டின் வரவு செலவுத் திட்டத்தை நான் நம்பிக்கையோடு எதிர்பார்த்தேன். படித்தவர்கள், பாமரர்கள், இந்த நாட்டிலே வேலை இல்லாத பட்டதாரிகள், அன்றாடம் வயிற்றுப் பிழைப்பிற்கு அல்லல்படும் விவசாயத் தொழிலாளர்கள், மூடிய ஆலைகளால் வேலை இழந்து தத்தளிக்கக்கூடிய தொழிலாளர்கள், சுதந்திரம் பெற்று 50 ஆண்டு காலத்திற்குப் பிறகும் அடிமைகளைப்போல் வாழ்ந்து கொண்டிருக்கக்கூடிய தோட்டத் தொழிலாளர்கள் ஆகியோருக்கு ஒரு நல்ல திட்டம், அவர்களுடைய வாழ்க்கையை உயர்த்துகின்ற திட்டம் வெளிவரும் என்று எதிர்பார்த்தேன். ஆனால், அப்படிப்பட்ட திட்டங்கள் எதுவும் இல்லாமல் இந்த நிதிநிலை அறிக்கை வந்திருக்கிறது. இந்த நிதிநிலை அறிக்கையில் குறிப்பிட்டுச் சொல்லுகின்ற எந்த நல்ல அம்சமும் இல்லாதது வேதனைக்குரியது....:

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ரா. ஈஸ்வரன் அவர்கள் பேசுகின்றபோது, ** என்ற வாக்கியங்களைப் பயன்படுத்தினார்கள். அவை அத்தனையும் அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகின்றன.

**டாக்டர் க. கிருஷ்ணசாமி:** கடந்த 3 சட்டமன்றத் தொடரிலும், குறிப்பாக 1996-97 ஆம் ஆண்டில் ஒரே சமயத்தில் 400 கோடி ரூபாய்க்கு வரி விலக்கு அளித்தபோது நான் ஒரு கருத்தைச் சொன்னேன். வரி விலக்கு கொடுக்கக்கூடியவர்களுக்குக் கொடுக்கப்பட வேண்டும், விதிக்கப்படக்கூடியவர்களிடமிருந்து விதிக்கப்பட வேண்டும் என்று சொன்னேன். ஏனென்றால், ஓர் அரசு முறையான வருவாய் இல்லாமல் திட்டங்கள் போட முடியாது. அரசுக்கு வருவாய், வரி விதிப்பு மூலமாக வரலாம். அல்லது, அரசே நடத்துகின்ற தொழில் அல்லது மற்ற நிறுவனங்கள் மூலமாகப் பெறலாம்.

---

** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

பிற்பகல் 1-15

'Tax the rich and serve the poor' என்பதுதான் ஒரு ஜனநாயக நாட்டின் குறிக்கோளாக இருக்கவேண்டும். பல்லாயிரக்கணக்கான ஏக்கர், இன்னும் சொல்லப்போனால், பல இலட்சம் ஏக்கர் நிலங்களை, திருநெல்வேலி மாவட்டம் அம்பாசமுத்திரம் தாலுகா மாஞ்சோலையிலும், வால்பாறையிலும், குன்னூரிலும், கூடலூரிலும் ஒரு ஏக்கர் நிலத்திற்கு ஒரு ரூபாய், இரண்டு ரூபாய், மூன்று ரூபாய் மட்டுமே குத்தகை கொடுத்துக் கொண்டு, டாடா கம்பெனியும், பிர்லா கம்பெனியும், B.B.T.C. கம்பெனியும், பாரி கம்பெனியும் அனுபவித்துக் கொண்டிருக்கின்றன. அவையெல்லாம் அவர்களுடைய சொந்த நிலங்கள் அல்ல. தமிழக அரசுக்குச் சொந்தமான வன இலாகா நிலங்கள். அந்த இலட்சக்கணக்கான ஏக்கர் நிலங்களுக்கு, தேயிலை, காப்பி, ஏலம் போன்றவை விளையக்கூடிய நிலங்களுக்கு, உரிய வரி வசூலிக்கப்படாமல், இன்னும் சொல்லப்போனால், நவீனப் பண்ணையாளர்களிடம் முறையாக வரி வசூலித்திருந்தாலே கோடிக்கணக்கான ரூபாய் வருவாய் வந்திருக்கும். ஆனால், அவர்கள் ஓர் ஆண்டுக்குச் செலுத்தக்கூடிய வரி, தேயிலையும், காப்பியும், ஏலமும் விளையக்கூடிய ஓர் ஏக்கருக்கு, ஓர் ஆண்டுக்கு ஒரு ரூபாய், இரண்டு ரூபாய், மூன்று ரூபாய், அதிகபட்சம் பத்து ரூபாய் வரி என்றால், எந்தக் காலத்திலே பஞ்சைகளாக, பரட்டைகளாக வாழ்கின்ற தாழ்த்தப்பட்ட மக்களுக்கு, பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு, மிகமிகப் பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு வாழ்வளிக்கப் போகிறோம்? எந்தத் திட்டத்தின் மூலமாக அந்த மக்களுக்கு வாழ்வளிக்கப் போகிறோம்? பணக்காரர்களிடத்திலே பிடுங்கி, ஏழைகளுக்குக் கொடுக்க வேண்டும். இல்லையென்றால், ஏழைகளே பிடுங்கக்கூடிய ஒரு காலகட்டம் வரும். ஆனால், ஜனநாயக நாட்டிலே அப்படிப்பட்ட ஒரு சூழ்நிலை உருவாவதற்கு முன்பாகச் சட்டத்தின் மூலமாக அந்தக் காரியத்தைச் செய்திருக்க வேண்டும். ஆனால், அப்பேற்பட்ட பணக்காரர்களுக்கு வரி போட மறுத்தது ஏன் என்பதுதான் நான் விடுக்கக்கூடிய கேள்வி. அதன் காரணமாகத்தான் இன்று மிகப்பெரிய நிதிநெருக்கடி இந்த அரசுக்கு ஏற்பட்டு இருக்கிறது.

திட்டமிட்டபடி 15,000 கோடி ரூபாய் வருமானம் வரவேண்டுமென்று சொன்னால், 14,070 கோடி ரூபாய் தான் வருகிறது. எனவே, வரிவிதிப்பை முறைப்படுத்த வேண்டும் என்பதுதான் என்னுடைய தாழ்மையான கருத்து.



அடுத்தது, கடந்த மூன்று சட்டமன்றத் தொடரிலேயும், தாழ்த்தப்பட்ட மக்களுக்கான இட ஒதுக்கீடு பற்றிய உண்மை நிலையை, வெள்ளை அறிக்கையாக இந்த மன்றத்திலே வைக்க வேண்டும் என்று வலியுறுத்தி வருகிறேன். ஆனால், என்னை உள்ளடக்கிய பத்துக்கும் மேற்பட்ட உறுப்பினர்களைக் கொண்ட குழு ஆய்வு செய்து, அந்த அறிக்கையைத் தாக்கல் செய்து பல மாதங்கள் ஆகியும்கூட, துணைக் குழு என்று போட்டு, இன்னும் அந்த அறிக்கையை இந்த அவையிலே வைக்காதது ஏமாற்றம் அளிக்கிறது. அந்த அறிக்கை தாக்கல் செய்யப்படாததன் காரணமாக, பல்லாயிரக்கணக்கான தாழ்த்தப்பட்ட மக்கள், மிக மிகப் பிற்படுத்தப்பட்டவர்கள் சட்ட ரீதியாக இந்த நாட்டிலே அனுபவிக்கக்கூடிய உரிமைகளைப் பெறாமல் தடுக்கக்கூடிய ஒரு அவல நிலை இந்த நாட்டிலே இருக்கிறது. எனவே, இந்த சட்டமன்றத் தொடரிலேயே அந்த வெள்ளை அறிக்கையை தாழ்த்தப்பட்ட மக்களுக்கு, மிக மிகப் பிற்படுத்தப்பட்டவர்களுக்கு எவ்வளவு வேலைவாய்ப்புகள் கொடுக்கப்பட்டிருக்கின்றன; கொடுக்கப்படாத இடங்களுக்கு எவ்வளவு விரைவாக இட ஒதுக்கீடு கொடுக்கப்பட வேண்டுமோ அதற்கான உத்தரவும் அந்த அறிக்கையிலே வரும் என்று நான் நம்புகிறேன்.

அடுத்ததாக, இங்கே தாழ்த்தப்பட்ட மக்களுக்கு பட்ஜெட்டிலே 509 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டிருப்பதாகப் பார்க்கிறோம். ஆனால், இந்த திட்டங்கள் என்று வருகின்றபோது, மிகவும் குறைந்து விடுகிறது. இந்த நாட்டிலே 25 சதவிகிதத்திற்கும் மேற்பட்ட தாழ்த்தப்பட்ட மக்கள், இருக்கிறார்கள். வறுமைக்கோட்டிற்குக் கீழே இருக்கக்கூடியவர்களில் 90 சதவிகிதம் பேர் யாராக இருக்க முடியும் என்றால், இந்தத் தாழ்த்தப்பட்ட மக்களாகத்தான் இருக்க முடியும். எனவே, அவர்களை முன்னேற்றுவதற்கு என்றுதான் Special Component Assistance Scheme. "சிறப்பு உள்ளடக்கத் திட்டம்" என்று மத்திய அரசு அறிவித்து, ஒட்டுமொத்தத் திட்டத்தில், தாழ்த்தப்பட்ட மக்கள் எத்தனை சதவிகிதம் பேர் இருக்கிறார்களோ, அத்தனை சதவிகிதம் நிதியொதுக்கீடு செய்யப்பட வேண்டும். எனவே, 19 சதவிகிதம், 20 சதவிகிதம் தாழ்த்தப்பட்ட மக்கள் இருக்கிறார்களென்றால், 20 சதவிகிதம் ஒட்டுமொத்த பட்ஜெட்டிலேயிருந்து தாழ்த்தப்பட்ட மக்களுக்கு நிதியொதுக்கீடு செய்யப்பட வேண்டுமென்று மத்திய அரசு ஓர்

உத்தரவு கொடுத்திருக்கிறது, ஒரு யோசனை சொல்லியிருக்கிறது. இது பல மாநிலங்களிலே செயல்படுத்தப்படுவதாக நான் அறிகிறேன். எனவே, தமிழ்நாட்டிலேயும் ஒட்டுமொத்த பட்ஜெட் 18,000 கோடி ரூபாய் என்று நாம் கணக்கிட்டால், அதில் 20 சதவிகிதம் எவ்வளவு வருகிறதோ அது தாழ்த்தப்பட்ட மக்களுக்கு ஒதுக்கப்பட வேண்டும். அப்போதுதான் அந்த மக்களை இன்னும் சொல்லப்போனால் பல அடி தூரம் பாதாளத்தில் இருக்கக்கூடிய அந்த மக்களை, வறுமைக்கோட்டிலேயிருந்து மீட்க முடியும் என்று நான் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

பிற்பகல் 1-20

அடுத்து, கிராமப்புறங்களிலே உள்ள தாழ்த்தப்பட்ட மக்கள், ஏழை எளிய மக்களுக்கு வீடு கட்டித் தரக்கூடிய திட்டம். முதலிலே 'தாட்கோ'-வின்கீழ் இருந்தது. பிறகு இந்திரா வீட்டு வசதித் திட்டத்தின் கீழே வந்தது. ஆனால் முதலில் ஒரு இலட்சம் வீடுகள் என்றிருந்தது. கடந்த ஆண்டில் 75 ஆயிரம் வீடுகள், இப்போது 46 ஆயிரம் வீடுகளாகக் குறைக்கப்பட்டிருக்கிறது. அது குறைக்கப்படக்கூடாது. கிராமப்புறங்களிலே வீடற்றவர்களுடைய எண்ணிக்கை ஒவ்வொரு ஆண்டும் கூடிக் கொண்டே போகிறது. எனவே, 46 ஆயிரம் என்று இருப்பதை முன்பிருந்ததைப்போல 1 இலட்சம் வீடுகள் கட்டிக் கொடுக்கக்கூடிய திட்டமாக மீண்டும் கொண்டு வரவேண்டும் என்று வலியுறுத்தக் கடமைப்பட்டிருக்கிறேன். (மணியடிக்கப்பெற்றது)

அடுத்து, தமிழகத்தில் கோயம்புத்தூர் மாவட்டத்தில் மட்டும் 22 நூற்பாலைகள் மூடிக் கிடக்கின்றன. அதிலே வேலை செய்த பல்லாயிரக்கணக்கானோர் வேலையின்றி தத்தளித்துக் கொண்டிருக்கிறார்கள். அந்த ஆலைகளைத் திறப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். குறிப்பாக பி.எல்.ஆர் டெக்ஸ்டைல்ஸ் உள்பட பல ஆலைகளில் வேலை செய்தவர்கள் வேலையை இழந்து பட்டினி கிடக்கிறார்கள். எனவே, அவர்களுக்கு மேற்கு வங்க அரசு கொடுப்பதைப்போல மாதம் 500 ரூபாய் கொடுப்பதற்கு அரசு முன்வரவேண்டும் என்று நான் வலியுறுத்தக் கடமைப்பட்டிருக்கிறேன். (மணியடிக்கப்பெற்றது)



## 7. அரசினர் தீர்மானம்

### விதி 32-ஐத் தளர்த்துதல்

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அடுத்து, 26-3-1999 அன்று வினாக்கள்-விடைகள் நேரம் ஒத்திவைக்கப்படுவது குறித்த தீர்மானம், மாண்புமிகு பேரவை முன்னவர்.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"சட்டமன்றப் பேரவையின் முதல் ஒரு மணி நேரம் வினாக்கள்-விடைகள் என்றுள்ள சட்டமன்றப் பேரவை விதி 32-ஐ, 26-3-1999 அன்று தளர்த்தி அந்நேரம் அரசினர் அலுவல்களுக்கு எடுத்துக்கொள்ளப்பெற வேண்டும்"

என்னும் தீர்மானத்தை மொழிகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க.

மறுப்போரே இல்லை என்று கருதுகிறேன்.

மறுப்போரே இல்லை, தீர்மானம் ஒருமனதாக நிறைவேறியது.

## 2. தகவல் கோரல்—தொடர்ச்சி

**(ஆ) பேரவையில் 22-3-1999 அன்று நடைபெற்ற நிகழ்வுகள் தொடர்பாக உறுப்பினர் திரு. தாமரைக்கனிக்கு 15 நாட்கள் சிறைத் தண்டனை என பேரவை நிறைவேற்றிய தீர்மானத்தை நிறுத்தி வைத்து உயர்நீதிமன்றம் ஆணை**

**திரு. சோ. பாலகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் தாமரைக்கனி மீது நமது சட்டமன்றத்தில் எடுத்த நடவடிக்கைகள் பற்றி இன்று உயர்நீதிமன்றத்தில் வழக்கு வர இருப்பதாகக் காலையிலே பத்திரிகைகளிலே எல்லாம் செய்தி வந்தது. அதுசம்பந்தமாக, அரசுக்கு ஏதாவது தகவல் வந்திருக்கிறதா என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

[1999 மார்ச் 25

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் எழுப்பியுள்ள இந்தப் பிரச்சினைக்கு நான் தருகின்ற விளக்கம், இன்று நீதிமன்றத்தில் அளித்துள்ள தீர்ப்பு முழுமையான தீர்ப்பு அல்ல, இறுதியான தீர்ப்பு அல்ல, ஒரு இடைக்காலத் தீர்ப்பாக, நாம் இந்த மாமன்றத்திலே நிறைவேற்றிய தீர்மானத்தைச் செயல்படுத்தாமல் தாமரைக்கனிக்கு ஜாமீன் வழங்கப்பட்டிருக்கிறது. இந்தச் செய்திதான் எனக்கு இப்பொழுது கிடைத்துள்ளது. இந்த நேரத்திலே நான் தெரிவித்துக்கொள்வது, நேற்று நாம் நிறைவேற்றிய தீர்மானம் நம்முடைய மாமன்றத்தினுடைய இறையாண்மையைக் காப்பாற்றுவதற்காக நிறைவேற்றப்பட்ட தீர்மானம் ஆகும். எப்படி நீதிமன்றத்தினுடைய இறையாண்மையைக் காப்பாற்றுவதற்கு நமக்கு அக்கறையும், ஆர்வமும், பற்றும் இருக்கிறதோ, அதைப்போலவே, இந்த மாமன்றத்தினுடைய இறையாண்மையைக் காப்பாற்றுவதிலும் நமக்கு அக்கறையும், ஆர்வமும், பற்றும் இருக்கிறது (மேசையைத் தட்டும் ஒலி) எனவே, ஒரு இறையாண்மை இன்னொரு இறையாண்மையை தகர்க்கக்கூடிய வகையிலே அமைந்துவிடக் கூடாது என்ற காரணத்தால், அதற்கேற்ற வகையிலே, நாம் சிந்தித்துச் செயல்படுவோம் என்பதை எடுத்துக்கூறி, இதுபற்றி மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் மேலும் அறிவிப்பார்கள் என்று கூறி அமைகிறேன்.

பிற்பகல் 1-25

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கூறியதைப்போல, உயர்நீதிமன்றத்திலே இடைக்கால உத்தரவாக, மாண்புமிகு உறுப்பினர் திரு. தாமரைக்கனி அவர்கள், 25 ஆயிரம் ரூபாய் சொந்த ஜாமீன் பணத்தைக் கட்டிவிட்டு, இடைக்கால உத்தரவாக அவருக்கு ஜாமீன் கொடுப்பதாக அறிவித்திருக்கிறார்கள். இறுதியான தீர்ப்பு, 30 ஆம் தேதி வாய்தா போட்டிருப்பதாக அரசுக்குத் தகவல் வந்திருக்கிறது. அந்தத் தகவலை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் என்னிடத்திலே சொன்னார்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சொன்னதைப்போல, நமக்கும் இறையாண்மை உண்டு; நீதித்துறைக்கும் இறையாண்மை உண்டு; நம்முடைய



இறையாண்மையைக் காப்பாற்றுவது என்னுடைய கடமை, தலையாய கடமை. நீதித் துறையோடு மோதல் ஏற்பட வேண்டுமென்ற எண்ணம் அரசுக்கும் கிடையாது; நமக்கும் கிடையாது. இங்கே பேசிய எந்த உறுப்பினரும் அந்த எண்ணத்தோடு பேசவில்லை. மோதல் ஏற்படுத்த வேண்டுமென்று நினைத்தால், இப்போதேகூட ஒரு தீர்மானம் போட்டு, அவரை ஜாமீனிலேகூட விடக்கூடாது என்று சொல்லலாம்; அது நமக்கு ஒன்றும் பெரிய காரியம் இல்லை. ஆனால் பொறுப்புள்ள அரசு, பொறுப்புள்ள பதவியிலே இருக்கிற சட்டமன்ற உறுப்பினர்கள் என்ற முறையிலே நாம் எந்த நடவடிக்கையை எடுத்தாலும், நிதானமாக எடுக்க வேண்டும். அந்தவகையிலே, இறுதித் தீர்ப்பு என்ன என்பதை நாம் பார்த்துவிட்டு, மேல் நடவடிக்கை எடுக்கலாம் என்ற ஒரு கருத்து, ஒரு நியாயமான கருத்தாகவே எனக்குப்படுகிறது. அந்த இறுதித் தீர்ப்பு வழங்குவதற்கு முன்னாலே, நம்முடைய இறையாண்மையைக் காப்பாற்றுவதற்கு, நாம் அதற்கடுத்து என்ன நடவடிக்கை எடுக்கலாம் என்பதை, நான் ஏற்கெனவே சொன்னதைப்போல, தனிப்பட்ட முறையிலே, தன்னிச்சையாக நான் முடிவு எடுக்க மாட்டேன். மாண்புமிகு முதலமைச்சர் அவர்களைக் கலந்து, எல்லா அரசியல் கட்சித் தலைவர்களின் கூட்டத்தை அறையிலே கூட்டி, அதற்குப் பிறகுதான் ஒரு முடிவெடுப்போம். ஆகவே, இன்று நாம் அவசரமாக எந்த முடிவுக்கும் வரக்கூடாது என்பதை நான் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். முதலமைச்சர் அவர்கள் சொன்னதைப்போல, இறுதியாக நம்முடைய இறையாண்மைக்கு எந்தவித பங்கமும் ஏற்படாமல் நாம் பார்த்துக்கொள்ள வேண்டியது நம்முடைய கடமை என்பதை நான் உணர்கிறேன் என்று சொல்லி, இந்த அளவோடு, இன்று இந்தத் தகவல் — இதுவரை நமக்குக் கிடைத்த தகவலின்படி இடைக்கால ஜாமீனிலே அவர் விடப்பட்டார் என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் நாளை (26-3-1999) காலை 9-30 மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர், பேரவை பிற்பகல் 1-27 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.

## 8. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

### (அ) சட்டமுறை விதிகளும், ஆணைகளும்

94. 1997-98 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு தோல் தொழில் வளர்ச்சி நிறுவனத்தின் பதினைந்தாவது ஆண்டறிக்கை. [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது] (தமிழ், ஆங்கிலம்).

95. 1997-98 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு சிமெண்ட்ஸ் நிறுவனத்தின் இருபத்திரெண்டாவது ஆண்டறிக்கை. [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.] (தமிழ், ஆங்கிலம்).

96. 1997-98 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு கனிம நிறுவனத்தின் இருபதாவது ஆண்டறிக்கை. [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.] (தமிழ், ஆங்கிலம்).

97. 1997-98 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு கிராஃபைட் நிறுவனத்தின் முதல் ஆண்டறிக்கை. [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.] (தமிழ், ஆங்கிலம்).

98. 1997-98 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு சர்க்கரைக் கழகத்தின் இருபத்தி மூன்றாவது ஆண்டறிக்கை. [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.] (தமிழ், ஆங்கிலம்).

### (ஆ) அறிக்கைகள், அறிவிக்கைகள் மற்றும் ஏனைய தாள்கள்

ஏதுமில்லை

ஸ்ரீ

221092
D
4/21/3/00

**Copies can be had from the**
**Assistant Director,**
**Government Publication Depot,**
**816, Anna Salai,**
**Chennai-600 002.**

©

**Published under Rules 280 and 283 of the Tamil Nadu Legislative Assembly Rules and printed by the Director of Stationery and Printing, Chennai-600 002.**